
நெஞ்சத்தில்...
நீ
ஆர்.மணிமாலா

# நெஞ்சத்தில்... நீ

ஆர்.மணிமாலா

இராமு நிலையம்
23/11, காசிம் தெரு,
இராயப்பேட்டை :: சென்னை-600 014.

## நூல் விவர அட்டவணை


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | நெஞ்சத்தில்... நீ! |
| ஆசிரியர் | : | ஆர். மணிமாலா |
| மொழி | : | தமிழ் |
| முதற் பதிப்பு | : | அக்டோபர், 2001 |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | : | 11.6 Kg. சேசாயி |
| நூலின் அளவு | : | 1 x 8 கிரவுன் |
| எழுத்து எழுத்து | : | 10 புள்ளி |
| பக்கங்கள் | : | 336 |
| நூல் கட்டமைப்பு | : | சாதா அட்டை பைண்டு |
| நூல் வெளியிடுவோர் | : | இராமு நிலையம்<br>23/11, காசிம் தெரு<br>இராயப்பேட்டை<br>சென்னை - 600 014 |

விலை: ரூ. 80.00

| | | |
|---|---|---|
| ஒளிஅச்சு | : | நம் பிராசஸ், போன்: 4331808 |
| அச்சிட்டோர் | : | சேகர் ஆப்செட் பிரஸ்,<br>சென்னை - 600 005. |



5003089
32967


# நெஞ்சத்தில்... நீ!

## உள்ளே...


1. நெஞ்சத்தில்... நீ! 5

2. உயிரே நெருங்கி... வா! 108

3. கண்களுக்குச் சொந்தமில்லை 225



32967
5009089
கொளத்தூர், சென்னை - 99.


# நெஞ்சத்தில்... நீ!



1

அரக்குநிற பெங்கால் காட்டன் சேலையை லாவகமாய் மடிப்பு வைத்து கட்டி... ஜாக்கெட்டுடன் இணைத்து பின் பண்ணினாள். லேசான ஒப்பனையோடு பளிச்சிட்ட முகத்திற்கு தோதாய் ஸ்டிக்கர் பொட்டு ஒட்டி... அதன் கீழ் சிறு தீற்றலாய் குங்குமம் இட்டு, வகிட்டிலும் சிறிது ஒற்றி எடுத்துவிட்டு... முழுதாய் தன்னை கண்ணாடியின் முன்னிருத்தி ஆராய்ந்தாள் அருந்ததி.

படிப்படியாய் அமைந்திருந்த சுருட்டைமுடி.. முதுகுவரை அடர்ந்திருந்தது. ஒற்றை ரோஜா காதோரம் எட்டிப் பார்த்தது. சற்றே நீள்வட்டமுகம். பேசினால் கூட குழிவிழுந்த கன்னம். மருட்சியாய் பார்க்கும் விழிகள். குவிந்த சதை. திரட்சியான உதடுகள். ஒல்லியும் இல்லாது, குண்டாகவும் இல்லாத நடுத்தர உடல்வாகிற்கு ஏற்ற உயரம். மாநிறத்திற்கும் சற்று அதிகப்படியான நிறம்.

அருந்ததி தன் அழகைப் பார்த்து தனக்குத் தானே சிரித்துக் கொண்டாள். அந்த சிரிப்பில் சோகம் கலந்திருந்தது.

எங்கோ ஒரு சோம்பேறி சேவல் ஒன்பதரை மணிக்கு கூவியது.

பால்கனி பக்கம் வந்து நின்றாள்.

தோட்டக்கார வேலவன் மண்வெட்டியும், கையுமாய் பரபரப்பாய் வேலை செய்து கொண்டிருந்தான். நேற்று மாலை நர்சரியிலிருந்து வாங்கி வரப்பட்ட இருபதுக்கும் மேற்பட்ட குரோட்டன்ஸ் செடிகளை தொட்டியிலிருந்து எடுத்து நடைபாதையின் இருமருங்கிலும் நட்டு வைத்துக் கொண்டிருந்தான். அவனுக்குக் கூட மாட ஒத்தாசை செய்து கொண்டிருந்தாள் அவன் மனைவி முத்தம்மா!

அருந்ததிக்கும் தோட்டக் கலையில் மிகுந்த ஆர்வமுண்டு. அவள் பிறந்த வீட்டின் கொல்லைப்புறம் மிகப்பெரிய பரந்த இடம். தோட்டம் அழகுக்காக மட்டுமேயன்றி பயன்தரக்கூடிய வகையிலும் அமைய வேண்டுமென்பதில் கவனமாய் இருப்பாள்.

தலுக்கி மினுக்கும் சுந்தரிகள் போல் பயன்தராத, பகட்டுக்காக மட்டுமே வளர்க்கப்படும் குரோட்டன்ஸ் செடிகள் மீது அவளுக்கு எள்ளளவும் நாட்டம் இருந்தது இல்லை.

மா, சப்போட்டா, கொய்யா, வாழை, மாதுளை, நெல்லி மரங்களினூடே வேப்ப மரமும் நிழலுக்காக நட்டிருந்தாள். சுவரோரங்களில் பாத்தி கட்டி, ரோஜா, மல்லி, கனகாம்பரம், சம்பங்கி, முல்லை, ஜாதி என அழகாய் வளர்த்திருந்தாள். அதில் ஜாதிமல்லி செடி மீது தனி கவனம் செலுத்தி வளர்த்தாள்.

தன் அறையையொட்டிய சன்னலோரம் அக்கொடியை படர விட்டிருந்ததால்... மாலையானதும் பூத்து குப்பென்று வாசம் அறை முழுக்க மணக்கும். அந்த நறுமணத்தின் முன் லாவண்டர் வாசம் எம்மாத்திரம்? தலைநிறைய தொடுத்து சூட்டிக் கொள்வாள்.

இதுமட்டுமின்றி ஏழெட்டு கீரை வகைகள், காய்கறி செடிகளும் அவள் தோட்டத்தில் அடக்கம். தினமும் சமையலுக்கு தேவையான காய்கறிகள் தன் பராமரிப்பில் வளர்த்த செடிகளிலிருந்தே பறிப்பதில் அளவற்ற திருப்தியும், பெருமை மிகுந்த கர்வமும் அவள் முகத்தில் தெறிக்கும்.



தன் கண்போல் பாதுகாத்து வந்த அந்தத் தோட்டத்தில் தன் கணவனாய் வரப்போகும் ஆடவனுடன் கைகோர்த்து, ஜாதிக்கொடி போல் அவன் தோளில் சாய்ந்துகொண்டு, அந்தி சாயும் பொழுதில் மெல்ல நடந்தபடி ஒவ்வொரு செடியாய், அதை வளர்த்தது முதல், பூத்தது காய்த்தது வரை ஒவ்வொன்றாய் அறிமுகப்படுத்தி, தன் ரசனையை அவனுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பது அவளின் நீண்ட நாளைய கனவு.

கடைசி வரை அது கனவாகவே நிலைப்பெற்றுவிட்டது. வித்யாதரன் அவள் கணவனாக வந்து, அவளையே பகிர்ந்து கொள்ள விரும்பாத போது, ரசனையை மட்டும் பகிர்ந்து கொள்வானா? என்ன?

ஆண், ஒரு பெண் தனக்கு பக்க பலமாய் இருப்பதில் பெருமை கொள்கிறான். ஆனால் பெண்ணோ கணவனுக்கு தாழ்ந்த ஸ்தானத்தில் இருந்து கொண்டு அவனால் ஆளப்பட வேண்டுமென்று ஆசைப்படுவாள்.

இதுவும் அடிமைத்தனம்தான். அன்புக்கு அடிபணியும் அடிமைத்தனம். இது விலங்கல்ல, பொற்சங்கிலி. தாம்பத்ய வாழ்க்கைக்கு இந்த சங்கிலியல்லவா அவசியம்?

அருந்ததிக்கு அந்த வீட்டில் எல்லாமே கிடைத்தது... அந்த பொற்சங்கிலியைத் தவிர.

ஏன்... எதனால் இப்படி நேர்ந்தது?

நீண்டதொரு பெருமூச்சு அவளிடமிருந்து வெளிப்பட்டு அடங்கியது.

ஏதோ நினைத்துக் கொண்டவளாய் திரும்பி நடந்தவள் படுக்கையறையினுள் மெல்ல எட்டிப் பார்த்தாள்.

''ஙொய்ங்...'' என்ற ஏசியின் ரீங்காரத் தாலாட்டிலும் குளிர்ச்சியிலும் இன்னமும் உறங்கிக் கொண்டிருந்தான் வித்யாதரன்.

அலுவல் விசயமாக ஒரு வாரம் முன்பு மும்பை சென்றவன் நேற்று இரவுதான் வந்தான்.

வந்ததும் குளித்து, சாப்பிட்டு படுத்தவன்தான்! பயண அசதி... அவனை அசையவிடாமல் தூங்க வைத்துவிட்டது.

அவன் பக்கத்தில் அமர்ந்து காதில் உப்பென்று ஊதி, காதை வலிக்காமல் கடித்து, அவன் தூக்கம் கலைந்து சிணுங்கியபடி கண் திறந்ததும்... அவன் முகத்தை வாரி எடுத்து தன் மார்போடு அணைத்து... தலையை கோதிவிட்டால்... அசதியாவது... மண்ணாவது? பறந்து விடாதா?

நடக்கக்கூடிய காரியமா அது?

நெஞ்சுக்கூடு ஏமாற்றமாய் ஒருமுறை விம்மித் தணிந்தது.

மெல்ல... மெல்ல... பூனைப் பாதம் வைத்து, கொலுசு சத்தம் கேட்காது, மெட்டி ஒலி கேட்காது... கவனமாய் அடிமேல் அடிவைத்து கட்டிலருகே சென்றாள்.

வித்யாதரனை விழிப் பார்வை அகலாது பார்த்தாள். மீண்டும் எப்போது கிட்டுமோ, இப்படியொரு சந்தர்ப்பம்! காலில் கொதிநீரை ஊற்றிக் கொண்டவனைப் போல் எப்போதும் அலுவலகம், மீட்டிங், பார்ட்டி என்று வேளைக்கொரு வேலையை வைத்துக் கொண்டு பறப்பவன்...

கண்களில் எப்போதும் கதிரவனின் வெப்பம். அதுவும் அவளைக் கண்ட மாத்திரத்திலேயே தகிக்க ஆரம்பித்துவிடும். கிட்டே நெருங்க முடியாது அவளால். அதனாலேயே அவனை நேருக்குநேர் ஏறிட்டு பார்க்க இயலவில்லை... முடியவில்லை...

கணவனை ஆசைதீர... அங்குலம் அங்குலமாக பார்த்து ரசித்தாள்.

வித்யாதரன் நல்ல உயரம். அதற்கு ஏற்ற உடல்வாகு. ரொம்ப சிவப்பு என்று சொல்ல முடியாது. ஆனால் அவனுக்கு அதுதான்



சரியாய் இருந்தது. அடர்த்தியான, கருமையான கேசம். மார்பில் சுருள் சுருளாய் ரோமம்.

பொறாமையாய் பார்த்தாள்.

அது செய்த பாக்கியம் கூட நான் செய்யவில்லையே!

தொப்பை, தொந்தியென்று எதுவும் அண்டாத வயிறு. வடிவமான உதட்டிற்கு மேலாடையாய் அடர்த்தியான மீசை. சிரித்தால்... தப்பாமல் வரியோடு நின்று மின்னும் பற்கள். முழங்கை வரை எப்போதும் சட்டையை மடித்துவிட்டுக் கொள்வான். அதுவும்கூட அவனுக்கு கவர்ச்சியாய் இருக்கும். பேன்ட்டைவிட ஜீன்சுதான் அவனுக்கு மிகவும் பிடிக்கும். விதவிதமாய், கலர்கலராய், வகைவகையாய்... பீரோ நிறைய அழகாய் அடுக்கப்பட்டிருக்கும்.

ஜீன்சுக்கென்றே பிறந்தவன் போல் அவனுக்கு வெகு நேர்த்தியாய் இருக்கும். சிக்கென்று பற்றிக் கொண்ட கொடி போல... உடலோடு ஒட்டிக்கொள்ளும். அப்போது அவன் நடந்துவரும் அழகிருக்கே...

வித்யாதரன் பார்க்க முடியாத கோணத்தில் எட்ட நின்று மறைந்திருந்து தன் கணவனைப் பார்ப்பாள் அருந்ததி.

அவனாக பார்த்து, விரும்பி, பெண் கேட்டு மணந்தவள்தான் அருந்ததி.

ஆனாலும்... எல்லாமே தப்பாகிவிட்டது.

தோள்பட்டையில் மிளகளவு மச்சம் உருண்டு திரண்டு மரு போல் இருந்தது. அதன் உச்சியில் இரண்டு மூன்று முடிகள்.

அவனைப் பார்க்கப் பார்க்க... உள்ளுக்குள் தகித்தது. தாங்க முடியாத தாபத்தோடு, அவனைத் தொட்டாவது பார்த்துவிடுவது என்கிற எண்ணம் எழ... மெல்ல... அவன் கையைத் தொட்டாள்.

மறுகணம்... உடம்பு அசைந்தது.

பதறிப் போய் கையை இழுத்துக் கொண்டவள் ஓட்டமும் நடையுமாய் வெளியேற...

கொலுசும்... மெட்டியும் தாராளமாய் சப்தித்தன.

கண்விழித்தான் வித்யாதரன்.



2

தன் கைகள் லேசாய் நடுங்குவதை அருந்ததியால் உணர முடிந்தது.

'கடவுளே... கணப்பொழுதில் எப்படி கருத்தை சிதறவிட்டேன்? அவர் என்னைப் பார்த்திருப்பாரோ? என்ன செய்யப் போகிறேன்? சாட்டை போல் வார்த்தையால் அடிப்பாரோ? ஏன் எனக்கிந்த நிலைமை? தொட்டு தாலிகட்டிய கணவனை தொட்டதற்காக பயந்து நடுங்கிக் கொண்டிருக்கும் மனைவி... உலகத்திலேயே நான் ஒருத்தியாகத்தான் இருக்க முடியும்.'

'இனி, என் முகத்திலேயே விழிக்காதே... என் எதிரே வராதே, பேசாதே...' இன்னும் எத்தனை தடை உத்தரவுகள்? அத்தனையும் வித்யாதரன் கல்யாண நாளன்று, முதலிரவன்று கூறிய வார்த்தைகள்.

என்னை வெறுத்து ஒதுக்குவதில் அவருக்கு எவ்வளவு உரிமை இருக்கிறதோ, அதேபோல் அவரை விரும்ப எனக்கும் உரிமை இருக்கிறது.

இப்படியொரு இழிவான வாழ்க்கை ஒரு பெண்ணுக்கு தேவை இல்லைதான்.

ஆனால், எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு அருந்ததி இந்த வீட்டில் இருப்பதற்கு காரணம் இல்லாமலில்லை. என்றாவது ஒருநாள் அவன் மனசு மாறாதா? என்கிற நப்பாசையும் ஒரு காரணம். அந்த நப்பாசைக்கான கால கெடு கூட கொஞ்சம் கொஞ்சமாய் சுருங்கிக் கொண்டே வந்து கொண்டிருக்கிறது.



அவள் தந்தையின் உயிர் உடலில் உள்ளவரைதான் அவள் இங்கே இருக்கலாம். உடலிலிருந்து அவர் உயிர் விடை பெற்றதும், அருந்ததியும் இந்த வீட்டை விட்டு ஒட்டு மொத்தமாய் விடை பெற்றுவிட வேண்டும் என்பது எழுதப்படாத ஒப்பந்தம்.

ஆனபோதிலும் கலக்கத்தில் தன்னை வெகுவாய் அழுத்திக் கொள்வதில்லை அருந்ததி.

பூமியிடம் இருந்து பொறுமையையும், காற்றிடமிருந்து பரந்த நோக்கத்தையும், ஆகாயத்திடமிருந்து தைரியத்தையும், நீரிடமிருந்து தூய்மையையும் பெற்ற குணாதிசயம் கொண்டவள் அருந்ததி.

நிகழ்காலம் என்பது ஓடுகிற ஆற்று வெள்ளத்தைப் போல், சென்ற காலமாகிய மலையிலிருந்துதான் அது உதித்தது என்றாலும் எதிர் காலமாகிய கடலை நோக்கித்தானே ஓடவேண்டும்?

அவளைப் பொறுத்தவரையில் எதிர்காலம் ஒரு கேள்விக்குறி. கடல் இன்னும் கண்ணுக்குத் தென்படவில்லை. 'வரப்போகும் நாட்கள் தனக்கு வாழ்வை தருமா? சாவைத் தருமா?'

அருந்ததி மாடிப்படிகளில் அவசர அவசரமாய் கீழிறங்கி வந்தாள்.

எதிர்ப்பட்ட வேணியை சைகை காட்டி நிறுத்தினாள்.

''ஐயா... எழுந்துட்டாரு... டிபனெல்லாம் தயாரா இருக்கா?''

''இருக்கும்மா...''

''தயிர்வடை பண்ணச் சொன்னேனே...''

''அதையும் பண்ணிட்டேன்ம்மா!''

''சரி... நீ போய் எல்லாத்தையும் மேசையில் எடுத்து வை!''

''அம்மா... நீங்க சாப்பிடலையா?''

''அவர் சாப்பிடும் முன்னே... நான் என்னைக்கு சாப்பிட்டிருக்கேன்? இந்த ஒரு வாரமா அவர் ஊரில் இல்லை... அந்த நாட்களை தவிர்த்து...''

வேணி அவசரமாய் அங்கிருந்து நகர்ந்தாள்.

எங்கே, தன் பரிதாபமான பார்வை அவள் மனதை நோகச் செய்துவிடப் போகிறதோ... என்கிற இரக்கத்தில். ஆயிரம் வருத்தங்கள் இருந்த போதிலும் அருந்ததி அதையெல்லாம் முகத்தில் படரவிடவில்லை. எதுவாக இருந்தாலும் எதிர்க்கொண்டு தானே ஆகவேண்டும்? அதற்கான மனோ திடம் அவளிடம் நிறையவே இருந்தது.

சாப்பாட்டு அறையை எட்டிப் பார்த்தாள்.

வேணி பரிமாற, வித்யாதரன் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். முகம் சற்றே இறுக்கமாய்...

அதைக் கண்டு துணுக்குற்றாள் அருந்ததி.

'இன்று முழுக்க இவன் பார்வையில் விழவே கூடாது' நினைத்தவள்... உடனே கீழிறங்கி தோட்டத்திற்கு வந்தாள்.

பச்சை பசேலென்ற அந்த இடத்திற்கு வந்ததும், தாய் வீட்டிற்கு வந்தது போல் ஓர் பரவசம்!

நிமிடத்தில் கடந்தவைகளை மறந்து செடி, கொடிகளுடன் இரண்டற கலந்து போனாள்.

ஒரே கிளையில் நான்கு பன்னீர் ரோஜா பூத்து சிரித்துக் கொண்டிருந்தது. சற்றுமுன் பைப் மூலம் தெளித்த தண்ணீரில் ஒரு துளி இதழில் இன்னும் ஒட்டிக் கொண்டிருந்தது. அந்த முத்து கீழே விழாமல் கவனமாக குனிந்து ரோஜாப்பூவின் வாசத்தை நாசியின் மூலம் உள்ளிழுத்தாள்.

''அப்பா... என்ன வாசனை?''



செடியிலோ, இலையிலோ, மொட்டிலோ மணமில்லை. ஆனால் மலர் மலர்ந்ததும் மணம் திடீரென வருகிறது. இது யாருடைய செயல்? மணத்தை யாரும் அறியாமல் கையால் கொண்டுவந்து இந்த மலரில் விட்டுவிட்டுப் போன இயற்கையை நினைத்தபோது உடல் சிலிர்த்தது.

தோட்டத்தின் நடுவே செயற்கை நீரூற்று இருந்தது. இலைகளுக்கு நடுவே அல்லி மொட்டுக்கள், நீரூற்றின் சிறிய சுவற்றினை சுற்றி பால்சம் பூக்கள் கலர்கலராய் குட்டைச் செடிகளில் பூத்திருந்தது.

அடுத்தமுறை விமலா நர்சரிக்கு செல்லும்போது நாமும் கூடச் சென்று மகிழம்பூ மரக்கன்றை வாங்கி வந்து இங்கே நடவேண்டும்.

குளக்கரை, ரம்மியமான தோட்டத்தின் வெட்ட வெளியில் பவுர்ணமி நிலா. கூடவே சுற்றிலும் வஞ்சனையின்றி வாசம்பரப்பும் மகிழம்பூ மணம்! எப்படியிருக்கும்? இப்படிப்பட்ட ரசனை இந்த வீட்டில் யாருக்குமே இல்லாமல் போனதேன்?

அதுவுமில்லாமல் நான் வருகிறேன் என்றதும் விமலா தன்னுடன் நர்சரிக்கு அழைத்துச் செல்வாளா என்ன?

விசயம், இன்னதுதான் என்று தெரிந்ததும் உதட்டில் சுளிப்பும், கண்களில் அலட்சியமுமாய் தேக்கி வைத்து பார்க்க ஆரம்பித்தவள்... இன்னமும் மாறவில்லையே! அண்ணனுக்கு தப்பாமல் பிறந்த தங்கை.

அப்படியே மகிழம் மரக்கிளையை நட்டாலும் அது எப்போது வளர்ந்து, பூத்து...?

அதுவரையில் நான் இங்கே இருப்பேனா?

நினைத்த மாத்திரத்தில் கண்களில் அருவி கொட்டத் துணிந்தது. தன்னை வெகுவாய் ஆசுவாசப்படுத்தி... மறுபடி செடிகள் ஆராய்ச்சியில் இறங்கியபோதுதான்... பார்த்தாள்.

மதிற்சுவரோரம் படர்ந்திருந்த கொடி சம்பங்கியை அறுத்து எறிந்து கொண்டிருந்தான் வேலன். சர்வமும் பதற... அவனருகே ஓடினாள்.

''வேலா... என்ன இது? எதற்காக இதை வெட்டி எறிகிறாய்?''

வேலன் சங்கடமாய் அவளைப் பார்த்தான்.

''வந்து... சின்னம்மாதான் இதை... வெட்டி எறிஞ்சுடச் சொன்னாங்க!''

''ஏன்? இது இங்கிருப்பதால் யாருக்கென்ன பாரம்?'' அழுகை முட்டிற்று.

தங்கள் வீட்டுத் தோட்டத்திலிருந்து ஒரு சிறு கிளையை கொண்டு வந்து நட்ட செடி இது! சுவரைப் பற்றிக் கொண்டு கொடி... கொடியாய் படர்ந்து... பச்சை பச்சையாய் பூக்கும் இந்த சம்பங்கியை பறித்து சூடிக் கொள்வாள். பிறந்த வீட்டு சீதனம் போல்... அதை கண்ணுங் கருத்துமாக பாதுகாத்து வந்தாள்.

''இந்த... கொடியை எடுத்துட்டு... இதை இந்த இடத்துல நட சொன்னாங்கம்மா!''

பொசு... பொசுவென்று புல்லைப் போல் நீண்ட இலைகளைக் கொண்ட 'மயிர் மாணிக்கம்' என்னும் செடி வகையை சுட்டிக் காட்டினான்.

''இதை வைக்க வேறு இடமா இல்லை இங்கே?''

''என்ன வேலா இங்கே சத்தம்?''

கரகரப்பான குரல் வெகு பக்கத்தில் கேட்க... சடாரென திரும்பினாள். வித்யாதரன் நின்றிருந்தான்.

வித்யாதரன் இவளை புழுப்போல் ஒரு பார்வை பார்த்துவிட்டு வேலனை ஏறிட்டான்.

''ஐயா... வந்து... சின்னம்மா இந்த கொடிய வெட்டி எறிஞ்சிட்டு இந்த செடியை வைக்கச் சொன்னாங்க...''



''சரி... அதுக்கென்ன?''

''அம்மா... ஏன் வெட்டி எறியறேன்னு?''

''சண்டை போடறாங்களாக்கும். விமலா பேச்சுக்கு மறுபேச்சு இல்லை இங்கே! அவள் சொன்னபடி செய்! வேண்டாதவைகளை வெட்டியெறிவதில் என்ன தப்பு? அழகாய் படமெடுக்கிறது என்பதற்காக... பாம்பை வீட்டில் வளர்க்க முடியுமா என்ன? ஏற்கனவே ஒரு பாம்பை... நச்சுப்பாம்பை வீட்டில் கொண்டுவந்த பாவத்திற்குத்தான் தினம், தினம் அனுபவித்துக் கொண்டிருக் கிறேனே? இது போதாதா?''

வேலன் சங்கடமாய் நெளிந்தான்.

முதலாளி தன் மனைவியை குத்திகாட்டி திட்டுவது புரிந்தது. பவ்யமாய் மறுபடி தன் வேலையைத் தொடங்கினான்.

அருந்ததிக்கு அவமானத்தில் முகம் சிவந்துவிட்டது.

அந்த இடத்திலிருந்து விறுவிறுவென நடந்தாள். சற்றுதூரம் சென்றிருப்பாள்.

''நில்...'' என்ற குரல் பின்னால் கேட்டது.

திரும்பிக்கூடப் பார்க்காமல் நின்றாள்.

வித்யாதரன் முன்னே வந்தான்.

''சற்று முன்... நான் உறங்கிக் கொண்டிருந்தபோது என் அறைக்கு வந்தாயா?''

''.......''

''எதற்காக வந்தாய்? அறைக்குள் வர உனக்கு அனுமதி இல்லை என்பதை மறந்துவிட்டாயா?''

''நா...நான்... நீங்கள் இரவில் பருகிவைத்த பால் தம்ளரை எடுக்கவே...''

''நேற்று நான் பால் சாப்பிடவில்லையே! அப்படியே இருந்தாலும் தம்ளர் என் கைமேலா இருந்தது?''

''அது... அது... உங்கள்மேல் ஒரு பூச்சி...'' திணறினாள். பொய் பேசுவதில் அவள் சாமர்த்தியசாலி அல்ல. இருந்திருந்தால்... இப்படியா அவமானப்பட்டுக் கொண்டிருப்பாள்?

''ஏ.சி. அறையில் பூச்சியா? யார் காதில் பூ சுற்றுகிறாய்? திருட்டு பூனையல்லவா? அந்த சுகம் மறுபடி தேவைப்படுகிறதாக்கும்? உடல் தகிக்கிறதோ? ஆடவன் உடல்...''

''பிளீஸ்... வேண்டாம்! இப்படியெல்லாம் பேச வேண்டாம். இந்த ஒருமுறை நான் தவறு இழைத்திருக்கலாம். இனி இப்படி நேராது. மன்னியுங்கள்...'' கண்கள் கலங்க... கையெடுத்து கும்பிட்டாள்.

''இதுதான் கடைசி எச்சரிக்கை! இனி உன் நிழல்கூட என் மீது படக்கூடாது... புரியுதா?''

''உம்...''

''ஏதும் தகவல் வந்ததா?''

''எங்கிருந்து?'' விழி அகல பார்த்தாள்.

''உன் பிறந்தகத்திலிருந்துதான்! உங்கப்பன் எப்போது மண்டையைப் போடுவது? எனக்கு எப்போதும் விடுதலை கிடைப்பது?''

கொதிநீரை முகத்தில் ஊற்றியது போல் துடித்துப் போனாள் அருந்ததி.

அதைக் கண்டு ரசித்தபடி அவள் பதிலை எதிர்பாராது இரண்டு பான்ட் பாக்கெட்டினுள்ளும் கைவிட்டுக் கொண்டு ஸ்டைலாய் நடந்தபடி காரை அடைந்தான்.

காரில் அவன் ஏறி அமர்ந்து புறப்பட்டு வெகுநேரம் ஆகியும்... அதே இடத்தில் சிலை போல் நின்றிருந்தாள் அருந்ததி.





## 3

ஜன்னல் வழியே உட்புகுந்த காற்று திரைச்சீலைகளை நடனமாட வைத்தது.

சன்னலருகே ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு அதில் அமர்ந்திருந்தாள் அருந்ததி.

பருத்தி வெடித்தது போல் நீலவானத்தில் ஆங்காங்கே பஞ்சு மேகங்கள் மெல்ல தவழ்ந்து கொண்டிருந்தன. குறைநிலா வாயினும் பிரகாசத்திற்கு குறைவின்றி இடையில் எட்டிப் பார்த்தது.

டீப்பாய் மீது வேணி வைத்துவிட்டுப் போன உணவுப் பொருட்களின் மூடி இன்னும் திறக்கப்படாமல் இருந்தன. காலையிலிருந்து எதுவுமே சாப்பிடவில்லை. சாப்பிட பிடிக்கவில்லை. என்றாலும் இதுவரை பசிக்கவில்லை. நெஞ்சு நிறைய சுமை இருந்ததாலோ?

கீழே இருந்து ஆரவாரமான சிரிப்பொலி கேட்டது.

விமலாவின் குரல்தான் அது. தன் அண்ணனுடன் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கிறாள். இடையிடையே வித்யாதரனின் குதூகல குரலும் கேட்டது.

அங்கு அருந்ததி சாப்பிட அனுமதியில்லை. எல்லாமே அவளுக்கு என்று ஒதுக்கப்பட்ட அந்த அறைக்குள்ளேதான். பாத்ரூம் வசதியோடு உண்டாக்கப்பட்ட அறை! அவளைப் பொறுத்தவரையில் சிறை!

தன் கணவனோடு சேர்ந்து அவள் அந்த சாப்பாட்டு மேசையில் சாப்பிட்டது ஒரே ஒரு பொழுது மட்டுமே!

திருமணமான கையோடு மணமக்களை வடபழனி கோவிலுக்குக் கூட்டிச் சென்றுவிட்டு நேரே வித்யாதரன் வீட்டிற்கே அழைத்துச் சென்று விட்டார்கள். பொதுவாய் பெண் வீட்டில்தான் முதலிரவு நடக்கும். ஆனால், வித்தியா விடாப் பிடியாய் தன் வீட்டில் தான் நடக்க வேண்டும் என்று ஏற்பாடும் செய்துவிட்டான்.

ஒருவகையில் அதுவும் நல்லதுதான். இல்லாவிட்டால்... தன் வீட்டில் ஏற்பாடாகி... அந்த 'வேண்டாத சம்பவம்' அங்கேயே நிகழ்ந்திருந்தால்தான் அந்த கணமே பிறந்தகத்தில் வாழாவெட்டியாய் ஒதுக்கப்பட்டு, அதை அறிந்து... அப்பா... உயிரைவிட்டு...

அந்த வகையில் ஒரு சிறு நிம்மதி! அப்பா சாகும் வரையிலாவது... நான் மகிழ்ச்சியாய் வாழ்வதாய் நினைத்துக் கொண்டிருக்கட்டும்.

முதலிரவிற்கு முன், உறவினர்கள், அறிந்தவர்கள், தெரிந்தவர்கள் என பலரும் சூழ்ந்திருக்க... ஆர்ப்பாட்டமான விருந்து. அதுதான் அன்றுதான் முதலும், கடைசியுமாய் அவனருகே அமர்ந்து சாப்பிட்டாள் அருந்ததி.

**சி**வராமனை பார்க்கும் யாருக்குமே கைகள் தாமாகவே கும்பிடு போடும். அப்படியொரு மரியாதைக்குரிய தோற்றம்.

சிவந்த நிறம், நல்ல உயரம், நரைத்த சிரம், நெற்றியில் எப்போதும் வீற்றிருக்கும். திருநீர்பட்டை, வெற்றிலை போடும் பழக்கமாகையால் வாய் சிவந்தேயிருக்கும். தூய தமிழ் தாண்டவமாடும் அவர் பேச்சில்! காரணம் அவர் ஒரு தமிழ் வாத்தியார் என்பதால்.

அதிக வசதியில்லை. எனினும் அதிக தேவைகளை ஏற்படுத்திக் கொள்ளாததால்... அந்த சிரமம் தெரியவில்லை.

சிவராமனின் சொந்த ஊர் திருவெண்ணெய்நல்லூர். அன்பும், பண்புமாய் பார்வதி அவருக்கு மனைவியாய் வாய்த்தாள்.

இரண்டு பெண் குழந்தைகள்.

கற்பகம், அருந்ததி.

கணவனின் சம்பாத்தியத்தில் அருமையாய் குடும்பம் நடத்தி, கவலையா? அது எங்கே இருக்கும்? எப்படி இருக்கும்? என்று



கேள்வி கேட்கும் அளவிற்கு... வாழ்வில் சுகமான தென்றல் வீசிக்கொண்டே இருந்தது. அந்த ஊரில் காலரா நோய் பரவும்வரை.

ஒரே வாரத்தில் காலரா பார்வதியை மண்ணில் போட்டு மூடிவிட்டது.

சிவராமன் மனம் சிதைந்துப் போனார். துடித்துப் போனார். உடலோடும் மனதோடும் ஒன்றரக் கலந்துவிட்ட மனைவியை இழந்த துக்கம் ஒருபுறம். ஆழாக்கு, உழக்கு சைசில் அனாதரவாய் நின்றிருந்த மகள்களை வளர்த்து ஆளாக்கணுமே என்று பிரமித்தாலும்... எப்படியேனும் உழைத்து வளர்க்கத்தானே செய்வாள்? அந்த திடம் எனக்கு மட்டும் இருக்காதா என்ன? பெண்ணைவிட வலிய உடலை உள்ள... சம்பாத்தியம் உள்ள ஒரு ஆணாகிய நான் திகைத்து நிற்பது பெரிய தவறு!

முடிவு செய்தவர்... அடுத்த இரண்டு மூன்று மாதங்களில் பல ஏற்பாடுகளை செய்தார். இருந்த நிலம், நீச்சு வகையறாக்களை விற்று. தன் வேலையை சென்னைக்கு மாற்றிக் கொண்டு... தன் குழந்தைகளோடு புறப்பட்டு விட்டார்.

பரங்கிமலை அருகே விலைக்கு வந்த வீட்டை வாங்கினார். எஞ்சிய பணத்தை இரண்டு மகள்களின் பெயரிலும் வங்கியில் டெபாசிட் செய்தார்.

கற்பகத்திற்கு ஏழு வயது. அருந்ததிக்கு ஐந்து.

இருவரையும் தான் பணிபுரியும் பள்ளியிலேயே சேர்த்து விட்டதால்... அவருக்கும் அழைத்துச் செல்ல... வர வசதியாய் இருந்தது.

அதிகாலையில் எழுந்து விடுவார் சிவராமன். குளித்து முடித்து... ஈர உடலோடு பூஜை அறையில் கண்மூடி அமர்ந்து கந்த சஷ்டியை சொல்ல ஆரம்பித்தால்... முடிக்கும்வரை கண்களை திறக்க மாட்டார்.

அதன்பிறகு சமையலறைக்குள் நுழைந்தாரானால்... காலை டிபன், மதிய உணவு என்று எல்லாவற்றையும் தயார் செய்த பின்பு வெளியில் வருவார்.

அதற்குள் இரண்டு குழந்தைகளும் எழுந்து பல்விளக்கி குளித்து கூடத்தில் தயாராய் இருப்பார்கள். சிவராமன் அவர்களுக்கு தலைவாரி, ரிப்பன் கட்டி, பவுடர் போட்டு, மதியத்துக்கும் மூவருக்கும் கேரியரில் அடைத்து... தன் சைக்கிளிலேயே அழைத்துச் சென்றாரானால்... மாலை அதேபோல் அழைத்து வருவார்.

மாலை டிபன் எல்லாம் எதுவுமில்லை. காலையில் சமைத்தது எஞ்சியிருந்தால்... அதை உண்ண கொடுப்பார். அது இல்லாத பட்சம் காபியும் பிஸ்கட்டும்தான்.

இரவு தோசையோ, அடையோ, சப்பாத்தியோ, அவ்வளவு தான். மாலை நேரத்தில் வீட்டில் இரண்டு குழந்தைகளுக்கும் டியூசன் எடுப்பார்.

இயல்பிலேயே அருந்ததிக்கு கற்பூர மூளை. எதையும் கப்பென பற்றிக் கொள்வாள். கற்பகம் மந்தம். பாடம் நடத்தும்போது... அவள் கவனமெல்லாம் ரேடியோ மீது வைத்திருக்கும். தஞ்சாவூர் பொம்மை மீதோ, அப்பாவுக்கு ஏன் பற்கள் சிவப்பாக இருக்கிறது என்றோ... பார்த்துக் கொண்டும், மனதிற்குள் ஆராய்ச்சி நடத்திக் கொண்டும் இருப்பாள்.

சிவராமன் கண்டிப்பார். ஆனால் அடித்ததில்லை. அதனால் தானோ என்னவோ, கற்பகம் சற்று மாறுபட்டு வளர்ந்துவிட்டாள்.

பத்தாவதில் பெயில் ஆனதும்... மறுபடி தேர்வு எழுதச் சொன்ன அப்பாவிற்கு எதிராக, வீம்பாக மறுத்துவிட்டாள். சற்றே கோபமும் கண்டிப்புமாய் சிவராமன் அதட்ட... அவ்வளவுதான்... அடுப்பங்கரைக்குள் நுழைந்து மண்ணெண்ணெயை தலைவழியே கவிழ்த்துக் கொண்டாள்.

கற்பகத்தை பற்றிய பயம் முன்பைவிட அதிகமாய் அவர் நெஞ்சில் பூச்சாண்டி காட்டியது.



ஒரு பெண்பிள்ளைக்கு இந்த காலத்தில் கல்வி எவ்வளவு முக்கியம்? இதை ஏன் கற்பகம் உணரவில்லை? ஏன் இப்படி இருக்கிறாள்? எங்கே குறை?

அதட்டலை விட்டு அன்பாய் சொல்லிப் பார்த்தார். ஊகூம்... அப்போதும் மசியவில்லை.

''பிறகு என்னதான் செய்யப் போகிறாய்?''

''தையல் கற்றுக் கொள்கிறேன்.''

''அதுபோதுமா உன் எதிர்காலத்திற்கு?'' குரலில் சற்றே எரிச்சல் காட்டினார்.

''சமைக்கக் கற்றுக் கொள்கிறேன். வீட்டை பார்த்துக் கொள்கிறேன்.''

''கற்பகம்... அதற்கெல்லாம் இன்னும் வயதிருக்கிறது. இந்த வயதில் தான் படிக்க முடியும். உன் தங்கையைப் பார். எப்படி படிக்கிறாள்? வகுப்பில் அவள்தான் முதல்!''

''நான் மரமண்டைதான். எனக்கு படிப்பு ஏறாதுப்பா. விட்டுடுங்க... என்னை இப்படியே விட்டுடுங்கப்பா...'' தன்னைப் பற்றிய சுய இரக்கமும், வெறுப்புமாய் முழங்காலில் முகத்தைப் புதைத்து அழுதாள் கற்பகம்.

திகைத்துவிட்டார் சிவராமன்.

''இதோப் பாரும்மா...'' தன் மகள் அருகே அமர்ந்து முகத்தை நிமிர்த்தி கண்களை துடைத்துவிட்டார்.

''அவசரப்பட்டு எந்த முடிவும் எடுக்கக்கூடாது. நீ படிப்பில் அவ்வளவு மோசமில்லையேம்மா! இரண்டு பாடத்தில்தானே பெயிலானாய்? முயற்சித்தால்... வெற்றி பெறலாமே! உன்னை ஒரு பட்டதாரியாக்கி பார்க்கணும்னு இந்த அப்பனுக்கு ஆசையிருக்காதா?''

"முடியலப்பா... வற்புறுத்தாதீங்க!" முன்னிலும் அதிகமாய் அழுதாள்.

அதற்குமேல் வற்புறுத்தாது வேதனை கலந்த பெருமூச்சோடு எழுந்துவிட்டார்.

தானே கனிவதுதான் பழம். தடியால் அடித்து கனிய வைக்க முடியுமா?

ஒரு பெண் பிள்ளைக்கு அதுவும் இயல்பிலேயே ஆண்பிள்ளையை விட கூர்ந்து நோக்கும் அறிவும், தெளிந்த சிந்தனையும், பகுத்துணர்ந்து நல்லது கெட்டது உணரும் தன்மையும், எதிர்காலத்தை பற்றிய திட்டங்களும் இவைகள் பற்றிய அறிவு அதிகமாகவே உண்டு. பதினைந்து பதினாறு வயது இதை அறியாதா என்ன?

தெரியும். கற்பகம் அறிந்தே முரண்டு பிடிக்கிறாள். ஏன்?

சிவராமனுக்கு புரியவில்லை. அதே சமயம் தாயில்லாப் பெண்ணை அதற்குமேல் துன்பப்படுத்த விழையவில்லை.

கற்பகம் நிஜமாகவே மாறுபட்ட மனநிலையுடன்தான் இருந்தாள்.

தாயில்லா வெறுமை... அவள் இளமனதை சூன்யமாக்கி விட்டது. அந்த வெறுமைக்கு தந்தையும் ஒரு காரணம் என்பது போல் நினைக்கத் தொடங்கினாள்.

தாயில்லா ஒரு பெண், அதுவும் இந்த டீன்-ஏஜ் வயதில் எத்தனை துன்பங்களை அனுபவிக்கிறாள்? இதை ஏன் அப்பா புரிந்து கொள்ளவில்லை?

வீடா இது? என்னதான் அப்பா பளிங்கு போல் சுத்தமாய் வைத்துக் கொண்டாலும் பெண் கைபடாத வேலையால், குங்குமம் இல்லா நெற்றியைப் போலல்லவா சூன்யம் நிலவுகிறது?

ஹோவென்ற அமைதி எப்போதும்?



வாசலில் ஒரு கோலமுண்டா?

வகைவகையாய் சமையல் உண்டா?

தனக்கு தெரிந்ததை, பிடித்தவற்றை சமைத்துப் போடுவார். நாம் அதை சாப்பிட்டாக வேண்டும்.

காலை எழுந்தது முதல், படுப்பது வரை படிப்பு, படிப்பு, படிப்பு மட்டுமே! என்னதான் அவரே முயன்றாலும் அப்பாவினால் மனம்விட்டு சிரிக்க முடிவதில்லையே! கதை சொல்லப்பா? என்று அவர் பக்கத்தில் ஆவலாய் வந்தமர்ந்தாலும் பாட சம்பந்தப்பட்ட நீதிக் கதைகளைத் தவிர வேறென்ன சொல்லியிருக்கிறார்? அதையும் இந்த அருந்ததி உன்னிப்பாய் கவனிப்பாள். ரசிப்பாள்.

சே... என்ன வாழ்க்கை? வீடு சரியில்லையே! எனக்கு அமைந்த அப்பாவும் சரி, தங்கையும் சரி... இருவரும் சுத்தபோர்.

எனக்கு சாய்ந்துகொள்ள அம்மா மடிவேண்டும். மாதாந்திர வயிற்று வலியால் சுருண்டு கொள்ளும்போது, அம்மாவின் இளஞ்சூடான மார்பில் முகம் புதைத்துக் கொள்ள வேண்டும். வியர்வையோடு மஞ்சள் கலந்த வாசத்தை நுகர வேண்டும்.

பெண் இல்லா வீடு... பேய் வீடு! வாளியில்லா... கிணறு மாதிரி! அப்பா... இதை ஏன் அப்பா புரிந்து கொள்ளவில்லை? அம்மா இறந்துவிட்டால் என்ன?

வேறு அம்மாவை கொண்டுவர முடியாதா? கேட்டால் சித்திக்காரி கொடுமை செய்வாள், என் மனைவிக்கு துரோகம் செய்யமாட்டேன் என்று காரணத்தை சொல்வார். ஆனால் இது நிஜமான காரணமல்ல; இது வெளிவேஷம்.

"பாருங்கள். பெண் துணையே இல்லாமல் இரண்டு பெண் குழந்தைகளை எப்படி வளர்த்து ஆளாக்கியிருக்கிறேன் பாருங்கள்!" என்று உலகத்தின் முன் நெஞ்சு நிமிர்த்தி தம்பட்டம் அடித்துக் கொள்ள - இந்த வீண் ஜம்பத்திற்காக... அப்பா எங்களையல்லவா பழிவாங்கி விட்டார்?

இப்படித்தான் முரண்பாடான கருத்தை அப்பாவைப் பற்றிய மோசமான அபிப்பிராயத்தை தன்னுள் விதைத்து வைத்திருந்தாள். அவருக்கு எதிர்ப்பதமான கருத்தையே வெளியிட முனைந்தாள்.

பாவம்... இப்படிப்பட்ட எண்ணத்தோடு தான் தன் மகள் வளைய வருகிறாள் என்று சிவராமனால் உணர வாய்ப்பில்லாமல் போய்விட்டது.



## 4

**வ**ண்டி இழுத்துப் பழகின மாடுகள், பாரமான வண்டிகளைப் பார்த்தால், தாமாகவே வலிய தலையை கொடுக்கும்.

அதைப் போல்தான் ஆனது சிவராமன் நிலமையும்.

கற்பகம் போட்ட பாதையில்தான் நடக்க வேண்டியதாயிற்று. மறுத்துப் பேசினால்... தற்கொலை என்னும் ஆயுதத்தை கையில் எடுத்துக் கொள்வாளோ என்கிற பயம். அதனாலேயே அவள் விருப்பத்திற்கு அவளை விட்டு விட்டார்.

வீட்டு வேலைகளை தன் வயப்படுத்திக் கொண்டாள். சிவராமன் ஒதுங்கிக் கொண்டார். சமையல் எல்லாம் கற்பகம்தான். விதவிதமாய் சமைத்துப் பழக வேண்டும் என்று அடுத்த வீட்டில் போய் கற்றுக் கொண்டு வந்தாள்.

ஒரு வயதுப் பெண் இப்படி அடுத்த வீட்டுக்குப் போய் வருவதிலெல்லாம் அவருக்கு உடன்பாடில்லை. அங்கு குடிவந்து ஏழெட்டு ஆண்டாகிவிட்டது. இருந்த போதிலும் அக்கம் பக்கத்தில் எல்லாம், யார் யார் குடியிருக்கிறார்கள் என்பது இதுவரை சிவராமன் அறிந்தவரில்லை. உண்டான கோபத்தையெல்லாம்... பல்லிடுக்கில் அரைத்து விழுங்கிக் கொண்டார்.

ஆனாலும், ஒரு விசயத்தை பாராட்டியே ஆகவேண்டும். கற்பகம் கை சமையலாகட்டும், மற்ற வீட்டு வேலைகளாகட்டும், குறையே சொல்ல முடியாது.



ஒரு நாள்.

பள்ளிக்கு புறப்பட்டுக் கொண்டிருந்த சிவராமன் முன்வந்து நின்றாள் கற்பகம்.

''அப்பா...''

''என்னம்மா?''

''வந்து... பக்கத்து வீட்டு விசாலம்மா வீட்ல நாளைக்கு மதியம் எல்லோரும் சினிமாவுக்குப் போறாங்களாம்?''

''சரி... அதுக்கென்னம்மா?''

''எ... என்னையும் கூப்பிடறாங்கப்பா!''

''வேணாம்மா! அது எல்லாம் சரியில்லை... வரலைன்னு சொல்லிடு... நீ, நான், அருந்ததி மூணு பேரும் ஞாயிற்றுக்கிழமை சினிமாவுக்குப் போகலாம்... சரியா?''

'இவர்களோடு படம் பார்ப்பதும், கண்ணை மூடிக்கொண்டு உட்கார்ந்திருப்பதும் ஒன்றுதான். சே! என்ன வீடு இது? ஒரு சின்ன ஆசை... அவர்களோடு சேர்ந்து ஒரு படம் பார்க்கக்கூட இயலாது என்றால்... அப்படியென்ன வாழ்க்கை இது?'

கண்களில் குளம் கட்டிக் கொண்டது.

பதறிப் போனார் சிவராமன்.

''என்னம்மா?''

தன் தோளைப் பற்றிய அன்பான அப்பாவின் கையை விலக்கி விட்டாள்.

அந்த அலட்சியம் அவர் மனதை முள்கொண்டு குத்தியது போல் வலித்தது.

''கற்பகம்... நான்தான் உன்னை ஞாயிற்றுக்கிழமை...''

''நேத்துலேர்ந்தே... ஆசை ஆசையா இருந்தேன்... நாளைக்கு சினிமாவுக்கு போகப் போறோமேன்னு! அந்தம்மாவுக்கு எம்மேல கொள்ளைப் பிரியம்... இல்லாட்டா எனக்கும் சேர்த்து டிக்கெட் ரிசர்வ் செய்யச் சொல்லியிருப்பாங்களா?''

''.......''

''ஞாயிற்றுக்கிழமை நீங்களும், அருந்ததியும் சினிமாவுக்குப் போங்க... நான் வரலே...''

இவையனைத்தையும் ஒரு ஓரமாய் நின்று கலவரமாய்ப் பார்த்துக் கொண்டுதான் இருந்தாள் அருந்ததி. அவளால் எதையும் செய்ய முடியவில்லை. அப்பாவைப் பார்க்க பரிதாபமாய் இருந்தது. கற்பகத்திடம், 'நீ செய்வது கொஞ்சமும் சரியில்லேக்கா' என்று சொல்ல வேண்டும் போல் தோன்றியது. ஆனால் சொல்ல முடியவில்லை.

தங்கையை சிநேகிதியாய் பார்த்த பார்வை இப்போதில்லை. மாறாக, அவள் பார்க்கும்போதே சினம்தான் கொப்பளித்தது. 'அக்கா' என்று வாஞ்சையாய் அழைக்க முடியவில்லை. உள்ளுக்குள் அவள்மேல் பொங்கும் பாசத்தையெல்லாம் வெளிப்படுத்த முடியாமல் தவித்தாள்.

அந்த வீட்டில் அவளைத் தவிர பேச்சுத் துணைக்கு வேறு பெண்கள் இல்லை. அப்பாவுடன் அன்பாய் இருக்கலாம். பாசமாய் இருக்கலாம். ஆனால் சிநேகிதியாய் இருக்க முடியுமோ?

கற்பகத்தின் ஒதுங்கல் அருந்ததிக்கு வலித்தது. அம்மா இல்லாத குறையை அவள் அன்பும், அனுசரணையான அணுகுமுறையும் ஈடுசெய்யும் என்று அவள் நினைத்த நினைப்பில் மண் விழுந்தது.

அருந்ததிக்குக் கூட சினிமாவுக்குப் போக வேண்டும் என்று ஆசைதான். அப்பாவோடும், அக்காவோடும் அருகே அமர்ந்து, பாப்கான் கொறித்துக் கொண்டு படம் பார்க்க மனம் ஏங்கியது. ஆனால், இப்போது அதுவும் முடியாது.



அக்கா வராமல் மற்ற இருவரும் வெளியே சென்று பழக்கமில்லை.

அருந்ததி அனைத்து ஆசைகளையும் உள்ளுக்குள் பூட்டி வைத்துக் கொண்டாள்.

ஆனால், கற்பகம் அப்படியில்லை. தான் நினைத்ததை சாதிப்பதில் பிடிவாதமாக இருந்தாள்.

அன்று முழுக்க சாப்பிடாது குப்புற படுத்துக் கிடந்தாள். சிவராமனுக்கு அவளின் செயல்கள் கவலையை விட பயத்தையே ஏற்படுத்தியது.

'ஒன்றுகிடக்க ஒன்று பண்ணிக் கொள்ளப் போகிறாள். என்ன பிடிவாதம் இந்த வயதிலேயே?' கவலையை மீறிய எரிச்சல் ஏற்பட்டது. வேறு வழியேயின்றி தலையாட்ட வேண்டியதாய் போயிற்று.

அப்பாவின் சம்மதம் கிடைத்த மாத்திரம் அவளுக்கு எங்கிருந்து தான் பசி வந்ததோ... உடனே தட்டில் போட்டுக் கொண்டு சாப்பிடத் தொடங்கினாள்.

''நான் உன்னை அடுத்த வாரம் சினிமாவுக்கு அழைச்சிட்டுப் போறேன் அருந்ததி!''

படித்துக் கொண்டிருந்தஇளைய மகளின் தலையை வருடியபடி கூறினார்.

''வேணாம்ப்பா...!''

''ஏம்மா...''

''அக்கா இல்லாமல் நாம மட்டும் படம் பார்க்கணுமா? தவிர, எனக்கு இந்தமாதிரி பொழுது போக்குகள்ல அதிகமா ஆர்வமில்லப்பா!''

''அம்மாடி!'' நிம்மதியும், வாஞ்சையுமாக அவர் கண்கள் கலங்கின.

மேற்கொண்டு பேச முடியாதபடி ஏதோ வந்து இம்சிக்க அங்கிருந்து அகன்று தோட்டத்துப் பக்கம் போனார்.

சில்லென்ற காற்று! செடிகளில் பூத்திருந்த மலர்களின் வாசம்... மூச்சை இழுத்து வெளியே விட்டார் சிவராமன்.

அப்போதுதான் அவரின் பார்வை வலிய பக்கத்து வீட்டைப் பார்த்தது.

சத்தமாய் ஏதோவொரு புதுப்படப் பாடல் அலறிக் கொண்டிருக்க,

அந்த வீட்டில் யார் யார் இருக்கிறார்கள்? அவர்கள் எப்படிப்பட்டர்கள்?

ஊகூம்... ஒரு கண்றாவியும் தெரியாது.

மறுபடி இதயத்தை கருநிற மேகம் வந்து சூழ்ந்து கொண்டது.

கற்பகம், பீரோவில் பதிந்திருந்த பாதியளவு கண்ணாடி முன்பு தன்னை இப்படியும் அப்படியுமாய் பார்த்துக் கொண்டாள்.

ஆழ்ந்த பச்சைநிற பாவாடை - ரவிக்கை. மேலே வெள்ளைத் தாவணி. சற்றே சுருண்ட கேசம். அவளின் அழகான முகத்தை அழகாக காண்பித்தது.

'நான் அருந்ததியை விட அழகு. அவளைவிட நிறம்! தங்கையோடு தன்னை ஒப்பிட்டுப் பார்த்து சந்தோசப்பட்டாள்.'

உதட்டை குவித்து, பற்கள் தெரியாமல் சிரித்தாள். ஆளை அள்ளிக் கொள்ளும் சிரிப்பு.

'சேரன் கூட அன்று என்ன சொன்னான்?'

'இன்னொரு முறை சிரியேன் கற்பகம்!'' அதிகம் அவனிடம் பேசியதில்லை. சேரன் விசாலம்மாவின் பையன். எங்கோ வெளியூரில் பணிபுரிவதாக சொன்னார்கள். கைநிறைய சம்பளம்.



தனிமையில் அவளிடம் அப்படிக் கேட்டதும் திகைத்துப் போனாள் கற்பகம்.

''எதுக்கு?'' கஷ்டப்பட்டு கேட்டாள். அதைக்கேட்டு முடிப்பதற்குள் திணறிப் போனாள். ஏனெனில் சேரன் பார்த்த பார்வை... அவளையே விழுங்கிவிடுவது போல்!

''ஏன்... சிரிக்கக் கூட காசு வாங்குவியா?''

''சேச்சே...!'' புன்னகைத்தாள்.

''நீ சிரிக்கும்போது ரொம்ப அழகாத் தெரியறே கற்பகம்!''

இப்போது அவள் சிரிப்பில் நாணமும் கலக்க...

ஒரே ஓட்டமாய் தன் வீட்டை நோக்கி ஓடிவந்து விட்டாள்.

இந்த சினிமா கூட அவன் ஏற்பாடுதான்.

அந்த வீட்டைப் போல அங்குள்ள மனிதர்களும் விசாலமானவர்கள்தான். இந்த வீடும் இருக்கிறதே! சாமியார் மடம் மாதிரி!

விசாலம்மா வீட்டில் அண்ணன், தங்கை, அம்மா, அப்பா அனைவரும் நண்பர்கள் போல் பழகுவார்கள். ஒரே கூத்தும் கும்மாளமுமாக கலாட்டாதான். சேர்ந்தே சாப்பிட்டு, சேர்ந்தே விளையாடுவார்கள். கேரம், சீட்டு என்று தரம் பிரிக்காமல் விளையாடி பொழுதைப் போக்குவார்கள். சில சமயம் சேரனின் நண்பர்கள் சிலரும் வந்து கலந்து கொள்வார்கள். அப்போதெல்லாம் கற்பகம் அங்கிருந்து தன் வீட்டிற்கு ஓடிவந்து விடுவாள்.

பூங்கொடி இயல்பாய் அவர்களுடன் இணைந்து விளையாடுவாள்.

பூங்கொடி - சேரனின் தங்கை. கற்பகம் வயதுடையவள். இதையெல்லாம் கண்டு வியப்பாள் கற்பகம்.

அவர்களோடு தன் அப்பாவையும், தங்கையையும் பார்த்து ஒப்பிட்டு பார்த்து தரம் இறக்குவாள்.

'தன் தந்தை இதற்கெல்லாம் அனுமதிப்பாரா? மூச்... ஆண்வாடையே இவள் பக்கம் வீசக்கூடாதென்று பொத்திப் பொத்தி வளர்ப்பவர் இப்படி சரிசமமாய் விளையாட அனுமதிப்பாரா? இதோ, பூங்கொடியின் தந்தை அனுமதிக்கிறாரே... ஏன்? தன் மகள்மேல் உள்ள நம்பிக்கையின் காரணமாக!

அந்த நம்பிக்கை அப்பாவுக்கு என் மீது ஏன் ஏற்படவில்லை? அதனால்தானே ஆண்களைக் கண்டதும் நெருப்பை கண்ட தினுசில் அலறியடித்து ஓடிவர வேண்டியிருக்கிறது.

ஆனால், ஆனால் சேரனும் ஆண்தானே?

அவனைப் பார்த்தால் மட்டும் ஏன் கால்கள் நகர மறுக்கின்றன?

நெடுநேரம் கண்ணாடி முன் நின்று யோசித்தவள்... நேரமாகி விட்டதையறிந்து பரபரப்பாய் வெளியேறினாள். வீட்டை பூட்டிக் கொண்டாள். இன்னொரு சாவி சிவராமனிடம் இருக்கும்.

அடுத்த வீட்டை நோக்கிச் சென்றாள்.



## 5

கண்களை மூடிக் கொண்டிருந்தாளே தவிர, தூக்கம் வராது தவித்தாள் கற்பகம்.

இரவிற்கே உரிய அமானுஷ்ய அமைதி. அதைமீறிய சில சத்தங்கள். உஸ்ஸ்... என்று சன்னல் வழியே ஊடுருவிய காற்றும், மின்விசிறியின் கடக்... கடக் சத்தமும், அதற்குப் போட்டியாக அவளின் சின்ன இதயம் துடித்த துடிப்பும் அவள் காதுக்கே பயங்கரமாய் இடி போல் கேட்டது.

சற்று தள்ளி படுத்திருந்த அருந்ததியைப் பார்த்தாள். நிச்சலனமாய், நிம்மதியாய் உறங்கிக் கொண்டிருந்தாள்.



வராண்டாவில் சிவராமனிடம் இருந்து குறட்டையொலி துல்லியமாய் கேட்டது.

ஏன்... எனக்கு மட்டும் தூக்கம் வரவில்லை?

'அதற்கு நானல்லவா காரணம்!' சேரன் மனக்கண்முன் தோன்றினான்.

சிலிர்த்துப் போனாள்.

அவனை நினைக்கும்போதே... உடம்பெல்லாம் குறுகுறு வென்று, மயிலிறகால் வருடிவிட்டது போன்ற மெல்லிய மின்சாரம் தோன்றியது.

இடது கையை உயர்த்தி... அதையே உற்றுப் பார்த்தாள். சேரன் தொட்ட கை! மீசை குத்த முத்தமிட்ட கை!

நினைக்கவே கிளுகிளுப்பாய் இருந்தது.

எத்தனை தைரியம்? அத்தனை பேர் மத்தியில்... என் கைப்பற்றி...

அவனின் தைரியமும், கம்பீரமான ஆண்மையும் அவளுள் பிரமிப்பை ஏற்படுத்தியது.

அன்று பகல் சினிமாவிற்கு விசாலம்மாள், சேரன், பூங்கொடி, கற்பகம் நால்வர் மட்டுமே சென்றிருந்தனர்.

முதலில் சேரன், அடுத்து பூங்கொடி. அவளுக்கடுத்து கற்பகம், விசாலம் அமர்ந்தனர். அம்மாவும், பெண்ணும் சற்று உயரம் குறைவு என்பதால்... முன்புறம் உள்ளவர்களின் தலை திரையை மறைத்தது. அப்படி இப்படி என்று மாற்றி சேரன் பக்கத்தில் கற்பகம் அமர வேண்டியதாயிற்று.

குளிரூட்டப்பட்டிருந்த அந்த உயர்ரக திரையரங்கிலும் கற்பகத்திற்கு வியர்த்தது.

படமோ காதல் கதை! கவர்ச்சியான உடையில் பாதி அங்கங்கள் தெரிய உடுத்தியிருந்த கதாநாயகியின் ஆட்டமும், பாட்டமும், அவளுடன் அட்டைப் போல் ஒட்டி ஈடுகொடுத்து நடித்த கதாநாயகனின் நடிப்பும் கற்பகத்தை என்னவோ செய்தன.

இதுபோன்ற படத்தை இதற்குமுன் அவள் பார்த்ததில்லை. தந்தை பார்க்க விட்டதில்லை. அவர் அழைத்துச் சென்றதெல்லாம், தேவர் தயாரித்த ஆடு, மாடு, குரங்கு நடித்த வேடிக்கைப் படங்களுக்கும், புராணப் படங்களுக்கும்தான்.

'ஒரு ஆணும், பெண்ணும் இப்படியெல்லாம் நெருக்கமாய் இருப்பார்களா?' ஆச்சரியமாய், அதிசயமாய் இருந்தது.

பூங்கொடியும், விசாலம்மாளும் திரையில் வைத்த விழி எடுக்கவில்லை. படத்தோடு ஒன்றிப் போயிருந்தனர். தலையை மெல்ல இடப்பக்கம் திருப்பி சேரனைப் பார்த்தவள்... திடுக்கிட்டுப் போனாள்.

சேரன், இவளையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தது... அவன் கண்களின் பளபளப்பில் அறிந்து கொள்ள முடிந்தது.

கற்பகத்திற்கு உள்ளங்கை வியர்த்துப் போனது. அந்த நேரம் பார்த்து திரையில் மிக நெருக்கமான காட்சி ஓட... தலையை தாழ்த்திக் கொண்டாள்.

சேரனின் வலதுகரம் மெல்ல நகர்ந்து அவளின் கையை பற்ற... சரேலென பனிக்கட்டி நீரை, தலையில் கொட்டியது போல் திகைத்து விட்டாள்.

அவன் கையிலிருந்த வெப்பம் இவள் கைக்கு ஏறியது.

தன் கையை விடுவித்துக் கொள்ள முயன்றும், முடியவில்லை. முன்னிலும் இறுக்கமாய் பற்றினான்.

பக்கத்திலிருந்த பூங்கொடி பார்த்துவிடப் போகிறாளோ என்கிற பயமும் சேர்ந்து கொள்ள உடல் முழுக்க நடுங்கியது. நடுக்கத்தை



மீறிய மயக்கம். முதன்முதலாய் ஒரு ஆணின் தொடுகை! அவளை என்னவோ செய்தது.

சேரன் அவள் கையை மெல்ல உயர்த்தி முத்தமிட்டான்.

ஜிவ்வென்று பறப்பது போலிருந்தது. கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

ஆரம்ப எதிர்ப்பும், பின் அடங்கிப் போன பெண்மையும், சேரனின் இளமை திமிரை அதிகப்படுத்த... இப்போது அவன் கை அவள் இடுப்பைப் பற்ற... துடித்துப் போனாள் கற்பகம்!

படம் முடிந்து வெளியே வந்தபோது அவள் முகம் பேயறைந்தது போலிருந்தது.

''என்ன கற்பகம்... படம் பிடிச்சிருக்கா?''

''உம்...''

''முடிவுதான் சரியில்லன்னு தோணுது. கதாநாயகனோட மாமன் மகளை அம்போன்னு விட்டுட்டு அவன் பாட்டுக்கு எவளையோ கல்யாணம் பண்ணிக்கறது...ஊகூம்...படத்தோட ஒட்டவே இல்லை!''

''.......''

''என்ன கற்பகம்? ஒண்ணுமே சொல்ல மாட்டேங்கறே?''

அவளால் என்ன சொல்ல முடியும்? அவள் எங்கே படத்தைப் பார்த்தாள்?

''அ... அம்மா!''

சேரன் அவளின் திணறலை குறுநகையுடன் ரசித்தான். ஓரக் கண்ணால் அவனைப் பார்த்து, நாணத்துடன் தலைகுனிந்து கொண்டாள்.

''ஏம்மா... ஒரு மாதிரியா இருக்கே?'' விசாலம் அவள் முகம் கண்டு வினவினாள்.

''ஓ... ஒண்ணுமில்லேம்மா... தலைவலி...''

''ஏ.சி. தியேட்டர் இல்லையா? பழக்கமில்லே... அதான் தலைவலி வந்திருக்கு. வீட்டுக்கு போனதும் தலைவலி மாத்திரை தர்றேன்... சாப்பிட்டு, காபி குடிச்சிட்டு கொஞ்சநேரம் படுத்து எந்திரிச்சா... சரியாயிடும்!'' பூங்கொடி வைத்தியம் சொன்னாள்.

'படுத்து எந்திரிப்பதா?' விளக்கு வைச்ச நேரத்திலயா? அவ்வளவுதான்... அப்பா உதைக்க மாட்டாரா? அதற்கெல்லாம் கொடுப்பினை வேண்டும்! அதெல்லாம் எனக்கு இருக்கிறதா என்ன? போனதும் இரவு உணவை தயாரிக்க வேண்டும்! சே...!'

ஆனால், அவள் வருமுன்பே வந்துவிட்டிருந்த சிவராமனும் அருந்ததியும் சேர்ந்து சமையலை முடித்து வைத்திருந்தனர்.

வீட்டினுள் நுழைந்தபோது கற்பகத்திற்கு குறுகுறுப்பாய் இருந்தது. செய்யக்கூடாத தவறினை இழைத்துவிட்டு நுழைவது போல் மனம் இடித்தது.

முகம் கழுவி, பூஜை அறையில் கைகூப்பி வணங்கும்போது கை நடுங்கியது. கண்களை விரித்து முருகப் பெருமானைப் பார்க்க முடியவில்லை.

இல்லாத வேலையை இழுத்துப் போட்டு செய்தாலும், மனம் இதில் ஈடுபடாமல் சேரனிடமே சென்றது.

அப்பா அவளை எதுவும் கேட்கவில்லை. அவர் சாதாரணமாய் இருப்பதே உறுத்திற்று.

ஏதாவது பேசினால் பரவாயில்லை. ஒருவேளை சேரன் பக்கத்தில் அமர்ந்து படம் பார்த்தது, அவன் என் கைப்பற்றியது... யாரேனும் பார்த்துவிட்டு அப்பாவிடம் சொல்லியிருப்பார்களோ...?

இரண்டு மணி நேரம் இந்த கேள்வியே அவளை அரித்தெடுக்க... அதன்பிறகுதான் நிம்மதியாய் மூச்சுவிட முடிந்தது.



''நேரமாகுதே... தலைவலிக்கிறாப்பல இருக்கு... கற்பகம்... சாப்பிட்டு படுப்போமா? எடுத்து வையம்மா!'' வழக்கம் போல் பரிவாய் ஒலித்தது குரல்.

''இதோ... எடுத்து வைக்கறேன்!'' அதிசயமாய் பதில் தந்தவளை சட்டென்று தலையை உயர்த்திப் பார்த்தாள் அருந்ததி.

'ஏதோ ஒரு மாற்றம் அக்கா முகத்தில் என்ன ஆவது?' அடிக்கடி சுவற்றை வெறித்துப் பார்ப்பதும், தனக்குத்தானே சிலிர்த்துக் கொள்வதும்! ஏன்?

'ஒருவேளை பார்த்துவிட்டு வந்த படத்தில் ஏதேனும் சிரிப்புக் காட்சியை நினைத்து சிரிக்கிறாளோ என்னவோ?'

''எனக்கு ரசம் சாதம் மட்டும் போதும்!''

''ஏம்ப்பா? சாம்பார், மோர் எதுவும் போட்டுக்காம?'' கரிசனமாய் கேட்ட மூத்த மகளை ஒரு கணம் நம்ப முடியாமல் அதிர்வாய் பார்த்தார் சிவராமன்.

'பேசுவது என் மகள்தானா? அவளுக்கு இப்படிக்கூட அன்பாய் நாலு வார்த்தை பேசவும் தெரியுமா?'

''எ.. என்னம்மா சொன்னே?''

''இல்ல, சாம்பார், மோர் எதுவும் விட்டுக்காம வெறும் ரசம் சாதம் மட்டும் ஏன்னு...''

''நீயே கேட்டுட்டேயில்லே... போடும்மா. சாம்பாரை முதல்ல விடு. தலைய வலிக்குதேன்னு ரசம் போதும்னு நினச்சேன்... இப்ப தலைவலி இருந்த இடம் தெரியல... போடும்மா!''

அப்பாவின் நெகிழ்ச்சி அருந்ததிக்குப் புரிந்தது.

கற்பகம் புரிந்துகொள்ள முயற்சி பண்ணவில்லை. அவள் உடம்பு மட்டுமே இருந்தது. மனசெல்லாம் இறக்கைகட்டி பக்கத்து வீட்டிற்கு பறந்துவிட்டிருந்தது.

''படம்... எப்படிக்கா? நல்லாருந்துச்சா?''

''உம்... நல்லாவே இருந்தது!''

''என்ன கதைம்மா அது?'' சிவராமன் கேட்க... தடுமாறினாள்.

''குடும்ப கதைதான்ப்பா!''

''அப்படீன்னா... அடுத்த வாரம் நீ, நான், அருந்ததி மூணு பேரும் போகலாம்!''

''அதே படத்துக்கா?''

''ஆமாம்!''

'அய்யோ... வேற வினையே வேணாம்! அந்தப் படத்துல வர்ற காட்சிகளைப் பார்த்தால்... அப்பா என்ன நினைப்பார்?' நம்ம பொண்ணு... இத்தனை மோசமான படத்தையா பார்த்துவிட்டு வந்தாள்? 'இதையா குடும்பப் படம், நல்ல படம் என்று சொன்னாள்? என்று கோபப்பட மாட்டாரா?'

''இ... இல்லப்பா... மறுபடி பார்க்கற அளவுக்கு ரொம்ப நல்ல படம்னு சொல்ல முடியாது. கொஞ்சம் போரடிக்கும். நாம வேற படத்துக்குப் போகலாமே!''

''நீ சொல்லிட்டப் பிறகு அதுக்கு மறுப்பேது? நீயும், அருந்ததியும் சேர்ந்து எந்த படத்துக்கு போகலாம்னு முடிவு பண்ணி நாளைக்கு சொல்லுங்க... போகலாம்!''

''சரிப்பா!''

சிவராமனுக்கும், அருந்ததிக்கும் அன்று மகிழ்ச்சி தாளவில்லை. ஒரு சினிமா படத்திற்கு போய்வந்த மகிழ்ச்சியால் கற்பகம் தங்களிடம் இவ்வளவு அன்யோன்யமாய் பழகுகிறாள் என்றால்... நிறையப் படம் பார்த்தால்... இன்னும் எப்படிப் பழகுவாள்?

அந்த அன்பான உள்ளங்கள் அப்படித்தான் மடத்தனமாய் கணக்குப் போட்டது.



அதற்கடுத்து வந்த நாட்களும் கற்பகத்திற்கு சாதகமாகவே வந்தது. அவள் பக்கத்து வீட்டிற்கு அடிக்கடி போகவர... மகள் கலகலப்பாய் பேசினாலே போதும் என்று அவள் விருப்பத்திற்கு முட்டுக்கட்டை போடவில்லை தந்தை.

ஈரோடில் அரசாங்கப் பணியில் இருந்த சேரன் முன்பெல்லாம் மூன்று, நான்கு மாதத்திற்கொரு முறைதான் வீட்டிற்கு விடுமுறை போட்டுவிட்டு வருவான். ஆனால் இப்போதெல்லாம், மாதா மாதம் டாணென்று வீட்டிற்கு வந்துவிடுகிறான். அது ஏனென்று கற்பகத்திற்கு புரிந்தது.

ஒருபக்கம் அவனைப் பார்த்தால் பயம்! ஆறடி உயரம். நல்ல பருமன். அடர்த்தியான மீசை! ஆண்மை மிளிர்ந்த முகம். என்றாலும் ஒரு பயம். மறுபக்கம் அவன் அருகிலேயே அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டே... சோறு தண்ணிக் கூட சாப்பிடாமல்... அருகிலேயே இருக்க வேண்டும் என்று நெஞ்சு கொள்ளாத ஆசை அவளுக்கு!

ஆனால் முடிகிறதா? தூரத்தில் அவன் தலை தெரிந்தாலே கதவிற்குப் பின் தன்னை மறைத்துக் கொண்டு ரசிக்க முடிகிறதேயொழிய... அவள் தைரியம் அதை தாண்டிப் போக மாட்டேன் என்றது.

சேரனுக்கும் இங்கு வந்து செல்லும் போதெல்லாம் சோர்வே மிஞ்சியது. அவன் கண்களும் வரும்போதெல்லாம் பக்கத்து வீட்டு பைங்கிளியைத்தான் தேடும்.

'என்ன பெண் இவள்? புரிந்துகொள்ள மாட்டாளா? நான் வந்திருப்பது தெரிந்தும் ஒட்டுக்குள் பதுங்கும் ஆமை போல்... ஒளிந்து கொண்டால் எப்படி?'

சலித்துப் போனவன்... தொடர்ந்தாற்போல் மூன்று மாதம் சென்னைப் பக்கம் தலைகாட்டவே இல்லை. தவித்துப் போனாள் கற்பகம்.

'ஏன் வரவில்லை? யாரிடம் கேட்பது? பூங்கொடியிடம் கேட்கலாமா? என் அண்ணன் பற்றி உனக்கென்ன அத்தனை அக்கறை என்று கேட்டு விட்டால்? அப்புறம், விசாலம்மாவுக்கு தெரிந்து, அவள் வந்து அப்பாவிடம் சொல்லிவிட்டால்?'

நாள் முழுக்க இதையே நினைத்து, உருகிப் போனாள். சேரனைப் பார்க்க வேண்டும் என்கிற தவிப்பும், ஏக்கமும் அதிகமாகிப் போயின.

அப்போதுதான்... வெக்கையான நேரத்தில் வீசிய தென்றலை போல வந்து சேர்ந்தான் சேரன்.



6

**அ**ன்று-

கற்பகத்தின் பிறந்த நாள்!

தந்தை ஆசையாய் வாங்கிக் கொடுத்த சேலை உடுத்தியிருந்தாள். அவள் இப்போதுதான் முதன்முறையாய் சேலை உடுத்துகிறாள். தலைநிறைய மல்லிகை சூடி அவள் நின்றபோது... சிவராமனே அசந்துவிட்டார்.

'பதினெட்டு வயது பெண் என்றால் நம்ப முடியுமா? கற்பகம் எப்படி வளர்ந்து விட்டாள்? என்ன அழகு? அம்மன் சிலையாட்டம்? என் தங்கம்... தங்கமின்றியே எப்படி ஜொலிக்கிறாள்?'

அவள் பிறந்த நாளை முன்னிட்டு இரண்டு வகை இனிப்பு செய்யச் சொன்னார்.

இப்போதெல்லாம் சிவராமன் ரொம்பவே மாறிவிட்டிருந்தார். குழந்தைகளுக்காக என்று தன் பழக்க வழக்கங்களையும் மாற்றிக் கொண்டார். அடிக்கடி என்றில்லாவிட்டாலும் மாதத்திற்கு ஒருமுறையாவது வெளியிடங்களுக்கு அழைத்துச் சென்றார்.



கற்பகத்தின் மகிழ்ச்சி முக்கியம் என்று அவர் அருந்ததியைக் கூட இரண்டாம் பட்சமாகத்தான் நினைத்தார். அருந்ததியும் அக்கா சந்தோசம் முக்கியம் என்று மனதார நினைத்ததால், அப்பா அக்காவிற்கு தந்த முன்னுரிமை அவளை சங்கடப்படுத்தவில்லை.

வீட்டில் செய்திருந்த இனிப்புகளை ஒரு டப்பாவில் அடைத்து எடுத்துக் கொண்டு ஓடினாள் பக்கத்து வீட்டிற்கு.

ஆனால், அவள் எதிர்பார்த்ததற்கு மாறாய் இருந்தது வீடு. பரபரப்பாய், முகம் இருள் கவ்விக்கொண்டு...

ஒன்றும் புரியவில்லை கற்பகத்திற்கு.

''என்ன பூங்கொடி? எல்லாரும் ஒரு மாதிரியா இருக்கீங்க? வெளியே கிளம்பறீங்களா?''

''இப்பத்தான் தந்தி வந்தது. எங்க மாமா... அதான் எங்கம்மாவோட அண்ணன் பாலைய்யா... நீகூட பார்த்திருப்பே... அவருக்கு ரொம்ப சீரியசா இருக்காம்... கோயம்புத்தூருக்கு புறப்பட்டுட்டு இருக்கோம்!''

''பயப்படாதே... ஒண்ணும் ஆகாது!''

''யாரு... கற்பகமா? வாம்மா... நானே உன் வீட்டுக்கு வரணும்னு நினைச்சிருந்தேன்!''

''ஏம்மா?''

''சொல்றேன்... ஆமா... இதென்ன பெரிய மனுசியாட்டம் சேலையெல்லாம் கட்டிக்கிட்டு... ரொம்ப அழகா இருக்கேடி!''

''இன்னிக்கு என் பிறந்த நாள்!''

''அடடா... இன்னிக்குப் பார்த்து உன்கூட இருக்க முடியாமே போகுதே... சரி, எனக்கு ஒரு உதவி பண்ணுவியா கற்பகம்?''

''சொல்லுங்கம்மா!''

''அவசரமா கிளம்பிட்டிருக்கோம்! வர ரெண்டு மூணு நாளோ, ஒரு வாரமோ கூட ஆகலாம். என் கண்ணு, மாடியில துணி உலர்த்தியிருக்கேன், வடாம் பிழிஞ்சிருக்கேன், அதை...''

''காயவைச்சு பத்திரமா எடுத்து வைக்கறது என் பொறுப்பு!''

''இப்பதாம்மா உயிர் வந்தது! வீட்ல பால் காய்ச்சியிருக்கேன்... அதை உன் வீட்டுக்கு கொண்டு போய்டு! வீட்டு சாவி உங்கிட்டையே இருக்கட்டும்!''

வீட்டுப் பொறுப்பை அவளிடம் ஒப்படைத்துவிட்டு பூங்கொடியும், அவள் பெற்றோரும் புறப்பட்டு விட்டனர்.

அவள் எடுத்து வந்த இனிப்பு டப்பா அவளைப் பார்த்து சிரித்தது. திடீரென்று எல்லாமே வெறுமையாகிவிட்டது போல் ஓர் உணர்வு.

மாடிக்குச் சென்று உலர்ந்திருந்த துணிகளை மடித்து வைத்து, காய்ந்திருந்த வடாமை எடுத்து பிளாஸ்டிக் டப்பாவிற்குள் அடைத்தாள்.

அடுப்பங்கரையில் பரப்பிக் கிடந்த பாத்திரங்களை அதனதன் இடத்தில்வைத்துவிட்டு, குக்கரில் இருந்த பாலில் ஒரு தம்ளர் எடுத்து டிகாசன்விட்டு கலக்கிக் கொண்டிருந்தபோதுதான்...

கழுத்தில், வெகு அருகே, சூடான மூச்சுக் காற்று உரசியது.

திடுக்கிட்டுத் திரும்பிய கற்பகம் மலைத்துப் போனாள்.

சேரன் நின்றிருந்தான்... கோழியை விழுங்கும் பாம்பை போன்ற பசியோடு.

இவன் எப்போது வந்தான்?

தடுமாறி, பின் சுதாரித்து அவனைத் தாண்டி நகர்ந்தவளை... ''நில்'' என்று கைப்பிடித்து தடுத்தான்.

சர்வமும் சுழன்றது அவளுக்கு.



''விடுங்க!'' அவள் குரல் அவளுக்கே கேட்கவில்லை.

''நானென்ன பூதமா? ஏன் என்னைப் பார்த்து பயப்படறே?''

''விடுங்க!''

''என்னைப் புரிஞ்சுக்க மாட்டியா கற்பகம்? நான் ஏன் அடிக்கடி லீவு போட்டுட்டு வர்றேன்னு உனக்கு புரியலே?''

''வீட்ல யாருமில்லே... உங்கம்மால்லாம்...''

''தெரியும்... எனக்கும் தந்தி வந்தது! நான் அதைக் கேக்கலே! உனக்கு என்னைப் பிடிக்கலையா?'' குரல் தாழ்ந்த சுருதியில் கொஞ்சம் பாவம் இழையோட கெஞ்சுவது போல் கேட்டான்.

பெண்ணை வசியப்படுத்தும் முதல் அஸ்திரம்.

''......''

''என்னை பிடிச்சிருக்கு... ஆனா, பேச, பழக பயம்... அப்படித்தானே?''

''......''

''பேசுடா! இப்படியொரு சந்தர்ப்பம் எப்போ அமையும்?''

கற்பகம் பேசவில்லை. கையையும் விடுவித்துக் கொள்ள முயலவில்லை.

அவன் கையை விடாமலே மறுகையால் விரல் கொண்டு முகத்தை நிமிர்த்தினான்.

நா உலர்ந்து போனது கற்பகத்திற்கு. வியர்த்துக் கொட்டியது.

''க...ற்...ப...க...ம்!'' மூச்சோடு மூச்சாய் இழைந்தது பேச்சு.

''......''

''நீ... எவ்ளோ அழகாயிருக்கே தெரியுமா?''

''......''

''இதென்ன... சேலையெல்லாம் கட்டிக்கிட்டு? பிறந்த நாளா?''

ஆச்சரியமாய் கண்களை மலர்த்தியவள், ''உங்களுக்கெப்படி தெரியும்?'' என்றாள்.

''அட... பேசக்கூடத் தெரியுமா உனக்கு?''

''.....!''

''மறுபடி வெக்கமா? எப்பவும் உன்னைப் பத்தியே நினைச்சிட்டிருக்கிற எனக்கு உன் பிறந்த நாளை கண்டுபிடிக்கிறதா கஷ்டம்?''

''ஏன்... என்னைப் பத்தியே நினைக்கணும்?'' கொஞ்சமாய் தைரியம் துளிர்விட்டது.

''நினைக்க வைச்சிட்டியே!''

''நான் என்ன பண்ணினேன்?''

''என்னென்னவோ பண்ணிட்டே!''

''.....''

''கற்பகம்...!''

''உம்...''

''இன்னிக்கு உன் பிறந்த நாள்! நான் ஏதாவது பரிசு தந்தே ஆகணும்.. என்ன வேணும் உனக்கு? கேள்... தருகிறேன்!''

''கேட்டதே போதும்!''

''அப்ப... கேக்காமலே ஒண்ணு தரட்டுமா?''

''வே... வேணாம்!''

''அடடா! எப்படி வேர்த்துக் கொட்டியிருக்கு... அந்த அறையில உக்காந்து பேசலாம்... வா!''

''கைய விடுங்க!''



''முடியாது! எப்ப இருந்தாலும் இதைப் பற்ற வேண்டியவன் நான் தானே?''

இரண்டாவது அஸ்திரம்.

கற்பகத்திற்கு கூடைப் பூவை அள்ளிக் கொட்டியது போல் இருந்தது.

ஆட்டைப் போல் அவன் பின்னே சென்றாள்.

பக்கத்து அறை... படுக்கை அறை! மின்விசிறியைப் போட்டான்.

தான் அமர்ந்து, அவளையும் அமர வைத்தான்.

அவள் கையை தன் கைகளுக்குள் பொத்தி வைத்துக் கொண்டான்.

''இப்ப உனக்கு பயமில்லையே...''

இருந்தது. ஆனால் பளிச்சென்று சொல்ல முடியாமல் 'இல்லை' என்று தலையாட்டினாள்.

''என்னைப் புரிஞ்சுக்கிட்டே இல்லே...''

''உம்...''

''அப்பா... எனக்கு மல்லிகைப்பூ பிடிக்கும்னு உனக்கு முன்பே தெரியுமா? என்ன வாசனை?''

அவள் கூந்தலில் முகம் புதைத்தான். அவன் உதடு கழுத்தை உரசியது.

கற்பகத்திற்கு ஒரு அணுவும் அசையவில்லை. நடப்பதெல்லாம் கனவு போலிருந்தது.

''கற்பகம்...''

''உம்...''

''நான் ஒரு பரிசு தருவேன்னு சொன்னேனே... தரட்டுமா?''

"உம்..."

"கண்ணை மூடிக்க..."

"ஏன்?"

"பிளீஸ்டா..."

மூடிக்கொண்டாள்.

அடுத்த கணம் அவன் உதடு, அவள் உதட்டை நோக்கி முன்னேறியது.

கற்பகத்தின் உணர்வுகள் கன்னாபின்னாவென்று கட்டறுந்து சிதறி ஓடியது.

மூன்றாவது அஸ்திரம்!

கற்பகம் தன்னிலை மறந்தாள்.

சூடியிருந்த மல்லிகைச்சரம். உதிரத் தொடங்கியது. கட்டியிருந்த புத்தம்புது சேலை... கற்பகத்தைப் போலவே கற்பிழந்து போனது.

கண்ணும் கற்பும் நாணயத்தின் இரு பக்கங்கள் போல்! பெண் கண்ணுக்குச் சமம்! கண் கற்புக்குச் சமம்.

கற்பகம்... இன்று கண்ணிருந்தும் குருடியானாள்.

தொடர்ந்தாற்போல் மூன்று நாட்கள் சேரன் வீட்டிலேயே தங்கி, நாலாவது நாள்தான் கோயம்புத்தூர் போனான்.

கற்பகம், சேரனுடன் இணைந்து புது உலகம் கண்டாள். ஆனால், அதற்குபின் பயம் நெஞ்சை அழுத்த... தன் வீட்டிற்கு ஓடோடி வந்து விட்டாள்.

நல்லவேளை... அது பகற்பொழுது என்பதாலும், இப்போதுதான் முன்னேறிவரும் ஏரியா என்பதாலும், இங்கொன்றும், அங்கொன்றுமாக வீடுகள் முளைக்க ஆரம்பித்திருக்கிறது என்பதால்... தெருவில் மனித நடமாட்டமே இல்லை.



ஓடோடி தன் வீட்டை அடைந்து கதவை மூடிக்கொண்டாள்.

உடம்பெல்லாம் அழுக்கானது போல் ஒரு பிரமை! குளியலறைக்குச் சென்று... வாளிவாளியாய் தண்ணீரை கவிழ்த்துக் கொண்டாள்.

அதற்கடுத்த நாள்... அவள் வெளியே எட்டிக் கூடப் பார்க்கவில்லை.

ஆனால் சேரன் வந்தான்.

கதவு தட்டப்பட்ட சத்தம் கேட்டதும், அப்பாவோ என்று எண்ணியபடி கதவைத் திறந்தவள்... அவனைக் கண்டதும் அதிர்ந்து போனாள்.

அவனே உள்ளே நுழைந்து தாளிட்டவன், "ஏன் வரவில்லை? உனக்காக காத்திருந்தேன் கற்பகம்!" என்றான் ஏக்கமாக.

"போயிடுங்க... யாரும் பார்த்துடப் போறாங்க!"

"யாரும் பார்க்கலை! ஏன் பயப்படறே? நான் உன் கணவன்தனே?"

தைரியமாய் அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.

அடுத்த நாளும் வந்தான்.

அதோடு புறப்பட்டுப் போனவன்... மீண்டும் வரவே இல்லை!



## 7

**கை**யை கன்னத்தில் முட்டுக்கொடுத்து சன்னல் அருகே அமர்ந்திருந்தாள் கற்பகம். யாருமற்ற தனிமை! பயமேற்படுத்தும் பகல் பொழுது. யோசித்து யோசித்து நுனிபிடிபடாத அவஸ்தையில் மறுபடி கண்ணீர் பொத்துக் கொண்டு வந்தது அவளுக்கு.

தெளிந்த வானம் போல் வெறுமையாய் இருந்தது மனசு நடந்த சம்பவங்கள்

கடலலைகளைப் போல் கொந்தளிப்பை ஏற்படுத்த தாங்க முடியாத வேதனையில் உற்பத்தியாயின கண்ணீர் நதி!

அன்று சென்ற சேரன் அத்தோடு வரவேயில்லை. தான் இழந்தது என்னவென்று புரிந்து கொள்ளவே நாட்கணக்கில் ஆனது. அவள் மனம் இன்னும் குழந்தைதான். வெகுளித்தனமான குழந்தை. தற்காலிக சந்தோசங்களை நிரந்தரமென தப்புக் கணக்குப் போட்டு ஏமாறும் குழந்தை.

சேரன் அவளைத் தொட்டபோது பேரின்பமாக உணர்ந்தாளேயொழிய, அதன் பின்விளைவுகள் என்னவென்று தெரியவில்லை. யாரும் சொல்லித் தரவில்லை. சொல்லித் தர விட்டதுமில்லை அவளின் பிடிவாத குணம். பாலியல் கல்வி நம் நாட்டு பெண்களுக்கு, அதுவும் கற்பகம் போன்ற வளர்ந்த குழந்தைகளுக்கு ரொம்பவே அவசியம் அல்லவா?

'ஏன் வரவில்லை? உன் கணவன் என்றானே! முன்பெல்லாம் என்னைப் பார்க்க அடிக்கடி வந்தானே... இப்போது ஏன் வரவில்லை? மூன்று மாதம் ஓடிவிட்டதே. எப்படி என்னைப் பார்க்காமல் இருக்க முடிகிறது? என்னால் முடியவில்லையே! பூங்கொடியிடம் கேட்டால் பிரச்சினை வரும். ஆனால் கேட்டுத்தான் ஆகவேண்டும்.

நேற்றுக்கூட மகளின் முகவாட்டம் கண்டு கவலைப்பட்டார் சிவராமன்.

''ஏம்மா ஒரு மாதிரியா இருக்கே? முகமெல்லாம் வெளுத்துப் போய், சோர்ந்து, கண்களெல்லாம் உள்ளடங்கி... என்னம்மா செய்யுது?''

''ஒ... ஒண்ணுமில்லேப்பா! ரெண்டுமுறை வாந்தி எடுத்தேன்... அதான்!''

''அய்யோ... ஏம்மா? வா... கிளம்பு. டாக்டர்கிட்டே போகலாம்!''



''வேணாம்ப்பா! மதியம் சாப்பாட்ல ஊறுகாயை கொஞ்சம் அதிகமா சேர்த்துக்கிட்டேன். அதனால நெஞ்சுக் கமறலா இருக்கு. சரியாப்போயிடும், விடுங்க.''

''இருந்தாலும் டாக்டர்கிட்டே...''

''வேணாம்பா... படுத்து ஒய்வெடுத்தா சரியாப் போயிடும்!''

''சரி, நீ ஒரு வேலையும் செய்ய வேணாம். நாங்கப் பார்த்துக்கறோம்... நீ போய் படுத்துக்க...''

''சரிப்பா!''

ஒருவேளை டாக்டர்கிட்டே போயிருந்தால்... தெரிந்திருக்கும் எல்லாமே!

**பூ**ங்கொடியிடம் பேசிக் கொண்டிருந்து ஐந்து நிமிடம் ஆகியிருக்காது. அதற்குள் அடிவயிற்றிலிருந்து குமட்டிக் கொண்டு வர... குளியலறைப் பக்கம் ஓடினாள் கற்பகம்.

''என்னம்மா ஆச்சு?'' விசாலம் பரிவாய் கேட்டாள். அவளுக்கு கற்பகம்மேல் அலாதிப் பிரியம் இருந்தது. பூங்கொடி போல் அவளும் ஒரு மகள் போல் நினைத்தாள். தாயில்லாப் பெண் என்னும் கரிசனம் வேறு.

''ஒ... ஒண்ணுமில்லேம்மா... வாந்தி!''

''பார்த்து...வயசுப் பொண்ணுங்க, வயித்துக்கு நிறைவா சாப்பிடணும். ஒண்ணும் சாப்பிடாமல் காயப்போட்டாலும் இப்படி வாந்திதான் வரும். அப்புறம் பார்க்கறவங்க இது கர்ப்ப வாந்தின்னு நினைச்சுக்கப் போறாங்க!'' சிரித்தபடி அறிவுரைத்து விட்டு அடுக்களைக்குள் புகுந்து கொண்டாள் விசாலம்.

கற்பகத்துக்குத்தான் 'சொரேர்' என்றது.

'அப்படியானால், என் வயிற்றிலிருப்பது குழந்தையா? எனக்கு குழந்தையா? அய்யோ... அப்பா என்ன நினைப்பார்? அருந்ததி

என்ன நினைப்பாள்? பூங்கொடி, வீட்டில்தான் என்ன நினைப்பார்கள்? கடவுளே... இந்த இக்கட்டிலிருந்து என்னைக் காப்பாற்று. சேரனுக்கு தெரிந்தால் ஓடோடி வருவார். எப்படித் தெரியப்படுத்துவது?'

அதுதான் புரியவில்லை.

பூங்கொடி வீட்டில் சந்தோசம் தாண்டவமாடியது. வகைவகையாய் பலகாரங்கள் செய்து அடுக்கிக் கொண்டிருந்தனர். பாலும், நெய்யும் மணத்தது.

அந்த மணம் நாசியைத் தொட்டதும் மறுபடி குமட்டல் வர... ஒரு புளிப்பு மிட்டாயை பிரித்து வாயில் போட்டுக் கொண்டாள். பூங்கொடி, துணிகளை பெட்டியில் அடுக்கிக் கொண்டிருந்தாள்.

''என்ன பூங்கொடி! என்ன விசேசம்? துணியெல்லாம் அடுக்கி வைக்கறே? வெளியூர் பயணமா?''

''உனக்கு விசயம் தெரியாது? அம்மா சொல்லலையா? நாங்கள்ல்லாம் ஈரோடுக்கு கிளம்பிட்டிருக்கோம்!''

''எதுக்கு?''

''நிச்சயதார்த்தம்!''

''யாருக்கு..... உனக்கா?''

''எனக்கென்ன அவசரம்? அண்ணனுக்கு!''

''எந்த அண்ணனுக்கு?''

''எனக்கு இருக்கிறது ஒரே அண்ணன்தானே? திடீர்னு நேத்து அண்ணன்கிட்டேர்ந்து கடிதம் வந்தது. உடனடியா குடும்பத்தோட கிளம்பி ஈரோடு வாங்கன்னு. அண்ணன் அங்கே ரெண்டு வருடமா நளினின்னு ஒரு பெண்ணை காதலிச்சிட்டிருந்தார். ரொம்ப வசதியான இடம். எங்க வீட்ல எல்லாருக்கும் சம்மதம். அவங்க வீட்ல முரண்டு பிடிச்சு இப்பத்தான் வழிக்கு வந்திருக்காங்க! அதான் உடனடியா பேசி முடிச்சு சிம்பிளா நிச்சயதார்த்தம் முடிச்சிட்டு முகூர்த்த தேதியை குறிச்சிட்டு வரத்தான் அவசர அவசரமா புறப்படறோம். ஏய்... கற்பகம்... என்னாச்சு? ஏன் திகைச்சுப் போயிட்டே?''



''ஒ... ஒண்ணுமில்லே... நான் வரட்டுமா?''

''கொஞ்சம் நில்லு! கண்ணெல்லாம் கலங்கியிருக்கு... ஏன்டி என்கிட்டே சொல்லமாட்டியா?''

''தூசியைக் கண்டா கண்கள் தன்னால மூடிக்கணும். ஆனா, நான் தைரியமா திறந்தே வைச்சிருந்தேனா... இப்ப கண்ணே திறக்க முடியாதபடிக்கு ஏகப்பட்ட தூசி புகுந்திடுச்சு!''

''சில்லுனு தண்ணியவிட்டு கழுவு போயிடும்!''

''கழுவினா போயிடுங்கறியா! எனக்கென்னவோ அப்படித் தோணல!'' அர்த்தத்துடன் கூறிவிட்டு வந்துவிட்டாள்.

அவளால் எதையும் நம்ப முடியவில்லை.

அவனா... அப்படி செய்தான்? எவ்வளவு அன்பாய் பேசினான்? காதலிப்பது போல், உருகுவது போல் அத்தனையும் நடிப்பா?

எவ்வளவு பெரிய துரோகமிது? எனக்கு மட்டுமா? இரண்டு வருடமாக காதலித்த அந்த பெண்ணுக்குமல்லவா இது துரோகம்!

கேவலம்... என் உடம்பிற்காக இத்தனை நடிப்பா?

தவறு எங்கே நடந்தது? ஏன் இப்படியானது?

அப்பா சொல்றபடி கேட்டிருந்தால், அருந்ததியைப் போல் படித்திருந்தால், இப்படி அடுத்த வீட்டிற்கு ஓடியிருக்க மாட்டேன். அவர்களோடு சினிமாவுக்கு போயிருக்க மாட்டேன்... அவனிடம் மனசையும், உடம்பையும் இழந்திருக்க மாட்டேன்.

இப்போது மட்டும் என்ன கெட்டுவிட்டது? இந்த நிச்சயதார்த்தத்தை நிறுத்திவிடலாம். உண்மையை கூறிவிடலாம்.

முடியுமா? நம்புவார்களா? இவ்வளவு அயோக்கியத்தனம் செய்த சேரன் அந்த பணக்கார பெண்ணை விட்டு என்னை மணப்பானா? இவளை நான் தொடவே இல்லை என்று சத்தியம் பண்ண மாட்டானா?

என்னதான் செய்வது?

எதையாவது செய்துதான் ஆகணும்

எப்படி?



8

நெருப்பின் மேல் நிற்பது போலிருந்தது கற்பகத்திற்கு. தந்தையையும், தங்கையையும் காணும் மாத்திரத்தில் வேதனையில் சுருண்டு போனாள்.

இவர்கள் சுத்தமானவர்கள்! நான்?

கோவிலினுள், காலில் மிதிபட்ட அசிங்கத்துடன் வலம் வந்து கொண்டிருக்கிறேன்.

எவ்வளவு நம்பினார்கள்? அந்நியருடன் சினிமாவுக்கு செல்ல அனுமதித்த என் அப்பாவின் நம்பிக்கையில் இப்படி மண் அள்ளி கொட்டி விட்டேனே! எனக்காக, சிறியவளாயினும் எத்தனை சந்தோசங்களை விட்டுக் கொடுத்தாள்? அவளுக்கு பதிலுக்கு நான் என்ன தரப் போகிறேன்? நான் இப்படி கந்தல் துணியாகி விட்டதை அறிந்தால்... பெற்றவர் தாங்குவாரா?

இப்படி தலைக்குனிவை ஏற்படுத்தி விட்டேனே! இனி இதிலிருந்து மீள முடியாது. பக்கத்து வீட்டில் எல்லாமே தலைக்கு மீறிப் போய் விட்டது. அந்தப் பெண்ணுக்கும், சேரனுக்கும் நிச்சயதார்த்தம் நடந்துவிட்டது. அதை கதைகதையாய் கூறினாள் பூங்கொடி.



32967
5009089

உண்மையைச் சொன்னால் அந்த வீட்டில் எப்படி எடுத்துக் கொள்வார்கள்? மகளாக நினைத்தேனே... இப்படி மதிகெட்டு முறை தவறி நடந்துவிட்டாயே... என்பார்கள் நிச்சயமாய்.

பணக்கார மருமகள் இருக்க, என்னை தன் மகனுக்கு கட்டிவைக்க எந்த பெற்றோர்தான் விரும்புவார்கள்? சேரன் நேற்று வந்திருந்தான். எதுவுமே பேச முடியவில்லை. தனிமையில் இருக்காத மாதிரி சூழலை ஏற்படுத்திக் கொண்டான். திருமணம் நிச்சயமான சந்தோசம் முகத்தில் கழுத்தில் தடிமனாய், புதிதாய் தங்கச் சங்கிலி புரண்டது. இவளை பார்த்த பார்வையில் அந்நியத்தனமும், ஒருவித கேலியும் மிளிர்ந்தது. அந்தப் பார்வை ஒன்றே போதும், சகலமும் புரிந்தது.

இப்போது புரிந்து என்ன ஆகப்போகிறது? எல்லாமே முடிந்து விட்டது. வீணாய் போனவனுக்கு வீணாய் ஒரு சிசு வயிற்றில்? அம்மா நான்! என்று உலகிற்கு கூறலாம். அப்பா யாரென்று சொன்னால் நம்புமா? வேண்டாம்... இந்த குழந்தை உயிரோடு இருக்கக்கூடாது. அதை சுமந்து கொண்டிருக்கும் நானும் இருக்கக்கூடாது. நான் உயிரோடு இருந்தால் பிரச்சினை! அப்பாவுக்கு அவமானம். தங்கைக்கு தடைக்கல். செத்துப் போகலாம். அதுதான் சரி! நான் செய்த அநியாயங்களுக்கு, பெற்றவரை மனம் நோக செய்ததற்கு... அதுதான் சரி!

'செத்துப் போனால்... அப்பா உடைந்து போவாரே!'

'பரவாயில்லை. பதினாறு நாள் துக்கம். சரியாகிவிடுவார். அருந்ததி இருக்கிறாள். அவள் முகம் பார்த்து ஆறுதலடைவார். நான் உயிரோடு இருந்தால்... தீராத தலைவலி அவர்களுக்கு.

இப்படியெல்லாம் யோசித்தது கற்பகத்தின் அறியா மனது. இத்தனை யோசனையும் முன்பே வந்திருந்தால்... எப்படியெல்லாம் வாழ்ந்திருப்பாள்?

சரி... உண்மை என்னோடு புதைந்துவிட வேண்டுமா? இதுநாள் வரை மூடி மூடி மறைத்துதான்... அதற்கு பலனாக மண்ணோடு

மண்ணாகப் போகிறேன். அதற்குமுன் இதற்கு யார் காரணம் என்பதை கூறிவிட்டுப் போவதில் என்ன தயக்கம்?

எழுதினாள்! உருக்கமாக... இதுவரை வெளிப்படுத்தாத அன்பையெல்லாம் கொட்டி... தான் கறைபட்டதையும் வெளிப்படுத்தி... மன்னிப்பு வேண்டி... எழுதி முடித்தாள்.

அப்பாவின் மேசையில் - அவர் பார்வையில் படும்படி வைத்து விட்டு... நள்ளிரவில் வீட்டை விட்டு புறப்பட்டாள் மரணத்தை நாடி!

**அ**ப்படி ஒரு மோசமான விடியலாக அன்று விடியும் என்று சிவராமன் எதிர்பார்த்திருக்க மாட்டார்.

அருந்ததியை எழுப்பிவிட்டு, கற்பகம் படுக்கையை பார்த்தால்... படுக்கை காலி! சரி, பாத்ரூமில் இருப்பாள் என்று, இவர் தன் வழக்கமான பணிகளை மேற்கொள்ள...

எதேச்சையாகத்தான் மேசையின் மீதிருந்த காகிதத்தைப் பார்த்தார். சற்றே உறுத்தலாகத்தான் படித்தார். படித்தவர் துடித்தார். சத்தம்கூட வெளிவராத அதிர்வில் மார்பைப் பிடித்துக் கொண்டு கீழே சாய்ந்தார்.

தொப்பென்று ஏதோ சத்தம் கேட்க... முகம் அலம்பிக்கொண்டு உள்ளே வந்த அருந்ததி, ''என்னப்பா சத்தம்?'' என்று கேட்டபடி வந்தவள்... அடுத்த கணம் ''அப்பா...'' என்று அலறினாள்.

அருந்ததி... அரும்பு! மலர்ந்து மணம் வீசாத இளம் மொட்டு. அவள் வளர்க்கப்பட்ட விதம்... ஒழுக்கமானது. அதிர்ந்து பேசினால் கூட... இதயம் கூம்பிப் போகும் மெல்லிய இதயம் படைத்தவள். வயதுக்கு மீறிய வளர்ச்சி உடலில் வெளிச்சம் போட்டுக் காட்டினாலும், இன்னும் அந்தளவு மனம் பக்குவப்படவில்லை.

அவள் இதையெல்லாம் எதிர்பார்க்கவில்லை. அப்பாவை அந்தக் கோலத்தில் பார்த்தும், பயந்துப் போனாலும், சுதாரித்துக் கொண்டாள். உடனடியாக வெளியேறி ஒரு ஆட்டோவை



அழைத்து வந்தாள். டிரைவரின் உதவியோடு அவரைத் தூக்கி வண்டியில் உட்கார வைத்து மருத்துவமனையில் சேர்த்தாள்.

பலமான அதிர்ச்சியால்... மாரடைப்பு! நல்லவேளை அவசர சிகிச்சையால் ஆபத்தில்லை, மயக்கம் தெளியவில்லை. அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டதால்... இரண்டு நாள் அருகே அனுமதிக்க மாட்டார்கள் என புரிந்தது.

அருந்ததி வீட்டிற்கு வந்தாள். ஒழுங்குப்படுத்தினாள். அப்பாவின் கையிலிருந்து பிரித்து எடுத்த அந்த கடிதத்தை மறுபடி படித்தாள். கண்கள் திரண்டது.

'அக்கா... நீயா... நீயா இப்படி செய்தாய்? அவசரப்பட்டு ஏதும் நடந்துவிடக் கூடாது. இறைவா... மரணத்தை நாடி வந்திருக்கும் என் அக்காவை... எங்கேயிருந்தாலும் காப்பாற்று!'

பக்கத்து வீட்டிற்கு போனாள். வீடு பூட்டியிருந்தது. அடுத்த வாரம் திருமணம் என்பதால்... குடும்பம் மொத்தமும் ஈரோடு புறப்பட்டு விட்டிருந்தது.

பாவி! அவர்கள் அழைப்பிதழ் கொடுத்தபோது கூட கல்லுப்போல இருந்தாயே அக்கா!

'இப்போது எங்கிருக்கிறாய்? நிஜமாகவே உயிரை மாய்த்து... அய்யோ... நினைத்தாலே பதறுகிறதே!'

அருந்ததி அலைந்தாள். அக்காவைத் தேடி கடல், கிணறு, புதர் என்று சந்தேகப்படும் இடங்களிலெல்லாம் தேடினாள்.

கிடைக்கவேயில்லை!

'அக்கா செத்திருக்க மாட்டாள். எங்கேயாவது உயிருடன் இருப்பாள். இதையே அடிக்கடி சொல்லிக் கொண்டு மனதைத் தேற்றிக் கொண்டாள்.'

சிவராமன் இரண்டாவது நாள் கண் விழித்தார். நினைவு வந்ததும்... அழ ஆரம்பித்தார். அருந்ததி அழவில்லை. தந்தை எதிரே

அழுதால்... அவர் இன்னும் உடைந்துப் போவார். ஆறுதலாய் நெஞ்சை தடவிக் கொடுத்தாள்.

ஐந்து நாட்களுக்குப் பிறகு வீடுவந்து சேர்ந்தனர். சிவராமனின் மழிக்கப்படாத முகம், தளர்ந்த நடை, வயோதிகத்தை அதிகப்படுத்திக் காட்டியது.

''கற்பகம்... அம்மாடி... என்னை விட்டுப் போய்ட்டியா கண்ணு...!''

''அப்பா... அக்காவுக்கு ஒண்ணும் ஆகியிருக்காது. கவலைப்படாதீங்கப்பா...!''

''இல்லேம்மா... எழுதி வைச்சிட்டுப் போயிருக்காளேம்மா!''

''அப்போதிருந்த மனநிலையில் எழுதி வைச்சிருப்பா! ஆனா, அக்காவுக்கு சாவை கண்டா பயம்ப்பா! உங்களுக்கு பயந்து அக்கா எங்கேயாவது உயிரோடுதான் இருப்பா... எனக்கு மனதில் அதுதான் படுதுப்பா...!''

''நிசமா... அவள் உயிரோடு இருப்பான்றியா?''

''இருப்பா... என் மனசிலே அப்படித்தான் படுது. கண்டு பிடிச்சிடலாம்ப்பா... அமைதியா இருங்க...!''

''ஏம்மா... ஒருவேளை இப்படி இருக்குமோ? அந்த சண்டாளப்பாவிக்கு நாளைக்கு கல்யாணமில்லே... அங்கே தேடி போயிருப்பாளோ?''

''ஈரோடுக்கா? அக்காவுக்கு... பஸ் ஏறி இறங்கக் கூடத் தெரியாதேப்பா...!''

''நமக்குத் தெரியாமல் இவ்வளவு பெரிய காரியங்களை பண்ணவளுக்கு இது தெரியாமல் இருக்குமா? கற்பகம் நம்மகிட்டே எப்படி எல்லாம் நடிச்சிருக்காப் பார்த்தியா?''

''அக்காவைத் திட்டாதீங்கப்பா... இதுக்கு பயந்துதான்... அவள் வீட்டை விட்டு ஓடிட்டா...!''



''திட்டினா மட்டும் போனதெல்லாம் திரும்பி வந்துடப் போகுதா என்ன? மானம், மரியாதை, ஒழுக்கம், ச்சே... எப்படி மாறிப்போனா? எது மாத்துச்சி அவளை? எவ்வளவு நம்பினேன்? அன்பு கொண்டிருந்தேன்? எப்படி மனசு வந்தது கற்பகத்துக்கு? நடந்தது நடந்து போச்சி... அதையாவது சொன்னாளா? கேட்டு முடிச்சி கல்யாணம் பண்ணியிருக்கலாமே... ஏம்மா... அவள் ஈரோடுலதான் இருப்பான்னு தோணுது... போய் பார்த்துட்டு வர்றேன்!''

''எங்கேப்பா... இந்த நிலையில்... உங்களுக்கு உடம்புக்கு முடியாதப்ப...'' அருந்ததி தடுத்தாள்.

''போற உயிரை தடுத்து நிறுத்துவா முடியும்? என்ன நடக்குன்னு பார்த்துட்டு வந்திடுறேன். என் பொண்ணு வாழ்க்கைய பாழடிச்சவனோட கல்யாணம் நடக்கக்கூடாது...!''

''அப்பா...!''

''நான் போகத்தான் போறேன்...''

''சரிப்பா... நானும் வர்றேன்...!''

சற்றே யோசித்து ''சரி'' என்றார்.

புறப்பட்டனர்.

மறுநாள் காலை! திருமண மண்டபம் கலகலத்தது. அனைவர் முகத்திலும் மகிழ்ச்சி தாண்டவமாடியது.

அப்படியானால்... கற்பகம் இங்கு வந்திருக்க மாட்டாள்.

'என் கண்ணே! எங்கிருக்கிறாய்?'

சிவராமன் மனம் குமைந்தார்.

விசாலம்மா இவர்களைப் பார்த்து ஓடிவந்து வரவேற்றாள். என்றாலும் அவர் முகம் சுருங்கியது.

அவர்கள் இருவரின் தோற்றம்... கல்யாணத்திற்கு வந்தவர்கள் போல் இல்லை! இழவு வீட்டில் விசாரிக்க வந்தவர்கள் போல் இருந்தது.

''வாங்க...!''

''இல்லைம்மா... நான் உங்ககிட்டே கொஞ்சம் தனியாப் பேசணும்!''

''என்ன விசயம்?''

''கற்பகத்தை அஞ்சு நாளாக் காணோம்?''

''என்னது?''

''கடிதம் எழுதி வைச்சிட்டுப் போய்ட்டா! உங்க பையன் அவளை...!''

''என்னது?'' பலமாய் அதிர்ந்தவள், ''என்னங்க இப்படி வாங்களேன்...!'' என்று சற்று தொலைவில் நின்றிருந்த தன் கணவனை அழைத்தாள்.

அவரும் வந்தார். ஒரு அறையின் மூலையில் விவாதம் நடந்தது. முகங்கள் கருங்கிப் போயின. சிவராமன் கற்பகத்தின் கடிதத்தை எடுத்துக் கொடுத்தார்.

இதையெல்லாம் சற்று ஒதுங்கி நின்று கவனித்துக் கொண்டிருந்த சம்பந்தி... நளினியின் தந்தை அருகில் வந்து அந்த கடிதத்தை பிடுங்கிப் படித்தார். இதை விசாலமும், அவள் கணவரும் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

அதன்பிறகு நடந்ததெல்லாம்... களேபரம்தான்.

திருமணம் நின்றது.

நளினி த்தூவென்று சேரனை காறித் துப்பிவிட்டுப் போனாள். மண்டபம் முழுக்க செய்தி பரவி கசமுசாவென்ற குழப்பம். கலைந்துப் புறப்பட்டனர்.



சேரனுக்கு ஆத்திரம் கண்ணை மறைத்தது. என்ன செய்கிறோம் என்று தெரியாமலே... சிவராமனை அடிக்க கையை ஓங்கி, ''உம்பொண்ணு கொழுப்பெடுத்துப் போய் எம் பக்கத்துல வந்து படுத்தா...நான் என்ன செய்ய முடியும்? பொண்ணை ஒழுங்கா வளர்க்கத் துப்பில்லே... பேச வந்துட்டான் பாரு...!''

அதற்குள் அருந்ததி இடையில் புகுந்தாள்.

சேரனை ஒரே தள்ளாய் தள்ளி, கன்னம் பழுக்க அறைந்தாள்.

''ஒரு பொண்ணை அனுபவிச்சிட்டு ஏமாத்தறவனுக்கு பேரு ஆம்பிளை இல்லைடா... பொறுக்கி நாயே...! அப்பா, வாங்கப்பா போகலாம்! இவ்வளவு தலைகுனிவை ஏற்படுத்தின அக்கா... செத்துப் போயாச்சன்னு நினைச்சி தலை முழுகிடுவோம். வாங்கப்பா...!''

அருந்ததி... தந்தையை அழைத்துக் கொண்டு வெளியேறினாள்.

அவர்களை உக்கிரமாய் பார்த்துக் கொண்டிருந்தான் சேரன்!



9

**த**ந்தையை இயல்புக்கு கொண்டு வருவதற்குள் திணறிப் போனாள் அருந்ததி. ஒரு மாதத்திற்கு பிறகே பள்ளிக்குச் சென்றார் சிவராமன். அருந்ததி வீட்டிலிருந்தபடியே படித்தாள்.

கற்பகத்தை தேடித் தேடி அலுத்துப் போய்... அவள் இறந்துவிட்டாள் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டனர். அவள் நினைவுகள் எழும்போது... இதயம் ரம்பத்தால் அறுப்பது போல் வலிக்கும். கண்ணீர் துளிர்க்கும்.

குட்டோடு குட்டாக பக்கத்து வீட்டினர் வீட்டை காலி செய்துவிட்டுப் போய்விட்டனர். அருந்ததி தன் நேரங்களை பயனுள்ள வகைகளில் கழித்தாள். வீட்டின் கொல்லைப்புறத்தில்

அழகிய தோட்டம் அமைத்தாள். வாய்க்கு ருசியாய் சமைத்தாள். குடும்பத்தை அழகாய் பராமரித்தாள்.

ஒரு நாள்!

தந்தை பள்ளிக்கு சென்று விட்டிருந்தார். பகல் மணி பனிரெண்டு. வீட்டு வேலைகளை முடித்துவிட்டு பாடப் புத்தகத்தை கையிலெடுத்து அமர்ந்தாள்.

அப்போதுதான்... கதவு தட்டப்பட்டது.

திறந்தவள் முகம் சுருங்கினாள்.

முன்பின் அறிமுகமில்லாத ஒரு வாலிபன்.

''யார் நீங்க?''

''எம்பேரு சரவணன். இங்கே அருந்ததிங்கறது...''

''நான்தான்... என்ன விசயம்?''

''கற்பகம் உங்க அக்காதானே?''

''ஆமாம்...!''

''அவங்கதான்... என்னை இங்கே அனுப்பினாங்க!''

''என்னது...? சர்வமும் பதறியது அருந்ததிக்கு.

''அக்கா... அக்கா உங்களை... கடவுளே... என் அக்கா உயிரோட இருக்கிறாளா?'' சிரிப்பும் அழுகையுமாக கைகுவித்து கடவுளை வணங்கினாள்.

''தெய்வம் மாதிரி... வந்திருக்கீங்க... என் அக்கா இப்போது எங்கேயிருக்கா?''

''வாங்க... அழைச்சிட்டுப் போறேன்...''

''வந்து... அப்பா... இல்லையே...!''



''அவங்க உங்களை மட்டும்தான் அழைச்சிட்டு வரச் சொன்னாங்க ரொம்ப பயந்துப் போய் இருக்காங்க...''

சற்று யோசித்துபின், அவனோடு புறப்பட்டாள்.

ஆட்டோவில் புறப்பட்டனர். பல்லாவரத்திலிருந்து தொலை தூரம் வந்தபின்பே உணர்ந்தாள்.

''இன்னும் எவ்வளவு தூரம் போகணும்?''

''வந்துவிட்டோம்... அவ்வளவுதான்... அதோ... அந்த வீடுதான்...!''

கோடம்பாக்கத்தில் லட்சுமி காலனியில் தனித்தனியே நின்றிருந்த வீடுகளில் ஒன்றின் முன் ஆட்டோ நின்றது.

'அக்கா... இங்கேயா இருக்கிறாள்?' ஆவலாய் இறங்கினாள். கூடவே அந்த வாலிபனும்.

அழைப்பு மணியை அழுத்தியதும்... வேறு யாரோ ஒரு வாலிபன் கதவைத் திறந்தான்.

''இவங்கதான் கற்பகம் தங்கையா? வாங்க... உள்ளே வாங்க...!'' ஒரு மென்சிரிப்புடன் வரவேற்றான்.

அருந்ததி உள்ளே நுழைந்தாள்.

எந்த குறையுமே சொல்ல முடியாத, தேவையான வசதிகளுடன் கூடிய வீடு அது!

கண்களை சுற்றிலும் ஓடவிட்டாள்.

'அக்கா தட்டுப்படுகிறாளா என்று?'

''அவங்க மாடியில் இருக்காங்க...'' சொன்னதும் இரண்டிரண்டு படியாக தாவி ஏறினாள்.

மாடியில் இரண்டு அறைகள் இரண்டிலும் குளியலறை வசதியுடன் இணைக்கப்பட்டிருந்தது.

ஒரு அறையில் சலசலவென்று தண்ணீர் வழியும் சத்தம்!

''உங்க அக்கா... குளிக்கிறாங்க போலிருக்கு... இந்த அறையில வந்து உக்காருங்க!'' சரவணன்தான் சொன்னான்.

'இந்த நேரத்தில் குளியலா? ஆமாம்... இந்த இடத்தில் அக்கா எப்படி? இவர்களிடம் எப்படி பழக்கம்? யார் இவர்கள்?'

'குமார்... குடிக்க இவங்களுக்கு ஏதாவது பழச்சாறு கொடேன்...!''

''இல்லை... வேணாம்...''

''பரவாயில்லை...உங்கக்காகிட்டே பேசறதுக்கு தெம்பு வேண்டாமா? ரொம்ப களைச்சுப் போய்த் தெரியறீங்க!'' வற்புறுத்தி கண்ணாடி தம்ளர் நிறைய ஆரஞ்சுப் பழச்சாறு கொடுத்தான் குமார்.

அவள் மறுக்க, இவன் வற்புறுத்த... கைப்பட்டு சிதறியது கண்ணாடி தம்ளர்.

அருந்ததி தலை, உடையெல்லாம் அபிசேகம்.

''மன்னிச்சிடுங்க...''

''இல்லை... நீங்கதான் மன்னிக்கணும்... என் கைப்பட்டுதான்...''

''பரவாயில்லைங்க... அதோ... அந்த அறையிலும் ஒரு குளியலறை இருக்கு... நீங்கள் குளித்து... மாற்று உடை உடுத்தி...!''

''இல்லை... இதே இருக்கட்டும்...!'' என்றபடி குளியலறைக்குள் புகுந்து கொண்டாள்.

தாவணி, ரவிக்கையெல்லாம் பழச்சாறு.

கழற்றி.. அலசி காய வைத்தாள். அங்கே குளிக்க என்னவோ போலிருக்க... தண்ணீர் தொட்டு தொட்டு தலையை சுத்தப்படுத்திக் கொண்டாள்.

துணிகள் காயும்வரை உள்ளேயே இருந்தாக வேண்டிய நிலை!



திடீரென்று குளியலறை கதவு பலமாகத் தட்டப்பட்டது.

''ஏய்... யாரது? கதவைத் திற...!'' முற்றிலும் புதிய கரகரப்பான, தோரணை மிகுந்த குரல்.

அருந்ததி ஈரத்துணிகளையே அவசர அவசரமாய் உடுத்திக் கொண்டு கதவைத் திறந்தவள்... மிக பலமாய் அதிர்ந்தாள்.

'போலீஸ்...!'

''வாம்மா... வா!'' ஏளனமாய் அழைத்தார் இன்ஸ்பெக்டர். உடன் நாலைந்து போலீஸ்காரர்கள்.

அவர்களின் பிடியில் சரவணனும், குமாரும்! உடலில் ஒரு துண்டைத் தவிர வேறு உடையில்லை. தலைகுனிந்து நின்றிருந்தனர்.

அருந்ததி அக்கா வருகிறாளா? என்று வாசலை பார்த்தாள்.

உடம்பில் ஜிவ்வென்று பய உணர்ச்சி... ஏறியது.

''உம் பேரென்ன?''

''அருந்ததி...!''

''புதுசா...?''

''......!'' புரியாமல் விழித்தாள்.

''எவ்வளவு பணம் வாங்கினே?''

''எதுக்கு?''

''இவனுங்களோடு இருக்கறதுக்கு!''

தூக்கி வாரிப்போட்டது அருந்ததிக்கு. நிமிடத்தில் உறைக்க... நடந்த நாடகம் புரிந்தது.

''இதோ பாருங்க சார்! நான் யாரு என்னன்னு தெரியாமல் இப்படியெல்லாம் பேசற வேலைய வைச்சுக்காதீங்க...!''

''நீ யாருடி? உடம்பை விற்கிறவள் தானே? பார்த்தாலே தெரியுதே! நீ போட்டிருக்கிற உடை... கலைந்த தலை... இந்த தடியன்களின் கோலம்... இந்த படுக்கையறை... இந்த வீடு...! வாரா வாரம் ரெய்ட் பண்ற வீடுதானே இது? ஏம்மா... இது ஒரு தொழிலா? பார்க்கச் சின்னப் பொண்ணா தெரியறே... பணத்துக்காக வேசித்தனம் பண்றியே... வெக்கமாயில்லே?''

''நிறுத்துங்க... இதுக்குமேல ஒரு வார்த்தை பேசினாலும்... பல்லு எகிறிடும்...'' யாரிடம் பேசுகிறோம் என்று புரியாமல் அருந்ததி பேச...

ரௌத்ரமானார் இன்ஸ்பெக்டர். கொத்தாக அவள் தலைமுடியை பற்றி பளாரென அறைந்தார்.

''இழுத்துட்டுப் போங்க இந்த நாயை...!''

அருந்ததி கதறக் கதற ஜீப்பில் ஏற்றப்பட்டாள்.

சிவராமன் ஒன்றுமே பேசவில்லை.

அருந்ததி அழுதழுது முகம் வீங்கிப் போயிருந்தது.

போலீஸ் ஸ்டேசனிலிருந்து தகவல் வந்ததும் பதறிப்போய் ஓடிவந்தார்.

ஒரே வார்த்தை... ஒரே ஒரு வார்த்தை மட்டும் மகளிடம் கேட்டார்.

''அருந்ததி... நீயுமா?''

அவ்வளவுதான்.

கெஞ்சிக் கேட்டு மகளை வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டார்.

ஆனால் மறுநாள் ஒரு தினசரியில் அவள் புகைப்படத்தோடு சின்னதாக செய்தி வெளியாகி இருந்தது.

'இளம்பெண் விபச்சாரம். இரண்டு வாலிபர்களுடன் பிடிபட்டாள்.'



உடைந்துப் போனாள் அருந்ததி. இப்போது தெளிவுபட எல்லாமே புரிந்தது.

இது சேரனின் திட்டம்! அவளை பழிவாங்க நினைத்தான். நினைத்ததை முடித்துவிட்டான்.

அடப்பாவி! வேண்டுமானால் என்னை அடித்து பழிதீர்த்து இருக்கலாம். இப்படியா? இந்த வழியிலா?

அது குறைந்த சர்குலேசன் கொண்ட சாதாரண தினசரிதான்! அதனால நடந்த சம்பவம் அந்த தெருவில் மட்டுமல்ல; சுற்று வட்டாரத்திலும் கூட யாருக்கும் தெரிய வாய்ப்பில்லாமல் போனது அருந்ததியின் அதிருஷ்டம்!

அருந்ததி அப்பாவிடம் எவ்வளவோ எடுத்துக் கூறினாள். சிவராமன் கல்லுப்பிள்ளையார் போல் அமைதியாக இருந்தார். மகளிடம் அன்றிலிருந்து எந்தவித பேச்சு வார்த்தையும் வைத்துக் கொள்ளவில்லை. ஆசிரியர் பணியை ராஜினாமா பண்ணி வீட்டோடு முடங்கிவிட்டார்.

அருந்ததி துடித்துப் போனாள். 'அப்பா நம்பிவிட்டார். நான் மோசமானவள் என்ற முத்திரை அவருள் பதிந்துவிட்டது. கடவுளே... அடுக்கடுக்காய் ஏன் இத்தனை சோதனை?'

கொஞ்சம் கொஞ்சமாய் தன்னை சமாதானப்படுத்திக் கொண்டாள். இதுதான் வாழ்க்கை. தனக்கு விதிக்கப்பட்டது இவ்வளவுதான் என்று எதிர்கொள்ள ஆரம்பித்தாள்.

அவளுக்கு ஒரே ஒரு நபர் மீதுதான் ஆத்திரம்.

சேரன்! அவன்தான் இத்தனைக்கும் காரணம்?

அவன் மட்டும் என் கையில் கிடைக்கட்டும்... என்ன செய்கிறேன் பார்! எங்கோ இருந்தபடி இயக்கி என்னை இந்தளவு சேவலப்படுத்தி விட்டானே... அவனை...

காத்திருந்தாள்... அவனை மறுபடி சந்திக்கும் நம்பிக்கையோடு!

ஆனால், அந்த நம்பிக்கை பொய்த்துப் போனது.



## 10

''**அ**ண்ணா... சீக்கிரம் வாங்கண்ணா...'' விமலா வித்யாதரனின் முதுகை சீண்டிக் கொண்டிருந்தாள்.

''வர்றேம்மா... என்ன அவசரம் உனக்கு?''

''பார்த்தீங்கன்னா... அசந்து போயிடு வீங்க...!''

''ஓ... அப்பேர்ப்பட்ட அழகோ?''

''என்ன அவ்வளவு சாதாரணமா கேட்டுட்டீங்க? எப்பேர்ப் பட்ட ஓவியம் அது தெரியுமா?''

''என்னமோ விமலா... எனக்கு ஓவியம் அது இதுன்னு எதிலேயும் ஈடுபாடில்லே... எனக்குத் தெரிஞ்சதெல்லாம், ஆபீஸ், போர்டுமீட்டிங், பைல்... இவ்வளவுதான்!''

''சரி...சரி...அறுக்காதீங்க.. சீக்கிரம் வாங்க...!'' தங்கையின் தொல்லை தாங்காமல் அவள் தலையில் செல்லமாய் தட்டியபடி மாடியிலிருந்து அவள் பின்னே இறங்கி வந்தான்.

காகிதங்களால் மூடப்பட்டிருந்த ஓவியத்தை அவைகளை அகற்றி அண்ணன் முன் காண்பித்தாள்.

''எப்படி என் தேர்வு?''

நிசம்தான்... அந்த ஓவியம் அதி அற்புதமாகவே இருந்தது.

அழகிய இளம்பெண். கலங்கத் தொடங்கியிருந்த விழிகளில் சோகமும் புன்னகையும் கலந்த மிளிர்வு. பெரிய சூரியகாந்திப்பூ. அதன் மீது வண்ணத்துப்பூச்சி! ஆழ்ந்த ரசனையுள்ளவர்கள் யாருமே அந்த ஓவியம் சொல்லவரும் கருத்தைப் புரிந்துக் கொள்வார்கள்.



வித்யாதரன் ஆச்சரியப்பட்டுப் போனான்.

''அற்புதம்.''

''சும்மாவா? அம்பதாயிரம் கொடுத்து வாங்கினதாக்கும்!''

''அம்பதா? ரொம்ப அதிகம் போலிருக்கு!''

''ஒரிஜினல் விலை முப்பதுதான். இரண்டு கைமாறினதா? தெரிஞ்சும் எப்படி விமலா வாங்கினே?''

''அண்ணா...''

''எவ்வளவு அதிகம்னாலும் முதல் ஏலத்திலேயே இதை நீ வாங்கியிருக்கணும். அதுதான் நமக்கு, நம்ம குடும்பத்துக்கு மரியாதை...''

''அண்ணா, இதுல மானம், மரியாதை போற அளவுக்கு அசம்பாவிதம் நடந்ததா... எனக்குத் தெரியலே...!''

''உனக்குப் புரியாது... புரியவும் வேண்டாம்! போ... இனிமேல் இப்படியெல்லாம், கைமாறிப் போன எதையும் வாங்காதே... போ...இந்த ஓவியத்தை என் கண்ல படறமாதிரி மாட்டாதே! உன் அறையிலேயே மாட்டிடு...'' வித்யாதரன் முகம் கன்றிப் போயிருந்தது.

''விமலாவுக்கு எதுவும் புரியவில்லை. அண்ணனுக்கு மறை கழன்று விட்டதோ என்றுகூட நினைக்கத் தொடங்கினாள். ஓவியத்தை தன் அறைக்கு எடுத்துச் சென்றாள்.

வித்யாதரன் சற்றுநேரம் சோபாவில் அமர்ந்து கண்களை மூடிக்கொண்டான்.

செகண்ட் ஹான்ட் என்ற வார்த்தை அவனைப் பொறுத்தவரை நஞ்சு. பிடிக்காத வார்த்தை இந்த உலகில் உண்டென்றால்... அதுதான்..

காரணம் இல்லாமலில்லை. அவனின் தந்தை பெரும் பணக்காரர். மிராசுதாரரின் மகன். அளவுக்கு மீறிய செல்வம். இன்னொரு மனைவியை ஏற்படுத்திக் கொள்ளச் செய்தது. அந்த வருத்தத்திலேயே... முதல் மனைவி அம்பிகாதேவி... வித்யாதரனின் தாய்... தற்கொலை செய்துக் கொண்டாள்.

அந்த தழும்பு வித்யாதரனின் மனதில் அப்படியே விழுந்துவிட்டது. கல்லூரி படிப்பு முடியும்வரை விடுதியிலேயே தங்கி படித்தான். தந்தைக்கு பிரச்சினை ஆரம்பமானது.

எல்லாவற்றிற்கும் எதிர்கேள்வி கேட்க ஆரம்பித்தான் வித்யாதரன். தந்தையைக் கூட மதிப்பதில்லை. பொன்னியைப் பார்க்கும் போதெல்லாம்... அவள்தான் இரண்டாவது மனைவி. தன் தாயின் சலனமற்ற சடலமே கண்முன் தெரியும். அவன் பேசிப் பேசியே... அவளை வீட்டைவிட்டு ஓடவைத்தான்.

தந்தை ரொம்ப நாள் உயிரோடு இருக்கவில்லை. பொன்னிகூட நோயில் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டான். அதிலிருந்து செகண்ட் ஹான்ட் என்ற வார்த்தை மீது தீராத எரிச்சல் இருந்து கொண்டே இருந்தது.

வித்யாதரனுக்கும், விமலாவுக்கும் பத்து வயது வித்தியாசம் இருந்ததால்... தாயின் பாதிப்பு அவளுக்கு அதிகளவு இல்லை. பொன்னி நல்லவளோ, கெட்டவளோ, வித்யாவைப் பொறுத்தவரை, தன் தாய் இறப்பதற்குக் காரணமானவள்.

அது அப்படியே மனதில் தங்கி பழகிப்போய்... எதையுமே, எந்தப் பொருளையுமே, பிறர் பயன்படுத்தியப் பொருளை உயிரே போனாலும் பயன்படுத்த மாட்டான்.

அவனுக்குத் தனி கார். அறை, தொலைக்காட்சி அது இதென்று சாப்பிடும் வெள்ளித் தட்டுவரை தனிதான்.

ஆனால், ஆண்டவன் ரொம்பவும் குறும்புக்காரர்தான். இப்படிப்பட்ட வித்யாதரனின் கண்களுக்கு அருந்ததியை காட்டி வேடிக்கைப் பார்ப்பானா?



வித்யதரன் அடிக்கடி கோவில், குளம் என்று போகும் ஆள் கிடையாது. எப்போதேனும் ஓரிரு விசேச தினங்களில் மட்டும் சென்று சாமியை குசலம் விசாரித்துவிட்டு வருவதோடு சரி!

அன்று அவனின் பிறந்த நாள்!

தங்கையோடு கோவிலுக்கு வந்திருந்தான்.

அன்றைக்குப் பார்த்துதானா அருந்ததியும் அதே கோவிலுக்கு - அதுவும் அவனுக்கு நேர் எதிரே நின்று சாமி கும்பிட வேண்டும்?

தாமரை மொட்டு போல் கைகளை குவித்து, பட்டாம்பூச்சி இமைகள் மூடி, எதையோ வேண்டி முணுமுணுத்த ஆரஞ்சு உதடுகளையும்... இமைக்காமல் பார்த்தபடி நின்றிருந்தான்.

எந்த பகட்டும், படாடோபமும் இன்றி, எளிய கஞ்சி போட்டு விறைப்பான நூல் சேலையில். கழுத்தில் ஒற்றைச் செயினில், நீளக் கூந்தலில் ஒரு முழ முல்லைப்பூவில் எப்படி இவ்வளவு அழகாய் ஜொலிக்க முடியும்?

அன்றிரவு மட்டுமல்ல, அதற்குபிறகு வந்த பத்து நாட்களும் தூங்கவிடாமல் அவனை இம்சித்தது அவளின் முகம்?

யாரவள்?

அதற்கடுத்து ஒருநாள், எதேச்சையாக காய்கறி அங்காடி வழியாக இவன் காரில் பயணித்தபோது மறுபடி அவளைப் பார்க்க நேர்ந்தது.

கையில் ஒரு பிளாஸ்டிக் கூடையோடு, பேரம் பேசி வாங்கின காய்களோடு வெயிலில் வியர்க்க விறுவிறுக்க நடந்து கொண்டிருந்தாள்.

அவளைப் பார்த்த மாத்திரத்தில் இவனுள் ஏதோ மாற்றம் நிகழ்வதை அவனால் உணர முடிந்தது.

அவன் கை அவனைக் கேட்காமலேயே காரை அவளைத் தொடர்ந்து மெல்ல ஓட்டிச் சென்றது.

அவள் நுழைந்த அந்த சிறிய வீட்டின் எண்ணை மனதில் குறித்துக் கொண்டான்.

மேலும் பத்து நாட்கள் பலதையும் யோசித்துப் பார்த்தான்.

அடுத்த நாள்... அருந்ததியின் வீட்டின் முன் அவன் கார் நின்றது.

கைகுவித்து தன்னிடம் பணிவாய் அறிமுகப்படுத்திக் கொண்ட வித்யாதரனைப் பார்த்து முதலில் மிரண்டாலும், ஆச்சரியமும் பிரமிப்பும் ஒருசேர... சிவராமனுக்குப் பிடித்துப் போனது.

'அருந்ததிக்கு இப்படியொரு வாழ்க்கையா? எப்பேர்ப்பட்ட பணக்காரன்? எங்கோ வெளியில் அவளைப் பார்த்து பிடித்துப் போய்... திருமணம் செய்துகொள்ள விரும்பி வீடு தேடிவந்து பெண் கேட்கிறான்?

என்ன பணிவு? என்ன அடக்கம்? இவனல்லவா ஒழுக்கமான பிள்ளை? இவனுக்கு அருந்ததி பொருத்தமானவள்தானா? அவளைப் பற்றித் தெரிந்தால்... என்ன ஆகும்? கூடவே கற்பகம் பற்றியும் அறிந்தால்? வேண்டாம்... தெரிந்தால் அவ்வளவுதான். எந்த ஆணாலுமே ஜீரணித்துக் கொள்ள முடியாதே! தெரியவே கூடாது.

''தம்பி... நீங்க நினைக்கறாப்போல...''

''வசதியில்லை! அதானே சொல்லப் போறீங்க! நான் உங்க மகளை மட்டும்தான் பெண் கேட்டு வந்தேன்.''

''இருந்தாலும், என் சக்திக்கு ஏத்தபடி செய்யாமல் இருக்க மாட்டேன். எனக்கு இவள் ஒரு மகள்தான்!''

தடாலென தலையை உயர்த்தி தந்தையைப் பார்த்தாள் அருந்ததி.

''பெரிய மகள்... சிறிய வயதிலேயே இறந்துவிட்டாள். இது சொந்த வீடுதான். இவளுக்குத்தான்!''



மெதுவாய் சத்தமிட்டுச் சிரித்தான்.

''சரி... நான் என் வீட்டு சார்பாக பெரியவர்களை அனுப்பி... திருமண ஏற்பாடுகள் பற்றி பேசச் சொல்கிறேன். அதற்குமுன் ஒரு கேள்வி...''

''சொல்லுங்க!''

என்ன கேட்பானோ என்கிற பயத்தில் நா உலர்ந்து போனது அருந்ததிக்கு.

''இந்த ஏற்பாடுகள்ல உங்க மகளுக்கு முழு சம்மதமான்னு கேட்டு சொல்ல முடியுமா?''

கேள்வியை சிவராமனிடம் கேட்டாலும், பார்வை என்னவோ பாவையவள் மீதே படிந்திருந்தது.

அந்தப் பார்வையை நேருக்குநேர் சந்திக்க முடியாது தோல்வியில் துவண்டன விழிகள். முகம் தாங்க முடியாத வெட்கத்தில் செம்மையை பூசிக்கொண்டு கவிழ்ந்தது.

விமர்சையாய் வித்யாதரன் - அருந்ததி திருமணம் நடந்தேறியது. தான் உயிரோடு இருப்பதற்குள் நடக்குமோ, நடக்காதோ? என்று புழுவாய் அவரை குடைந்து கொண்டிருந்த கேள்விக்கு இவ்வளவு சீக்கிரம் சாதகமான பதில் கிடைக்கும் என சிவராமன் எதிர்பார்க்கவில்லை.

மகளிடம் அதிகமாய் பேசவில்லை என்றாலும் அதிகமாய் பேசின ஒரே வார்த்தை இதுதான்-

''மாப்பிள்ளையிடம் உண்மையைக் கூறித் தொலைக்காதே!' என்பதுதான்.

அருந்ததி குமைந்து போனாள்.

'எது அப்பா உண்மை? நான் கற்பிழந்து போனதா? அதுவா நிஜம்? அதுவா உண்மை?' கேட்கவில்லை. கேட்டால் மட்டும் அவள் எதிர்பார்த்த பதிலா வரப்போகிறது?

ஆனால், அந்தப் பொய்... அருந்ததியை அசிங்கமாய் எடை போட வைத்த அந்த பொய்யான உண்மை... வேறு ரூபத்தில் விசுவரூபமெடுத்து வித்யாதரனின் முன் நின்றது.

**மு**தல் இரவு!

மனைவியின் கன்னத்தை முதல் முத்தத்தால் எச்சில் படுத்த ஆர்வமாய் அருந்ததியின் வருகைக்காக குட்டிப் போட்ட நாயாக நடை பயின்றான்!

பவுர்ணமிக்கு இன்னும் இரண்டு நாளே இருந்ததால்... வெள்ளித் தட்டாய் பளபளத்தது நிலா!

தென்றல் காற்று! ஏ.சி.யோடு கலந்து வந்த இனிய லாவெண்டர் மணம்.

அறை ஓரத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன திருமணத்திற்கு வந்திருந்த பரிசுப் பொருட்கள்.

'அலங்காரம் செய்து கொண்டுவர இத்தனை நேரமா? சிறிது நேரத்தில் கலைத்து விடுவேன் என்று தெரியாதா? இதே கேள்வியை வந்ததும் அருந்ததியைக் கேட்க வேண்டும். அப்போது அவள் முகம் போகும் போக்கைப் பார்க்க வேண்டும்.'

குறும்பாய் தனக்குத் தானே நகைத்தபடி பரிசுப் பொருட்களின் அருகே ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு அமர்ந்தான். ஒவ்வொன்றாய் எடுத்துப் பிரித்தான். கட்டியிருந்த தாளையும், ரிப்பனையும் பிரித்து எடுக்க அலுப்பாயிருந்தாலும், சுவாரசியமாயும் இருந்தது.

விதவிதமான பரிசுப் பொருட்கள்.

ஒரு குறும்புக்கார நண்பன் பாக்கெட் பாக்கெட்டாய் குடும்பக் கட்டுப்பாட்டு சாதனம் அனுப்பியிருந்தான்.

''ராஸ்கல்...!'' என்று வாய்விட்டு சிரிக்க ஆரம்பித்தான்.



அப்போதுதான்... வானவில்லாய், அதி அழகோடு உள்ளே நுழைந்தாள் அருந்ததி.

அவளைப் பார்த்ததும் அதுவரை இருந்த தைரியமெல்லாம் ஓடி ஒளிந்துகொள்ள தடுமாறிப் போனான் வித்யாதரன்.

''வா... அருந்ததி!'' அவள் தோள் பற்றி அழைத்துச் சென்றான். கணவனின் முதல் தொடுகையில் சிலிர்த்துப் போனாள். அவனை நிமிர்ந்து பார்த்து நெஞ்சம் கொள்ளா பூரிப்பில் இதயம் விம்மியது.

'எத்தனை அதிர்ஷ்டசாலி நான்? எனக்கு இப்படியொரு வாழ்க்கையா? எப்பேர்ப்பட்ட குடும்பம்? எப்பேர்ப்பட்ட கணவன்! கடவுளே... நீ என்னை கைவிடவில்லை...'

ஆனால், அத்தனை பூரிப்பிற்கும் ஆயுள் அரை மணி நேரம்தான் என்பது புரியவில்லை. கடவுள் கைவிட்டதையும் உணரவில்லை.

ஆசை மனைவியைப் பார்த்ததும் கடல் போல் உணர்ச்சிகள் கொந்தளித்தாலும்... அதற்குமுன் நட்பாய் சிரித்து பேசிப் பழகி... அதன்பிறகே மற்றதெல்லாம்... என்று மனோதத்துவ ரீதியாக சிந்தித்தான். அதன்படியே செயல்பட்டான்.

'வந்திருந்த பரிசுப் பொருட்களையெல்லாம் அவளும் பார்க்கட்டுமே!'

அவள் கைப்பற்றி இன்னொரு நாற்காலியில அமர வைத்து ''இதையெல்லாம் பிரித்துப் பார்ப்போமா?'' என்றான்.

''உம்...''

அவளிடம் சின்னச்சின்ன விசயங்களை பேசியபடி பரிசுப் பொருட்களடங்கிய தாள்களை பிரிக்க ஆரம்பித்தான். அவளும் பிரித்தாள்.

''உனக்கு என்ன பிடிக்கும் அருந்ததி?''

''.......''

''புரியலியா? சாப்பாட்டு வகையில... பூ பழம் இப்படி...''

''ருசியான எல்லாமே பிடிக்கும். ஜாதிமல்லி, அப்புறம்... ஆப்பிள்...

''என்னை?''

மெல்ல ஓரக்கண்ணால் பார்த்து சிரித்தாள்.

''பிடிக்காதா?''

''அய்யய்யோ...!''

''அப்ப சொல்லு!''

''பிடிக்கும்...''

''சரி... திருமணத்தில் உங்கள் உறவுக்காரங்க அதிகமா யாரும் கலந்துக்கலியே ஏன்?''

''அதுவந்து... அம்மா இறந்தபிறகு, அப்பா சொந்தபந்தங்கள் யாரோடும் அதிகமாய் தொடர்பு கொள்வதில்லை!''

''உனக்குத் தோழிகள் யாருமில்லையா? அப்படி எவருமே கண்ணில் அகப்படவில்லையே! இந்த மாதிரி திருமண நேரத்தில் அவர்களின் பங்கு எவ்வளவு அவசியம் தெரியுமா?''

''எப்படி?''

''மாப்பிள்ளை இப்படி, அப்படி! பார்த்து நடந்துகொள். அறையை விட்டு வெளியே வருவதற்குள் பாதிக் கன்னம் காணாமல் போய்விடப் போகிறது...!'' இப்படியெல்லாம் வதந்தியைக் கிளப்பிவிட்டு உன் மூடை வரவழைக்க... ரொம்பவே அவசியம்...'' வித்யாதரன் உதடு சுளித்து அவளைப் பார்த்தபடி சொல்ல...

''அதற்காகத்தான் எந்தத் தோழியையும் அழைக்கவில்லை'' என்றாள். தைரியமாய்... ஆனால் தலைகுனிந்தபடி.



''பரவாயில்லை... இந்தளவு தைரியமாய் பேசறியே... உன் பயத்தைப் போக்கவே ரெண்டு நாள் தேவைப்படும்னு நினைச்சேன்... நல்லதாப் போச்சு!''

''உ...உங்களுக்கு என்னவெல்லாம் பிடிக்கும்?''

''உம்... எதிர்க் கேள்வியா? விடியறவரைக்கும் கேள்விக்கு பதில் மட்டும்தானா? சரி... சொல்றேன். இந்த உலகத்தில் புத்தம் புதுசா உள்ள எதுவுமே எனக்குப் பிடிக்கும். அப்புறம் என் தங்கை விமலா! பாவம், அம்மாவோட அன்பு என்னன்னு உணர்றதுக்கு முன்னதாகவே அம்மாவை இழந்தவள். அதனால் அவள் மீது எனக்குத் தனிப்பட்ட பாசம். அவள் கேட்டு எதையும் நான் மறுத்ததில்லை...''

சற்று நிதானித்து விட்டு மறுபடி தொடர்ந்தான்.

''எனக்கு குழந்தைகள் என்றால் மிகமிக பிடிக்கும். நீ எனக்கு டசன் கணக்கில் பெற்றுத் தரவேண்டும்... இப்பவே சொல்லிட்டேன்!''

அருந்ததி தன் கைகளுக்குள் முகத்தைப் பொத்திக் கொண்டாள்.

''அ...ரு...ந்...த...தி'' மெல்ல அவள் கையை எடுத்து கன்னத்தில் பதிய வைத்துக் கொண்டான்.

அவளுக்குள்ளும் மின்சாரம் பாய்ந்தது.

அவன் அவளை தன்னருகே இழுத்து முகத்தோடு முகம் வைத்து தேய்த்தான்.

உள்ளுக்குள் படபடக்க கிறங்கிப் போனவள்... ''இதை எல்லாம் பிரிச்சு பார்த்துட்டு...'' எதையாவது பேச வேண்டுமே என்று பேசி வைக்க...''

''சரி... நீ இன்னும் இயல்புக்கு வரவில்லை... ஓக்கே... வா. இந்த ஆராய்ச்சியிலும் ஈடுபடுவோம். எனக்கொன்றும் அவசரமில்லை!''

மீசையில் மண் ஒட்டாதவன் போல் பேசினான். சற்றே ஏமாற்றம் தொனித்தது குரலில்.

அருந்ததிக்கும் அந்த உணர்வு இல்லாமலில்லை... ஏமாந்தது வித்யாதரன் மட்டும்தானா? அவளும்தான்.

ஒவ்வொன்றாய் பிரித்தான். எடுக்க எடுக்க மாளாமல் வந்து கொண்டேயிருக்க... கைவலிக்க ஆரம்பித்து விட்டது. பொம்மை, சுவர் கடிகாரம், வெள்ளியிலான பொருட்கள், தங்க கெடிகாரம்... என எல்லாமே விலையுயர்ந்தவைதான்.

வித்யாதரன் ஒரு பார்சலை பிரித்தான். பிரிக்க பிரிக்க காகிதச் சுருள்கள் வந்து கொண்டேயிருக்க, ''பாரேன்... கடைசியாய் ஏதாவது ஒரு கூழாங்கல்லை போட்டு வைச்சிருக்கப் போறாங்க...''

கணவன் சொல்லவும் அருந்ததியும் ஆர்வமாய் கவனிக்க ஆரம்பித்தாள்.

காகிதக் குப்பைகளை அகற்றியபின் சிறியதாய் ஒரு அட்டைப் பெட்டி! அதனை பிரித்துப் பார்த்தான். ஒரு கவர் சற்றே உப்பலாய்! வியப்பாய் அதை அகற்றி உள்ளிருந்ததை எடுத்தான்.

அது... பேப்பர்! அருந்ததி பற்றிய செய்தி வந்திருந்த தினசரி நாளிதழ்!



## 11

நடந்தவை அத்தனையும் தலைகீழ்! எது நடக்கக் கூடாதோ, அது நடந்துவிட்டது. எது தெரியக்கூடாது என்று நினைத்தாளோ அது தெரிந்துவிட்டது.

அந்த கணத்தில் வித்யாதரனின் முகத்தில் ஏற்பட்ட மாற்றத்தை, கோபத்தை இப்போது நினைத்தாலும் உடம்பு ஒருமுறை விலுக்கென்று அதிர்ந்தது. அருந்ததிக்கு காதல் கசிந்த கண்களில் நெருப்பு எரிந்தது.



உடலில் மின்சாரம் ஓடவிட்ட அவன் கை வலது கன்னத்தை பழுக்க வைத்தது.

''சீ... கடைசியில் நீயும் ஒரு செகண்ட் ஹாண்ட்தானா?''

''அய்யோ... அவசரப்பட்டு முடிவு பண்ணாதீங்க... நடந்தது என்னன்னா?''

''ச்சு... நான் உன் கதை கேட்க தயாராயில்லே! அதான் விலாவரியா உன் அந்தரங்க லீலைகளை உன் போட்டோவோட போட்டு புட்டுபுட்டு வைச்சிருக்கானே! சொல்லுடி... ஏன் இதை என்கிட்டே முன்னாடியே சொல்லலே...''

''நம்புங்க... இதெல்லாம் திட்டமிட்டு நடத்தப்பட்ட நாடகம்!'' அழுதழுது முகம் வீங்கியிருந்தது.

''ஆமா... நாடகம்தான்! நீயும், உங்கப்பனும் என்கிட்டே நல்லா நாடகமாடி என்னை ஏமாத்திட்டீங்க...''

''கடவுளே...''

''எங்கேடா இவனுக்குத் தெரிஞ்சிடப் போகுதுன்னு சொந்தபந்தம் யாரையும் திருமணத்துக்குக் கூப்பிடாதது... இப்போதல்லவா புரிகிறது... அதற்கான காரணமெல்லாம்...''

அருந்ததியால் அழுவதைத் தவிர வேறெதையும் செய்ய முடியவில்லை.

வித்யாதரன் தாடை நரம்புகள் புடைக்க கத்தித் தீர்த்தான். முடிவாக சொன்னான்-

''இதோ பார்! சாப்பிடற தட்டுல இருந்து, ஓட்டற கார் வரைக்கும், வேற யார் பயன்படுத்தவும் விடமாட்டேன். அப்படியிருக்க... யார் யாரோ எச்சில்படுத்திய உன்னை என் மனைவியா ஏத்துக்க என்னால் முடியாது. வெளியே போ!''

''அப்படியெல்லாம் சொல்லாதீங்க... தயவு செய்து நான் சொல்றதை கொஞ்சம்...''

''என்னை கொலை காரனாக்காதே! என்ன பாவம் செய்தேனோ... உன் கழுத்தில் தாலி கட்ட வைச்சிட்டது. உன்னைப் பார்க்கப் பார்க்க கொலை வெறிதான் உண்டாகுது... என் கண்ணெதிரே நிக்காதே... போடி!'' கழுத்தில் கைவைத்து தள்ளினான்.

அருந்ததி விரக்தியாய் சிரித்தாள்.

''நான் என்ன சொன்னாலும் கேக்கற நிலையில் நீங்க இல்லே! என் தலைவிதி இதுதான்னு விதிச்சிருந்தா... அதை மாத்த யாரால் முடியும்? இந்த தாலி மட்டும் போதும் எனக்கு! வேற எதுவும் வேணாம். நீங்க எந்த முடிவு எடுத்தாலும் நான் சம்மதிக்கிறேன். ஆனா, ஒரே ஒரு வேண்டுகோள்...''

''என்ன?''

''எங்கப்பாவுக்கு ஏற்கனவே இரண்டு முறை மாரடைப்பு வந்து விட்டது. மூன்றாவது முறை வந்தால்... காப்பாற்ற முடியாதுன்னு டாக்டர் கூறியிருக்கிறார்...''

''அதனால?''

''இந்த செய்தியறிந்தால்... அப்பா... நிச்சயம் உயிரோடு இருக்க மாட்டார். அவர் உடல்நிலைக்கு ரொம்ப நாள் தாங்க மாட்டார். அவர் உயிரோடு இருக்கற மட்டும் நிம்மதியாக வாழ வேண்டும் என்பது என் விருப்பம்...''

''.......''

''நா...நான்... அனாதையான பிறகு... அப்போதே இந்த வீட்டை விட்டு போய்விடுகிறேன். அதுவரை...''

''இங்கேயே இருப்பாயாக்கும்... இங்கிருந்து என்னை உன் அழகில் மயக்க தகிடுதத்தம் பண்ணி வளைத்துப் போட்டு விடலாம் என்பது உன் கணக்கு... அப்படித்தானே?''

''சொல்லப் போனால்... இதுவும் எனக்கு மரண தண்டனை போல் தான். மரண தண்டனை கைதியிடம் கூட கடைசி ஆசை



என்னவென்று கேட்டு நிறைவேற்றுவார்கள். இதுதான் என் கடைசி ஆசை! ஒரு மகளின் ஆசை! ஒரு உயிர் போக நீங்கள் காரணமாகிவிட வேண்டாம்... வேறெந்த கணக்கும் நான் போடவில்லை... நம்புங்கள்!'' தயவாய் கேட்டாள் அருந்ததி.

சற்று நேரம் கண்மூடி யோசித்தான்.

''சரி, சம்மதிக்கிறேன். ஆனால் ஒரு நிபந்தனை... இந்த வீட்டில் இருக்கும்வரை என் கண்ணெதிரே வரக்கூடாது. உங்கப்பன் இறந்த மறுகணமே இந்த வீட்டை விட்டு போய்விட வேண்டும். விவாகரத்துக்கு சம்மதிக்க வேண்டும். அப்புறம்... உங்கப்பன் உன்னைப் பார்க்க, என்னைப் பார்க்கவென்று இந்த வீட்டுக்கு வரக்கூடாது!''

''.......''

''என்ன பேச்சைக் காணோம்...''

''ச... சரி...''

அந்த ஒரே நாளில் ஊர் கூடி வாழ்த்த... நடைபெற்ற திருமணம் முடிவுக்கு வந்தது.

ஒரே வீட்டில் பிரிந்து வாழ்ந்தனர். எண்ணெயும், தண்ணீருமாய் அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை மற்றவர்களுக்கு சொல்லாமலே புரிய வைத்தது.

வித்யாதரனிடம், அவர்களிடையே ஏற்பட்ட இடைவெளி பற்றி கேட்டு நச்சரித்த தங்கையிடம் உண்மையை கூறினான்.

வெகுண்டு போனாள் விமலா.

ஆருயிர் அண்ணனுக்கு இப்படிப்பட்ட கேவலமான மனைவியா என்று! அன்று முதல் பதிலுக்கு அவளும் அருந்ததியிடம் வெறுப்பை கக்கத் தொடங்கினாள்.

ஆனால் அருந்ததியின் முகம், பொய் சொல்லாத கண்கள், தெய்வீக ஈடுபாடு, வீட்டை ஒழுங்குப்படுத்தும் நேர்த்தி, அண்ணன்

தங்கையை தவிர பிற கண்களுக்கு அவள், அற்புதமான, சத்தமான பெண்ணாகவே காட்டியது.

அருந்ததி எப்போதாவது தந்தையைப் பார்த்துவிட்டு வருவாள்.

முன்னதாகவே கூறி வைத்துவிட்டாள்.

''என்ன இருந்தாலும் அவங்க பெரிய இடம்! அலுவலகம், தொழில் என்று அவர் சுற்றுவதால் வீட்டில் இருப்பது குறைவு. அவரைப் பார்க்க ஆசைப்பட்டு நீங்கள் வந்தால் நிச்சயம் பார்க்க முடியாது. காரணம் - பல நேரங்களில் அவர் வீடு திரும்ப நள்ளிரவாகிவிடும். நீங்கள் வந்தாலும் பேச நான் மட்டுமே இருப்பேன். உங்களுக்கு உடம்புக்கு முடியாத நிலையில்... என்னைப் பார்க்கவென்று வந்து சிரமப்பட வேண்டாம்ப்பா! அடிக்கடி நானே இங்கே வந்து பார்த்துச் செல்கிறேன்...''

''உம்... நான் ஏன் வரப்போகிறேன்? எல்லா கடமையும் முடிஞ்சு போச்சு. ஆனா, ஒண்ணே ஒண்ணு சொல்றேன்... கவனமா நடந்துக்க. நடந்த விசயம் எதுவும் உன் கணவனுக்கு தெரிந்துவிடாமல் பக்குவமா நடந்துக்க. அப்புறம் தெரிஞ்சுபோய் உன்னை விரட்டி விட்டால்... இங்கேதான் மறுபடி வந்து விழணும்... என்னால முடியாது. இன்னும் ஆறு மாசமோ, ஒரு வருசமோ... காடு போய் சேர்ந்துடுவேன்... பார்த்து நடந்துக்க... போ...'' சிவராமன் விட்டேற்றியாக கூறினார்.

அருந்ததி மனம் முழுக்க புண்ணாகியிருந்தாலும் முகத்தில் மாறாத புன்சிரிப்பை ஒட்டவைத்து புறப்பட்டாள்.

புகுந்த வீடும் சுகமில்லை. பிறந்த வீடும் சரியில்லை.

நாட்கள் குதிரை போல வேகமெடுத்தது.

அருந்ததி நடந்ததையெல்லாம் நினைத்து பெருமூச்செறிந்தாள்.

''அண்ணா... நான் முன்பே சொல்லியிருந்தேனே... ஒரு முக்கியமான நண்பரை உங்களுக்கு அறிமுகப்படுத்தப் போகிறேன்



என்று... இவர்தான் அவர்! மிஸ்டர் கார்த்திகேயன்!'' விமலாவின் குரலில் கலைந்தான் வித்யாதரன்.

முக்கியமான கோப்பில் தன் கவனத்தை பதித்திருந்தவன் நிமிர்ந்தான். எழுந்தான்.

''அலோ...'' கை குலுக்கினான்.

''கார்த்தி...இதுதான் என் அண்ணன்!''

''அலோ...'' என்று சிரித்தான்.

''உங்க அண்ணனைப் பற்றி அறிமுகம் செய்து வைக்கவேண்டிய அவசியமே இல்லை. எனக்கு நன்றாக தெரியும். என் தந்தை அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பார். வியாபார உலகின் சூரப்புலி என்று!'' கார்த்திகேயன் புகழ்ந்தான்.

வித்யாதரன் சங்கோஜத்துடன் சிரித்தான்.

''உங்கள் தந்தை பெயர்?''

''ஏகாம்பரம்!''

''நிம்போ எக்ஸ்போர்ட்ஸ் முதலாளி?''

''அதே ஏகாம்பரம்தான்!''

''ஓ... வெரிகுட் மிஸ்டர் கார்த்தி... எனக்கு ரொம்ப அவசரமான புரோகிராம் ஒண்ணு இருக்கு. உடனே கிளம்பணும். நாம அடிக்கடி சந்திப்போம். விமலாவிடம் பேசிக் கொண்டிருங்கள். விமலா...இவரை டின்னர் சாப்பிடாமல் வெளியே விடாதே!'' அன்பாய் மிரட்டிவிட்டுப் போனான்.

விமலா, கார்த்தியை தன் அறைக்கு அழைத்துச் சென்று கதவை மூடிக் கொண்டாள்.

எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்த அருந்ததிக்கு தூக்கி வாரிப் போட்டது.

'மூடிய அறைக்குள் ஒரு ஆணும் பெண்ணும்! இதுதான் நாகரீகமா? நண்பர்களாய் இருக்கும்பட்சம் கதவே தேவையில்லை. இது நட்பு மட்டும்தானா? அருந்ததி தவித்தாள். கற்பகத்தின் நினைவு வந்தது. இங்கு இன்னொரு கற்பகமா?'

**த**லைவலி மண்டையைப் பிளந்தது.

அருந்ததி வலியை பொறுத்துக் கொண்டு பூசை அறையில் விளக்கேற்றினாள்.

ஒரு காபி சாப்பிட்டால் தேவலை என்றிருந்தது. தானே போட்டுக் குடிக்க சமையலறைப் பக்கம் போனாள். இரவிற்கான சமையல் தயாராகிக் கொண்டிருந்தது.

வலியவந்து உபசரித்த பணியாளர்களை மென்மையாய் தவிர்த்து போட்டுக் குடித்தவளின் அருகே வந்தாள் வேணி.

''அம்மா...!''

''என்ன வேணி?''

''வந்து...''

''அவசரமாய் ஏதும் பணம் தேவைப்படுதா?''

''அய்யோ... அதில்லைங்கம்மா! சின்னம்மாவோட போக்கே சரியில்லம்மா!''

''நீ... யாரைச் சொல்றே?''

''நம்ம விமலாம்மாவைதான்!''

''வேணி!'' அதட்டினாள் அருந்ததி.

''கோவிச்சுக்காதீங்கம்மா! அந்தம்மாவை தேடிக்கிட்டு ஒரு பையன் அடிக்கடி வராருங்க...''

''அதெல்லாம் உனக்கு தேவையில்லாதது!'' தன்னை இந்த வீடு ஒதுக்கினாலும், அவள் ஒன்றிப் போயிருந்தாள்.



''மன்னிச்சிடுங்க... அவங்க பழக்கவழக்கம் சரியில்லேன்னு தான் சொல்ல வந்தேன். ஆனா, உங்ககிட்டே மட்டும் சொல்லி என்ன ஆகப்போகுது? நான் வர்றேம்மா!''

அவள் பல் பிடுங்கப்பட்ட பாம்பு என்பதை எவ்வளவு அழகாய் கூறிவிட்டாள்.

மனம் வலிக்க தன்னை மீறி... படிகளில் ஏறினாள்.

விமலாவின் அறை அங்குதான் இருந்தது.

கதவு உட்புறம் தாளிடப்பட்டிருந்தது. மெல்லிய ஒசை மட்டும் கசிந்தது. அருந்ததி சன்னலருகே வந்து திரையை விலக்கிப் பார்த்தாள்.

பூமி காலைவிட்டு நழுவுவது போலிருந்தது.

உள்ளே... உடைகளற்ற உடல்களோடு... இறுகத் தழுவியபடி விமலாவும் கார்த்திகேயனும்!

அடுத்தகணம் இயல்புக்கு வந்து கதவைத் தட்டினாள்.

ஐந்து நிமிட அவகாசத்திற்குப் பிறகு திறக்கப்பட்டது. அவசரமாக அணிந்த ஆடைகள். கலைந்த தலையை ஒதுக்கிவிட்டபடி விமலா.

''என்ன?'' என்றாள் எரிச்சலுடன்.

''பளார்...'' விமலாவின் கன்னத்தில் அருந்ததியின் விரல்கள் முத்திரை பதிந்தன.

**வி**த்யாதரனின் கண்கள் சிவந்திருந்தன.

''இது என் குடும்ப விசயம்! நீ யார் தலையிட? எத்தனை தைரியமிருந்தால் என் தங்கையை கைநீட்டி அறைந்திருப்பாய்?''

''ஒரு வயதுப்பெண் இப்படி...?''

''இதைச் சொல்ல உனக்கென்ன தகுதியிருக்கு? என் தங்கை கார்த்திகேயனை காதலிக்கிறாள். அந்த உரிமையில் எல்லை

மீறியிருக்கலாம். உனக்குத் தெரியுமா? இருவர் வீட்டிலும் ஏற்கனவே இவர்கள் திருமணம் பற்றி பேசி முடிவு செய்யப்பட்ட விசயம்? தெரியாது. தெரிய வேண்டிய அவசியமில்லை. அவள் கணவனாக வரப் போறவருடன் தானே எல்லை மீறிப் பழகினாள்? நீ? எவன் எவனுடனோ, ஊர் பேர் தெரியாத... கண்ட நாய்களுடன் சல்லாபிக்கவில்லை?

என் தங்கை பெயர் திருமணப் பத்திரிகையில் மட்டும்தான் வரும். உன் பெயர்... எந்தப் பத்திரிகையில் வந்ததென்று உனக்குத் தெரியும். உன் எல்லை எதுவோ... அதுவரை உன் நடவடிக்கை நிற்கட்டும். விமலா... இப்படி வா? உன்னை நானே இதுவரை கைநீட்டி அறைந்தவனில்லை. இவள் அறைந்துவிட்டாள். பதிலுக்கு...

அண்ணன் சொல்லி முடிக்குமுன்பே... தங்கையின் கை அருந்ததியின் கன்னத்தை தாக்கியது.



12

"**போ**ங்க வித்து...நான் வரலே... நீங்க தப்பாட்டம் ஆடறீங்க...!" கீதா சிணுங்கினாள். கையை காலை உதைத்து செல்லமாய் கோபித்ததில்... தொடை வரை இருந்த மிடியும். உடலை இறுகப் பிடித்த பனியனும்... அதிகவர்ச்சியாய் கண்களை உறுத்தியது.

வித்யாதரனின் கண்கள் அடிக்கடி தன் வசமிழந்து அவள் உடலழகை அள்ளிப் பருகின.

கீதா... கார்த்திகேயனின் தங்கை! ஊட்டியில் படித்துக் கொண்டிருந்தாள். சென்ற மாதம்தான் படிப்பு முடிந்தது.

அன்றைய சம்பவத்திற்குப் பின் ஒரே மாதத்தில் விமலா, கார்த்திகேயன் திருமணம் விமர்சையாக நடைபெற்றது.

தங்கை இல்லா வீடு... வெறுமையாய் காட்சி தர... அடிக்கடி... அவளைப் போய்ப் பார்த்து வந்தான்.



அப்போதுதான்... கீதா... வலியவந்து இவனுடன் ஒட்டிக் கொண்டாள். தினசரி வித்யாதரனின் வீட்டிற்கே வந்துவிடுவாள். செஸ், கேரம், சீட்டு என அவனோடு விளையாடி சண்டை பிடிப்பாள். காதைப் பிடித்து திருகுவாள்.

அவளின் தளதளத்த இளமை, நெருக்கம், சுகந்தம்... எங்கே தன் வசமிழந்து விடுவோமோ... என்ற பயத்தை உண்டாக்கியது.

'இது சரியா?'

'ஏன் சரியில்லை? அருந்ததி உன் மனைவியாய் இருந்தாலும், மனைவியில்லை. எப்படியென்றால்... இன்னும் சில காலம்தான் இங்கிருப்பாள். அதன்பிறகு மணவிலக்கு பெற்று... தனிப்பறவையாகப் போகிறாய். உனக்கும் ஒரு வாழ்க்கை, ஒரு துணை அவசியம்தானே? கீதா உனக்குப் பொருத்தமானவள்தான்!'

அடிக்கடி இப்படியொரு குரல் உள்ளிருந்து கேட்டுக் கொண்டிருந்தது.

கீதாவின் வருகை... அருந்ததியை நடைப் பிணமாக்கிவிட்டது. சரிவர சாப்பிடாமல், உறங்காமல் உருக்குலைந்துக் கொண்டிருந்தாள்.

இந்நிலையில் அப்பாவின் உடல்நிலை மோசமடைந்து கொண்டிருந்தது! அந்த செய்தி வேறு... அவளை ஒரேயடியாய் வாட்டிக் கொண்டிருந்தது.

**அ**திசயமாய் அன்று கார்த்திகேயன் வீட்டில் யாருமில்லை... கீதாவைத் தவிர.

ஏகாம்பரம் தன் மனைவியோடு வெளியூர் சென்றிருந்தார். விமலாவும், கார்த்திகேயனும் ஒரு நண்பரின் திரு ணத்திற்காக மேட்டுப்பாளையம் சென்றிருக்க... கீதா மட்டும் தனித்திருந்தாள்.

இரவு எட்டு மணிக்கு வித்யாவுக்கு போன் செய்து உடனே வரச் சொன்னாள்.

''என்ன கீதா... அவசரமா வரச்சொன்னே?'' வாய்தான் பேசியது. கண்கள் அவள்மேல் மேய்ந்தது.

காரணம் அப்படிப்பட்ட உடை! இதுபோன்ற உடையில் கீதாவை அவன் கண்டதில்லை.

கண்ணாடி போன்ற மெல்லிய துணியிலான இரவு உடை. உள்ளாடைகள் பளிச்சென்று தெரியும் வண்ணம்... கிறக்கத்தை ஏற்படுத்தும் விதமாய் அணிந்திருந்தாள்.

''சாரி... வித்து! வீட்ல யாருமே இல்லே? இன்னைக்குப் பார்த்து நீயும் வரலியா? ரொம்ப போர்...அதான்... தொந்தரவு பண்ணிட்டேனா?'' கீதா அவன் கையை பற்றிக் கொண்டு கொஞ்சினாள்.

''இ...இல்லே...!''

''வாங்க... என் அறைக்குப் போய்விடலாம்!''

பூனைக்குட்டியாய் பின்தொடர்ந்தான்.

அறை களேபரமாய் இருந்தது. கட்டில் முழுக்க சில துணிகள், புத்தகங்கள். புத்தகத்தை எடுத்து பிரித்தவன் அதிர்ந்தான்.

கண்கூசியது. பட்டென்று மூடினான்.

''அட... என்ன வித்து... நீங்க ஆம்பளைதானே?''

''கீதா!''

''கோபப்படாதீங்க! ஒரு ஆணும் பெண்ணும் எப்படி இருக்கணுமோ, அதைதானே அந்த புத்தகத்திலே போட்டிருக் காங்க... இதுல வெக்கப்பட என்ன இருக்கு?''

''......''

''வித்து... நான் கேள்விப்பட்டது நிஜமா?''

''என்ன கேள்விப்பட்டாய்?''



''உங்கள் மனைவி ஒருமாதிரியானவள்...''

''பிளீஸ்... வேண்டாம் கீதா! அதைப்பற்றி பேசி என் வேதனையை அதிகமாக்க வேண்டாம்!''

''மன்னிச்சிடு... வித்து! மனைவி இருந்தும், அவளால் எந்த சுகமும் உங்களுக்கில்லை. நினைத்தாலே அழுகையாய் வருகிறது. அவளால் தரமுடியாத எல்லாவற்றையும் நான் உங்களுக்கு தரவேண்டும் போல் ஒரு ஆதங்கம் எழுகிறது...''

வித்யாதரனுக்கு பூமழை பொழிவது போலிருந்தது.

''கீ...தா...!''

''ஆமாம் வித்து! ஐ...லவ்...யூ... வித்து! முதல்ல இதை சாப்பிடுங்க உங்களுக்காகவே வாங்கி வைத்தேன்!''

உயர்ரக மதுபானக் கோப்பை கீதாவின் கையில்.

எப்போதாவது பார்ட்டியில் மட்டுமே மரியாதைக்காக கொஞ்சம் குடிப்பதோடு சரி.

இப்போது கீதா கொடுக்கும்போது மறுக்க முடியவில்லை. அவளேபுகட்டினாள். ஏதேதோ பேசியபடி... இன்னும், இன்னும் ஊற்றிக் கொடுத்துக் கொண்டேயிருக்க... அவன் குடித்துக் கொண்டே இருந்தான். போதை தலைக்கேறியது. தடுமாற ஆரம்பித்தான்.

''கீதா...!'' உணர்ச்சிப் பிழம்பாய் மாறி அவளை தன்னோடு இறுக்கி அணைத்தான்.

கீதா மேலும் மேலும் ஏதேதோ பேசியபடி அவன் உதட்டை கவ்வி முத்தமிட்டாள்.

தாங்க முடியாத வித்யா அவள் உடையில் கை வைத்தான்.

சட்டென அவனிடமிருந்து விலகினாள் கீதா!

''என்ன கீதா?'' தாபமாய்க் கேட்டான்.

''இல்லை... வேண்டாம்!''

''என்ன வேண்டாம்?''

''நீங்கள் மணமானவர்... நாம் இப்படி நடந்துக் கொள்வது சரியில்லை...''

''கீதா நீயுமா என்னைப் புரிந்து கொள்ளவில்லை?''

''இல்லை வித்து! ஐ...லவ்...யூ...! பட், மனைவி உயிரோட இருக்க... நான் உங்களோடு...''

''அவள் என் மனைவியில்லை கீதா...''

''அதை செயலில் நிரூபித்து விட்டு வாருங்கள். புரியமில்லையா விவாகரத்து செய்துவிட்டு வாருங்கள். இந்த கீதா உங்களுக்காகக் காத்திருப்பாள்...''

''கீதா...''

''என்மேல் அன்பிருந்தால்... முதலில் நான் சொன்னதை செய்யுங்கள். பிறகு நீங்கள் சொல்றபடி யெல்லாம் நான் கேட்கிறேன்...''

வித்யாதரன் எழுந்தான்... அறையை விட்டு வெளியேறினான்... சற்றே கோபமாய்...!

கீதா தனக்குத்தானே சிரித்துக் கொண்டாள்.

எப்படியும் வித்யாதரன் என்னும் கம்பீரமான மீன் தன் வலையில் மாட்டும் என்ற நம்பிக்கை அதிகமாகவே இருந்தது. அதனால் தானே அவள் மீது பைத்தியம் கொள்ளுமளவிற்கு மோகத்தை தூண்டிவிட்டாள்!

கீதா... அதிநாகரீகமான பெண்! வாழ்க்கையை ஒவ்வொரு நிமிடமும் சந்தோசமாக அனுபவிக்க என்ன வேண்டுமானாலும் செய்வாள். அவளுக்கு ஆண் நண்பர்கள் அதிகம். சந்தோசங்களை



மட்டுமல்ல... சரீரத்தையும் பங்கு போட்டுக் கொள்வாள். ஆனால், வித்யாதரனை முதன்முதலாய் பார்த்தபோதே அவன் கம்பீரத்தில் மயங்கிப் போனாள். அவன் பெரும் பணக்காரன் என்றறிந்த பிறகு, மணமானவன் என்று தெரிந்த பிறகும், இவன் என் கணவனாக வாய்க்க வேண்டும் என விரும்பினாள். அவன் மணவாழ்க்கை ஓட்டைப் பானையில் பிடித்த தண்ணீர் என்றறிந்த பிறகு... அவனை நெருங்க அதுவும் அண்ணியின் அண்ணன் என்ற உறவும் பாலம் போட... மிக எளிதாக நெருங்கி விட்டாள்.

வித்யா போனபின்...அவன் தொட்ட இடமெல்லாம் என்னவோ பண்ணியது.

போனை நெருங்கி எண்களை தொட்டாள்.

''அலோ... குமார்! நான்தான் கீதா பேசறேன். இன்னும் பத்து நிமிசத்துல நீ என் அறையில இருக்க... ஓக்கே?''

**வி**த்யாதரன் மிக வேகமாக காரை செலுத்தினான். அவன் உடம்பு கொதித்துக் கொண்டிருந்தது.

இதுவரை பெண்ணை தொட்டதில்லை. அதன் சுவை அறிந்ததில்லை. கீதா... அவனுள் இருந்த நெருப்பை ஊதி பெரியதாக எரிய வைத்து விட்டாள்.

வீட்டின் முன் காரை நிறுத்தி தடுமாறும் கால்களோடு உள்ளே போனான்.

இரவு மணி பதினொன்று!

இரவு விளக்கு மட்டும் சன்னமாய் எரிய... நிசப்தமாய் இருந்தது பங்களா!

ஒரே ஒரு அறையில் மட்டும் வெளிச்சம் பளிச்சென்றிருந்தது.

அது அருந்ததி இருந்த அறை! ஏதோ புத்தகம் படித்துக் கொண்டிருந்தவள்... விளக்கை அணைக்காமலே, புத்தகத்தை மூடாமலேயே... உறங்கி விட்டிருந்தாள்.

சன்னல் வழியே...மூடியிருந்த திரை மின்விசிறி காற்றினால்... விலக... அருந்ததி படித்திருப்பது... வித்யாதரனுக்குத் தெரிந்தது.

அவன் கால்கள் தன்னிச்சையாய் அவள் அறைப் பக்கம் சென்றது.

காற்றில் விலகியிருந்த முந்தானை, அவள் அழகை கபடமின்றி காட்டியது.

வித்யாதரன் திருதிருவென எரிந்தான்.

அங்கு, அருந்ததி கண்ணுக்குத் தெரியவில்லை. ஒரு பெண்! அழகான சதைக் கோளம். அதுமட்டுமே அந்த ஆண் மிருகத்துக்குத் தெரிந்தது.

படாரென கதவைத் திறந்து உள்ளேப் போனான் வித்யாதரன்!

முடிந்ததை நினைப்பவன் மனிதன்! நினைத்ததை முடிப்பவன் இறைவன் அல்லவா?

வித்யாதரன் நடந்தவைகளை நினைத்து, நினைத்துப் புழுங்கினான்.

'போயும், போயும் அவளை...'

அவனுக்கே விடிந்த போதுதான் புரிந்தது. திடீரென கண் விழித்தவன்... அறை சூழல் புதிதாய் இருக்க... வியந்தான். இது என் அறையுமல்ல... கீதாவின் அறையுமல்ல... பிறகு?

கண்களை ஓடவிட்டவன்... தரையில் பெட்ஷீட் விரித்து உறங்கிக் கொண்டிருந்த அருந்ததி பட்டாள். நிமிடத்தில்... நடந்தவைகள் நினைவு வர... அவமானமும், அருவறுப்புமாக அந்த அறையை விட்டு வெளியேறினான்.

தன் செயல் குறித்து, தன்னையே நொந்து கொண்டான்.

ஆனால், அருந்ததி மகிழ்ச்சியின் உச்சத்தில் இருந்தாள்.



காதலும் அரசியலைப் போல் ஒரு சூதாட்டம்தான். இரண்டிலும் பொய்யும், பித்தலாட்டமும் செய்தால்தான் ஜெயிக்க முடியும்.

அவள் தன் கணவனை அதிதீவிரமாய் நேசித்தாள். அவன் முகம் பார்த்தே வாழ்ந்து முடித்துவிடலாமே என்று யோசித்தாள். ஆனால், தன் கணவன், பாராமுகம் கொண்ட காதலன் தன் அறைக்கே வந்து தன்னை ஆட்கொண்டான் என்றால்...இதுவல்லவா வெற்றி! காதலின் முழுமை! அது ஒருதலை காதலாய் இருந்தாலும் சரி!

ஆனாலும் இதயமூலையில் அருந்ததிக்கு இரத்தம் கசிந்தது. கணவன், அந்த நிலையில் மோகமாய் உச்சரித்த பெயர் கீதா... என்பதைதான் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

'கீதாவை நினைத்து என்னிடம்...!' துவண்டு போனாள். ஆனபோதிலும்... அந்த உறவு... இதுவரை பட்ட, இனிப் படப்போகும் துன்பங்களுக்கு மருந்து என்பது நிச்சயம் என்பதை உணர்ந்து ஆறுதலடைந்தாள்.

மாதங்கள் கடந்தன!

வித்யாதரன்... அடிக்கடி வியாபார நிமித்தம், வெளிமாநிலம், வெளிநாடு என... முடிந்தவரை வீட்டில் தான் இல்லாதவாறு பார்த்துக் கொண்டான். கீதாவுடன் தொலைபேசியில் தினசரி தொடர்பு கொள்வான்.

நான்கு திங்கள் சென்றபின்தான்... கவனித்தான்.

அருந்ததி அங்குமிங்கும் அலையாமல்... அந்த மெட்டி சத்தம் ஒலிக்காமல்... வீடே நிசப்தமாயிருந்தது.

ஒருமுறை எதேச்சையாக மாடியறையிலிருந்து பார்த்தவன் திடுக்கிட்டுப் போனான்.

கன்னமெல்லாம் ஒட்டிப் போய், கண்கள் உள்வாங்கி, ஒல்லியாய்... பார்க்க ஆளே மாறிப் போயிருந்தாள்.

என்னாயிற்று?

வித்யா வேணியை அழைத்து விசாரித்தான்.

''தெரியலீங்க... நாலஞ்சு நாளா எதுமே சாப்பிடலை. தண்ணீர் குடிச்சாக்கூட வாந்தி எடுத்திடறாங்க... மயங்கி விழுந்துடறாங்க!''

''சரி... ஒரு ஆட்டோவை அழைச்சிட்டு வந்து, அவளை ஏதாவது ஒரு டாக்டரிடம் அழைச்சிட்டுப் போ!''

''சரிங்கய்யா!''

'வீட்டில் நாலைந்து கார் இருக்க, கட்டிய மனைவிக்கு ஆட்டோ! என்ன நியாயம் இது? வேணிக்கு உள்ளம் துடித்தது.

அவன் சொன்னபடியே அழைத்துச் சென்றுவிட்டு வந்தாள்.

''என்னவாம்?''

''அய்யா...அவங்க...இப்ப நாலு மாசம் கர்ப்பமாக இருக்காங்களாம்!'' வேணிக்கு வாயெல்லாம் பல்.

தொலைதூரம் தன்னை யாரோ வீசி எறிந்தது போல் அதிர்ந்தான் வித்யாதரன்.

துன்பமா, இன்பமா என்று இனம்புரியாத உணர்வு!

என்ன இது? இந்த நேரத்தில்... இப்படியொரு சங்கடம்? அதுவும் என் குழந்தை... அவள் வயிற்றில்!

'கூடாது! என் இரத்தம்... சுத்தமான நடத்தையுள்ள நல்ல குடும்பப் பெண்ணிடம்தான் உருவாக வேண்டும். சேற்றில் அல்ல!'

தீர்மானித்தவன் அருந்ததியின் அறைமுன் வந்து நின்றான்.

''கிளம்பு!''

'எங்கே?' என்று கேட்க பயம். உடனே புறப்பட்டாள். இம்முறை அவன் காரில்தான் சவாரி.



தனக்குப் பரிச்சயமான, பிரசித்திப் பெற்ற பெரிய பெண் மருத்துவரின் மருத்துவமனை முன் நின்றது கார். புரியாமல் கணவனைப் பார்த்தாள்.

''இறங்கு!'' என்று கூறிவிட்டு நேரே டாக்டரிடம் போய் விவரத்தைக் கூறினான்.

''வித்யா... நீங்க எடுத்த முடிவு சரியில்லை என்றே தோன்றுகிறது. இது முதல் குழந்தைதானே?''

டாக்டர் அவனின் தாம்பத்ய பிரச்சினை புரியாமல் கேட்டார்.

''ஆமாம்...டாக்டர்! ஆனால், இன்னும் இரண்டு வருடம் போகட்டும் என்று...''

''அதற்கு எச்சரிக்கையாக இருந்திருக்க வேண்டும். அறுபது நாள் ஆன சிசுவை கலைப்பதே இப்போது சிரமம் எனும்போது நூற்றிருபது நாள்... வேண்டாம் வித்யா! உங்கள் குழந்தைக்கு உங்கள் பாரம்பரிய குணங்களோடு, உங்கள் கண் மூக்கு என்று வளரத் தொடங்கியிருக்கும்'' டாக்டர் அறிவுரை கூற வித்யாதரனுக்கே இப்போது குழந்தை மேல் ஆசை ஏற்படத் தொடங்கிவிட்டது.

அரைமனதாய் வெளியேறியவனை தடுத்து, ''உங்கள் மனைவியை உள்ளே அனுப்புங்கள்'' என்றார்.

அருந்ததி உள்ளே வந்ததும்... வித்யாவை வெளியேற்றி விட்டு அவளை பரிசோதித்த டாக்டரின் முகம் மாறியது.

''வேணாம்மா... இந்த குழந்தை உனக்கு வேணாம்'' என்றார் அதே முகபாவத்தோடு!



# 13

**அ**ன்புதான் வாழ்க்கை! வெறுத்து ஒதுக்குவது மரணம்! மரணம் வருவது உறுதியென்றால் நல்ல ஒரு காரியத்திற்காக உயிரை விடுவது மேல்!

அருந்ததி அந்த முடிவைதான் எடுத்திருந்தாள். மருத்துவர் அவளின் உடல் நிலையை பரிசோதித்து பார்த்ததில் கருப்பை... குழந்தையை தாங்கும் நிலையில் இல்லை என்றும், குழந்தைப் பெற்றால் தாயின் உயிர் நிச்சயம் மாண்டு போகும் என்றார்.

அருந்ததி பிடிவாதமாய் இருந்தாள். 'இந்த குழந்தை கண்டிப்பாய் பிறந்தே ஆகவேண்டும்... எனக்கொன்றும் ஆகாது!' என்று வீம்பாய் கூற...

வேறு வழியின்றி வாயை மூடிக்கொண்டார் டாக்டர். ஆனால், அவளுக்குத் தெரியாமல் வித்யாதரனிடம் இதைக் கூற நினைத்து போன் செய்தபோது, அவன் வீட்டில் இல்லை. அடுத்த வாரமே ஒரு வருட பயிற்சிக்கென அமெரிக்கா சென்றுவிட்டார் டாக்டர்!

**வே**ணி கூடை கூடையாய் பழங்களைக் கொண்டு வந்து அவள் அறையில் வைத்தாள்.

''சாப்பிடுங்கம்மா! எல்லாம் அய்யா வரவழைச்சது. குழந்தை கொழுகொழுன்னு சிவப்பா பிறக்கணுமாம். இதை பால்ல கலந்து குடிக்கச் சொன்னார்...'' குங்குமப்பூ டப்பாவையும் அவள்முன் நீட்டினாள்.

அவளென்னவோ, வித்யா மனமொத்து அருந்ததியுடன் சந்தோசமாக இருப்பதாக நினைத்துக் கொண்டாள். ஆனாலும் பிரச்சினை முழுதாக தீரவில்லை... அதுதான் தனித்தனி அறைவாசம் என்றும் கணக்குப் போட்டாள்.

அருந்ததி சிரித்துக் கொண்டாள்.



அன்று வித்யாதரன் கூறியது இன்னமும் காதில் ஒலித்துக் கொண்டிருந்தது.

''என் கெட்ட நேரம்... இப்படியெல்லாம் ஆயிடுச்சு. அதுக்காக நான் மனசு மாறி உன்னை ஏத்துப்பேன்னு கனவு கூட காணாதே! சேற்றுல செந்தாமரை மலருமில்லையா? இது என் குழந்தை! எனக்கு வேணும். என் குழந்தை மட்டும் எனக்கு வேணும்...!''

''கண்டிப்பா... உங்க குழந்தையை நல்லபடி பெற்று உங்களிடமே ஒப்படைப்பேன். என் குழந்தை என்று உரிமை கொண்டாட மாட்டேன் போதுமா?''

'குடும்பப் பெண்ணாயிருந்தால்... வருமா இப்படியொரு வார்த்தை? தாய்ப்பாசமில்லாத பெண் என்பவள் பேய்க்கு சமம்!' அவளை புழு போல் ஒரு பார்வைப் பார்த்துவிட்டுப் போய்விட்டான்.

இனிப் பிரச்சினையில்லை. எதிர்காலத்தைப் பற்றி பயம் இல்லை. கணவன் காப்பாற்றுவாரா? அப்பா காப்பாற்றுவாரா? என்ற கேள்விக்கே இடமில்லை. என் தங்கத்தை சுமந்து பத்திரமாய் அவரிடம் சேர்ப்பித்து விடுவேன். அதன்பிறகு எனக்கென்ன கவலை? நான்தான் உயிரோடு இருக்க மாட்டேனே!'

அருந்ததியின் உள்ளம் நிம்மதியால் நிரம்பியது.

**அ**ந்த செய்தி வந்தபோது... கதறிவிட்டாள் அருந்ததி!

இதோ, அதோ என்று போக்குக் காட்டிக் கொண்டிருந்த அவள் தந்தையின் உயிர்... ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

வேணியுடன் உடனே அருந்ததி தன் வீட்டிற்கு ஓடினாள். யாருமற்ற அனாதை போல் தூக்கத்திலேயே உயிர் பிரிந்திருந்த தந்தை மேல் விழுந்து புரண்டு அழுதாள்.

இரண்டு மணி நேரங்கழித்து வித்யாதரன் வந்தான். சற்றுநேரம் பொறுத்து வேணியை அழைத்து, ''அவளை இப்படி புரண்டு

புரண்டு அழ வேண்டாம்னு சொல்லு! குழந்தைக்கு ஏதும் ஆயிடுச்சின்னா...?''

வேணி அவன் சொன்னதை அருந்ததியிடம் சொல்ல, முதன்முறையாய் தன் கணவனை வெறுப்புடன் நோக்கினாள்.

'இவனுக்குத் தேவை குழந்தை மட்டுமே! என் வேதனைகளை உணர மாட்டானா? இந்த உலகில் எனக்கிருந்த ஒரே துணையை இழந்து தவிக்கும் என் வேதனையை விட, குழந்தைக்கு ஏதும் ஆகிவிடப் போகிறதே... என்ற கவலை தானே ஏற்படுகிறது? ஐயா... உங்கள் குழந்தைக்கு ஏதும் ஆகாது. இந்த இயந்திரம் பத்திரமாய் பெற்றுத் தந்துவிடும். கவலை வேண்டாம். இயந்திரத்திற்கு, இதயமாவது, வேதனையாவது? இனி எந்த உணர்ச்சிகளும் இதற்கு ஏற்படாது!'

அதிலிருந்து கல்லாய் இறுகிப் போனாள் அருந்ததி. தந்தை உடல் இடுகாட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்ட போது கூட அவள் அழவில்லை.

அங்கேயே சில நாட்கள் தங்கியிருக்க நினைத்தவளின் எண்ணத்திலும் மண் விழுந்தது.

''அதெல்லாம் வேண்டாம்! என் வீட்டிற்கு கிளம்பச் சொல்! இங்கு என்னத்தை சாப்பிட முடியும்? ரசமும், சாம்பரும் கூட தொண்டையை விட்டு இறங்காதே! இவன் வீட்டில் நெய்யும், பாலுமாய் எப்படி சாப்பிட முடியும்?''

சாப்பிட்டாள். மனதை கல்லாக்கிக் கொண்டு...!

**அ**வள் கர்ப்பமாய் இருப்பதை அறிந்ததும் விமலா அண்ணனை அற்பமாய் பார்த்தாள். கோபம் கூட வந்தது. ஆனால், இதைப் பற்றி ஒரு ஆணிடம், அது அண்ணனாகவே இருந்தாலும் சரி... கேட்பது முறையுமல்ல, நாகரீகமுமல்ல.

ஆனால், அதன்பிறகும் அவன் அருந்ததியிடம் நடந்து கொண்ட விதத்திலிருந்து ஓரளவு நிகழ்ந்தவைகளை ஊகித்துக் கொள்ள முடிந்தது.



விமலாவுக்கும் அருந்ததி இடத்தில் சீதாவை கொண்டு வர வேண்டும் என்கிற எண்ணமிருந்தது. இந்நிலையில் அருந்ததி கர்ப்பம் என்கிற செய்தி... தலையை சுற்ற வைத்தது.

வித்யாதரனுக்கு குழந்தைகள் என்றால் கொள்ளை ஆசை! அதனால், மற்ற எதையும் அவன் யோசித்துப் பார்க்கவில்லை.

சீதாதான்... இயல்பிலிருந்து மீண்டுவர படாதபாடுபட்டு விட்டாள்.

'தான் நினைத்தது ஒன்று! நடந்தது ஒன்றாக இருக்கிறதே...' என துயரப்பட்டாள்.

'குழந்தை... தன் திருமணத்திற்கு பெரிய தடைக்கல் ஆயிற்றே? இந்த முட்டாள் வித்யாதரனுக்கு இதெல்லாம் தெரியாதா?' இந்த ஆதங்கம்... வித்யாவுடன் ஒரு மாதம்வரை பேசவிடாமல் செய்தது.

போன் செய்தால்... அவன் குரல் கேட்டதும் பட்டென்று வைத்து விடுவாள். வீடு தேடி வந்தால்... அவள் இருக்க மாட்டாள்.

தவித்துப் போனான் வித்யாதரன்.

இதையெல்லாம் விமலா கவனித்துக் கொண்டுதான் இருந்தாள். அண்ணனுக்கு உதவி செய்யும் பொருட்டு, சீதா வீட்டில் இருந்த நேரம் பாரத்து அண்ணனுக்கு போன் செய்து வரவழைத்து விட்டாள்.

அது பகற்பொழுது!

காற்று வசதிக்காக, தொடை வரை கவ்வியிருந்த உடையும், தொளதொளவென ஒரு சட்டையும் மட்டும் அணிந்து கொண்டு, வீடியோவில் ஒரு ஆங்கில படத்தைப் பார்த்துக் கொண்டிருந்த சீதா... அந்த நேரத்தில் வித்யாவை அங்கு கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

''சீதா...''

''......''

''கீதா என்ன இது குழந்தை மாதிரி நடந்து கொள்கிறாய்? இதனால் என் மனம் என்ன வேதனைப்படுகிறது என்பதை அறிவாயா?''

''என் மனம் மட்டும் வேதனைப்படவில்லையா? மீசைக்கும் ஆசை கூழுக்கும் ஆசை உங்களுக்கு!''

''ஆசையுமில்லை, ஒரு மண்ணுமில்லை! எல்லாம் உன்னால் வந்த வினை!''

''என்னாலா?''

''ஆமாம்! அன்று மட்டும் நீ எனக்கு உடன்பட்டிருந்தால்...''

''அதற்காக...''

''அதான் காரணம்! கொஞ்சம் போதை! நீ கிளப்பிவிட்டிருந்த நெருப்பு...''

''சரி... சரி... அதான் எல்லாம் முடிந்துவிட்டதே! மீண்டும் எதற்கு என்னைத் தேடி வந்தீர்கள்?''

''தெரிந்தே செய்தால்தான் தப்பு! தெரியாமல் செய்வதற்கு பிழை! என்னை மன்னித்து பிழையைப் பொறுத்துக்கொள் கீதா! குழந்தை மட்டும்தான் எனக்கு உரிமை! அவளல்ல...''

''ரெண்டாந்தாரமாக வாழ்வதே அவமான விசயம். இந்த அழகில் குழந்தை வேறு... சரிதான்!'

''என்ன கீதா... நான் பேசிக் கொண்டேயிருக்கிறேன்...''

''மேலே சொல்லுங்கள்...''

''என் குழந்தைக்கு நீ தாயாக வேண்டும் கீதா!''

''குழப்புகிறீர்கள். பெற்ற தாய் இருக்க...''

''பெற்றுத் தருவது வரைதான் அவள் பொறுப்பு. அதன்பிறகு ஒருநாள் கூட என் வீட்டில் அனுமதிக்க மாட்டேன். அது அவளுக்கே தெரியும்.''



''.....''

''என்ன அமைதியாகிவிட்டாய்?''

''இதற்கெல்லாம் என் வீட்டில் அனுமதிப்பார்களா என்று தெரியவில்லையே வித்து!''

''அதை நான் பார்த்துக் கொள்கிறேன் கீதா! எனக்கு உன் சம்மதம்தான் முக்கியம்!''

''நான் என்ன சொல்லப் போகிறேன்? உங்களுக்காக எதையும் செய்வேன் வித்து! முதலில் அவளை மூட்டைக்கட்டி அனுப்பப் பாருங்கள்!'' கீதா அவன் தோளில் சாய்ந்து கொண்டாள்.

''இன்னும் மூன்றே மூன்று மாதம்... பொறுத்துக் கொள் கீதா!'' வித்யா அவள் கன்னத்தை உரசியபடி சொன்னான்.

**வி**மலாவும், கீதாவும் வந்திருந்தார்கள். ஒரே சிரிப்பும் கும்மாளமுமாய் சத்தமாய் இருந்தது.

வித்யாதரனோடு ஒட்டிக் கொண்டும், உரசிக் கொண்டும் பேசும் கீதாவைப் பார்க்கையில் அருந்ததிக்கு எமனைப் பார்ப்பது போலிருந்தது. அவனும் சிறிதும் வெட்கமின்றி, அவளைத் தொட்டுப் பேசுவதும், டியர்... டியர் என்று கொஞ்சுவதும் புரிந்து போனது அருந்ததிக்கு.

தான் இறந்த மறு மாதமே வித்யாதரன் புது மாப்பிள்ளை ஆகிவிடுவான்.

இப்போதெல்லாம் நடப்பதற்கே சிரமமாய் இருந்தது. களைப்பாக இருந்தது. வேணியோடு அவ்வப்போது மருத்துவ பரிசோதனைக்கு சென்று வந்தாள். குழந்தை நன்றாக இருக்கிறது. ஆனால், இவள் உடம்புதான் நாளுக்குநாள் ஆரோக்கியம் கெட்டுக் கொண்டிருந்தது.

விமலா... பச்சைநிற புல்வெளியில் போடப்பட்டிருந்த பிரம்பு கூடை நாற்காலியில் அமர்ந்திருந்தாள். சற்றுத் தள்ளி டென்னிஸ் விளையாடிக் கொண்டிருந்தனர் வித்யாவும், கீதாவும்.

கீதா ராக்கெட்டை ஓங்கி அடிக்க... பந்து மேலே உயர்ந்து கண்ணுக்குத் தெரியாமல் எங்கோ போய் விழுந்தது.

கீதா... பந்தைத் தேடிக் கொண்டு பக்கவாட்டில் சென்றாள். விசாலமான கிரவுண்டு அது! ஒருபுறம் தோட்டமும், மறுபுறம் டென்னிஸ் விளையாடவும், ஊஞ்சலில் ஆடவும், நீச்சல் குளமுமாய்... கனகச்சிதமாய் அமைத்திருந்தான் வித்யா!

பந்தை எடுக்கச் சென்ற கீதா அதிர்ந்தாள்.

நெற்றியில் பந்து கணக்காய் புடைத்து வீங்கியிருக்க... வலி தாங்க மாட்டாமல்... கண்களில் நீர் பெருக நின்றிருந்தாள் அருந்ததி.

கீதாவைப் பார்த்ததும் கோபம் கொப்பளித்து வந்தது-

''கவனமா விளையாடுங்க! இப்படி கண்ணு மண்ணு தெரியாமல் விளையாடினா... அது நல்லதில்லை! நெத்தியிலே பட்டதோட சரி! இதுவே என் வயிற்றில் பட்டிருந்தா...?''

''எனக்கு அதைப் பற்றி கவலை இல்லை! நீதான் கவனமா இருந்திருக்கணும். நாங்க விளையாடறோம்னு தெரிஞ்சும்... இந்தப் பக்கம் மகாராணி உலாவ வந்தது தப்பு!'' எகத்தாளமாய் கூறினாள்.

''ஏய்... நாக்கை அடக்கிப் பேசு!''

''ஏய்னா சொன்னே? என்னைப் பார்த்தா ஏய்னு சொன்னே? நாயே... உனக்கு எவ்வளவு திமிர்?''

''நீதாண்டி நாய்! ஒரு ஆம்பிளையோட வெக்கமில்லாமல் தளுக்கி, மினுக்கிட்டு விளையாடற நீதான் தெரு நாய்!''

''எவ்வளவு திமிர்?'' ஆத்திரத்தில் பளாரென அருந்ததியை அறைந்தாள் கீதா. உதட்டோரம் பல் பட்டு இரத்தம் கசிந்தது.

சத்தம் கேட்டு ஓடிவந்த அண்ணனும் தங்கையும் திகைத்துப் போயினர்.



''கீதா... நீ வா! இதுகூட உனக்கென்ன பேச்சு?'' விமலா அருந்ததியை முறைத்துவிட்டு கீதாவை அழைத்துச் சென்றாள்.

வித்யாதரனால் அசைய முடியவில்லை.

பம்மியிருந்த வயிறு, நெற்றியில் புடைத்திருந்த வீக்கம், உதட்டோர இரத்தம், கண்ணில் வழியும் நீர்...

அவனை என்னவோ செய்தது.

எதையாவது ஆறுதலாய் இரண்டு வார்த்தை பேசலாமா? என்று தோன்றிய எண்ணத்தை உடனடியாக அழித்தான்.

'வேண்டாம்... அது அநாவசியம்!'

அங்கிருந்து அகன்றான் வித்யாதரன்.

அருந்ததி அவன் முதுகையே வெறித்துப் பார்த்தாள்.



14

''அவசியம் போய்தான் ஆகணுமா வித்து?'' அவனின் கையை எடுத்து தன் கன்னத்தில் வைத்து அழுத்தியபடி கேட்டாள் கீதா! இமைகள் படபடக்க அந்த பைங்கிளி கேட்ட விதம், 'வியாபாரமாவது... மண்ணாவது... இங்கேயே இருந்து விடலாமா?' என்றுகூட எண்ணம் உதித்தது வித்யாதரனுக்கு.

''வேற வழியில்லை டியர்! ஒரு மாதம் பொறுத்துக்கொள்! கென்யாவிலிருந்து பறந்து வந்துவிட மாட்டேனா?''

''ஒரு மாதமாகுமா?''

''ஏன் கீதா?''

''இல்லே... அதற்குள் குழந்தை... பிறந்துவிட்டால்?''

''அதற்குமுன் வந்துவிடுவேன் என்றே நினைக்கிறேன்! வந்ததும்... நம் கல்யாண வேலைகள் ஆரம்பமாகிவிடும்!'' இரண்டு விரலால் அவள் உதட்டைப் பற்றி கிள்ளினான்.

''சும்மாவாச்சும் என்னை சமாதானப்படுத்த சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்! இப்பவே விவாகரத்துக்கு விண்ணப் பித்தால்தான்.. ஒரு வருடமாவது ஆகும்... உங்களுக்கு அந்த சிறையிலிருந்து விடுதலை கிடைக்க!''

''உண்மைதான்! இந்தியா திரும்பியதும் முதல் வேலையாக வக்கீலைப் பார்க்க வேண்டும். அதுவரை உன்னைப் பார்த்து பெருமூச்சுவிட்டே செத்துப் போய்விடுவேன் போலிருக்கு!''

அவன் வாயை தன் தளிர்க்கரத்தால் பொத்தினாள் கீதா!

''சேச்சே! என்ன பேச்சு இது? வந்ததும் விண்ணப்பியுங்கள். ஒரு வருடமெல்லாம் கல்யாணத்துக்குத்தான். என் வித்துவுக்காக என் கொள்கையை கொஞ்சம் தளர்த்தி...''

''தளர்த்தி...''

''அன்று பாதியிலேயே ஏமாற்றினேன் அல்லவா? அதை தொடரலாம்...''

''எதை?'' புரியாதது போல் கேட்டான்.

''என்னை... உங்களுக்குக் கொடுப்பதை!''

''நிஜமா?''

''உம்...''

''அப்ப... அட்வான்சா இப்ப ஒரு முத்தம் கொடு!'' வித்யாவின் வலுவான கரங்கள் அவள் இடையில் அழுத்தி இழுக்க... கீதா அவன் முகம் நோக்கி கொண்டு போனாள் தன் முகத்தை!

கீதா கைதேர்ந்தவள், எல்லா விசயத்திலும்! அவள் வீட்டைப் பொறுத்தவரையில்... கீதா வெகுளித்தனமானவள். குழந்தையுள்ளம் கொண்ட குமரி! நாகரிகப் பெண் என்றாலும் எல்லை தாண்டாதவள்.

ஆனால் அவள் எத்தனை முறை கருக்கலைப்பு செய்தாள் என்பதற்கு அவளுக்கே கணக்குத் தெரியாது. நண்பர்களுடன் பழகிப் பார்க்க மட்டுமல்ல, இருந்துப் பார்க்கவும் விரும்புவாள்.



ஊட்டியில் படித்தபோது அவள் சுதந்திரப் பறவையாக இருந்தாள். சென்னைக்கு வந்தபிறகு கொஞ்சம் அடக்கி வாசிக்க ஆரம்பித்தாள். குமார்... அவளின் நெடுநாளைய நண்பன். அவன் மூலம் பல நண்பர்களும் அறிமுகம் ஆனார்கள்.

யாரையும் வீடு வரை அழைத்து வந்ததில்லை. குமாரை மட்டும் ஒரு சில முறை யாருமில்லா நேரத்தில் அழைத்ததுண்டு.

அப்பாவும், அண்ணனும் வியாபாரத்தைக் கட்டி அழுபவர்கள். எந்நேரமும் பிசிதான். அம்மா, வழக்கமாய் எல்லா பணக்கார அம்மாக்களைப் போன்று... மாதர் சங்கம், அது இதென்று அலைபவள்.

விமலா தபால் வழியில் படிப்பதால்... அடிக்கடி செமினார் வகுப்பு, அல்லது நூல் நிலையம் தோழி வீடு என்று போய்விடுவாள்.

யாருமற்ற சூழ்நிலையில் கீதாவுக்கு வக்கிர எண்ணங்கள் தோன்றும்.

இன்றும் யாருமில்லை! குமாரை அழைத்திருந்தாள். உடனடியாக வந்துவிட்டான்! ருசி கண்ட பூனையாயிற்றே?

அந்த வீட்டில் எந்த வேலைக்காரர்களும் அழைத்தாலன்றி... அத்துமீறி அறையினில் நுழைய முடியாதது ஒரு வசதி!

மாடியில் தனித்திருந்தது கீதாவின் அறை!

வந்ததும், வராததுமாய் அவளை இழுத்தணைத்து எச்சில் படுத்தினான் குமார்.

''என்ன அவசரம் குமார்?''

''ஊகூம்... இப்பல்லாம் வாய்ப் [illegible] கீது? எப்பவாவது இப்படி பம்பர் [illegible] இன்னும் எத்தனை நாளைக்கு? அப்புறம் [illegible]க்கு சொந்தமாயிடுவே! திருமதி கீதாவை என்னால் இப்படி தொட

5009089
32967

முடியுமா? முத்தம் தரமுடியுமா? இடுப்பை வளைச்சு மடியில போட்டு கொஞ்சத்தான் முடியுமா?''

''ஏன் முடியாது குமார்? கல்யாணம் வேற... காதல் வேற... நட்பு வேற! என்னைப் பொறுத்தவரை எல்லோரையும் சந்தோசப் படுத்தணும். அவ்வளவுதான்!''

''யப்பா... எவ்வளவு விசாலமான மனசு உனக்கு? ஆமா...அதெப்படி கீது... கழுத்தில் தாலி ஏறிட்டப் பிறகும் என்னோட பழகறேன்னு சொல்றே? இது உன் கணவனுக்கு செய்யிற துரோகமாய்டாதா?''

''துரோகமாவது... ஒண்ணாவது? அவர் மட்டும் ஏற்கனவே கல்யாணம் பண்ணிக்கலியா? குழந்தைப் பெத்துக்கலியா? அப்படி எல்லாம் இருந்தும் பெரிய மனசு பண்ணி கல்யாணம் செய்ய சம்மதிச்சிருக்கேனே... அதுவே பெரிய விசயம்தானே?''

''ஒருவேளை உன்னைப் பத்தி அவருக்குத் தெரிந்துவிட்டால்?''

''தெரிஞ்சா தெரியட்டுமே! பெரிய நஷ்டம் ஒண்ணுமில்லே... விவாகரத்து செய்துப்போம். ஜீவனாம்சம்ங்கற பேர்ல... ஒரு பெரிய தொகையை வாங்கிப்பேன்!''

''கில்லாடி கீது நீ!''

''நீ மட்டும் என்ன? அந்த அப்பிராணி அருந்ததியை வசமா மாட்ட வைச்சிட்டியே... அதைவிடவா!''

''நிஜமா சொல்றேன். அந்தப் பொண்ணை முதன்முதலா பார்த்தப்ப... இந்தப் பெண்ணையா இப்படி ஒரு சிக்கல்ல மாட்டிவிடப் போறேன்னு... மனசு கஷ்டமாதான் இருந்துச்சு. ஆனா, சேரன் என் நெருங்கிய நண்பன். அதனால... அவன் பேச்சை மறுக்க முடியல. பாவமாவது, புண்ணியமாவதுன்னு நடிச்சோம். பத்திரிகையில போட்டோல்லாம் போட்டதால கொஞ்ச நாள் வெளியே தலைகாட்ட முடியல. ஆனா, நட்புக்காக பொறுத்துக் கிட்டோம்!''



''நீ பெரிய ஆள் குமார்! இந்த நட்பு உள்ளத்துக்காகத்தான் நான் உன்னை சுத்தி வர்றேன்! ஆமா, இப்ப அந்த சேரன் எங்கேயிருக்கான்?''

''தன் அக்காவை ஏமாத்தி அவள் சாக காரணமா இருந்த சேரனோட கல்யாணத்தை அருந்ததி நிறுத்திட்டா இல்லியா? அதுக்குத்தான் பழிக்குப் பழிவாங்கி... இன்னைக்கு விபச்சாரிங்கற பட்டத்தோட சீரழியறா அருந்ததி! ஆனா, ஒரு நல்ல பெண்ணோட சாபம் நிச்சயம் பலிக்கும் கீது! நானே பல விசயங்கள்ல கண்கூடா பார்த்திருக்கேன்... ஒரு விபத்துல அவன் தன் ரெண்டு காலையும் பறிகொடுத்திட்டான் பாவம்!''

''நிஜமாவா?''

''எனக்கு ஆரம்பத்தில் இந்த அருந்ததிப் பத்தி ஒண்ணும் தெரியாது. ஒருநாள் விமலா அந்த பேப்பரை கொண்டு வந்து காண்பிச்சப்பதான் உன் போட்டோவையும் அதுல பார்த்து அதிர்ந்து போயிட்டேன். கவனமாயிரு. வித்யா, விமலா, அருந்ததி... இவங்க கண்லேயே நீ படக்கூடாது.''

''அதெல்லாம் நான் பார்த்துக்கிறேன். இன்னும் எவ்வளவு நேரம்தான் பேசிட்டிருக்கப் போறே?'' குமார் கேட்க... கீதா அவன் மார்பில் சாய்ந்தாள்.

**வி**மலாவுக்கு ஆயிரம் தேள்கள் ஒருசேரக் கொட்டியது போலிருந்தது.

அட்சரம் பிசகாமல் அறைக்கு வெளியே நின்றிருந்த விமலாவின் காதில் இவை அத்தனையும் விழுந்தது. போன காரியம் தடை ஏற்படவே உடனே வீடு திரும்ப வேண்டிய சூழ்நிலை? கீதாவின் கெட்ட நேரம்... குமாரும் அங்கே இருந்தது.

எல்லாம் புரிய அதிக நேரம் தேவைப்படவில்லை விமலாவுக்கு. தலைசுற்றுவது போலிருக்க... ஓசைப்படாமல் அங்கிருந்து அகன்றாள்.

மூளையில் கசமுசாவென்ற குழப்பம்! நிதானமாக யோசித்ததில் நடந்தவைகள் பளிச்சென புரிய ஆரம்பித்தது. அருந்ததியை பலிகடாவாக்கி, ஒரு குடும்ப பெண்ணை விபச்சாரி என்னும் பட்டம் கட்டி வாழ விடாமல் செய்த அவலம் வெட்ட வெளிச்சமானது.

தலைக்கு மேல் தூக்கி வைத்துக் கொண்டாடிய கீதாவின் சுயரூபம் தெரிந்துவிட்டது.

'கீதா இவ்வளவு கீழ்த்தரமானவளா? இவளையா அண்ணனுக்கு கட்டி வைக்க நினைத்தேன்? கூடாது...என் வாழ்க்கையே பறிபோனாலும் சரி...இதை நடத்த விடமாட்டேன்!'

விமலா தீர்மானித்தாள். வந்தவழியே திரும்பி தன் அண்ணன் வீட்டிற்குச் சென்றாள்.

உடனே அருந்ததியைப் பார்க்க வேண்டும் போலிருந்தது.

அவள் அறைக்குள் நுழைந்தாள்.

அங்கே...

முகமெல்லாம் வியர்த்துக் கொட்ட, வலியால் துடித்துக் கொண்டிருந்தாள் அருந்ததி.

''அ...ண்...ணி!'' ஓடிச்சென்று அவளை அணைத்துக் கொண்டாள்.

அந்த வலியிலும்... விமலா அப்படி அழைத்தது... ஒருவித ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

''அண்ணி... என்னை மன்னிச்சிடுங்க! உங்களை நான் தப்பா... விடுங்க... அதையெல்லாம் நிதானமா பேசலாம். வேணி... வேணி... வேணி எங்கே? உங்க பக்கத்துல ஒருத்தரும் இல்லாமல் எங்கே போய்ட்டாங்க எல்லோரும்?'' சத்தம் போட்டாள்.

வலியால் களைத்து மயங்கிப் போனாள் அருந்ததி.

விமலாவின் முகம் அழுதழுது சிவந்து போயிருந்தது.



மருத்துவர் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் இதயத்தை அறைந்தது.

குழந்தை பெற்றால் இறப்போம் என்று தெரிந்தும்... பெற்றுக் கொள்ளத் துணிந்த அண்ணி... எவ்வளவு மனம் நொந்து போயிருந்தால்... இந்த முடிவை எடுத்திருப்பார்கள்? கிட்டத்தட்ட இதுவும் தற்கொலைதான்.

தன் உடல்நிலை பற்றி யாரிடமும் ஒரு வார்த்தைகூட சொல்லவில்லை. சே... நானும் கூட சேர்ந்து எப்படியெல்லாம் துன்புறுத்தினேன்?

இப்போது அருந்ததி... ஆபரேசன் தியேட்டரில் இருந்தாள்.

குழந்தை குறுக்காகப் போய்விட்டதால் அறுவை செய்துதான் எடுக்க வேண்டிய நிலை.

'கடவுளே... ஏதாவது அற்புதத்தை நிகழ்த்தி... என் அண்ணியைக் காப்பாற்று!' ஓயாது முணுமுணுத்துக் கொண்டிருந்தாள்.

கென்யாவிலிருந்த தன் அண்ணனுக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டபோது... அவன் முன்தினமே புறப்பட்டு விட்டதாகவும், தற்போது இந்தியாவில் இறங்கியிருக்கக்கூடும் என்றே தகவல் வந்தது.

கடவுளே அனுப்பியது போல் விபரம் கேள்விப்பட்டு நேரே வந்ததும் வராததுமாய் மருத்துவமனைக்கு ஓடிவந்தான்.

அண்ணனை கண்டதும் ஓடிப்போய் மார்பில் விழுந்து புரண்டு அழுதாள்.

''என்ன விமலா? குழந்தைக்கு...''

''அண்ணிக்கு என்னாச்சன்னு கேளுங்கண்ணா!''

''என்னது அண்ணியா?''

''ஆமாண்ணா! நாம நினைச்சது போல அண்ணி மோசமானவங்க இல்ல...என்ன நடந்ததுன்னா...?''

எல்லாவற்றையும் கூறினாள்.

தாடை நரம்புகள் இறுகின வித்யாதரனுக்கு! அப்படியே அமர்ந்து தலைமேல் கைவைத்துக் கொண்டான்.

ஆபரேசன் தியேட்டரிலிருந்து மருத்துவர் வெளிப்பட்டார்.

''பெண் குழந்தை பிறந்திருக்கிறது. வாழ்த்துக்கள் மிஸ்டர் வித்யாதரன். பட்...''

''டாக்டர்...''

''உங்கள் மனைவியின் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளது. கோமா நிலையில் இருக்கிறார்கள். எப்போது நினைவு வரும் என்று சொல்வதற்கில்லை...''

விக்கித்துப் போனான் வித்யா!

வரம் கேட்கும் பக்தனைப் போல்... அருந்ததியின் அருகிலேயே அமர்ந்திருந்தான். சாப்பிடாமல்... தூங்காமல்... அவள் விழி அசைவுக்காக காத்திருந்தான்.

'கண் திறப்பாயா அருந்ததி? இந்தப் பாவியை மன்னிப்பாயா அருந்ததி? எனக்கு இன்னொரு சந்தர்ப்பம் கொடு அருந்ததி... உன்னை என் இதயத்திற்குள் பூவாய் தாங்குகிறேன். பிளீஸ்மா... என்னை வதைக்காதே!'

நிமிடங்கள் யுகங்களாய் தெரிந்தன.

சரியாய் ஐந்தாவது நாள்!

பேரதிசயமாய் கண்விழித்தாள் அருந்ததி.

''இதுநானே பதியன் போட்டது. ஒரே கிளையில் ஏழெட்டு பூக்கள் வரை பூக்கும்...''



''.......''

''இங்கே இருப்பதிலேயே எனக்கு ரொம்ப பிடிச்சது... இந்த ஜாதிமல்லிதான்... என்ன வாசம் வீசும் தெரியுமா?''

''.......''

''இது...''

கணவனின் குரல் கேட்காததில் பேச்சை நிறுத்திவிட்டு திரும்பிப் பார்த்தாள்.

வித்யா அவளையே விழி அகலாது பார்த்துக் கொண்டிருந் தான்.

அந்தப் பார்வையின் வீச்சால் நாணத்தில் தலைகவிழ்ந்தது.

''எனக்கு பிடிச்சது...இந்தப் பூதான்! எட்டா தொலைவில் பளிச்சிட்டு சிரிக்கும் இந்த அருந்ததிப் பூவை மட்டும்தான்!'' வித்யாதரன் அவளை இழுத்து அணைத்து மென்மையாய் கன்னத்தில் முத்தமிட்டான்.

அந்த சிலிர்ப்பு தந்த சுகம்... அருந்ததிக்கு கண்ணீரை வரவழைத்தது.

இது ஆனந்தக் கண்ணீர்!



# உயிரே நெருங்கி... வா!

1

கனவுகள் போலக் கழிந்திடும் வாழ்வு!
காதலைப் போல ஆறுதல் ஏது?
உண்மையின் மடியில் உறவுகள் மழலை.
உரிமையின் அருகில் உணர்வுகள் கவிதை!

ஜிகினா பேப்பரை கிழித்தெறிந்ததுப் போல் கூட்டமாய் பறந்த புறாக்களின் சிறகுகள் கதிரவன் ஒளிபட்டு பளபளத்தன.

''ஹை'' என்று மனசு கும்மாளம் போட கண்கள் சுருக்கி பார்த்து ரசித்தாள் அனு.

''அனூ...''

அம்மா மல்லிகாவின் குரல் காற்றில் பயணித்து இவள் காதில் மோதியது.

''மூஞ்சி...கத்து... நல்லாகத்து! எனக்கென்ன வந்துச்சு? எப்படி அடிச்சிட்டே? போ...நான் வரலே... நீ தேடினாலும் கிடைக்க மாட்டேன்!'' தனக்குத் தானே பேசியபடி இன்னும் தன்னைக் குறுக்கிக் கொண்டு சுவற்றோடு ஒடுங்கி அமர்ந்தாள்.



அவள் அமர்ந்திருந்த இடம்... மொட்டை மாடியில் உள்ள வாட்டர் டேங்கை சுற்றி ஒருவர் படுக்குமளவு இடம் விட்டு கட்டப்பட்டிருந்த கைப்பிடி சுவற்றருகே! ஏணி மீதேறி வந்தால் ஒழிய அனு அமர்ந்திருப்பது யாருக்கும் தெரியாது.

''அனு... அனு... அடியே அனு... எங்கேடி போய் தொலைஞ்சே?'' குரலில் அழுகையும் கோபமும் போட்டி போட்டன. கத்தி... கத்தி மல்லிகாவின் தொண்டையே வற்றிப் போனது.

டவலால் தலையை துவட்டியபடியே பாத்ருமிலிருந்து வெளிப்பட்டார் சௌந்தர பாண்டியன்.

''என்ன மல்லிகா? நானும் அப்பவிருந்தே பார்க்கிறேன். அனு அனுன்னு கத்திட்டிருக்கே!''

''ஆமாங்க... வீடு முழுக்க தேடிப் பார்த்தேன்... பாவி மகளை காணலேங்க!''

''என்ன உளர்றே? காலையிலே இருந்தாளே!''

''இப்ப அரைமணி நேரமா காணலே! எங்கே போயிருப் பாளோ? ஒன்னும் புரியலே... வயித்திலே நெருப்பள்ளிக் கொட்டினா மாதிரி பயமாயிருக்குங்க!''

''ப்ச்... எங்கே போய்டப் போறா? இங்கேதான் இருப்பா! மொட்டை மாடியிலே போய் பார்த்தியா?''

''பார்த்தாச்சு. கொல்லைப்புறம்... அவ்வளவு ஏன்... எதிர்வீட்டு கிணத்துல கூடப் பார்த்துட்டேன். காணோம்!''

''நீ அவளை திட்டினியா?''

''இல்லையே.. நேத்து அடிச்சோமில்லையா... அதிலிருந்தே முகத்தை தூக்கி வச்சிட்டிருந்தா! நைட்டு கூட சாப்பிடலே! சரி.. விடிஞ்சா சரியாப் போய்டும்னு நினைச்சேன்! மத்தது நினைவுக்கு வரலேன்னாலும்... இந்த விஷயத்தை மறப்பாளா? எங்கே

போனாளோ? பசி தாள மாட்டாளே! ஹூம்... வயசக்குரிய பக்குவம் இருந்திருந்தா... இப்படி பயப்படுவேனா? பாம்புக்கும், பழுதுக்கும் வித்தியாசம் தெரியாத வயசுப் பொண்ணு. அதை நினைச்சாதானே பகீர்னு இருக்கு!''

''வளவளன்னு பேசிட்டிருக்காதே! நம்ம தெருவிலே எல்லா வீட்லேயும் கேட்டுப் பார்த்தியா?''

''வீட்டுக்கு வீடு வா...வான்னு கூப்பிட்டு கொஞ்சவா போறாங்க? அவளைப் பார்த்தாலே பேயைக் கண்டவங்க மாதிரி பட்டு பட்டுன்னு கதவை அடைச்சிடறாங்க. அப்படியும் கேட்டுப் பார்த்தாச்சு. 'பைத்தியத்தை அலைய விட்டுட்டு வித்தையா காட்றீங்கன்னு' கேக்கறாங்க? இவளால் இன்னும் என்னென்ன அவஸ்தைப் படப்போறோமோ? என்ன பாவம் பண்ணினேன் இப்படியொரு பைத்தியத்தை என் வயித்திலே சுமக்க வச்சு காலம் முழுக்க... நெஞ்சுலேயும் துக்கத்தை சுமக்க வச்சுட்டான் அந்த கடவுள்!''

''விட்டா பேசிக்கிட்டே இருப்பே! கிளம்பு...பூட்டு சாவிய எடுத்துக்க...வீட்டை பூட்டிட்டு விஷ்ணு வீட்டுக்கு, தேவிகா வீட்டுக்கு போய் ஒரு நடை பார்த்துட்டு வரலாம்.''

''அவளுக்கு தனியா அங்கே போகத் தெரியாதே!''

சௌந்தரபாண்டியன் மனைவியை முறைத்தார்.

''சொன்னதை செய்... அது போதும்!''

''சரிங்க!''

அடுத்த கணம் மல்லிகா கேஸ் ஸ்டவ்வை அணைத்துவிட்டு பூட்டு சாவியை எடுத்துக் கொள்ள... சௌந்தரபாண்டியன் வேட்டி சட்டையை மாட்டிக் கொண்டு புறப்பட்டார்.

தெருவில் இறங்கி...நாலாபுறமும் கண்களை ஓடவிட்டபடி நடந்தனர். தீப்பந்தம் கொளுத்தி முகத்தில் தூக்கிப் போட்டது போல்... வெயில் சுள்ளென்று பொசுக்கியது.



தேடாத இடம் பாக்கியில்லை.

அனு விஷ்ணு வீட்டிற்கும் வரவில்லை. தேவிகா வீட்டிற்கும் வரவில்லை. பீச், பார்க், கடைத்தெரு என்று தேடியலைந்தனர்.

மல்லிகாவிற்கு வெயிலில் அலைந்து தலை சுற்றுவது போலிருந்தது.

சௌந்தரபாண்டியன் உள்ளுக்குள் திகிலாய் உணர்ந்தாலும், மனைவி பயப்படுவாளே என்று வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

எந்நேரமும் அழத் தயாராயிருந்தாள் மல்லிகா.

சௌந்தரம் மனைவியை தோளில் தட்டி ஆறுதல் படுத்தினார்.

''பயப்படாதே... ஒண்ணுமில்லே... அனுவை கண்டுபிடிச்சிட லாம்''

''எப்படிங்க? எங்கும் இல்லையே! இந்த காலத்துல நல்ல தைரியசாலியமான பொட்டை புள்ளைங்களுக்கே என்னென் னவோ நடந்து போகுது. நம்ம அனுவுக்கு ஒண்ணுமே தெரியாதே! அவளை யாராவது... ஐயோ என்னால கற்பனை கூட பண்ணிப் பார்க்க முடியலே... அப்படி ஏதாவதொன்னு ஆகியிருந்தா... நிச்சயமா நான் உயிரோட இருக்க மாட்டேங்க!'' விம்மினாள்.

''மல்லிகா... இதோ பார்! நீ அழுது... என் தைரியத்தை குலைச்சிடாதே! வா... எதுக்கும் போலீஸ் ஸ்டேஷன்ல போய் ஒரு கம்ப்ளைண்ட் கொடுத்துட்டு வந்துடலாம்.''

**ஹெ**ட் கான்ஸ்டபிள் இவர்களிடம் கேள்வி கேட்டு குறித்துக் கொண்டார்.

''பேரு?''

''அனுராகினி!''

''வயசு?''

''இருபத்திநாலு!''

''பொண்ணு... யாரையாவது லவ்வு, கிவ்வுன்னு...''

''அவ... அவளுக்கு மனநிலை சரியில்லைங்க!''

''பைத்தியம்னு சொல்லுங்க. அதை முன்னமே சொல்றதுக்கென்ன? பைத்தியம்னு சொல்றீங்க... ஏன் சார் வீட்லே வச்சுக்கிட்டு அல்லாடறீங்க? அதுங்களுக்கின்னு ஹாஸ்பிடல் இருக்கில்லே... பாருங்க வயசான காலத்துல உங்களால நிம்மதியா இருக்க முடியுதா?''

''...?'' கூனிக் குறுகிப் போயினர் இருவரும்.

''போட்டோ இருக்கா?''

''கையிலே இல்லை... வீட்லே இருக்கு. நான் கொண்டு வந்து தர்றேன்!''

''சரி... இதுல ஒரு கையெழுத்தைப் போட்டுட்டு போங்க...''

''சார் எப்படியாவது என் பொண்ணை...''

''கண்டுபிடிச்சிடலாம்... கவலைப்படாதீங்க'' என்றார் ஹெட் கான்ஸ்டபிள்.

இருவரும் தொய்ந்து போய் வீடு திரும்பினர்.

மல்லிகா நேரே பூஜையறைக்குள் சென்று கதறியபடி ஆரம்பித்தாள்.

''மல்லிகா... என்ன இது? ப்ச்... அழாதே!''

''பயமாயிருக்குங்க... என் பொண்ணு எங்கே அல்லாடறாளோ தெரியலியே...''

''வந்துடுவா... கிடைச்சிடுவா... கவலைப்படாதே!'' என்றவருக்கு கண்கள் பொங்க... அதை மறைக்க... மாடிப் படியேறினார்.



துண்டால் கண்களை அழுந்த துடைத்துக் கொண்டார். மொட்டை மாடியில் நிற்க இடமின்றி மஞ்சள் வெயில் தீப்பறந்தது. துளியும் காற்றில்லை.

கீழே செல்ல திரும்பிய போதுதான் அந்த சப்தம் கேட்டது.

''லா..லலலா...லா...லலலலா...''

''சந்தேகமேயில்லை... இது அனுவோட குரல்தான்!''

உடம்பெங்கும் நீர்ப்பாய்ச்சிய சுறுசுறுப்பு ஓட... சுற்றிலும் பார்த்தவர்... கடைசியாய் தண்ணீர் தொட்டி கண்ணில் பட்டது.

ஏணி மீதேறினார்.

சுட்டெரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாது சுவற்றில் சாய்ந்துக் கொண்டு, காலாட்டியபடி பாடிக் கொண்டிருந்த அனுவைப் பார்த்ததும்... திரும்ப உயிர் வந்து ஒட்டிக் கொண்டது போலிருந்தது.

அதே சமயம் இப்படி அலைக்கழிக்க வைத்து விட்டாளே என்ற கோபமும் எழுந்தது. வெகுவாய் கடினப்பட்டு கோபத்தை கட்டுப்படுத்திக் கொண்டார்.

''அனு...''

திடுக்கென்று திரும்பிய அனு அப்பாவைப் பார்த்ததும் முகத்தை திருப்பிக் கொண்டாள்.

''இங்கே என்னம்மா பண்ணிட்டிருக்கே?''

''......''

''உன்னைக் காணாம... நாங்க பயந்துபோய் ஊரெல்லாம் தேடிட்டு வர்றோம்! எந்திரிச்சி... கீழே வா!''

''போ... நான் வரலே... என்னைத்தான் அடிச்சீங்கயில்லே. நான் யார்கிட்டேயும் பேசமாட்டேன்... போ!''

''இனிமே அடிக்கலே... வாம்மா!''

''நிஜமா?''

''அடிக்க மாட்டோம்... எந்திரி!''

எழுந்தாள்.

வெயிலில் காய்ந்து போயிருந்ததால்... முகம் கறுத்து... வியர்வையில் நனைந்திருந்தாள் அனு.

பேச்சுக் குரல் கேட்டு மேலே வந்துவிட்டிருந்த மல்லிகா...ஆச்சர்யத்தில் கண்கள் விரிந்தாள்.

''அனு... நீ இங்கேயா இருந்தே?''

சௌந்தரபாண்டியன் மனைவியை கண்களால் எச்சரித்து ''ஒன்றும் பேசாதே!'' என்றார்.

மனைவியிடம் மெல்ல எல்லாவற்றையும் சொன்னார்.

''அதுக்காக இப்படியா? ஆனாலும் இவளுக்கு இறுமாப்பு அதிகம்! இத்தனை மணிநேரமா வைராக்கியமா வெயில்ல காய்வாளா?''

''ஏய் மல்லிகா... பேசாதே! நீதான் என்னை ரொம்ப அடிச்சிட்டே! பார்... நீ கரண்டியால அடிச்சதை!'' அனு கைகளையும், பாவாடை உயர்த்தி கால்களையும் காண்பித்தாள். அங்கங்கே ரத்தம் கட்டிக் கொண்டிருந்தது.

அதைப் பார்த்து மல்லிகாவிற்கு நெஞ்சடைத்துக் கொண்டது.

நேற்று... வீட்டில் அனுவைத் தவிர யாருமில்லை. சௌந்தரபாண்டி அலுவலகம் சென்றிருக்க, மல்லிகா மார்க்கெட் சென்றிருந்தாள்.

ரோட்டில் ஊறுகாய் விற்றுக் கொண்டிருந்த இளைஞனை வீட்டிற்குள் வரவழைத்து நாக்கில் எச்சில் ஊற ஊறுகாய் கேட்டிருக்கிறாள்.



அந்த இளைஞனுக்கோ... மாராப்பு சேலை நழுவ நின்றிருந்த அனுவைப் பார்த்து நாக்கில் நீர் சுரக்க... வீட்டில் யாருமில்லாததை அறிந்து கொண்டு அனுவின் மேல் கை வைப்பதற்கும்...மல்லிகா வருவதற்கும் சரியாய் இருந்தது.

அவன் ஓடிவிட்டான்.

பதறிப்போன மல்லிகா ஆத்திரம் தாளாமல் அனுவை அடித்து துவைத்து விட்டாள். போதாதற்கு மாலை வீடு திரும்பிய சௌந்தரபாண்டியனும் அடித்து விட்டார்.

கொஞ்சம் நேரம் லேட்டாய் வந்திருந்து... ஒண்ணு கிடக்க ஒண்ணு ஆகியிருந்தால்?

நினைக்கவே பதறியது.

அப்படி அடித்து விட்ட கோபம் அனுவிற்கு.

''சாப்பிடுடி... நேத்து நைட்லேர்ந்து ஒண்ணுமே சாப்பிடலியே!''

''வேணாம்! இனி அடிக்க மாட்டேன்னு சொன்னாதான் சாப்பிடுவேன்.''

''சரி... இனி அடிக்க மாட்டோம்!''

''அப்படி அடிச்சியானா... நான் வீட்லேயே இருக்கமாட்டேன்!'' என்று பிகு செய்தபடி சாதத்தை பிசைந்தாள் அனு.

பெற்றோர் அவளை பெருமூச்செறிய பார்த்துக் கொண்டிருந்தனர்.

# 2

காதல் என்பதே வேடிக்கையோ? அதில்
தோல்வி என்பதே வாடிக்கையோ?
அமைதி என்பதே கோரிக்கையோ? அங்கே
அழுகை என்பதே காணிக்கையோ?

இரவு சமையலுக்கான ஆயத்தப் பணிகளில் ஈடுபட்டிருந்தாள் மல்லிகா!

ஹாலில் ஒரு மூலையில் சாதுவாக, தானுண்டு தன் வேலை உண்டு என்று ஒரு நோட்டு புத்தகத்தில் காக்கா, குருவி என்று வரைந்து கொண்டு தன்னைத் தானே பாராட்டிக் கொண்டிருந்தாள் அனு.

ஒரு சேரில் அமர்ந்தபடி மடி மீது பேடு வைத்து இன்லெண்டில் யாருக்கோ கடிதம் எழுதிக் கொண்டிருந்தார் சௌந்தரபாண்டியன்.

ரிடையராக இன்னும் இரண்டு வருடமே சர்வீஸ் உள்ள சௌந்தரபாண்டியனுக்கு வயது ஐம்பத்தெட்டு. மல்லிகாவிற்கு ஐம்பது நெருங்கிக் கொண்டிருந்தது. கவலை அவளை வெகுவாய் தளரச் செய்து விட்டிருந்தது.

நான்கு குழந்தைகள்.

பெரியவன் விஷ்ணு! திருமணமாகி மனைவி ரேவதி குழந்தைகளுடன் தனிக்குடித்தனம்.

அடுத்தவள் தேவிகா! இரண்டு ஆண் குழந்தைகள். கணவன் அசோக்லேலண்டில் பணிபுரிகிறான். மாமியார் வீட்டோடு சந்தோஷமாய் இருக்கிறாள்.

அவளுக்கடுத்தவள் தான் அனுராகினி.

கடைக்குட்டி புனிதா. சிதம்பரத்தில் ஹாஸ்டலில் தங்கி ஃபைனல் இயர் பி.எஸ்ஸி. படித்துக் கொண்டிருந்தாள்.



சென்னையில் இல்லாத கல்லூரிகளா? எனினும் புனிதா சிதம்பரத்தில் தங்கிப் படிப்பதற்கு காரணம் அனு.

''அப்பா... டி.வி. பார்க்கப் போறேன். போடேன்!'' அனு கிறுக்கி களைத்தவளாய் அப்பா முன் வந்து நின்றாள்.

''அப்பாவை தொந்தரவுப் பண்ணாதே! எழுதிட்டிருக்கேன் தெரியுதில்லே?''

''போர் அடிக்குதுப்பா.. இப்ப டி.வி.யில மாயாவி மாரீசன் போடுவானே... போடுப்பா!''

''இப்ப... டி.வி.யை தூக்கி உன் தலையிலேதான் போடப் போகிறேன். மரியாதையா இடத்தை காலிபண்ணு!'' எரிந்து விழுந்தார் சௌந்தரபாண்டியன்.

''டி.வி. உடைஞ்சு போயிடுமேப்பா!'' என்றாள் சீரியஸாய்.

''கடவுளே... மல்லிகா என்ன பண்ணிட்டிருக்கே? இவளை உள்ளே இழுத்துக்கிட்டுப் போ!''

''டி.வி. போடமாட்டேயில்லே? பார்த்துட்டேயிரு... ஒரு நாளைக்கு நானே அதை தூக்கிப் போட்டு உடைக்கிறேன்.''

''அதை செய்!'' என்று எழுதுவதில் கவனம் செலுத்தினார்.

''வவ்வவ்வே... மூஞ்சியப் பார்! அப்பா மாதிரியா பேசறே? கிழவன்... கிழவன்!'' முகத்தை தூக்கி வைத்துக் கொண்டு மறுபடி மூலையில் அமர்ந்து கொண்டு நோட்டும், பேனாவும் எடுத்துக் கொண்டாள்.

மல்லிகா காபியோடு கணவரின் அருகே வந்தாள்.

''வர வர... இவளோட தொல்லை தாங்க முடியலே மல்லிகா!'' ஆயாசத்துடன் காபியை வாங்கி குடிக்க ஆரம்பித்தார்.

''நம்ம சுமை... சுமந்துதான் ஆகணும்! யாருக்கு எழுதிக்கிட்டு இருக்கீங்க?''

''என் தங்கைக்குத்தான்! லெட்டர் போட்டிருந்தா இல்லையா? மாப்பிள்ளைக்கு உடம்புக்கு முடியலையாம். ஒரு நடை தஞ்சாவூர் வரைக்கும் போய்ட்டு வரலாம்னா... முடியுமா? ஹூம்... என்ன நெனச்சுக்கறாளோ? அதான் லெட்டர்ல விசாரிச்சுக்கிட்டிருக்கேன்!''

''ஒரு நாளைக்கு அனுவை விஷ்ணு வீட்லே விட்டுட்டு ரெண்டு பேருமே போய்ட்டு வரலாம்ங்க! அ... சொல்ல மறந்திட்டேனே! புனிதாகிட்டேர்ந்து இன்னைக்கு லெட்டர் வந்துச்சுங்க...'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே வாசலில் காலிங்பெல் அலறியது.

அனு எழுந்தோடினாள்.

''ஏய்... முந்திரிக்கொட்டை... நீ உட்காரு... நான் போய் திறக்கிறேன்'' என்று அவளைப் பிடித்து அமர வைத்தாள், மல்லிகா.

''மூஞ்சியப் பார் கிழவி!'' என்று முணுமுணுத்துக் கொண்டே உள் அறைக்குச் சென்றுவிட்டாள்.

கதவைத் திறந்தாள் மல்லிகா.

அதே தெருவைச் சேர்ந்த லோகநாயகி நின்றிருந்தாள்.

''வாங்க... உள்ளே வாங்க...!''

''பரவாயில்லேங்க... என் பொண்ணுக்கு நாளைக்கு நிச்சயதார்த்தம்''

''நாளைக்கேவா?''

''ஆமாங்க... ரொம்ப அவசரமா முடிவானதால மண்டபம் பார்க்க முடியலை. நாளைக்கு பௌர்ணமி! நல்ல நாள். அதனால வீட்லேயே வச்சு நிச்சயதார்த்தம். கண்டிப்பா வந்துடுங்க!'' என்று மல்லிகாவின் நெற்றியில் குங்குமம் வைத்தாள் லோகநாயகி.

''வர்றேங்க...'' என்று வாய் முனகியதே தவிர அவள் எண்ணமெல்லாம் ''நாளைக்கு பௌர்ணமி!'' என்ற வார்த்தையையே சுற்றிக் கொண்டிருந்தது.



நேரே உள்ளே வந்து கிச்சன் அலமாரியின் மூலையில் இருந்த இரும்பு சங்கிலியை எடுத்துக் கொண்டு வந்தாள் மல்லிகா.

''என்ன இது... இப்ப எதுக்கு?'' குழப்பமாய் கேட்டார்.

''நாளைக்கு பௌர்ணமி! நம்ம அனுவுக்கு தேவைப்படுமே!'' என்று கூறிவிட்டு குலுங்கி குலுங்கி அழுதாள்.

சௌந்தரபாண்டியன் எழுதுவதை நிறுத்திவிட்டு எழுந்து நின்றார்.

அவர் இதயம் கனத்துப் போயிருந்தது.

அழுது கொண்டிருந்த மனைவியைக் கூட தேற்றாமல் தன்னறை நோக்கிச் சென்றார்.

மனம் தாளாமல் அனு அம்மா அருகே வந்தாள்.

''ஏம்மா அழறே?''

''உனக்கு அம்மாவா வந்து பிறந்தேனே... அழாம என்ன செய்யறது?''

''ஏன் அம்மாவா வந்து பொறந்தே? என்னை மாதிரி பொண்ணா வந்து பொறந்திருக்கலாமே!''

''கடவுளே!'' என்று மேலும் நொந்து கொண்டாள் மல்லிகா.

சௌந்தரபாண்டியன் பீரோவைத் திறந்து நீலநிற ரெக்ஸின் ஃபைலை எடுத்தார்.

பிரித்தார்.

அதில் கத்தையாய் சான்றிதழ்கள்.

பி.பி.ஏ. கம்ப்யூட்டர், டைப்ரைட்டிங், ஸ்போர்ட்ஸ், வீணை, அது இது என்று ஒன்று விடாமல் அத்தனை துறையிலும் தேர்ச்சி பெற்றதற்கான சான்றிதழ்கள். அந்த சான்றிதழ்களில் வீற்றிருந்த பெயர் அனுராகினி.

அதனுடன் விதவிதமான போட்டோக்கள். பட்டமளிப்பு விழாவில் கம்பீரமாய் சிரித்தபடி, சுரிதாரில், சேலையில் அழகழகாய்... விதவிதமாய்... அழகு தேவதையாய்... பார்ப்பவர் மனதை கொள்ளை கொள்ளும் அழகான சிரிப்புடன் அனுராகினி.

''அப்பா... இங்கே என்ன பண்றே? அங்கே பார்... அம்மா அழுதிட்டிருக்கா... அட... இதெல்லாம் என்ன? காட்டு... காட்டு...'' ஆர்வம் தாங்காமல் அவரிடமிருந்த போட்டோக்களைப் பறித்துக் கொண்டாள்.

''என்னை மாதிரியே இருக்கே... யாருப்பா இதெல்லாம்?''

''எல்லாமே மறந்து போச்சா அனு? எல்லாமே நீதானேம்மா... இது... உனக்கு டிகிரி கொடுத்தப்ப எடுத்தது.''

''டிகிரின்னா என்ன?''

பரிதாபமாய் மகளின் தலையை தடவிக் கொடுத்தார்.

''இதெல்லாம் எப்ப புடிச்சது? நான் பெரிசா இருந்தப்ப எடுத்ததா?'' குழந்தைத்தனமாய் கேட்டாள்.

''......''

''இதிலே பாரேன்... தலையிலே தொப்பி எல்லாம் மாட்டிக்கிட்டு... பேய் மாதிரி கறுப்பு டிரஸ் போட்டுக்கிட்டு... அசல் பேய் மாதிரியே இருக்கேன்... இல்லேப்பா?'' அனுவிற்கு தாங்க முடியாமல் சிரிப்பு வந்தது.

சௌந்தரபாண்டி மகளையே பார்த்தார்.

அடக்கமாய்... ஒரு பூமலர்வது போல் சிரிக்கும் அந்த அனு எங்கே?

பார்ப்பவரை பயமுறுத்தும்படி அட்டகாச சிரிப்பு சிரிக்கும் இந்த அனு எங்கே?

அவரின் இதயம் விம்மி தணிந்தது.



மல்லிகா தந்த காபியை ரசித்து பருகிக் கொண்டிருந்தார் தரகர் தனஞ்ஜெயன்.

சௌந்தரபாண்டி விட்டத்தை வெறித்தபடி யோசனையில் ஆழ்ந்திருந்தார்.

''என்னண்ணா யோசிக்கிறேள்... நல்ல இடம்... நல்ல பையன்... புத்திசாலித்தனமா யோசிச்சா... இதைவிட நல்ல இடம் உம்ம பொண்ணுக்கு கிடைக்காதுன்னு புரியும்!''

''அதுக்காக என் பொண்ணை ரெண்டாந்தாரமா கட்டித்தர சொல்றீங்களா?''

''ரெண்டாங்கல்யாணம் பண்ணிக்கறவா எல்லாருமே மோசமானவாயில்லே! அதை புரிஞ்சுக்குங்கோ! சொந்தமா ரெண்டு வீடு இருக்கு. சுயதொழில். முதல் சம்சாரம் உசிரோட இல்லை. குழந்தையும் இல்லே. மாமியார், நாத்தனார்னு எந்த பிக்கல் பிடுங்கலுமில்லே! அவாளே வலிய உங்களோட சம்மந்தம் வெச்சுக்க ஆசைப்படறா... பொண்ணுக்கு இதை செய், அதை செய்னு உத்தரவுப் போடற ஆள் அவரில்லே! பொன் வைக்கற இடத்துல பூவை வச்சு அனுப்பிடலாம். இதைப் போல ஒரு நல்ல சம்மந்தம் கிடைக்க நீர் கொடுத்து வச்சிருக்கணும்!''

''ஆனாலும்...'' இழுத்தார்.

''அண்ணா... சொல்றேன்னு தப்பா நினைச்சுக்காதீங்கோ! மொதல்ல உங்க வீட்டு நிலமையை யோசிச்சுப் பாருங்கோ! உம்ம ரெண்டாவது பொண்ணு பைத்தியம்ங்கறது ஊரே அறிஞ்ச விஷயம். அப்படியிருக்க உம்ம இளைய பொண்ணுக்கு வரன் அமையறது ரொம்ப கஷ்டம்! இவா, எல்லாத்தையும் தெரிஞ்சுக்கிட்டே... உம்ம பொண்ணை கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படறா! நான் நாலு நாள் கழிச்சி வர்றேன். நல்ல பதிலா சொல்லுங்கோ...'' என்றபடி விடைபெற்றார் தனஞ்ஜெயன்.

நெற்றியைப் பிடித்துக் கொண்டார் சௌந்தரபாண்டியன்.

என்ன முடிவு பண்ணியிருக்கீங்க?''

மல்லிகாவின் குரல் கேட்டு நிமிர்ந்தார்.

''ஒன்னுமே புரியலே மல்லிகா! பாவம்... புனிதாவுக்கு இப்படிப்பட்ட வாழ்க்கையா தேடி வரனும்?''

''சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க. தரகர் சொல்றதுதான் சரின்னு எனக்கும்படுது!''

''உளறாதே!''

''இல்லேங்க... பதறாம யோசிங்க! நம்ம அனுவுக்கு இப்படி இருக்கறப்ப... புனிதாவுக்கு எப்படிங்க நாம நினைக்கிறமாதிரி இடம் தகையும்? அப்படின்னா புனிதா காலம்பூரா இப்படியே இருக்க வேண்டியதுதான். நாம என்ன விரும்பியா இதையெல்லாம் செய்யறோம்? நம்ம சூழ்நிலை, புனிதாவோட தலைவிதின்னு நினைச்சுக்க வேண்டியதுதான். குறையின்னு பார்த்தா... அந்த பிள்ளையாண்டானுக்கு இது குறையின்னு பார்த்தா... அந்த பிள்ளையாண்டானுக்கு இது ரெண்டாங்கல்யாணம்ங்கறதை தவிர வேறென்ன குறை? புனிதா நல்லாயிருப்பா... சந்தோஷமாயிருப்பான்னு என் மனசுக்குத் தோணுது!''

''நீ சொல்றது சரி. ஆனா, புனிதா ஒத்துக்கனுமே!''

''அனுவுக்கு தங்கையா பொறந்த பாவத்துக்கு ஒத்துக்கிட்டுதான் ஆகனும்ங்கறதை நாமதாங்க அவளுக்கு புரிய வைக்கனும்!'' என்றாள் மல்லிகா.

ஆனாலும் சௌந்தரபாண்டியனுக்கு மனசு ஆறவில்லை.



# 3

இரவு வந்தால் உறக்கமில்லை
உறக்கம் வந்தால் இரவு இல்லை
நினைவு வந்தால் கனவு இல்லை
கனவு வந்தால் நினைவு இல்லை
விடிய விடிய விழிக்கிறேனடி...
முடிய முடியத் தொடர்கிறேனடி!

அரக்க பரக்க ஓடியாடி வேலை செய்துக் கொண்டிருந்தாள் மல்லிகா!

எளிமையான அலங்காரத்தோடு சிரிப்பை தொலைத்தவளாய் அமர்ந்திருந்தாள் புனிதா, பக்கத்தில் குணசேகர். அவன் ஏற்கனவே திருமணமாகி மனைவியை இழந்தவன் என்று சொல்ல முடியாதளவு இளமைத் தோற்றம்.

குணசேகரை எந்த குறையும் சொல்ல முடியாது. நல்லவன். தனக்கொரு பெண் துணை அவசியம் என்று உடனே முடிவெடுத்து விடவில்லை. மனைவி சீதா இறந்து மூன்று வருடம் சென்ற பிறகே இப்படியொரு முடிவுக்கு வந்தான்.

ஆனால், புனிதாவிற்கு தான் இரண்டாம் தாரமாய் வாழ்க்கைப் படப் போகிறோமே என்கிற வருத்தம். உள்ளுக்குள் குமைந்து கொண்டிருந்தாள். இந்த திருமணம் வேண்டாம் என்று மறுத்தவளின் காலில் தடாலென மல்லிகா விழுந்து அழுதாள். இதை எதிர்பார்க்கவில்லை, அவள் கண்ணீரைப் பார்த்த பிறகும் புனிதாவினால் வீம்பு பண்ண மனமின்றி சம்மதித்தாள்.

என்றாலும் புனிதா நிச்சய விழாவின்போது உம்மென்று அமர்ந்திருந்ததைப் பார்க்கும்போது பெற்றவர்களுக்கு வருத்தமாகத்தான் இருந்தது. வருத்தப்படுவதைத் தவிர வேறென்ன செய்ய முடியும்?

'திருமணமாகிவிட்டால் எல்லாம் சரியாகிவிடும்' என்று தனக்குத் தானே சமாதானம் சொல்லிக் கொண்டனர்.

விழாவை மிக எளிமையாகத்தான் நடத்தினர். மிக முக்கிய உறவினர்களில் பத்து இருபது பேரை மட்டும் அழைத்திருந்தனர்.

அங்குமிங்குமாய் அலைந்துக் கொண்டிருந்த தேவிகா, அம்மாவிடம் வந்து, "அனு எங்கேம்மா?" என்றாள்.

"ரெண்டு தூக்க மாத்திரையைப் போட்டு படுக்க வச்சிருக்கேன்!"

"எந்த இடத்துல? மொட்டை மாடியிலேயா?"

"அங்கேதான் பந்தி பரிமாறப் போறோம். ஸ்டோர் ரூமை கொஞ்சம் ஒதுக்கி பாயைப் போட்டு படுக்க வச்சிருக்கேன். இந்த வீட்ல ராணி மாதிரி வளைய வந்தவ... அவ இப்ப எந்த இடத்துல கிடக்கறா பார்த்தியா? எல்லா நிகழ்ச்சிக்கும் அனு வரணும்னு எல்லாரும் எதிர் பார்த்த காலம்போய்... எங்கே வந்துடப் போறாளோன்னு பயப்படற காலமாயிடுச்சி. என் மனசே கல்லாயிடுச்சி தேவிகா. பல சமயங்கள்ல அவ பண்ற அட்டூழியத்தைப் பார்த்து ச்சீ... போன்னு ஆகிடுது. அந்த நேரங்கள்ல கண்ணு மண்ணு தெரியாம அடிச்சிடறேன். அடிவாங்கிட்டு மூலையில போய் சுருண்டுக்கிட்டு அழறதைப் பார்க்கறப்ப அடிவயிறு கலங்கிப் போகுது தேவி..." அம்மா பொருமலுடன், மூக்கு விடைக்க பேசியதைக் கேட்டு தேவிகாவிற்கே கண்கள் தளும்பின.

"விடும்மா... நல்ல நாளும் அதுவும் கண்கலங்கிட்டு... யாராச்சும் பார்த்தா தப்பா நினைச்சிடப் போறாங்க... அனுவோட தலையில என்ன எழுதியிருக்கோ... அதுப்படிதானே நடக்கும்? அதை மாத்த யாரால முடியும்? நான் போய் அவளை பார்த்துட்டு வர்றேன். நீ போய் வந்தவங்களை கவனி... அதோ... அப்பாவே உன்னைக் கூப்பிடறார் பார்!"



மல்லிகா சேலை தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டு கணவனை நோக்கிச் சென்றாள்.

தேவிகா, வீட்டின் பின்புறமாய் இருந்த ஸ்டோர் ரூமை நோக்கிச் சென்றாள்.

வெளிப்பக்கமாய் தாள் போடப்பட்டிருந்தது.

திறந்து கொண்டு உள்ளே சென்றாள். ஒரு பாயில் உடம்பை குறுக்கிக் கொண்டு, வாய் பிளந்தபடி நிச்சலனமாய் உறங்கிக் கொண்டிருந்த அனுவைப் பார்த்ததும்... குரல் வளையை யாரோ இறுக்கி பிடிப்பது போல் இருந்தது.

'யூ நீட் செக்யூரிட்டி இன் யுவர் லைஃப்! அதே மாதிரி என் வாழ்க்கைய கேர்புல்லா அமைச்சுக்க... நான்தான் புத்திசாலித்தனமா நடந்துக்கணும்! அவரவர்க்கு எது வேணும், எது வேணாங்கறது அவங்கவங்களுக்குத்தான் தெரியும். எனக்கு என்ன வேணும்ங்கறது எனக்குத்தான் தெரியும். நான் உங்க விஷயத்திலே தலையிட்டதில்லே. அதே மாதிரி என் விஷயத்திலேயும் யாரும் தலையிடாதீங்க... அது எனக்குப் பிடிக்கலே!' மனதில் தோன்றுவதை யாருக்கும் பயப்படாமல், புத்திசாலித்தனமாய், பளிச்சென்று பேசிய அனுவின் குரல் இப்போதும் காதிற்குள் ஒலித்துக் கொண்டே யிருந்தது.

தேவிகா தங்கையின் அருகே அமர்ந்தாள். அன்பாய் அவள் முகத்தை வருடிக் கொடுத்தாள்.

'படிப்பு, பதவி, அறிவு, அழகு இவை அத்தனையும் உன் வசமிருக்க... யாராலேயும் உன்னை தோற்கடிக்க முடியாமல்... கம்பீரமாய் வளைய வந்தாயே அனு... ஆனால் காதல் என்கிற மூன்றெழுத்து அத்தனையும் உன்னிடமிருந்து பறித்து மூலையில் வீசியெறிந்து விட்டதே! உன்னை கஷ்டப்பட்டு வளர்த்து ஆளாக்கி என்ன பயன்? மறுபடி குழந்தை பிராயத்திற்கே போய்விட்டாயே...! இருட்டுக்குள் விழுந்து விட்டாயே... மறுபடி எப்போது

வெளிச்சத்திற்கு வரப்போகிறாய்?'' தேவிகாவின் கன்னம் தாண்டி கண்ணீர் வழிந்தது.

நிகழ்ச்சி இனிதே முடிந்தது. வந்தவர்கள் அனைவரும் சென்று விட்டிருந்தனர்.

அப்போதுதான் உறக்கம் கலைந்து எழுந்து வந்தாள் அனு. அதுவும் மல்லிகா எழுப்பவில்லை என்றால் நாளை வரை உறங்கிக் கொண்டுதான் இருந்திருப்பாள்.

அதுவரை அமைதியாய் இருந்த புனிதா அனுவைப் பார்த்ததும் அடக்கி வைத்திருந்த கோபமெல்லாம் பீறிட்டு எழ... தலையில் சூடியிருந்த பூவையெல்லாம் பிய்த்தெறிந்து கழுத்திலிருந்த மாலையை கழற்றி அவள் மீது வீசியெறிந்தாள்.

திடுக்கிட்டாலும் தன் மீது மாலை வந்து விழுந்ததைப் பார்த்து மகிழ்ந்தாள்.

''ஹை... மாலை...!''

''ராட்சசி... எதுக்குடி இந்த வீட்லே எனக்கு அக்காவா வந்துப் பொறந்தே? உன்னால... உன்னாலதான் எனக்கு இப்படியொரு வாழ்க்கை அமைஞ்சது?'' அவள் தோளைக் குலுக்கி கேட்டாள்.

''விடுடி... அம்மா தூக்கம் தூக்கமா வருது.. சாப்பாடு வேணும்!'' கைகளை அகற்றினாள்.

''நல்லா கொட்டிக்க... சனியனே எதுக்குடி இன்னும் உயிரோட இருந்து எங்க உயிரை வாங்கறே? அன்னைக்கே ஒரேயடியா செத்துப் போக வேண்டியதுதானே?''

''நீ செத்துப்போ... நான் ஏன் செத்துப் போகணும்? அம்மா பாரும்மா... இந்த புனிதாவை?''

''புனிதா... என்னம்மா இது? அவளை ஏன் திட்டிக்கிட்டு இருக்கே?'' அம்மா அவளை விலக்கினாள்.



''திட்டாம? என் வயிறு எரியுதும்மா! இவளாலதானே எனக்கு இப்படியொரு வாழ்க்கை?''

''உனக்கு இப்படியாவது ஒரு வாழ்க்கை அமைஞ்சதே? ஆனா, அனுவுக்கு அமைஞ்ச வாழ்க்கையைப் பார்த்தியா? உனக்கு இவ அக்காவாயிருக்கலாம்! ஆனா, மனசால அவ பச்சைக்குழந்தையா ஆகிட்டாளே...? அதைப் பார்த்துமா...உனக்கு அவமேல இரக்கம் உண்டாகலே? அவளைப் பார்த்தாலே உனக்கு அப்பவிருந்தே பிடிக்காது. அதனாலதான் அவளால தொந்தரவாயிருக்கு, இங்கே இருந்தா படிக்க முடியாதுன்னு சிதம்பரம் போய் ஹாஸ்டல்ல தங்கி படிச்சே! நீயே...அவளை ஒதுக்கினா, வெளியிலே உள்ளவங்க... அதைவிட கேவலமாயில்லே பார்ப்பாங்க?''

புனிதா மௌனமானாள்.

மல்லிகா உள்ளே போய்விட்டாள்.

சௌந்தரபாண்டி வாயே திறக்கவில்லை. புனிதா இருக்கிற மனநிலையில் எதை சொன்னாலும் தப்பாகத்தான் புரிந்து கொள்வாள் என்று அறிந்ததால்... அவரும் செருப்பை மாட்டிக் கொண்டு புறப்பட்டார்.

தனித்து விடப்பட்ட புனிதா அனுவைத் திரும்பிப் பார்த்தாள்.

கையை கன்னத்தில் தாங்கிக் கொண்டு ஒரு ஓரமாய் உம்மென்று முகத்தை வைத்துக் கொண்டு அமர்ந்திருந்தவளைப் பார்த்ததும் பரிதாபம் ஏற்பட்டது.

''அனு...''

''......''

''அனு... என் மேல கோபமா?''

''......''

''ஏதோ கோபத்துல பேசிட்டேன். என் நிலைமையில நீயிருந்தாலும் நீயும் கோபப்பட்டிருப்பே. ஆனா உன் நிலைமைய

நினைச்சுப் பார்க்காம கோபப்பட்டுட்டேன். ஸாரி... வெரி ஸாரி அனு!'' என்றபடி அவள் கையை அன்பாய் பற்றிக் கொண்டாள்.

''நோ... மென்ஷன்!'' என்றாள் தெளிவாக.

திடீரென்று அந்த இடமே பிரகாசமானது போல் உணர்ந்தாள் புனிதா.

'அக்காவா... அக்காவா இங்கிலீஷில் பேசினாள்?'

''அக்கா... நீயா பேசினே?''

''ஏன் தப்பா பேசிட்டேனா?''

''அதுவா முக்கியம்? எப்படிக்கா... உனக்கு எல்லாமே நினைவுக்கு வந்துடுச்சா?'' என்றாள் ஆச்சர்யமாய்.

''நான்... பெரிசா இருந்தப்ப... நல்லா படிப்பேனாம். அப்பா சொன்னார்... இப்ப எனக்கு எதை படிச்சாலும் புரியவே மாட்டேங்குது'' என்றாள் குழந்தையாய்.

புனிதாவுக்கு சப்பென்றாகிவிட்டது.

**தி**ருத்தணியில் எளிமையாய் திருமணம்!

உறவினர்கள் அத்தனை பேரும் திருமணத்திற்கு வந்திருந்தனர். அதனால் அனுவை யார் வீட்டிலும் விட்டுட்டு போக முடியாத சூழ்நிலை. உடன் அழைத்தும் செல்ல முடியாது.

வேறு வழியின்றி காபியில் இரண்டு தூக்க மாத்திரைகளைப் போட்டு அவளை குடிக்க வைத்தாள் மல்லிகா.

''இப்படி அடிக்கடி தூக்க மாத்திரை தராதே மல்லிகா! ஏற்கனவே அனு ரொம்ப வீக்காயிருக்கா. இதுவே பழகிடுச்சின்னா... நரம்புத் தளர்ச்சி வந்துவிடும். கை காலெல்லாம் நடுங்க ஆரம்பிச்சிடும்'' என்றார் செளந்தரபாண்டியன்.

''இப்ப... இதைத்தவிர வேற வழியே தெரியலேங்க...''



''சரி... சரி... நேரமாகுது... கிளம்பு! நாம வர்ற வரைக்கும் விழிக்காம இருந்தா சரி! வெளியே பூட்டிடு...'' என்று நினைவுப் படுத்தினார்.

அனைவரும் புறப்பட்டுச் சென்றனர்.

அனு... ஏதும் அறியாமல்... கட்டாய உறக்கத்தில் ஆட்பட்டிருந்தாள்.

திருமணம் நல்லபடி நடந்து முடிந்தது. காலை உணவு. மதிய உணவு என்று எல்லாம் முடிந்தபின் சென்னைக்குக் கிளம்பி வீடு வந்து சேர்ந்தபோது இரவாகி விட்டிருந்தது.

நல்லவேளை... இவர்கள் கதவு திறக்கும் சப்தம் கேட்டுதான் கண்விழித்தாள் அனு.

''எங்கேம்மா போய்ட்டு வர்றே?''

''கோவிலுக்கு'' என்று ஒற்றை வரியில் பதில் சொன்னாள் அவள் முகத்தை ஏறிட தைரியமின்றி.

''பசிக்குதும்மா!''

சட்டென நிமிர்ந்தாள். அவளுக்கு அப்போதுதான் உறைத்தது.

கிளம்புகிற அவசரத்தில் அவளுக்கு சாப்பிட எதுவும் கொடுக்காமல் காபி மட்டும் கொடுத்துவிட்டு சென்றிருந்தாள்.

''இதோ... இதோ... ஒரு நிமிஷம் பொறுத்துக்க கண்ணு'' கண்ணீர் மல்க... அவசர அவசரமாய் ஃப்ரிட்ஜிலிருந்த மாவை எடுத்து தோசை வார்த்து தந்தாள்.

''சாப்பிடு அனு!''

அவசரமாய் பிய்த்து வாயில் போட முனைந்தவள் நிறுத்திவிட்டு அம்மாவை கேட்டாள்.

''நீ சாப்பிட்டியாம்மா?''

அந்த கேள்வியில் கூனி குறுகிப் போனாள் மல்லிகா.

சௌந்தரபாண்டியன் அருகில் வந்தமர்ந்து அனுவிடமிருந்து தட்டை வாங்கி... அவரே விண்டு ஊட்ட முயன்றார்.

''ஐயே... போப்பா... நான் என்ன சின்னக் குழந்தையா? நானே சாப்பிட்டுக்கறேன்... குடு!'' என்று கூச்சத்துடன் தட்டை வாங்கிக் கொண்டாள் அனு.

பத்து வயது குழந்தைக்குரிய வெட்கம் அவள் முகத்தில் படிந்திருந்தது.

## 4

பருவத்தோடு மலர்ந்து வரும் காதல்-அது
பசியெடுத்த நினைவுகளின் நாடல்
பாவை மனம் தேடுவதோ கூடல்! அதில்
பாதி மனம் கொள்வதென்ன... ஊடல்?

**அ**திரசப் பாகை அழகான வட்டமாக்கி கொதிக்கும் எண்ணெயில் போட்டாள் மல்லிகா. வெந்து சிவந்த அதிரசங்களை இடுக்கியால் ஒவ்வொன்றாய் எடுத்து பாத்திரத்தில் போட்டுக் கொண்டிருந்தாள் தேவிகா.

''ரொம்ப நாளா நம்ம வீட்டுக்கு வந்து ரெண்டு நாள் தங்கிட்டுப் போகணும்னு ஆசைப்பட்டேன். நல்லவேளை... இப்பவாவது சந்தர்ப்பம் கிடைச்சுதே!''

''அதென்ன... ரெண்டு நாள் கணக்கு? ஒரு பத்து நாள்தான் தங்கறது?'' என்றாள் மல்லிகா.

''ஆனாலும் ரொம்ப ஆசைம்மா உனக்கு! ஏதோ உன் மாப்பிள்ளை ஆபீஸ் விஷயமா ரெண்டு நாள் டூர்ல வெளியூர் போயிருக்கார். இந்த நேரம் பார்த்து பிள்ளைங்களுக்கும் ஸ்கூல் லீவு! எப்படியோ கெஞ்சி கேட்டு என் புருஷனை சம்மதிக்க வச்சது



பெரிசில்லே... என் மாமனார் மாமியாரை சம்மதிக்க வச்சதுதான் ரொம்ப பெரிய விஷயம். இந்த ரெண்டுநாள் சமையலறைக்குள்ளே வேலை செய்யணுமே என் மாமியார்? பெரிய மனசு பண்ணி அனுப்பி வச்சாங்களே... அதுதான் ஆச்சர்யம். இந்த ரெண்டு நாள் நிம்மதியா, சந்தோஷமா, உன் கை சமையலை சாப்பிட்டு தூங்கி... நேரத்தைப் போக்கணும்னு ஆசைம்மா!''

''ரெண்டு பிள்ளைங்களுக்கு அம்மா மாதிரியா பேசறே? சின்ன குழந்தை மாதிரி...'' அம்மா சிரித்தாள்.

''எனக்கு எத்தனை குழந்தை பிறந்தா என்னம்மா? நான் உனக்கு குழந்தை தானே? புனிதா எப்படி இருக்காளாம்? ஏதாவது தகவல் வந்ததா? அப்படி இப்படின்னு கல்யாணமாகி ஒரு மாசம் ஓடிப்போச்சு!''

''நல்லாயிருக்கா! போன வாரம்கூட அவ புருஷனோட நம்ம வீட்டுக்கு வந்திருந்தா! நல்லா சிரிச்சு பேசிட்டிருந்தா! எப்படியோ... அவளையும் கரையேத்தியாச்சு. கார்த்திக்கையும், மகேஷையும் கூப்பிட்டு அதிரசம் குடு. குழந்தைங்க சூடா சாப்பிடட்டும்!''

''நானே கொண்டு போய் கொடுத்திட்டு வர்றேன். அனு என்ன பண்றா? அவளுக்கும் ரெண்டு தட்டுல வைம்மா!''

''அவளுக்கு வேணாம்! என்னமோ தெரியலே... காலைலேர்ந்தே வயிறு வலிக்குதுன்னு சுருண்டு படுத்திட்டிருக்கா'' என்றாள் வருத்தமாய்.

தேவிகா தன் பிள்ளைகளுக்கு அதிரசம் கொடுத்துவிட்டு அனுவிடம் போனாள். முகம் சுருங்கியபடி கண்மூடி படுத்திருந்தாள்.

'பாவம்... வலிக்கிறது போலும்!'

போய்விட்டாள்.

''மகேஷ்... நாம இப்ப கிரிக்கெட் விளையாடலாமா?''

''வேணான்டா... மம்மி வெளியிலே போகக்கூடாதுன்னு சொல்லியிருக்காங்க!''

''வெளியிலே வேணாம்... இங்கேயே விளையாடுவோம்!'' என்றான் கார்த்திக்.

''இங்கேயா... இந்த சின்ன ஹால்லேயா?''

''அட்ஜஸ்ட் பண்ணிக்கலாம். அந்த பைத்தியத்தை எழுப்பி உள்ளே அனுப்பிடுவோம்!''

''நீ போய் எழுப்பு!''

''ஐயோ... நான் மாட்டேம்ப்பா! எனக்கு பயமாயிருக்கு. நீ போய் எழுப்பு!''

''எனக்கு மட்டும் பயமாயிருக்காதா? அது அங்கேயே இருக்கட்டும். நாம இப்படியே விளையாடுவோம்!''

''சரி'' என்றபடி இருவரும் கிரிக்கெட் விளையாடினர்.

பந்து இங்குமங்கும் தாறுமாறாய் ஓடி, ஒருமுறை அனு மீதே விழ... ''ஏய்... வெளியே போய் விளையாடுங்க மேலே வந்து விழுது பார்!'' என்றாள் அனு.

''விழறது தெரியுதில்லே... நீ உள்ளே போ!''

''அதைச் சொல்ல நீ யாருடா? இது எங்க வீடு...''

''இது எங்க மம்மி வீடு!''

''அம்மா... இந்த பசங்களைப் பாரும்மா!'' என்று உள் நோக்கி குரல் கொடுத்தாள் அனு.

''கார்த்திக், மகேஷ்... அமைதியாய் இருங்க...'' என்றாள் தேவிகா அங்கிருந்தபடியே.

''மம்மி... நாங்க ஒன்னும் பண்ணலே. இந்த லூஸ் தான்... எங்க மேலே எதை எதையோ தூக்கி எறியுது.''



''ஐயோ... பொய்... பொய்!'' என்றலறினாள் அனு.

''கார்த்திக்... பெரியவங்களை மரியாதைக் குறைவா பேசக் கூடாதுன்னு சொல்லியிருக்கேன்ல?'' என்றாள் எட்டிப் பார்த்து.

''ஸாரி... மம்மி! சித்தியை உள்ளே போகச் சொல்லேன்!''

''அனு... நீ உள்ளே போய்ப் படேன்!''

''ம்ஹும்... நான் இங்கேதான் படுப்பேன்!''

''எப்படியோ... போ!'' என்று சலித்துக் கொண்டு போய் விட்டாள்.

அனு அவர்களுக்கு முதுகை காட்டியபடி திரும்பிப் படுத்துக் கொண்டாள்.

இருவரும் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தனர். பத்து நிமிடம் சென்றிருக்கும்.

''டமார்'' என்ற சப்தம் கேட்க... துள்ளியெழுந்தாள் அனு.

கார்த்திக்கும், மகேஷும் செய்வதறியாது நின்றிருந்தனர்.

பேட்டில் டி.வி. ஒயர் மாட்டிக் கொண்டது அறியாமலேயே பேட்டை உயர்த்த.. ஒயரோடு இழுக்கப்பட்டு டேபிள் மீதிருந்த சின்ன போர்ட்டபிள் டி.வி. தரையில் கவிழ்ந்து சிதறியது.

''ஐய்யோ... டி.வி... டி.வி. போச்சு!'' அனு அலற அம்மாவும் தேவிகாவும் ஓடிவந்தனர்.

''கடவுளே... டி.வி. உடைஞ்சு போச்சே?'' மல்லிகா பதறினாள்.

''யார் இப்படி உடைச்சது?'' கரண்டியும் கையுமாய் விழிகளை உருட்டிய அம்மாவைப் பார்த்து இருவரும் நடுங்க... மகேஷ் சட்டென்று அனுப்பக்கமாய் விரலை நீட்டி, ''சித்திதாம்மா தூக்கிப் போட்டு உடைச்சாங்க. அப்பவிருந்தே... எங்களை வெளியே போய் விளையாடுங்கன்னு விரட்டிக்கிட்டிருந்தாங்க. நாங்க

போகலேன்னதும் கோபத்துல டி.வி.யை போட்டு உடைச்சிட்டாங்க'' என்று கூறிவிட்டு அழ ஆரம்பித்து விட்டான்.

அனு அவன் சொல்வதை முழுவதுமாய் புரிந்துக் கொள்ளாமல் பிரமித்து நின்றுவிட்டாள்.

''ஐயோ... அப்பா வந்தா அடிப்பாரே... திட்டுவாரே!'' என்றாள் கைகளை உதறி.

''அனு ஏன் டி.வி.ய உடைச்சே?''

''நா...னா?'' என்றாள் வாய்ப்பிளந்து.

''என்ன தேவிகா... பசங்கதான் பொய் சொல்றாங்கன்னா... நீயும் நம்பிக்கிட்டு...''

''இல்லே பாட்டி... சித்திதான்...!''

''அம்மா... என் பிள்ளைங்க வால்தனம் பண்றவங்கதான் ஒத்துக்கறேன். ஆனா, பொய் சொல்றவங்களில்லே. அப்படி நான் வளர்க்கவும் இல்லே!'' கோபத்துடன் சொன்னாள்.

''அப்ப... அனுதான் உடைச்சிட்டாங்கறியா?''

''ஏன் செய்ய மாட்டாளா என்ன? நல்லது கெட்டது எல்லாம் தெரிஞ்சா செய்யறா உம்பொண்ணு? புத்தி சுவாதீனமான பொண்ணு புத்தி கெட்டத்தனமாதான் பண்ணுவா? இல்லாமலா தெருவில போகிற ஊறுகாய் விக்கிறவனை எல்லாம் வீட்டுக்குள்ளே கூப்பிட்டு...''

''தேவிகா... நிறுத்து! என்ன பேசறோம்னு புரியாம பேசாதே! எதுக்கு எதை முடிச்சிப் போட்டு பேசறே? அனு பைத்தியம்தான். கூடப் பொறந்தவ நீயே சொல்லிட்டே! பெத்தவ நானும் ஒத்துக்கறேன். ஆனா, அவ பொய் சொல்ல மாட்டா... உன் பிள்ளைங்கதான் தப்பு பண்ணிட்டு பழியை அவமேல போடறாங்க!'' கண்ணீர் வழிய படபடவென பேசினாள்.



''அம்மா... இப்ப புரிஞ்சு போச்சும்மா! சுத்தி வளைச்சி ஏன் பேசறே? நேரடியாதான் சொல்லேன்... வீட்டை விட்டு முதல்ல வெளியே போங்கன்னு... டேய் கிளம்புங்கடா!'' அழுகை முட்டிக் கொண்டு வந்தது.

''ஏண்டி நான் இப்ப என்ன சொல்லிட்டேன்னு...?''

''வேணாம்... நீ ஒண்ணும் சொல்ல வேணாம். இதுக்கு மேலே இங்கிருக்க... நான் ஒண்ணும் மரக்கட்டை இல்லேம்மா! உம் பொண்ணு சாதாரண பைத்தியம் இல்லேம்மா... காரியப் பைத்தியம். நீயும் அவளை நம்பிக்கிட்டு... தலை மேல தூக்கி வச்சுக்கிட்டு ஆடு. நாங்க வர்றோம். இன்னும் கொஞ்ச நேரம் இங்கேயிருந்தாலும் உன் பொண்ணு வீட்டையே கொளுத்தி விட்டுட்டு பழியை எங்க மேலே போட்டாலும் போடுவா! அம்மா வீடாச்சேன்னு பாசத்தோட வந்தா... பழியை சுமத்தி அனுப்பறீங்களே!'' முகத்தை புடவைத் தலைப்பால் அழுந்த துடைத்துக் கொண்டு வெளியேற.. மல்லிகா வாயடைத்துப் போனாள்.

தேவிகா தெருவில் இறங்கிய அதே நேரம் சௌந்தரபாண்டியன் எதிரே வந்து கொண்டிருந்தார்.

''என்னம்மா... எங்கே கிளம்பிட்டே?''

அவ்வளவுதான்! தெருவென்றும் பாராது தேவிகா அழுதபடி எல்லாவற்றையும் கூறிவிட்டு, ''வாங்கடா போகலாம்'' என்று நகர, ''இரும்மா... அவசரப்படாதே! வா வீட்டுக்கு!''

''இல்லேப்பா... வற்புறுத்தாதீங்க... மனசு சரியில்லே...'' என்று பிடிவாதமாய் புறப்பட்டு விட்டாள்.

சௌந்தரபாண்டியன் ஆத்திரத்துடன் வீட்டிற்குள் நுழைந்தார்.

அவரைப் பார்த்ததும் மல்லிகா, ''பாருங்க... தேவிகா...'' என்று ஆரம்பித்தவளை கைநீட்டி தடுத்து... ''தெரியும். நீ ஒண்ணும் சொல்ல வேண்டாம்!'' என்றவர் இடுப்பிலிருந்த பெல்ட்டை உருவி, ''ஏய் அனு இப்படி வா!''

அவரைப் பார்த்து பயந்த அனு... "இல்லேப்பா... நான் இல்லேப்பா...!" என்று அம்மா பின்னால் பதுங்க முயன்றாள்.

அவளை இழுத்து முன்னால் நிறுத்தி பளாரென அறைந்தார்.

"ஐயோ... என்ன நீங்க... உண்மை தெரியாம அவளை அடிக்கிறீங்க?" பதறி வந்து மகளை மறைத்தாள்.

"மல்லிகா... மரியாதையா நகர்ந்து போய்டு! எனக்குத் தெரியும்... என்னைக்காவது ஒருநாள் டி.வி.க்கு இவளால்தான் கண்டம் வரும்னு! அவளே சொன்னவதானே? டி.வி.ய தூக்கிப் போட்டு உடைக்கப் போறேன்னு! சொன்னபடி செஞ்சிட்டா இல்லே? எங்கேர்ந்து வரும் பொட்டைப் பிள்ளைக்கு இவ்வளவு ஆணவம்?" மல்லிகாவை இழுத்து தள்ளிவிட்டு பெல்ட்டால் விளாசித் தள்ளினார்.

அனு அலறக்கூட முடியாமல் அடுத்தடுத்து விழுந்த அடியில் சுருண்டுப் போனாள் புழுவை மாதிரி.

அன்றிரவு யாருமே சாப்பிடவில்லை.

வீட்டில் அசாத்திய நிசப்தம் சூழ்ந்திருந்தது.

மல்லிகா மகளை கட்டிக்கொண்டு அழுதாள்.

மூவரும் எப்போது தூங்கினார்களோ?

ஆனால் விடிந்த போது...!

அனுவைக் காணவில்லை.

பதறிப்போய் வீடு முழுக்கத் தேடினர். தண்ணீர் தொட்டியில் இறங்கிக்கூட பார்த்தார் சௌந்தரபாண்டியன். இல்லை.

"இனி அடிச்சா... வீட்லேயே இருக்க மாட்டேன்!" அனு அன்று சொன்னது நினைவிற்கு வர... நொந்து போனார்.



"அவசரப்பட்டுட்டீங்களே! என் பொண்ணு மேல அபாண்டமா பழிய சுமத்தி அடிச்சு துவைச்சு அனுப்பிட்டீங்களே... ஐயோ... அவளை எங்கேன்னு போய் தேடுவோம்?" கதறினாள் மல்லிகா.

சௌந்தரபாண்டியன் தன் தவறை உணர்ந்திருந்ததாலோ, என்னவோ, எதுவும் பேசாமல், ஆபிஸிற்கு லீவு போட்டுவிட்டு ஊர் முழுக்க தேடினார்.

கிடைக்கவேயில்லை!

முழுதாய் ஒரு நாள் ஓடிப்போக... வயிற்றில் புளியை கரைத்தது இருவருக்கும்.

அது புறநகர்ப் பகுதி!

இங்கொன்றும் அங்கொன்றுமாய் முளைத்திருந்த வீடுகள். அனு துவண்டு போய் ஒரு வீட்டின் சுவற்றில் சாய்ந்து அமர்ந்திருந்தாள். பசித்தது. வயிறும் கூட சேர்ந்து வலித்தது. அதனால் வெகுவாய் களைத்துப் போயிருந்தாள்.

"டேய்... சந்துரு!"

விறுக்கென திரும்பினாள் அனு.

"டேய் சந்துரு... ஓடாதே... நில்லு!" ஏழு வயது பையன் பின்னாடியே தன் கனமான உடம்பை தூக்கிக் கொண்டு மூச்சு வாங்க ஓடிக் கொண்டிருந்தாள் பெண்ணொருத்தி.

"சந்துரு... நிக்கப் போறியா இல்லையா?"

அனுவிற்கு நாடி நரம்பெல்லாம் துடித்தது. கைகள் நடுங்கின. உதடுகள் துடித்தன. விழிகளில் வெள்ளம்.

"ச..ந்..து..ரு!" உதடுகள் உச்சரித்தன.

"சந்துரு... நில்லுடா!" அந்தப் பெண் ஓடிக் கொண்டிருந்தாள்.

அனு விக்கி விக்கி அழ ஆரம்பித்தாள்.

அவள் அழுகுரல் கேட்டு அந்த வீட்டிலிருந்து நபர்கள் வெளியில் வந்தனர்.

''யாரும்மா நீ... ஏன் அழறே?'' வயதான பெண்மணி கேட்டாள்.

''சந்துரு... சந்துரு...'' என்றாள் அழுதபடி.

''அட... அனு... நீயா? நீ இங்கேயா இருக்கே? உன்னைத்தேடி உங்கம்மாவும், அப்பாவும் நேத்தெல்லாம் ஊர் முழுக்க அலைஞ்சாங்களே... நீ எப்படி இங்கே?'' ஆச்சர்யமாய் கேட்டார் அனு குடியிருக்கும் தெருவைச் சேர்ந்த சௌந்தரபாண்டி வயதொத்த பூவராகன். அந்த வீட்டின் உறவுக்காரர் அவர். ஏதோ வேலையாக அந்த வீட்டிற்கு வந்திருந்தார்.

''சந்துரு... சந்துரு...'' என்றாள் மறுபடி.

''சந்துருவா... யார் சந்துரு?'' என்றார் பூவராகன்.

''சந்துரு... சந்துரு யார்? தெரியலியே...'' என்றாள் குழப்பமாய் அனு.

''அதுசரி... கிளம்பு'' என்று ஆட்டோவில் அவளை அமர வைத்தார்.

இருவரும் பூவராகனுக்கு கைகூப்பி நன்றி செலுத்தினர்.

''இனிமேலாவது கவனமாய் பார்த்துக்குங்க! ஏதோ என் கண்ல பட்டதால... வீடு வந்து சேர்ந்தா... இதுவே காலிப் பசங்க கண்லபட்டிருந்தா? என்ன நடந்திருக்கும்?'' என்று கூறிவிட்டு போய் விட்டார்.

''அனு... ஏன்டி இப்படி பண்ணினே? ஏன் வீட்டை விட்டு போனே? உனக்கு ஏதாவதொன்று ஆகியிருந்தா... நாங்க உயிரோட இருப்போமாடி?'' என்றழுதாள் மல்லிகா.

''போ... என்னைப் பார்த்தா அப்பாவுக்கு பிடிக்கலே. எப்படி அடிச்சார்? அதாங், போய்ட்டேன்?''



''நீ ஏம்மா டி.வி.யை உடைச்சே? அதனாலதானே அப்பா கோவம் வந்து அடிச்சேன்?''

''நான்தான் உடைக்கலியே! கார்த்திக்கும் மகேஷும் தானே உடைச்சாங்க!'' என்றாள் அனு.

சௌந்தரபாண்டி மௌனமானார்.

''இனிமே அடிப்பியாப்பா?''

''ம்ஹூம்...அடிக்கவே மாட்டேன்!'' என்றார் அவள் தலையை வருடி.

''நிஜமா?''

''நிஜம்!''

''அப்ப சரி... இனி நான் வீட்டை விட்டு போக மாட்டேன் என்ன?'' என்றாள் பெரிய மனதுடன்!

## 5

**கண்கள் பார்த்த பார்வையிலே காதல் வந்தது**
**கால தேவன் வீதி வழி ஆசை வந்தது**
**உன்னைப் பார்த்தபோது புதுவாழ்க்கை வந்தது**
**உரிமையாக வேண்டும் என்று உறவும் வந்தது.**

உக்கிரத்துடன் கதிரவன் உச்சத்தில் இருந்த பகல் வேளையில்தான் கொடிய செய்தியை தாங்கி வந்த தந்தி வந்திருந்தது.

ஞாயிற்றுக் கிழமை என்றதால் சௌந்தரபாண்டியன் வீட்டில்தான் இருந்தார். படித்ததும் வெகுவாய் கலங்கிப் போனார்.

அவரின் ஒரே தங்கை சுமங்கலி அமங்கலியாகிவிட்டாள். நோய்வாய்ப்பட்டிருந்த அவள் கணவர் அதிகாலையில் இறந்து விட்டாராம்.

அவரால் துக்கத்தில் பேசக் கூட முடியாமல் உள்ளுக்குள் குமுறிக் கொண்டிருந்தார்.

மல்லிகாதான் ஆக வேண்டியதை கவனித்தாள். உடனே தஞ்சாவூர் செல்ல தேவையான துணிமணிகளை எடுத்து வைத்துவிட்டு, அனுவிற்கும் துணிமணிகளை எடுத்து வைத்தாள்.

''அனுவுமா நம்முடன்?''

''இல்லேங்க..! ரெண்டு மூணு நாளைக்கு தானே? விஷ்ணு வீட்டில் விட்டு விட்டுப் போவோமே...!''

''விஷ்ணு வீட்டிலா? வேண்டாம். தேவிகா வீட்டில் விட்டுப் போகலாமே!''

''அவளுக்கு அனுமீது மட்டுமல்ல, நம்மீதும் இன்னும் கோபம் விஷ்ணுவே பார்த்துக்கட்டுமே! சொந்த தங்கை தானே? கஷ்ட நஷ்டத்தில் அவனும் பங்கெடுத்துக்கட்டும். அவளை வச்சுக்கிட்டு நாம எவ்வளவு அவஸ்தை பட்டுக்கிட்டு இருக்கிறோம்ங்கறதை புரிஞ்சுக்கட்டும். அவன் தலையில் கட்டிவிடப் போகிறோம் என்கிற பயத்தில்தானே அவன் பொண்டாட்டி... தனிக்குடித்தனம் போனாள்? இதுவே அவனுக்கோ அவளுக்கோ இப்படியொரு நிலைமை வந்திருந்தால்... நாம் இப்படியா நடந்துக் கொண்டிருப்போம்?''

''யாருக்குத்தான் சுயநலமில்லை சொல்லு? நேரமாகுது. இப்பவே கிளம்பினாதான் சரியாயிருக்கும்.''

''நீங்க பஸ் ஸ்டான்ட் போய் இருங்க... நான் இவளை விஷ்ணு வீட்டிலே விட்டுட்டு வந்திடறேன்'' என்று அனுவை அழைத்துக் கொண்டு புறப்பட்டாள்.

''**அ**னுவுக்கு சாப்பாடு கொடுத்திட்டியா ரேவதி?'' அக்கறையுடன் விசாரித்த கணவனை முறைத்தாள்.

''ஏன்... ஆபீஸ்க்கு லீவு போட்டுட்டு நீங்கதான் ஊட்டிவிட்டுப் போறது?''



''ஏய்... என்ன கிண்டலா?''

''ஆமா... ரொம்ப சந்தோஷமா இருக்கேன் பாருங்க. கிண்டலடிச்சு பொழுது போக்கறேன். உங்க தங்கச்சியோட பார்வையே சரியில்லே கிட்டே போகவே பயமாயிருக்கு. கொஞ்சம் ஏமாந்தா போதும்... குழந்தைய தூக்கி வச்சிட்டு கொஞ்சறா!''

''கொஞ்சினாக்கூட தப்பா?''

''பைத்தியம் எப்பவும் ஒரேமாதிரி மனநிலையிலா இருக்கும்? திடீர்னு குழந்தைய தூக்கிப் போட்டு மிதிச்சிட்டா என்ன பண்றது? இன்னும் ரெண்டுநாள் அவளை வச்சுக்கிட்டு நான் என்ன பண்ணப் போறேனோ?''

''ரெண்டு நாள் வச்சுக்கறதுக்கே அலுத்துக்கறியே... எங்கம்மா, அப்பா இத்தனை வருஷமா எவ்வளவு அவஸ்தைப் பட்டுருப்பாங்க?''

''பெத்தவங்களாச்சே... அவங்கதான் பட்டுத்தீரணும். எனக்கென்ன தலையெழுத்து? ஏதேது... விட்டா... நீங்கள் நிரந்தரமா உங்க தங்கச்சிய பாதுகாப்பீங்க போல... இதப்பாருங்க... இப்ப சொல்றதுதான்! இதுவே முதலும் கடைசியுமா இருக்கட்டும். இனி எந்த காரணத்தை முன்னிட்டும் இவ நம்ம வீட்டுக்கு வரக்கூடாது... சொல்லிட்டேன்!'' என்றாள் தீர்மானமாய் ரேவதி.

விஷ்ணுவால் அவள் பேச்சை மீறி ஒரு வார்த்தை பேசிவிட முடியுமா என்ன? மனைவியின் முந்தானைச் சிறையில் சிறைப்பட்டவனுக்கு ஏது விடுதலை?

அமைதியாய் அலுவலகம் கிளம்பிப் போனான்.

அண்ணியின் கடுமையான முகம் கண்டோ, அல்லது புதிய வீட்டின் சூழலோ.. எதுவோ ஒன்று... அனுவை அமைதிப்படுத்தி யிருந்தது. உட்கார்ந்த இடத்தை விட்டு அசையவில்லை. பசித்தாலும் வாயைத் திறக்கவில்லை.

காலிங் பெல் அலறியது.

ரேவதி சென்று கதவைத் திறந்தாள்.

வெங்கட்... ரேவதியின் அண்ணன்.

முகம் மலர்ந்து நிம்மதியாய் மூச்சுவிட்டாள்.

''வாங்கண்ணா... கடவுளாப் பார்த்துதான் உங்களை இங்கே அனுப்பியிருக்கார்!''

''என்னம்மா... என் தங்கைய பார்க்கக்கூட கடவுள்தான் அனுப்பணுமா என்ன?''

''அதில்லேண்ணா... நான் அவசரமா வெளியே கிளம்பணும். இந்த சனியனை பார்த்துக்க எப்பவும் ஒரு ஆள் தேவைப்படுமே... எப்படி போறதுன்னு யோசிச்சிட்டிருந்தேன்...''

''சேச்சே... என்ன ரேவதி குழந்தையைப் போய் சனியன் கினியன்னு...''

''நான் குழந்தையைச் சொல்லலே... அதோ... அந்த பைத்தியத்தை சொன்னேன்!''

அப்போதுதான் அனுவைப் பார்த்த வெங்கட்டின் கண்களில் பல்பு பளிச்சிட்டது.

''இவள் எங்கே இங்கே?''

ரேவதி சொன்னாள்.

''சரி நீ கிளம்பு! நீ வர்றவரைக்கும் நான் பார்த்துக்கறேன்!''

''கேக்க மறந்திட்டேன்... அண்ணி எப்படியிருக்காங்க?''

''அவளுக்கென்ன... ரொம்பவே நல்லாயிருக்கா... நீ கிளம்பு!''

ரேவதி குழந்தையைத் தூக்கிக் கொண்டு கிளம்பிவிட்டாள். தெருமுனையில் அவள் தலை மறைந்ததும் கதவை உட்பக்கமாய் தாழிட்டு விட்டு அவளருகே வந்தான்.



ஒருக்களித்து படுத்திருந்த அனுவின் சதை மடிப்புகள் அவனுள் கனன்று கொண்டிருந்த தீயை விசிறிவிட... திகுதிகுவென எரிந்தான்.

'அனு... என் அனு... ஒரு காலத்தில் உன்ன மறந்து, உறங்க மறந்து உன் நினைவாலேயே பித்துப் பிடித்து அலைந்திருக்கிறேன். வெறித்தனமாய் ஆனால் ஒருதலையாய் காதலித்தேன். ஆனால் என் காதலை எவ்வளவு அலட்சியமாய் மறுதலித்தாய்! ஆனால் ஆண்டவன் என்றாவது ஒரு நாள் என் மீது இரக்கம் காட்டுவான் என்று எனக்குத் தெரியும். ஆனால், இன்று உன்காதலை யாசிக்கப் போவதில்லை. அது எனக்குத் தேவையுமில்லை. நானே எடுத்துக் கொள்ளப் போகிறேன். உன் அனுமதியின்றி... உன்னை நான் பறித்துக் கொள்ளப் போகிறேன்.'

அவளுக்கு வெகு அருகில் சென்று அமர்ந்தான்.

''அனு..''

திடுக்கிட்டு திரும்பினாள்.

''நீயா? எப்ப வந்தே?''

''இப்பதான்...! தூங்கிட்டிருந்தியா?'' வாய் பேசினதே யொழிய அவன் கண்கள் அவளின் செழுமையான உடலை மேய்ந்தது.

''ம்...'' என்றபடி எழுந்தமர்ந்தவளின் முந்தானை விலக... வெங்கட்டின் விழிகள் அகன்றது.

''அனு... நாம ரெண்டு பேரும் விளையாடலாமா?''

''ம்ஹூம்... நீ பெரிய பையன்! உன் கூட விளையாட மாட்டேன்! அம்மா அடிக்கும்.''

அவன் மூளை குறுக்குத் தனமாய் யோசித்தது.

''ஐயய்யோ...!'' என்றலறினான் திடீரென்று.

''என்ன?''

''பல்லி...!''

''ஐயோ... பல்லியா? எங்கே?''

''இதோ... இந்தப்பக்கமா ஓடுச்சு...!' அவன் அவள் முதுகில் சுட்டிக்காட்டவும்... பயத்தில் அலறிக் கொண்டு குதித்தாள். புடவையை கழற்றி எறிந்தாள்.

''பயப்படாதே அனு... பல்லியை நான் எடுக்கறேன்'' என்றவன் அவளை இறுக்கமாய் அணைத்து முதுகில் கைவைத்தான்.

''சீக்கிரம் எடேன்... எனக்கு பயமாயிருக்கு!''

''எடுக்கத்தானே வந்திருக்கேன். என்னை கெட்டியா பிடிச்சுக்க!''

அனு அவனை இறுக அணைத்துக் கொண்டாள்.

அவளின் இதயஒலி அவன் நெஞ்சில் எதிரொலித்தது.

வெங்கட் மிருகமானான்.

கொஞ்சம் சீக்கிரமாகவே அலுவலகத்திலிருந்து திரும்பிய விஷ்ணு தன்னிடமிருந்த சாவியால் கதவைத் திறந்துக் கொண்டு நிதானமாய் உள்ளே நுழைந்தவன் கதறி அலறினான்.

''டேய்ய்ய்...!''

அவனை எதிர்பார்க்காத வெங்கட் நடுங்கிப் போனான்.

ஊர் திரும்பியிருந்தனர் சௌந்தரபாண்டியனும், மல்லிகாவும்.

விஷ்ணு நடந்த விஷயம் பற்றி மூச்சு விடவில்லை. நல்லவேளை... அனு தப்பித்தாள்! என்றாலும் கொஞ்சம் காலம் தாழ்த்தி வந்திருந்தால்...? நினைத்த போதே வியர்த்தது. இது விஷயமாய் முதன் முறையாய் மனைவியிடமும் சண்டை போட்டான்.

தங்கையின் கணவர் இறந்த துயரத்தோடு கண்மூடிப் படுத்திருந்தார் சௌந்தரபாண்டியன்.



வீட்டை சுத்தப்படுத்துவதில் மும்முரமாய் இருந்த அம்மாவின் பின்னாலேயே குட்டி போட்ட பூனையாய் அலைந்து கொண்டிருந்தாள்.

''எதுக்குடி என் பின்னாடியே அலையறே? ஒழுங்கா ஓரமா போய் உட்கார்!''

''ஊருக்குப் போனியே... எனக்கு என்ன வாங்கி வந்தே?''

''அது ஒண்ணுதான் குறைச்சல் இப்போ! மரியாதையா போய் வாயை மூடிக்கிட்டு உட்கார்!''

''கிழவி... கிழவி...'' உதட்டை பிதுக்கி முணுமுணுத்தாள்.

''ஆமா... எனக்கு வயசாகுது... நான் கிழவியாய்ட்டேன்.ஆனா உனக்கு வயசு ஏற... ஏற குழந்தையாய்ட்டே போறே? நாங்க உயிரோட இருக்கிற வரைக்கும்தான் உன்னை பார்த்துக்க முடியும்? அதுக்குப் பிறகு? நினைச்சாலே பகீர்னு இருக்குடி. கூடப் பொறந்த அண்ணன்... எப்படா ரெண்டு நாள் முடியும்னு காத்திருந்து விடிஞ்சதும் கொண்டு வந்து விட்டுட்டுப் போய்ட்டான். உன்னை யார்கிட்ட ஒப்படைச்சிட்டுப் போறது?'' விசனமாய் பேசினாள்.

''ஆமா... அண்ணன் மோசம்! அந்த வெங்கட் மாமா இல்லே? அவரைப் போட்டு அண்ணன் அடிச்சிடுச்சா... அந்த மாமாவுக்கு வாயெல்லாம் ரத்தம்!''

''என்னது விஷ்ணு வெங்கட்கிட்டே சண்டை போட்டானா? ஏன்?'' வேலை செய்வதை நிறுத்திவிட்டு அதிர்ச்சியுடன் கேட்டாள்.

''எனக்கு பல்லின்னா பயமாச்சே? என் மேல பல்லி விழுந்திடுச்சின்னு வெங்கட் மாமா...'' என்று நடந்தவைகளை கூறகூற... தலை முதல் கால் வரை நடுங்க கேட்டுக் கொண்டிருந்தாள் மல்லிகா.

கண்மூடி படுத்திருந்த சௌந்தரபாண்டியனும் கேட்டுக் கொண்டிருந்தார். அவர் உடம்பெங்கும் வியர்த்துக் கொட்டியது.

''அப்ப...உங்கண்ணி வீட்லே இல்லையா?'' நெஞ்சு பதற வினவினாள்.

''இல்லே... வெளியே போய்ட்டாங்க...!''

மல்லிகாவினால் நடந்தவைகளை யூகித்துக் கொள்ள முடிந்தது. வெங்கட் பற்றி அவள் நன்கறிவாள். ஐந்து வருடம் முன்பு அவன் அனுவின் கடைக்கண் பார்வைக்காக தவமிருந்தவன்.

''இன்றைய நிலையில் அனுவை அவன்...?'' யோசித்தாலே கண்களுக்குள் இருள் பரவியது.

''ஒரு வேளை... எல்லாம் நடந்து முடிந்திருக்குமோ?''

அதே எண்ணம் சௌந்தரபாண்டியன் மனசுக்குள்ளும் ஓட... நெஞ்சத்தின் மையப்பகுதியில் சுருக்கென வலி தைத்தது.

அடுத்த கணம்... ''மல்லிகா...!'' என்றலறியபடியே மார்பைப் பிடித்துக் கொண்டார்.

## 6

**இமைகள் கூட சுமைகளானால்...**
**விழிகளுக்கிங்கே ஏது பார்வை?**
**இறைவன் கூட பகைவனானால்...**
**உயிர்களுக்கிங்கே ஏது வாழ்க்கை?**

மயிரிழையில் உயிர் பிழைத்தார் என்பார்களே... அது போல்தான் உயிர் பிழைத்தார் சௌந்தரபாண்டியன். இதுவரை அவருக்கு ஹார்ட் அட்டாக் வந்ததில்லை. இதுதான் முதல்முறை. ஆனால் அதுவே சிவியராக வந்துவிட்டிருந்தது.

மிக கவனமாய் பார்த்துக் கொள்ள வேண்டும். அடுத்தமுறை அட்டாக் வந்தால் பிழைப்பது கடினம் என்று எச்சரித்து அனுப்பி வைத்தார் டாக்டர்.



மல்லிகா கதிகலங்கிப் போனாள்!

வேரோடு மரம் சாய்ந்துவிட்டால்... இலைகளுக்கேது வேறு போக்கிடம்?

அவரைப் பற்றிக் கொண்டு தானே இவர்கள் சுவாசித்துக் கொண்டிருக்கிறார்கள்?

கணவரை குழந்தையாய் பாதுகாக்க வேண்டிய கட்டாயம். இனி அவரை வேலைக்கு அனுப்புவதில் விருப்பமில்லை. மெடிக்கல் லீவு எழுதிக் கொடுத்து விட்டனர்.

ஒரு வாரப் படுக்கையில் சௌந்தரபாண்டியன் வெகுவாய் தளர்ந்து போனார்.

அவர் கவலையெல்லாம் மனைவி மீது கூட இல்லை அனு மீதுதான்!

தன் காலம் முடிந்த பிறகு மல்லிகா காப்பாற்றுவாள். அவளுக்குப் பிறகு அனுவின் கதி? இதையே எண்ணியெண்ணி உருகிப் போனார்.

கணவரையும் பார்த்துக் கொண்டு, அனுவையும் கண்காணித்துக் கொண்டு மல்லிகாவினால் முடியவில்லை. என்ன செய்வதென்றே புரியாமல் விஷ்ணுவை வரவழைத்துப் பேசினாள்.

''என்னால் முடியலே விஷ்ணு? அனுவை கொஞ்ச நாளைக்கு உன் வீட்ல...''

அவள் முடிக்கவில்லை... அதற்குள் இடைமறித்தான் விஷ்ணு.

''என்னம்மா... புரியாமப் பேசறே? அனுவை பார்த்துக் கணும்னா... நான் ஆபீஸ்க்கு லீவு போட்டுட்டு வீட்டோடதான் உட்காரணும். ஏதோ... அன்னைக்கு கடவுள் புண்ணியத்துல அவளுக்கு நேரவிருந்த பெரிய பழியிலிருந்து காப்பாத்தினேன். நாளைக்கு ஏதோவொன்னு ஆகிப் போச்சுன்னா... என் தலைய இல்லே உருட்டுவீங்க?'' என்றான் கோபமாய்.

''ஆளாளுக்கு இப்படி பேசினா எப்படி விஷ்ணு? அனு உன் தங்கை அதை மறந்திடாதே! அவளை காப்பாத்தற பொறுப்பு உனக்கும் இருக்கு!''

''என்னால முடியாதும்மா!'' என்றான் விறைப்பாய்.

''அப்ப இதுக்கு என்னதான் வழி?''

''அவளை பழையபடி ஹாஸ்பிடல்ல விட்டுட்டு வாங்க. அதை தவிர வேற வழியே இல்லை!''

''வி...ஷ்...ணு!''

''அனுவுக்கு பாதுகாப்பான இடம் அதைத்தவிர வேற எதுவும் இல்லை. யோசிச்சுப் பார்த்தா நான் சொல்றது சரின்னு உனக்கே புரியும். அனு தெளிவா பேசறதால... ஹாஸ்பிடல்ல சேர்த்துக்கறது கஷ்டம்தான். நான் வேணும்னா நம்ம ஏரியா எம்.பி.கிட்டேயே ஒரு ரெக்கமென்ட் லெட்டர் வாங்கி தர்றேன். அதை காட்டி சேர்த்துடலாம். யோசிச்சு நல்ல பதிலா சொல்லு. நாளைக்கு வர்றேன்...நானே போய் அவளை விட்டுட்டு வர்றேன்!''

விஷ்ணு போனபின் அதே யோசனையாய் இருந்தாள். சௌந்தரபாண்டியனுக்கு அதில் விருப்பமில்லை.

''வேணாம் மல்லிகா... அனு இங்கேயே இருக்கட்டும் அவளை ஹாஸ்பிடலுக்கு அனுப்பாதே!''

''இல்லேங்க... அவ நினைச்சா வீட்டை விட்டு ஓடிடறா! அவபின்னாடியே அலைஞ்சிட்டிருக்க என் உடம்புல தெம்பு இல்லேங்க. உங்களுக்கு நல்லா குணமாகட்டும் அப்புறம் அழைச்சிட்டு வந்திடலாம்!''

''என்னமோ மல்லிகா... எனக்கென்னமோ கொஞ்சமும் இஷ்டமில்லே!''

''நடக்கறதெல்லாம் நம்ம விருப்பப்படியா நடக்குது? மனசை கல்லாக்கிக்கறதை தவிர வேற வழி தெரியலேங்க!'' என்றாள் பெருமூச்சு விட்டபடி.



ஜாலியாய் அண்ணனுடன் ஆட்டோவில் பயணித்துக் கொண்டிருந்த அனு சிறுகுழந்தையாய் வெளியே வேடிக்கைப் பார்த்துக் கொண்டு வந்ததில் முகம் சந்தோஷத்தில் அகன்றிருந்தது.

''அண்ணா... அங்கே பாரேன் மாடு!''

ஆட்டோ டிரைவர் திரும்பி அவர்களை விநோதமாய்ப் பார்த்தான்.

''ஏய்... வாயை மூடிக்கிட்டு சும்மா வரப்போறியா இல்லையா?'' விஷ்ணு அதட்டினான்.

ஆனாலும், அனு தன் சேட்டைகளை விடவில்லை. அவனும் விட்டு விட்டான்.

தங்கையை நினைத்தால் ஒரு பக்கம் பாவமாக இருந்தது.

'அனு எப்பேர்ப்பட்ட புத்திசாலி? அவள் கம்பீரமாய் நடந்து செல்லும் அழகைப் பார்த்து நானே எவ்வளவு பெருமைப்பட்டிருக்கிறேன்? அனு என் தங்கை என்று சொல்லிக் கொள்வதில் எவ்வளவு பெருமிதப்பட்டிருக்கிறேன்? உனக்கென்று ஒரு தனித்துவம் இருந்ததே அனு? அத்தனையும் எங்கே? இன்று எங்களுக்குள் உன்னை தனித்து, ஒதுக்கி விடுவதில் எங்களுக்குள் போட்டி ஏற்படுவதை தடுக்க முடியவில்லையே! ஸாரி... அனு... என்னை மன்னித்துவிடு! உன்னை பாதுகாக்க என்னால் முடியாது. எனக்கென்று ஒரு குடும்பம், சுற்றம் உருவாகிவிட்ட பின்னால்... உடன்பிறப்புக்களை மூன்றாம் மனிதர்களாய் நினைக்க வேண்டிய கட்டாயம்! சுயநலமாய் இன்று சிந்திக்காமல் போனால்... நாளை என் குழந்தைகளின் வாழ்க்கை கேள்விக்குறியாகி போய் விடும்! எனக்கு உன்னைவிட என் குழந்தைகள் முக்கியம். உன்னால் புனிதாவுக்கு ஏற்பட்ட வாழ்க்கையைப் போல் என் குழந்தைகளுக்கும் அடிமட்ட வாழ்க்கை உருவாக விடமாட்டேன். அதற்காக என் இதயத்தை நான் இரும்பாக்கி கொண்டு விட்டேன். ஸாரி... அனு!' விஷ்ணு பரிவுடன் தங்கையின் தலையை வருடிக் கொடுத்தான்.

''என்னண்ணா?''

''ஒண்ணுமில்லே!'' என்று பெருமூச்சு விட்டான்.

''எப்படியிருந்தவள்... இப்படியாகி விட்டாள்?''

சந்தன நிறம்... கோதுமை நிறத்திற்கு மாறிவிட்டது. அடர்த்தியான, இடுப்பு வரை நீண்டிருந்த கூந்தலை அனு தளர்வாய் பின்னி காதோரம் ஒரு ரோஜாவை செருகுவதே ஒரு கவிதைதான். இப்போது ஏதோ அவசரத்திற்கு பின்னி ரப்பர் பான்ட் போட்டு சுருட்டி வைத்துவிட்டதில் அலங்கோலம் தெரிந்தது. வாயைப் பிளந்தபடி அங்குமிங்கும் பார்த்து சந்தோஷக் கூக்குரல் எழுப்புவது கூட பயமாயிருக்கிறது. இத்தனைக்கும் அனு சங்கீதமும் பயின்றவள்தான். பராமரிப்பின்றி நீண்டு வளர்ந்திருந்த நகத்தில் அழுக்கு படிந்து போயிருந்தது. அனுவுக்கு காட்டன் புடவைகள் மட்டும்தான் பிடிக்கும் மடிப்பு கலையாமல், லாவகமாய் அவள் புடவை உடுத்தும் அழகே தனி! இப்போது அவள் அணிந்திருந்த பாலியஸ்டர் புடவை... ஏனோ தானோவென்று மேனியில் கிடந்தது.

ஆட்டோ கீழ்ப்பாக்கம் மெண்ட்டல் ஹாஸ்பிடலில் நின்றது.

''இறங்கு அனு!''

இறங்கிய அனு சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு பயந்தாள். விழிகள் பீதியில் மருண்டன.

''அண்ணா... வேணாம்... இங்கே வேணாம். நாம போயிடலாம்! வா...!'' கையைப் பிடித்திழுத்தாள்.

''ப்ச்... முரண்டு பண்ணாம வரணும்... வா!'' அதட்டினான்.

''நான் வரலை.. இங்கே நான் வரமாட்டேன், உள்ளே நிறைய பைத்தியமிருக்கு... என்னை அடிக்கிறாங்க.. கடிக்கிறாங்க... நான் வரலேண்ணா..!'' அனு சின்னக் குழந்தையாய் தேம்பி தேம்பி அழுதாள்.

''பாரு அனு! நான் உனக்கு நிறைய சாக்லேட், பிஸ்கட்டெல்லாம் வாங்கித் தருவேனாம். ஒழுங்கா இருந்தியானா... சாயந்திரமே வந்து



கூட்டிக்கிட்டுப் போவேன். இல்லேன்னா... உன்னை கூட்டிக்கிட்டே போக மாட்டேன், என்ன சொல்றே?''

''ஆனாலும் எனக்கு பயமாயிக்கே!?''

''பயப்படாதே... உன்னை யாரும் ஒண்ணும் பண்ணாம பார்த்துக்கச் சொல்றேன்... என்ன?''

''சரி'' என்றாள் அரைமனதாய்.

''சாயந்திரம் என்னைக் கூட்டிட்டுப் போய்டுவேல்ல?''

''கண்டிப்பா!'' என்றான் பொய்யாய்.

எம்.பி.யின் சிபாரிசு கடிதத்தோடு அனு இரண்டாவது முறையாக அந்த ஹாஸ்பிடலின் உள்ளே நுழைந்தாள்.

விஷ்ணு ஊமையாய் அழுதபடி வீடு திரும்பிவிட்டான்.

**நா**ன்கைந்து நாட்கள் விரைந்தது.

அனு ஒரு மூலையில் அமைதியாய் அமர்ந்திருந்தாள். அந்த இடம், சூழ்நிலை, இரைச்சல் எதுவுமே அவளுக்குப் பிடிக்கவில்லை. மண்டைக்குள் இரைச்சலாய் இருந்தது. யாரைப் பார்த்தாலும் கோபம் வந்தது. கண்ணில்படும் பொருட்களை எல்லாம் தூக்கிப் போட்டு உடைக்க வேண்டும்போல் ஆத்திரம் வந்தது.

''ஏய்...ஏய்...'' பரிதாபமாய் குரல் எழுப்பியபடி முப்பத்தைந்து வயது மதிக்கத்தக்க பெண்ணொருத்தி அனுவின் கையைத் தொட்டு சீண்டினாள்.

''எ...என்ன?''

''என் குழந்தைய பார்த்தியா?''

''இல்லையே!''

''பணம் வச்சிருந்தேனே நிறைய..! [illegible]

சென்னை மாவட்ட மைய நூலகம் 32967 5009089 கொளத்தூர், சென்னை - 99.

''இல்லையே!''

''என் புருஷனை நீதானே வச்சிட்டிருக்கே?''

''இல்லையே!''

''இல்லே... நீதான்... நீதான் எல்லாத்தையும் எடுத்துக் கிட்டதுமில்லாம என் புருஷனையும் எடுத்துக்கிட்டே! எல்லாத்தையும் நீயே வச்சுக்க... ஆனா என் புருஷனை என்கிட்ட கொடுத்திடு... என் சந்துருவை எங்கிட்டே கொடுத்திடு!'' கண்கள் விரிய, அனுவின் தோள்களை பற்றி உலுக்கினாள். அந்த பெண்!

''ச..ந்..து..ரு!'' உணர்வுகள் விறைத்துக் கொண்டது.

''என் சந்துருவை கொடுத்துடுடி...''

''ச..ந்..து..ரு!'' இரத்தம் சூடேறியது.

''என் சந்துருவை என்கிட்டேயே திருப்பி கொடுத்திடு!''

அனு அவளை கோபமாய் நிமிர்ந்து பார்த்தாள்.

''சந்துரு... சந்துரு... என்னோட சந்துரு... நான் தரமாட்டேன்!''

''ஏய் குடுத்திடு... இல்லே கடிச்சிடுவேன்!''

''தரமாட்டேன் போ! நான் ஏன் தரணும்?'' அனு அவளை தள்ளிவிட்டாள்.

''குடுடி...!''

''ம்ஹூம்... தரமாட்டேன்!'' அனு என்னவோ இரண்டு கைகளில் மறைத்து வைத்திருப்பது போல் நெஞ்சில் குவித்து தரமறுத்தாள்.

அந்தப் பெண் ஆத்திரம் தாளாமல் இவள் கையை கடிக்க... மறுகணம்... அங்கிருந்த ஸ்டூலை அந்தப் பெண் மீது எறிந்தாள் அனு.

ரத்தம் ஏகமாய் கொட்ட மயங்கிப் போனாள்.

அனு சுவரோடு சுவராய் ஒட்டிக் கொண்டு நடுங்கியபடி அமர்ந்தாள்.



''நான் தரமாட்டேன். சந்துருவை நான் தரமாட்டேன்!''

உதடுகள் உச்சரித்துக் கொண்டேயிருந்தன.

அந்தப் பெண் அடிபட்ட செய்தி டாக்டருக்கு பரவ அவசர முதலுதவி தரப்பட்டது. முரட்டுத்தனமான அனுவின் நடவடிக்கையால் அனுவிற்கு ஷாக் ட்ரீட்மெண்ட் தரப்பட்டது.

**சௌ**ந்தர பாண்டியனுக்கு உறக்கம் வரவில்லை. தண்ணீர் லாரி வந்துவிட்டது போலும். பெண்களின் குரலும், குடங்களின் ஒலியும் கலந்து கேட்டது. சப்தம் கேட்டு மல்லிகாவும் எழுந்துவிட்டாள்.

உறங்காமல் விழித்திருந்த கணவரை ஆச்சர்யத்துடன் பார்த்து... அருகில் வந்தாள்.

''தூங்கலியா?''

''முடியலே மல்லிகா! என்னமோ தெரியலே... ஏதேதோ நினைவு! மனசுக்கு கஷ்டமாயிருக்கு... லேசா வலிக்கற மாதிரியும் இருக்கு!'' என்றார்.

வலியின் ஆரம்பத்திற்கான அறிகுறியோடு வியர்வை முத்துக்கள் உற்பத்தியாகின.

''ஐயோ...என்ன சொல்றீங்க?'' அடிவயிற்றில் பயம் பந்தாய் எழுந்தது.

''வலி..க்..கு..து!'' என்றபடி மார்பை பிடித்துக் கொண்டு முகம் சுருங்கினார்.

''ஐயோ... யாராவது இங்கே வாங்களேன்!'' அவள் அலறிய அலறலில் தண்ணீர் பிடிக்க வந்த பெண்கள் சடுதியில் குழுமிவிட்டனர்.

''இப்போதைக்கு எதுவும் சொல்றதுக்கில்லேம்மா! ஏற்கனவே சொன்னமாதிரி இரண்டாவது அட்டாக் முன்பைவிட அதிகமாக, சிவியராக வந்திருக்கு. முழுசா ஒருநாள் தாண்டினாதான் எதையும்

சொல்ல முடியும்!'' டாக்டர் கணவரின் ஆயுள் ரேகையை புட்டுப்புட்டு வைக்க உடைந்து போனாள் மல்லிகா!

அழக்கூட முடியவில்லை அவளால்! பிரமை பிடித்தது போலிருந்தது.

''எதற்கும்... உங்க பிள்ளைங்களை வரச்சொல்லிடுங்க.''

இடிந்துப் போய் அமர்ந்து விட்டாள்.

விஷ்ணு, தேவிகா, புனிதா அத்தனை பேரும் குழந்தைகள், கணவன் மனைவியோடு வந்து சேர்ந்தனர்.

சௌந்தரபாண்டியன் முனகினார்.

''அனு...அனுவைப் பார்க்கணும்!''

வேறு வழியின்றி விஷ்ணு அனுவை அழைத்து வந்தான்.

அனைவரையும் சைகையால் வெளியே அனுப்பிவிட்டு மகளை அருகில் அழைத்தார்.

கண்களில் வெள்ளம் பொங்கியது.

அனு இன்னும் கறுத்து, இளைத்து, எண்ணெய் காணா தலை பரட்டையாய்...

''அ...னு...!'' பேசவே சிரமப்பட்டார்.

ஆக்ஸிஜன் செலுத்திக் கொண்டிருப்பதால் மூக்கு வழியே டியூப் செருகப்பட்டிருந்ததை பயத்துடன் பார்த்தாள் அனு.

அவளுக்கு ஷாக் ட்ரீட்மெண்ட் தரப்பட்ட நினைவுதான் வந்தது.

'இப்படித்தானே எனக்கும் குழாயெல்லாம் செருகி வைத்திருந்தார்கள்? அப்பாவுக்கும் செருகி வைத்திருக்கிறார்களே! பாவம்... அப்பா எவ்வளவு கஷ்டப்படுவார்?'

''அ..னு! அம்மாகிட்டே...'' மூச்சு முட்டியது.



''இருப்பா... இதையெல்லாம் எடுத்திடறேன்... அப்புறம் பேசு!'' சட்டென ட்யூபை இழுத்துவிட்டு விட்டாள்.

சௌந்தரபாண்டியன் சுவாசத்திற்கு அலைந்து... துடித்து... சில கணங்களில் விழிகள் குத்திட்டு அனுவையேப் பார்க்க... நிரந்தரமாய் இவ்வுலகை விட்டு போய்விட்டார்.

''இப்ப பேசுப்பா... அங்கே எனக்கும் இப்படிதாம்பா... குழாயெல்லாம் செருகி... கஷ்டப்படுத்தினாங்க. வலிச்சது தெரியுமா? இனிமே அங்கெல்லாம் போக மாட்டேன். நான் உன் கூடவேதான் இருப்பேன்... என்ன?'' அனு அப்பாவை செல்லமாய் கட்டிப் பிடித்துக் கொண்டாள்.

''பேசுப்பா... ஏம்பா பேச மாட்டேங்கறே? அப்பா... அப்பா...!'' வெகுநேரம் அவர் உடலை போட்டு அசைத்துக் கொண்டிருந்தாள்... மற்றவர்கள் உள்ளே வரும்வரை...!

## 7

பார்வை எதிலோ படுகிறது! அது
பாவை மேனியைத் தொடுகிறது
ஆசை எதையோ தொடர்கிறது, அது
ஆனந்த வேதனை அடைகிறது.

''அக்கா... பசிக்குது... சாப்பாடு போடேன்!'' அனு பசியோடு, முகம் சிறுத்து தேவிகாவை, சமையலறைக்கே தேடிச் சென்று கேட்டாள்.

''சனியனே... அந்த இடத்தை விட்டு நகராதேன்னு சொல்லியிருக்கேனில்லே? இங்கேயெல்லாம் ஏன் வர்றே? போ... வெளியே போ!''

''பசிக்குதே!'' சிணுங்கினாள்.

''ஆமா... எமனாச்சே நீ? கல்லுமாதிரியிருந்த அப்பாவையே கொன்னு வாயிலே போட்டுக்கிட்டவளாச்சே? உனக்கு பேய் மாதிரி பசிக்கத்தான் செய்யும்!''

''நான் எப்ப அப்பாவை வாயிலே போட்டுக்கிட்டேன்? நீ இப்படியே திட்டிக்கிட்டிருந்தா... நான் இங்கேர்ந்து போய்டுவேன்!''

''அம்மா... தாயே! அந்த மாதிரி காரியமெல்லாம் பண்ணிடாதே! பசிச்சா கேக்கத் தெரியுது. வக்கணையா சாப்பிடத் தெரியுது. மீதியெல்லாம் சொன்னாலும் புரியாது.''

அனு முகத்தை தொங்கப் போட்டுக் கொண்டு அங்கிருந்து நகர்ந்தாள்.

''போ... எனக்கு சாப்பாடும் வேணாம். ஒண்ணும் வேணாம். நான் அம்மா வீட்டுக்குப் போறேன்.''

''ஆமா... இந்த விறைப்புல ஒண்ணும் குறைச்சலில்லே?''

''தேவிகா... என்ன இது? உன் தங்கை வீடு நெடுக நடமாடிக்கிட்டிருக்கா! பயமாயிருக்கு... அவளை ஒரு ஓரமாய் போய் உக்காரச் சொல்லு! பாரேன்... என்னை எப்படி முறைக்கிறா பார்!'' அங்கு வந்த தேவிகாவின் மாமியார் பங்கஜம் அனுவைப் பார்த்து நடுங்கினாள்.

''அவ... ஒண்ணும் செய்யமாட்டா அத்தை!''

''யாரு கண்டது? உங்கப்பா உசிரை பொசுக்குன்னு போக வச்சிடுவான்னு எதிர்பார்த்திருப்பீங்களா? உங்கம்மா தஞ்சாவூர்லேர்ந்து எப்ப வர்றாளாம்?''

''நாளை கழிச்சி வந்துடுவாங்க அத்தை!''

''அதுவரைக்கும் உசிரை கையிலே பிடிச்சிட்டிருக்கணுமா? கொல்லைப்புறம் மோட்டார் ரூம்ல தாராளமா ரெண்டு பேர் படுக்கிற அளவுக்கு. இடமிருக்கே... உன் தங்கச்சிய அங்கே தங்க வச்சிடு!''



''ச...சரிங்க அத்தை!''

தேவிகாவிற்கு இந்த ஆலோசனையில் விருப்பமில்லைதான், என்றாலும் அவள் தனிப்பட்ட கருத்திற்கு இங்கே மதிப்பில்லை. இது புகுந்த வீடு. கட்டளையிடுபவள் மாமியார். சொல்வதை செவி சாய்த்துதான் ஆகவேண்டும். அதுவும் பெற்ற தகப்பனையே கொன்ற ஒரு பைத்தியத்தை நான்கு நாட்கள் வீட்டில் தங்க வைக்க யாருக்குதான் மனசு வரும்?

கணவர் இறந்த அதிர்ச்சியிலிருந்து மீளாத மல்லிகாவை சடங்கு, சாஸ்திரம், சம்பிரதாயம் என்று சொல்லி தஞ்சாவூரிலிருக்கும் அவளின் நாத்தனார் வீட்டில் இரண்டு நாட்கள் தங்கிச் செல்ல வேண்டும் என்று உறவினர்கள் அழைத்து சென்றிருக்கிறார்கள்.

அனுவை யார் கவனித்துக் கொள்வது? விஷ்ணு வீட்டில் விடமுடியாது. வெங்கட் விஷயம் தேவிகாவிற்கும் தெரிந்திருந்ததால் அவளுக்கே அதில் விருப்பமில்லை. அப்பா இறந்த அதிர்ச்சியில் புனிதாவிற்கு அபார்ஷன் ஆகிவிட்டிருந்த தால்... அவளை கவனிக்கவே இன்னொரு ஆள் தேவை. வேறு வழியின்றி தேவிகா தன் வீட்டிற்கே அழைத்து வந்தாள். சொல்லப் போனால் ''பாவம் அனுவை யார் பார்த்துக் கொள்வது? நாலுநாள் தானே நம் வீட்டிற்கே அழைத்துச் செல்லலாம்!'' என்று முதலில் ஆலோசனை சொன்னவனே தேவிகாவின் கணவர் சுதாகர்தான்.

இரவு ஒரு மணி!

மோட்டார் ஓடுவதால் இரைச்சல் எரிச்சலாய் இருந்தது. அனுவிற்கு உறக்கம் வரவில்லை. கோபமாய் வந்தது. அழுகையாய் வந்தது. சுரங்கப்பாதை போன்றிருந்த அந்த அறை அவளுக்கு பிடிக்கவில்லை.

பசித்தது! ஆனால் சாப்பிடவில்லை. காலையிலிருந்தே ஒன்றும் சாப்பிடவில்லை. தேவிகாவும், மாமியாரும் திட்டின கோபம், இந்த அறையில் தங்க வைத்த கோபம், கார்த்திக்கும், மகேஷும் அவளை

தூங்க விடாமல், சிறுசிறு கற்களை பொறுக்கி வைத்துக் கொண்டு, மறைவில் இருந்து இவள் மீது ஒவ்வொரு கல்லாய் எறிந்து அழ வைத்ததில் தலைவலி வேறு.

அவளுக்கு அப்பாவையும், அம்மாவையும் பார்க்க வேண்டும் போலிருந்தது. அவர்கள் நினைவு எழுந்தவுடன் அழுகை வந்தது. ஒருக்களித்து படுத்துக் கொண்டு விசும்பிக் கொண்டிருந்தாள்.

''அனு... அழறியா என்ன?''

குரல்கேட்டு திடுக்கிட்டு திரும்பியவள் கண்களை விரித்தாள்.

சுதாகர் பாயில் அவளுக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்தான்.

''ம்...'' என்றாள்.

''ஏன் அழறே?''

''எனக்கு அம்மாவையும், அப்பாவையும் பார்க்கணும்!''

''அவ்வளவுதானே? என்னை உன்னோட அம்மாவா நினைச்சுக்க... கிட்டே வா...!''

''இல்லே... நீ அம்மா இல்லே... மாமா!''

''இல்லேம்மா... அனுன்னா எனக்கு ரொம்ப பிடிக்கும். அம்மாவுக்கும் உன்னை பிடிக்கும்தானே? அப்ப நானும் உங்கம்மா மாதிரிதானே?''

''அ...ஆமாம்!'' என்றாள் குழப்பமாய்.

''இப்ப... நான்தான் அம்மாவாம்! வா...என் மடியில் வந்து படுத்துக்க!''

அனு அவன் சொன்னபடி செய்தாள்.

அவன் அன்பாய் அவள் தலையை, முகத்தை, முதுகை வருடி, தட்டிக் கொடுக்க... அனுவுக்கு அம்மாவின் மார்பில் முகம் புதைத்துக் கொண்டிருக்கும் இதம்! அதனால் அவன் கைகள் எங்கெங்கோ



பயணிப்பதை மறுக்காமல் அனுமதித்தாள். தன்னை மறந்து கண்களை மூடினாள்.

அனுவின் சேலை பாயில் கிடந்தது. சுதாகரன் அவளை இறுக அணைத்து படுக்கையில் கிடத்தினான்.

''சே... என்ன மனுஷன்யா...நீ?''

தேவிகாவின் உஷ்ணக்குரலில் திடுக்கிட்டு கலைந்தான் சுதாகர்.

மனைவி பார்த்த பார்வையில் பஸ்பமாகிப் போனான்.

''என்னம்மா பாவம் பண்ணிட்டு வந்தே? இப்படியொரு பொண்ணை பெத்ததுக்கு ஒரு கல்லை பெத்திருந்தாலாவது உன் தாலியாவது நிலைச்சிருக்குமே!'' வந்ததும் வராததுமாய் தேவிகா அப்படி பேசவும் புருவம் உயர்த்தினாள், மல்லிகா.

''என்ன தேவிகா... உன்னை ரொம்ப படுத்திட்டாளா?'' அடிமேல் அடிபட்டிருந்த வேதனையில் குரல் நைந்து போய் வந்தது.

''ஆமாம்மா... படுத்துக்கிட்டா... என் புருஷனோட படுத்துக் கிட்டா!'' சொல்லிவிட்டு அழ ஆரம்பித்தாள்.

பதறிவிட்டாள் மல்லிகா.

''எ..என்ன சொல்றே?''

''இவ... எனக்கே சக்களத்தியா வந்திடுவா போலிருக்கும்மா!''

''பதறாதடி... புரியற மாதிரி சொல்லேன்!''

சொன்னாள்... எல்லாமே!

''அம்மா... எனக்கு சந்தேகமா இருக்கும்மா! அனு பைத்தியம் மாதிரி நடிக்கிறாளோன்னு சந்தேகமாயிருக்கு. அவளை ஒரு வார்த்தை திட்டினா... கோவிச்சுக்கத் தெரியுது. வீட்டைவிட்டு ஓடத் தெரியுது. ஆனா, அந்நிய ஆம்பளைங்க உடம்புல கைய வச்சா

மட்டும் எதிர்க்காம பேசாம இருக்காளே... அது ஏம்மா? அவளுக்கு ஆம்பளை சுகம் தேவைப்படுது!''

''தே..வி..கா!'' என்றாள் நடுங்கும் குரலில்.

''என் புருஷனைக் கேட்டா... எதுவும் அத்துமீறி நடக்கலேங்கறார். எனக்கு நம்பிக்கையில்லே. நீ உன்னோட ஒழுக்கமான பொண்ணை கேள்! அப்படி இப்படி நடந்ததான்னு? அப்புறம் வயிற்றை தள்ளிக்கிட்டு நின்னா... அதைவிட அசிங்கம் வேறெதுவும் இல்லேம்மா? இவளால எனக்கும், அவருக்கும் மனஸ்தாபம்! இவளாலேயே அப்பா நம்மளைவிட்டு போய்ட்டார். பேசாம...மனசாட்சியை கட்டிப் போட்டுட்டு... இவளுக்கு சாப்பாட்டுல விஷம் வச்சி கொன்னுடும்மா! குடும்ப மானமாவது மிஞ்சும். இல்லேன்னா...நாளைக்கு தெருவிலே போகிற எவனாவது இவளை தொட்டு... நாமதான் அசிங்கப்படணும்! இனிமே யாரையும் நம்பி, யார் வீட்டுக்கும் உன் பொண்ணை அனுப்பி வைக்காதே! அவ்வளவுதான் சொல்லுவேன்!'' மழையாய் பொழிந்து விட்டுப் போய் விட்டாள் தேவிகா.

மல்லிகா பீறிட்டு எழுந்த வேதனையோடு மகளைப் பார்த்தாள்.

'இவளா... இவளா நடிக்கிறாள்? இவளா ஆண் சுகத்துக்கு அலைகிறாள்? இவளையா கொல்லச் சொல்கிறாள்? இந்த குழந்தையையா? பைத்தியம் மாதிரி நடிப்பதால் இவளுக்கென்ன லாபம்?''

''அம்மா... ஏம்மா அழறே? பசிக்குதா?''

''......''

''எனக்கு பசிக்குதும்மா! அக்கா எனக்கு சாப்பாடே போடலே! நான் இனிமே உன்னைவிட்டு எங்கேயும் போகமாட்டேன். ஆஸ்பத்திரியிலே ஒரு பொம்பளை என்னை கடிச்சிட்டாம்மா... இதோ பாரேன்!''



கையை காண்பித்தாள். பற்கள் பதிந்து ரத்தம் கட்டிக் கொண்டிருந்தது.

''ஐயோ... என் கண்ணே!'' கட்டிப் பிடித்துக் கொண்டு அழுதாள்.

''அப்பாகிட்டே சொல்லி அவளை அடிக்கணும் அப்பா எப்பம்மா வருவார்?''

''உனக்கு என்ன பதிலைடி சொல்லுவேன்? பதில் வராத கேள்வி மட்டும்தான் உனக்கு கேட்க தெரியுமா? அதான்டி உன் எதிர்காலமே கேள்விக்குறியா இருக்கு!''

''ப்ச்... அழாதேம்மா... எனக்கும் அழுகையா வருது!''

''அனு... அனு.. நான் கேட்கறதுக்கு நீ ஒழுங்கா பதில் சொன்னா... அம்மா அழமாட்டேனாம். என்ன?''

''சரி...!''

''சுதாகரன் மாமா உன்னை என்ன பண்ணினார்?'' திக்கித் திணறி கேட்டாள்.

''மாமா ரொம்ப நல்லவரும்மா! என்னை அம்மாவா நினைச்சுக்கன்னு உன்னை மாதிரியே கட்டிபிடிச்சு முத்தம் கொடுத்தார்!''

''அ..அப்புறம்?'' நெஞ்சடைத்தது.

''எனக்கு தூக்கம் தூக்கமா வந்திச்சா... அப்படியே படுத்துக்கிட்டோம். அப்பதான் அக்கா வந்து மாமா கூட சண்டை போட்டிச்சி... என்னை அடிச்சது... அக்கா ரொம்ப மோசம்மா...!''

''வேற... எதுவும் நடக்கலே இல்லே?''

''பசிக்குதும்மா...!'' காலை உதறி சிணுங்க ஆரம்பித்தாள்.

''ஒரு காலத்திலே இந்த வீட்டுக்கே குலவிளக்கா இருந்தவடி நீ! இப்ப ஒவ்வொருத்தனும் உன்னை அணைக்க பார்க்கிறான்களேடி!

அந்த ஆபத்தை உணர்ற புத்தியையாவது கடவுள் உனக்கு கொடுக்கக் கூடாதா? எதுக்கு ஆண்டவன் கடைசி காலத்துல எனக்கு இப்படியொரு தண்டனையக் கொடுத்தான்? அதைவிட நோய் நொடின்னு வந்து செத்துப் போனாக்கூட விதிமேல பழிய போட்டுட்டு உன்னை வாரிகுடுத்துட்டு நிம்மதியா உட்கார்ந்துடுவேனே!''

''பதில் சொன்னா அழமாட்டேன்னு சொல்லிட்டு அழறியே! பசிக்குதும்மா!''

விபரீதம் புரியாமல் சிணுங்கும் மகளை வெறிக்கப் பார்த்தாள்.

'என் மகள்... புத்திசாலியான மகள் அனுராகினியா இவள்?'

## 8

அழகுக்கு அவளே ஆலயமோ? அவள்
ஆனந்த வானத்தின் ஓவியமோ?
எண்ணங்கள் அங்கே ஊர்வலமோ? என்னை
எதிர்கொள்ளும் பெண்மை போர்க்களமோ?

அனுராகினி குளித்து, உடைமாற்றி, முகத்தில் லேசாய் பவுடர் போட்டுவிட்டு செந்நிற ஸ்டிக்கர் பொட்டை புருவ மத்தியில் வைத்தாள். தளர்வாய் பின்னிய கூந்தலில் அம்மா முன்தினமே வாங்கி ஃப்ரிட்ஜ்ஜில் பத்திரப்படுத்தியிருந்த முல்லைச் சரத்தில் பாதி கட் பண்ணி சூடிக் கொண்டாள்.

சந்தனமும், சிவப்பும் கலந்த பட்டு சுரிதார், காதில் சின்ன சிவப்புக் கல் தோடு, கழுத்தில் ஆலிலை கிருஷ்ணன் டாலர் இணைத்த மெல்லிய செயின். இடது கையில் வாட்ச் வலது கையில் மெல்லிய ப்ரேஸ்லட்.



அனுராகினி தன்னை கண்ணாடி முன் நிறுத்தி ஒருமுறை பார்த்துக் கொண்டாள். இளரோஸ் நிற லிப்ஸ்டிக்கை உதட்டில் தீற்றிக் கொண்டிருந்தபோது... அம்மாவின் குரல் கேட்டது.

''அனு... நேரமாயாச்சு! கிளம்பலியா? மழை வர்றாமாதிரி இருக்கு. மறக்காம குடை எடுத்துக்க!''

''சரி...'' என்றவள் ஜன்னல் வழியே வானத்தைப் பார்த்தாள்.

நிஜம்தான்! அழுமூஞ்சி மாதிரி சோக கீதம் பாடத் தயாராய் இருந்தன கருமேகங்கள்.

''துளி..துளி... துளி துளி மழைத்துளி...

என்னை தொட தொட சிலிர்க்குது மலர்க்கொடி...''

என்று ராகத்துடன் பாடிக் கொண்டே பேக்கை எடுத்து மாட்டிக் கொண்டாள்.

''நான் வாழ்வது வேறொரு உலகம்.

அங்கு நீயின்றி எனக்கது நரகம்.

என்னை வாட்டுது வாலிப விரகம்.

கொஞ்சம் நீ அணைத்தால் அது விலகும்...

லல்லா... லல்லா... லல்லா... லல்லாலா...''

பாடிக் கொண்டிருந்தவளுக்கு சட்டென அவன் நினைவு வந்தது.

சந்திரகாந்த்! அவள் இதயத்தை திருடிய ஒரே ஆண் மகன்!

அவனை நினைத்தாலே... உடலெங்கும் புது ரத்தம் பாய்ந்தது போல் சூடேறியது.

'நான் அவரை இந்த கணம் நினைத்திருப்பது போல் அவர் என்னை நினைத்திருப்பாரா?' கேள்வி எழுந்த உடன் முகம் வாடியது.

'என்னை நினைக்க அவருக்கேது நேரம்? இதே ஊரில் இருக்கிறார் என்றுதான் பேரு! ஆனால் சந்தித்துக் கொள்வதென்னவோ பதினைந்து, இருபது நாட்களுக்கு ஒருமுறைதான். சிலசமயம் இரண்டு மாதம் கூட இடைவெளி விழும். போனாவது பண்ணுகிறானா? இரண்டு நாளைக்கு, மூன்று நாளைக்கு ஒருமுறை என்று டைம்டேபிள் போட்டு வைத்திருக்கிறான்.'

இவளுக்கும் தினசரி போன் பண்ண மனம் துடிக்கும். ஆனால், தயக்கம் தடுக்கும். ஆம்பிளை அவனே அடங்கி இருக்கும்போது... பெண்பிள்ளை எனக்கென்ன இவ்வளவு அவசரம்? என்று.

அனு பெருமூச்சு விட்டாள்.

எல்லா காதலர்களையும் போல் இவர் ஏன் இல்லை? என்னை பார்க்க வேண்டும், என்னிடம் பேச வேண்டும், என்னுடன் சினிமா, பார்க் என்று போக வேண்டும் என்று சந்துருவுக்கு ஏன் தோன்றவில்லை? ஒருவேளை... அவனுக்கு என் மேல் நிஜமான காதல் இல்லையோ? இந்த வயதுக்கே உரிய வெறும் ஈர்ப்பு மட்டும்தானா?

அனுவிற்கு தினசரி ஏழெட்டு முறை எழும் அதே சந்தேகம்... இன்றும் எழுந்தது.

இயலாததாகக் காணப்படும் ஒன்று எப்பொழுதும் உண்மையாக இருந்ததில்லை! தேவையில்லாத கேள்விகளை தினசரி நீரூற்றி வளர்த்து விட்டிருந்தாள்.

பதிலை பெறாத கேள்விகளுக்கு மரியாதை இல்லை. அது ஆபத்தானதும் கூட! அதை அனு உணரும் வரை... அவள் இதயத்தின் துடிப்பு அதிகரித்து கொண்டேதான் இருக்கும்.

''அம்மா... நான் ரெடி!'' மல்லிகாவின் முன் நின்றாள் அனு.

மகளைப் பார்த்து மலைத்துப் போனாள் மல்லிகா.

''என் கண்ணே பட்டுடும் போலிருக்கே அனு! ஒரு நிமிஷம் இரு... கன்னத்திலே சின்னதா திருஷ்டி பொட்டு வச்சி விடறேன்!''



அதைக்கேட்டு கலகலவென சிரித்தாள் அனு.

''அம்மா... நான் என்ன சின்னக் குழந்தையா? திருஷ்டிப் பொட்டெல்லாம் வச்சிவிட? போம்மா... போய் என் டிபன் பாக்ஸை எடுத்துட்டு வா!''

''நீ எனக்கு எப்பவுமே சின்னக் குழந்தைதான்!''

''அப்ப... நான்?'' என்று அங்கு வந்து நின்றாள் புனிதா.

''எல்லா வீட்லேயும் கடைசி குழந்தையத்தான் செல்லம் கொஞ்சுவாங்க! இந்த வீட்லே எல்லாமே தலைகீழ்! ஓவரா செல்லம் கொடுக்காதேம்மா! அப்புறம் அனு அக்கா புருஷன் வீட்டுக்கு போகமாட்டேன்... கடைசி வரை உனக்கு மகளாவே இருந்துடறேன்னு ஒப்பாரி வைக்கப் போறா?'' லேசாய் பொறாமை எட்டிப் பார்த்தது புனிதாவின் பேச்சில்.

''ஏன்டி பொறாமைப்படறே? வயசுக்கேத்த மாதிரி பேச கத்துக்க! எனக்கு எல்லா குழந்தைகளும் ஒண்ணுதாண்டி. ஆனா, ஒவ்வொருத்தர்கிட்டே ஒவ்வொரு திறமை இருக்கும். அனுகிட்டே எல்லா திறமையும் இருக்கு. படிப்புல, அழகுல, இசை, நடனம், கம்ப்யூட்டர்னு எதிலே குறை வச்சிருக்கா? ஒரு நல்ல, திறமையான பெண் ஏழு பிள்ளைகளுக்கு சமம்! அனு அப்படிப்பட்ட பொண்ணுதானே? அவ எனக்கு பொண்ணு மட்டுமில்லே... உனக்கும் அக்கா! நீ ஏன்டி அவளைப் பார்த்து பொறாமைப் படறே?''

''போதும்... போதும்! தினசரி அனுபுராணம் பாடாம உன்னால இருக்க முடியுமா? என்னோட லன்ச் பாக்ஸை குடு... டயமாகுது!'' என்று வாங்கிக் கொண்டு ஓடிய புனிதா ப்ளஸ் ஒன் படிக்கும் பள்ளி மாணவி!

''சரி... நீ வந்து உக்காரு அனு.. தட்ட போட்டுட்டேன்''

''இல்லேம்மா... நேரமில்லே... லன்ச் பாக்ஸ் மட்டும் கொடு... கிளம்பணும்!''

''என்னடியிது? வாரத்துல ரெண்டு நாள் கூட டிபன் சாப்பிட்டு போக மாட்டேங்கிறே? நாள் முழுக்க ஆபீஸ்ல உக்கார்ந்து வேலை பாக்கணும். பசியோட இருந்தா... உடம்பு என்னாத்துக்காகும்?'' கவலையாய் கேட்டாள்.

''ஒண்ணும் ஆகாது! உன் அனு எப்பவும் ஸ்லிம்மா அழகாயிருப்பா... குடும்மா...!'' என்று அம்மாவிடமிருந்த பாக்ஸை பிடுங்கியவள் அதை திருப்பி திருப்பி பார்த்தாள்.

''திறந்து பார்த்தாதானே உள்ளே என்ன சாப்பாடுன்னு தெரியும்?''

''அதுக்கில்லே... இது என்னோடதில்லேம்மா... புனிதாவோட டிபன் பாக்ஸ் மாதிரியிருக்கு!''

''இல்லே அனு... இதுதான் உன்னோடது!''

''எனக்குத் தெரியாதா? இது என்னோடதில்லே!''

''அதுக்குத்தான் பேர் பொறிக்கணும்னு சொன்னேன். இது உன்னோட பாக்ஸ்தான் அனு! உன்னைப் பத்தி எனக்குத் தெரியாதா? உன் பாக்ஸை நான் எப்பவும் தனியாதான் வைப்பேன். உன்கிட்டே எனக்கு பிடிக்காத ஒரே குணம் இந்த சந்தேக புத்திதான்! சொன்னா நம்பணும்.''

''சரி... சரி... அப்பா எங்கே காணோம்?''

''உங்க அக்கா வீட்டு வரைக்கும் போயிருக்கார்... அட... விஷ்ணு வந்தாச்சு. வாப்பா... பிரயாணமெல்லாம் சுகமாயிருந் துச்சா? வாம்மா... ரேவதி... பெட்டிய இப்படிக்கொடு!''

ரேவதி ஆறுமாத சிசுவை சுமந்து பம்மென்று வீங்கியிருந்த வயிற்றை தள்ளிக் கொண்டு மூச்சு வாங்க உள்ளே வந்தாள்.

ஏதோ வேண்டுதலை நிறைவேற்ற கணவனும் மனைவியும் திருப்பதி சென்று வந்திருந்தனர்.



''ஹேய் அனு... இன்னும் ஆபீஸ்க்கு கிளம்பலையா?'' விஷ்ணு அவள் கன்னத்தில் செல்லமாய் தட்டினான்.

''கிளம்பிக்கிட்டே இருக்கேன்!''

''அனு... இந்த டிரஸ்ல அமர்க்களமா இருக்கிறே! பார்த்து... எங்கண்ணன் உன்னை இப்படி பார்த்தான்னு வையி... கடத்திக்கிட்டு போயிடுவான். அப்புறம் என்னை குறை சொல்லாதே... சொல்லிட்டேன்!''

ரேவதி கிண்டலாய் சொல்ல... அம்மாவும், அண்ணனும் மனம் விட்டு ரசித்து சிரிக்க... அனு பிரயாசைப்பட்டு கோபத்தை அடக்கி... அண்ணியாச்சே... ஒரு முறுவலை தந்துவிட்டு கிளம்பி விட்டாள்.

ராஜகுதிரை மாதிரி கம்பீரமாய் நடந்து செல்லும் அனுவை மூவரும் பெருமையுடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

**அ**னு தன் ஸ்கூட்டியில் சாலை முனையைக் கூட தொட்டிருக்க மாட்டாள். அந்த வளைவில் தன் ஹோண்டாவை நிறுத்தி அதன் மீது சாய்ந்து கொண்டிருந்தான் வெங்கட்!

அவனைப் பார்த்ததும் சலித்துக் கொண்டாள் அனு!

''ஹாய்... அனு... குட்மார்னிங்!'' கைநீட்டி தடுத்தான்.

வேறு வழியின்றி வண்டியை நிறுத்தினாள்.

''என்ன... சொல்லுங்க?''

''பதிலுக்கு குட்மார்னிங் சொல்றது நாகரீகம் இல்லையா அனு?'' வெங்கட் அவளை கண்களால் துளைத்தெடுத்தான்.

''குட்மார்னிங்... நான் வர்றேன். எனக்கு நேரமாச்சு!''

''எனக்கும்தான் ஆபீஸ்க்கு போகணும்... ஆனா இங்கே உனக்காக வந்து காத்துக்கிட்டிருக்கேனே!''

''நான் வரச்சொல்லலியே...!''

''நான் உன்மேல் வச்சிருக்கிற காதல் வரவைக்குது அனு! ஏன் பிடிவாதம் பிடிக்கிறே? மூணு வருஷமா உன் பின்னாடி நாய்மாதிரி அலையறேன். உன் மனசென்ன கல்லா? இந்த டிரஸ்ல ரொம்ப அழகாயிருக்கிறே அனு?''

''நீங்க என் அண்ணியோட அண்ணன்ங்கற ஒரே காரணத்துக்காகத்தான் உங்களுக்கு மரியாதை கொடுத்து பேசிட்டிருந்தேன். இப்ப சொல்றேன் கேட்டுக்குங்க! அநாவசியமா என் பின்னாடி சுத்தற வேலை வச்சுக்காதீங்க.''

வெங்கட் பரிதாபமாய் அவளைப் பார்த்தான்.

''அனு... எனக்கென்ன குறைச்சல்?''

''மத்த ஆண்களோட நிறை குறையெல்லாம் பார்க்கிற நிலைமையில் நானில்லே... ஏன்னா.. நான் ஒருத்தரை மனசார காதலிக்கிறேன்...'' என்று கூறிவிட்டு கணமும் தாமதியாமல் ஸ்கூட்டியை கிளப்பிக் கொண்டு போய்விட்டாள்.

வெங்கட் திக்பிரமை பிடித்தவனாய் அவள் போன பாதையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

**லி**ஃப்டிலிருந்து வெளிப்பட்ட அனு நான்காவது மாடி தளத்திலிருந்த தன் அலுவலகத்தினுள் நுழைந்தாள். இன்டீரியர் டெகரேஷனுக்காகவே பல லட்சங்களை விழுங்கியிருந்தது ஆபீஸ். ஆளாளுக்கு ஒரு கம்ப்யூட்டரை கண்ணாடி தடுப்புக்குள் வைத்துக் கொண்டு, ஆண்களும், பெண்களும் உயர்ரக உடையில் பந்தா பண்ணிக் கொண்டிருந்தார்கள்.

அது ஒரு சாஃப்ட்வேர் கம்பெனி.

அனு தன் சீட்டில் அமர்ந்தாள்.

''ஹாய்... குட்மார்னிங்...'' பக்கத்து தடுப்பிலிருந்து கையை உயர்த்தி காட்டினாள் நீலா. மறுகையில் ரிசீவர் இருந்தது.

''குட்மார்னிங்!''



அதோடு சுவாரசியமாய் பேச்சைத் தொடர்ந்தாள் நீலா.

அவள் வெட்கப்படுவதும், சிணுங்குவதும், சீ போடா, என்று செல்லமாய் திட்டுவதும்... புரிந்தது! அவள் பாய்ஃப்ரண்ட் கிஷோரிடம் பேசிக் கொண்டிருக்கிறாள் என்று.

அனு தன் டேபிள் மீதிருந்த போனை வெறித்துப் பார்த்தாள், மனசிற்குள் இனம்புரியாத வேதனை பனிப்புகையாய் படர்ந்தது.

'சந்துரு... உன்னை மாதிரி கிஷோரும் ஒரு ஆண்தான். காதல் வயப்பட்டவன்தான்! ஆனால் அவனுக்கு எப்போதும் காதலியின் நினைவு! நானும் உன்னையே நினைத்துக் கொண்டிருக்கிறேன். நீ ஏன் என்னை நினைப்பதில்லை? நீ பிஷினஸ்மேன்தான் நான் இல்லை என்று சொல்லவில்லை பிஸியான மனிதன்தான். வியாபார சம்பந்தமாய் பலபேரை சந்திக்கிறாய், போனில் பேசுகிறாய். ஆனால் எனக்கு ஒரு போன் பண்ண ஏன் முடியவில் லை உன்னால்? இதே ரீதியில் போனால்... நம் திருமணம்?' கண்கள் துளிர்க்கட்டுமா என அவள் பர்மிஷனுக்காக தயார் நிலையில் இருக்க... நாசூக்காய் இமைகளை சிமிட்டி மறுத்தாள்.

''என்னம்மா கண்ணு சௌக்யமா?'' ஒரு வழியாய் பேசி முடித்து விட்டு இவள் பக்கம் திரும்பினாள் நீலா.

''சூப்பராய் கலக்கறே இன்னைக்கு? என்ன... உங்க ஆளை மீட் பண்ணப் போறியா?'' கண்ணடித்து கேட்டாள்.

''ப்ச்... அது ஒண்ணுதான் குறைச்சலா இருக்கு. பேசாம வேலைய பார் நீலா!''

''அது பாட்டுக்கு நடக்கத்தான் போவுது! ஏன் டல்லா இருக்கிறே? உன்னை சந்தோஷப்படுத்தற மாதிரி ஒரு விஷயம் சொல்லட்டுமா?''

''விளையாடாதே!''

''அதுக்கு என் கிஷோர் இருக்கான். நீ வர்றதுக்கு முன்னாடி... உன்னோட ஆள் போன் பண்ணியிருந்தார்!''

''எ...என்ன... நிஜமாவா சொல்றே?'' பெரிய சூரிய காந்தி பூ போல் முகம் முழுக்க பரவசம்.

அதைப் பார்த்து தன் தவறை எண்ணி வருத்தப்பட்டாள் நீலா.

''ஸாரி... அனு... நான் சும்மா விளையாட்டுக்கு...''

அனு வேதனையுடன் தலை கவிழ்ந்து கொண்டாள். இம்முறை அவள் கண்கள் அவன் பர்மிஷனுக்காக காத்திருக்கவில்லை.

## 9

**இதழ்மீது முதல் வைத்த புது வாணிபம் - முதல்**
**இரவுக்குப் பொருள் கூறும் நம் வாலிபம்.**
**உடல்மீது அரங்கேறும் தொடர்நாடகம்! இந்த**
**உலகத்தின் நிறைவுக்கே அது காரணம்.**

**ச**ந்திரகாந்த்!

மேனேஜிங் டைரக்டர்.

கண்ணாடி டேபிள் மீது பெயர் பளபளக்க... ரோலிங் சேரில் அந்த பெயருக்கு உரிய அழகான வாலிபன் அமர்ந்திருந்தான்.

அவன் உடையும், கம்பீரமும் தான் மெத்த படித்தவன் என்பதை உணர்த்தியது. நிதானமான, அதே சமயம் தெளிவான பேச்சு... பிஸினஸில் புலி என்றது. இளரோஸ் நிற சிரிக்கும் உதடுகளும், அழகான வெண்சங்கு பல்வரிசையும் சிகரெட்டை தொட்டதில்லை என்றன. மினுமினுக்கும் கன்ன கதுப்புகள் அவன் லிக்கர் கூட தொட்டதில்லை என்று அடித்து சொல்லின. முப்பது வயதை தொட்டிருந்த சந்திரகாந்தின் விழிகள் மட்டும் அடிக்கடி சூழ்நிலையிலிருந்து விடுபட்டு எங்கோ அலைபாய்ந்து மீண்டதிலிருந்து அவன் காதல் வயப்பட்டவன் என்பதை பறைசாற்றியது.



''ஹலோ காந்த்!'' சடாரென கதவு திறந்து உள்ளே நுழைந்தான் விவேக். சந்திரகாந்தின் நண்பன், மிக நெருங்கிய நண்பன்.

''வாடா...!''

''என்னம்மா... நேத்து வீட்டுக்கு வர்றேன்னு சொன்னே? ஜகா வாங்கிட்டே! என்ன... அனுவோட உல்லாசமா?'' கண் சிமிட்டிக் கேட்டான்.

''டேய்... டேய்... டேய்... அவளைப் பார்த்தே பத்து நாளாச்சு! பிஸினஸ் டென்ஷன் வரமுடியலே!''

''உன்னை நினைச்சா... ஆச்சர்யமா இருக்குடா! லட்டு மாதிரி ஒரு லவ்வரை... அதுவும் இதே ஊர்ல, பக்கத்து ஏரியாவிலேயே வச்சுக்கிட்டு எப்படிடா இத்தனை நாளா பார்க்காம இருக்க முடியுது?''

சந்திரகாந்த் போனில் நம்பரை ஒற்றியெடுத்தான்.

''எனக்கு மட்டும் என் அனுவை பார்க்க, பேச ஆசையிருக்காதா என்ன?'' என்றவன் சைகையில் பேசாதே என்று கையை காட்டினான்.

''ஹலோ... ஹலோ...'' எதிர்முனை அலற... சந்திரகாந்த் மூச்சு கூடவிடாமல் அந்த குரலை சில கணங்கள் ரசித்து போனை கட் பண்ணினான்.

''தினமும் இதே மாதிரி நாலஞ்சு கால் வருது! எவன் விளையாடறான்னே தெரியலே...'' வைக்குமுன் காதில் விழுந்த கமெண்ட்டை நினைத்து சிரித்தான்.

விவேக் அவனை வித்தியாசமாய் பார்த்தான்.

''யாருக்கு போன் பண்ணினே? அனுவுக்கு தானே?''

'எப்படி கண்டுபிடித்தான்?' என்ற ஆச்சர்யத்துடன் அவனை பார்த்து விட்டு ''ஆமாம்'' என்று தலையசைத்தான்.

''ஏன் பேசாம கட் பண்ணிட்டே?''

அடிநெஞ்சிலிருந்து ஆழ்ந்த பெருமூச்சு வெளிப்பட்டது சந்திரகாந்திற்கு.

''எனக்கும் அவகிட்டே நாள்பூரா பேசிக்கிட்டே இருக்கணும்னுதான் ஆசை! ஆனா, ஆனா... ரேஷ்மாவோட நினைவு வந்து என் ஆசையை அடிச்சுக் கொல்லுது. அவள் பேசிய வார்த்தைகள், அது தந்த காயம்... எதுவும் மறக்க முடியலே விவேக்!''

''நீ பைத்தியக்காரன்டா! எல்லாரும் ரேஷ்மா மாதிரி இருந்திட முடியுமா? அவ பொண்ணே இல்லேடா! இருந்திருந்தா...உன்னை கை நழுவ விட்டிருப்பாளா? ஆனா, அவ உன்னை விட்டு விலகினது நீ பண்ணின அதிர்ஷ்டம், உன்னை பெத்தவங்க சேர்த்து வச்சிட்டுப் போன புண்ணியம்னு நினைச்சிக்க. அதை விட்டுட்டு... இன்னும் அந்த தெருப் பொறுக்கியையே நினைச்சிட்டிருக்கானாம் இந்த பைத்தியக்காரன்!''

''யூ ஆர் ராங் விவேக்! நீ சொல்ற மாதிரி நான் அவளை நினைச்சிட்டில்லே! அவ பண்ணின துரோகம், பேசக் கூடாத பேச்சுக்கள்... என்னை அவ ரொம்ப அவமானப் படுத்திட்டாடா! அதனாலதான் மனசு நிறைய அன்பு பொங்கி வழிந்தாலும்... என்னால அனுகிட்டே நெருங்க முடியல. பயமாயிருக்கு. ரேஷ்மா மாதிரி அனுவும் என்னை காயப்படுத்திவிட்டு போய்டுவாளோன்னு பயமாயிருக்கு. ரேஷ்மாகிட்டே எப்படியெல்லாம் பழகினேன்? அவளை ஒரு நிமிஷமாவது பிரிஞ்சிருப்பேனா? அவகிட்டே எந்நேரமும் பேசிட்டிருக்கணும்னு தானே அவளுக்குன்னு செல்ஃபோன் வாங்கிக் கொடுத்தேன்? ஆனா, அவ கடைசியிலே என்னை எவ்வளவு கேவலப்படுத்திட்டுப் போய்ட்டா!'' சந்திரனின் குரல் வேதனையில் கிசுகிசுப்பாய் வெளிப்பட்டது.



''மாப்பிள்ளே... எல்லாம் சரிதான்டா! ஆனா, அதுக்காக, அனுகிட்டே விருந்தாளி மாதிரி, என்னைக்கோ ஒரு நாள் முகத்தை காட்டறதும், பேசறதும் ஏன்?''

''பயம்... ரேஷ்மாவால ஏற்பட்ட பயம்! என் அன்பை அவளும் தரக்குறைவா விமர்சனம் பண்ணிடக்கூடாது. நான் அவமேல எவ்வளவு அன்பு வச்சிருந்தேன், வச்சிருக்கேன்ங்கறதை எங்க கல்யாணத்துக்குப் பிறகு புரிஞ்சுக்கட்டும்.''

''அதுவரைக்கும்... இப்படியேதானா?''

''வேற வழி தெரியலே விவேக்!'' என்றான் அடிபட்ட வலியுடன்.

**அ**ன்று ஞாயிற்றுக்கிழமை.

லீவுதானே என்று ஒருமணிநேரம் கூடுதலாக படுக்கையிலேயே உருண்டுவிட்டு அம்மாவை தேடி கிச்சனிற்கு வந்தான்.

''அம்மா... காபி!''

கேட்டதும் அமைதியாய் டம்ளரை நீட்டினாள்.

அனு ஆச்சர்யமாய் அம்மாவைப் பார்த்தான். 'என்ன அனு? இன்னைக்கு வீட்டிலிருக்கே! இன்னைக்காவது நிதானமா, ரசிச்சி, ருசிச்சி சாப்பிடு. உனக்கு என்ன பிடிக்கும் சொல்லு... அதுதான் இன்னைக்கு மெனு!' என்று எப்பவும் டயலாக் அடிக்கும் அம்மாவின் முகம், எண்ணெய் இறங்கிய மூக்குத்தியைப் போல... தேஜஸ் இன்றி சுருங்கி இருந்தது.

''என்னம்மா ப்ராப்ளம்?'' என்று கேட்க வாயைத் திறந்தவள் ஹாலில் அக்கா தேவிகாவின் குரல் கேட்டு வியந்தாள்.

'அட... அக்கா வந்திருக்காளா? இவ்வளவு காலையிலேயா?''

''அம்மா தேவிகாக்கா வந்திருக்கா?''

''ம்...!''

''மாமா... குட்டீஸ்லாம் கூடவா?''

''ம்...!''

''முத்து உதிர்ந்தா... அப்படியே பொறுக்கி உன்கிட்டேயே திருப்பித் தந்திடறேன். வாயை திறந்துதான் பதில் சொல்லேன்!''

''பேசினது போதும்... முதல்ல போய் குளிச்சிட்டு வா!''

''ம்ஹூம்... நீ சரியில்லே!''

''அதையேதான் நாங்களும் சொல்கிறோம்!''

''அம்மா... என்ன சொல்றே? புரியறமாதிரி பேசேன்!''

''உன்னை மாதிரி அதிமேதாவிகளுக்கு நாங்க என்ன சொன்னாலும் புரியாதுதான்! பெண்ணால் துயரமே வரும். ஆனா, பெண் இல்லாத வீடே இல்லையே! என்ன பண்றது? பொட்டை புள்ளைங்களை பெத்துட்டா... துயரப்பட்டு தானே ஆகணும்!'' அம்மாவின் வார்த்தையில் உஷ்ணம் இருந்தது.

''அம்மா... சத்தியமா சொல்றேன். நீ சொல்றது ஒண்ணுமே புரியலே. நான் போய் குளிச்சிட்டு வர்றேன். தெளிவா... நிதானமா... என்ன பேசணும்னு யோசிச்சு வை!'' சூழ்நிலையின் விபரீதம் புரியாமல், வழக்கம் போல் கிண்டலடித்து விட்டு குளிக்கச் சென்றாள் அனு.

**கா**லை டிபன் சாப்பிடும்போது...அந்த ஹால் முழுக்கவே அசாதாரண அமைதி நிலவியதை கவனித்தாள்.

அப்பாவின் முகம் இறுகியிருந்தது. அதுமட்டுமில்லாமல் வழக்கமாய் சாப்பிடுவதைவிட அரைகுறையாய்தான் சாப்பிட்டார்.

''என்ன அங்கிள்... எப்படியிருக்கீங்க?'' என்று கேட்டதற்கு... சுதாகர் ''ஃபைன்'' என்று ஒரே வார்த்தையில் முடித்துக் கொண்ட போதுதான் 'ஏதோ பிரச்னை' என்பதை உணர்ந்தாள். சுதாகர் மாமாவிற்கு அனு என்றால் தனிப்பிரியம். வந்தால்... வள



வளவென்று அரசியல், சினிமா, அலுவலகம் என்று பேசிக் கொண்டேயிருப்பான். அவன் மட்டுமா? தேவிகாவும் தங்கையிடம் கொள்ளைப் பிரியம் வைத்திருந்தாள். அவளும் இவளைப் பார்த்தும் பார்க்காதது போல் தலையை கவிழ்ந்திருந்ததுதான்... ஆச்சர்யம்.

சாப்பிட்டு முடித்து கையை கழுவிக் கொண்டு தன்னறை நோக்கி செல்ல முற்பட்டவளை அழைத்தார் சௌந்தரபாண்டியன்.

''அனு.. இங்கே வா!''

''என்னப்பா?''

''இப்படி உட்கார்... உன்னிடம் பேசணும்!''

''என்ன விஷயம்ப்பா?'' மனதில் ஒருவித கிலியுடன் எதிரில் அமர்ந்தாள்.

அவர்களைச் சுற்றி விஷ்ணு, ரேவதி, புனிதா உட்பட குடும்பம் மொத்தமும் வியூகம் அமைத்து நின்றிருந்தது.

''உனக்கு இப்ப இருபது வயசாச்சு இல்லையா?''

''நான் ஒண்ணும் குறைச்சு சொல்லலியே...!''

''மாமா... சீரியஸா பேசறப்ப... கிண்டலடிக்காதே அனு!'' கோபமாய் சொன்னாள் ரேவதி.

''ஏன்... எல்லோரும் ஒரு மாதிரியா பேசறீங்க?''

''யாரும் வாயை திறக்க வேண்டாம். நானே பேசறேன். அனு... நாங்க உனக்கு கல்யாணம் பண்ணலாம்னு முடிவு பண்ணியிருக்கோம்!'' என்றார் அப்பா.

''.......?!''

''என்ன பதிலே காணோம்?''

''நீங்களே முழுசா சொல்ல வந்ததை சொல்லிடுங்கப்பா! அப்புறமா நான் பதில் சொல்றேன்!'' என்றாள் பொறுமையாய்.

அனுவிற்கு ஒன்று மட்டும் பளிச்சென்று புரிந்தது. சந்திரகாந்த் பற்றி வீட்டில் தெரிந்து விட்டிருக்கிறது என்று.

''உங்க அண்ணியோட அண்ணன் வெங்கட்... உனக்கு எல்லாவிதத்திலேயும் பொருத்தமானவர். எல்லாவற்றிற்கும் மேல்... அவருக்கு உன்மீது ஈடுபாடு இருக்கு. அதனால அவருக்கும் உனக்கும் கல்யாணம் பண்ணலாம்னு இருக்கிறோம்!''

''அப்பா... இப்ப நான் பேசலாமா?''

''தாராளமா?''

''என் மேல் உங்களுக்கு அன்பிருக்கு அக்கறையிருக்கு. நம்பிக்கையிருக்கு. அதனாலதான் நான் விருப்பப்பட்டதெல்லாம் எனக்கு கிடைக்க செய்தீங்க. நான் எதை எல்லாம் படிக்க ஆசைப்பட்டேனோ... அத்தனையும் வரவுக்கு மீறி செலவு செய்து படிக்கவச்சீங்க.. இன்னைக்கு கவுரவமான வேலையிலே சேர்ந்து எட்டாயிரம் சம்பளம் வாங்கற அளவுக்கு உயர்ந்திருக்கேன்னா... அதுக்கு காரணம் நீங்கதாம்பா! அப்படிப்பட்ட நீங்க என் கல்யாண விஷயத்திலேயும் என் விருப்பப்படி முடிவு எடுக்கணும்னு ஆசைப்படறேன்!''

''என்னடி சொல்ல வர்றே?'' மல்லிகா முறைப்புடன் அதட்டினாள்.

''மல்லிகா... சும்மாயிரு... நீ சொல்ல வந்ததை சொல்லிடும்மா!'' என்றார் செளந்தரபாண்டியன்.

''எனக்கு... வெங்கட்டை கல்யாணம் பண்ணிக்க விருப்பமில்லேப்பா!''

''ஏன்... எங்க அண்ணனுக்கு என்ன குறைச்சல்?'' ரேவதி இடைமறித்துக் கேட்டாள்.



''இதுக்கு பதில் சொல்ல நான் விரும்பலே!''

''எப்படி பேசறா பார்த்தீங்களா மாமா?''

''வெங்கட்டை ஏன் வேணாங்கறே?'' என்றான் விஷ்ணு.

''மனுஷங்களுக்கு குணத்திற்கு முன்னால் அறிவு தேவை. ஆனா, பெண்களுக்கு அறிவை விட குணம்தான் முக்கியம் அதை புரிஞ்சுக்க அனு!'' என்றாள் தேவிகா.

''இப்ப நான் என்ன குணம் கெட்டுப் போய்ட்டேன்? ஆளாளுக்கு இப்படி பேசிட்டிருக்கீங்க?''

''எதுக்கு சுத்திவளைச்சு பேசறீங்க? நேரடியா கேளுங்க அவ யாரையோ மனசுல வச்சிருக்கறதால தானே இப்படி பிடி கொடுக்காம பேசிட்டிருக்கா!''

அண்ணி படாரென்று போட்டு உடைத்ததும், எதிர்பார்த்த விஷயம் என்றாலும் தூக்கி வாரிப் போடவே செய்தது அனுவிற்கு.

சுதாகரித்துக் கொண்டாள்.

''உங்கண்ணன் சொன்னாரா அண்ணி?''

''அதைப் பற்றி எதற்கு? உண்டா இல்லையா?''

''........!?''

''அனு... உன்னை நானே ரெண்டு முறை ஒரு ஆணோட ரெஸ்டாரென்ட்ல பார்த்திருக்கேன். இனி மறைச்சு ஒண்ணும் ஆகப் போறதில்லே'' என்றான் சுதாகர்.

அனு நிமிர்ந்து அனைவரையும் பார்த்தாள்.

''ஆமாம்! நான் சந்திரகாந்தை மனதார நேசிக்கிறேன் கல்யாணம்னு ஒண்ணு நடந்தா... அது அவரோடதான்!'' என்றாள் உறுதியாக அனு.

''அப்படியொரு கனவு இருக்கா? அவன் பணக்காரன்னு கேள்விப்பட்டோம்! அவனெல்லாம் உன்னை எப்படிடி கல்யாணம் பண்ணிக்குவான்?'' என்றாள் தேவிகா.

''அனு... நீ படிச்ச.. புத்திசாலி! சந்திரகாந்தை பற்றி நான் விசாரிச்சப்ப... நல்ல ரிசல்ட் கிடைக்கலே! அவன் ஏற்கனவே பல பெண்களோட சுத்திக்கிட்டிருந்தவன். பொண்ணுங்களோட பழகி... வேண்டியது கிடைச்சதும் ஏமாத்தற பொறுக்கி! நீயும் ஏமாந்து போகாதே!''

''மாமா... போதும்! எனக்கு அவரைப் பத்தி தெரியும். அவர் அப்படிப்பட்டவரில்லே! யார் என்ன சொன்னாலும் சரி. இந்த விஷயத்திலே என்னை யாரும் கன்வின்ஸ் பண்ண முடியாது!''

''எவ்வளவு திமிரா பேசறா பார்த்தீங்களா? அளவுக்கதிகமா படிச்சா... பொட்டை புள்ளைங்க இப்படிதாண்டி தலைகனம் பிடிச்சி ஆடுவீங்க?''

''அம்மா... நான் இப்ப என்ன தப்பு பண்ணிட்டேன் இப்படி பேசறீங்க? என் மனசுக்கு பிடிச்சவரை கல்யாணம் பண்ணிக்க நினைக்கறது தப்பா? வெங்கட் மனசுக்கு பிடிச்சிருக்கிற காரணத்துக்காகத்தானே... இத்தனை பேரும் சேர்ந்து என்னை வற்புறுத்திட்டிருக்கீங்க? ஏம்ப்பா! வெங்கட் விருப்பத்தை நிறைவேத்த பாடுபடற அளவுக்கு உங்க பொண்ணோட மனசை ஏம்பா புரிஞ்சுக்க மாட்டேங்கறீங்க?''

''இதப்பார் அனு. உன் விருப்பத்தை நான் தப்புன்னு சொல்ல வரலே! ஆனா, நீ சொல்ற அந்த சந்திரகாந்த் பத்தி யாருக்கும் நல்ல அபிப்பிராயம் இல்லயேம்மா!''

''அவர் பணக்காரர்ங்கற ஒரே காரணத்துக்காகக் கேரக்டரை சந்தேகப்படாதீங்க. அவரைப் பத்தி எனக்குத் தெரியும்.''

''அனு... ஆம்பளைங்களைப் பத்தி உனக்கென்ன தெரியும்? அவசரப்பட்டு முடிவெடுக்காதே!'' என்றான் சுதாகர்.



''எனக்கு உங்களைதான் புரிஞ்சுக்க முடியலை மாமா!''

''மாப்பிள்ளே... இந்த பிரச்னைய இப்போதைக்கு விடுவோம். அந்த பையனை பார்த்து பேசி ஒரு முடிவுக்கு வரலாம்!''

''தாங்க்ஸ்ப்பா!'' என்று முகம் மலர்ந்தாள் அனு.

தன் அண்ணனை மறுத்து விட்ட கோபத்தில் முகம் வாடினாள் ரேவதி.

தன்னைவிட அந்தஸ்திலும் அழகிலும் உயர்ந்த சந்திரகாந்த் இந்த வீட்டின் மருமகனாக வந்து தன் இமேஜை குறைத்து விடுவானோ என்கிற கவலை சுதாகருக்கு.

## 10

**பருவக் கொடைகள் குடைபிடிக்க - அதைப்**
**பசித்த விழிகள் படம் பிடிக்க,**
**ஆடும் மனது அடம்பிடிக்க - அங்கே**
**ஆசை வந்தது இடம்பிடிக்க.**

''**ஹா**ய் அனு குட்மார்னிங்'' என்றபடி வந்தமர்ந்தாள் நீலா.

''குட்மார்னிங்! என்ன திடீர்னு ரெண்டுநாள் லீவ் எடுத்துக்கிட்டே?''

''வெளியூர் போயிருந்தோம்!''

''ஃபேமிலியோடவா?''

''ம்ஹூம்...!''

''தனியாகவா?''

''அதுவுமில்லே!''

''பின்னே?''

''சொன்னா... வாய் பிளந்திடுவே!''

''அப்ப. பெரிய விஷயம்னு சொல்லு!''

''ஆமா அனு! கிஷோரோட கொடைக்கானல் போய் வந்தேன்!''

''......!?'' பதில் சொல்ல வாய் வராமல் திகைப்புடன் ஏறிட்டாள் அனு.

''ஆச்சர்யமாயிருக்கில்லே? அஃபிஷியலா மதுரை போக வேண்டியிருக்குன்னு வீட்லே பொய் சொல்லிட்டு... ஜாலியா போய்ட்டு வந்தேன்!'' நீலாவின் முகம் சந்தோஷத்தில் பளபளத்தது.

''உனக்கெப்படி இவ்வளவு தைரியம் வந்துச்சு நீலா? பயமாயில்லே?''

''உன்னை மாதிரி மண்புழு போலத்தான் இருக்கக் கூடாது. கூரை மீதேறி கோழி பிடிக்க முடியாதவங்க... மேகத்தை தொட ஆசைப்படக்கூடாது. காதல்ல ஃபங்சுவாலிட்டியில்லேன்னா தப்பில்லே. ஃபார்மாலிட்டிதான் இருக்கக்கூடாது. நீயும், சந்துருவும் ஒரே ஊர்ல பக்கத்து பக்கத்துல இருந்தாலும் உங்க ரெண்டு பேருக்குள்ளே எவ்வளவு டிஸ்டன்ஸ்? தொகுதி மக்களை அரசியல்வாதி பார்க்க போகிறமாதிரி... எப்பவோ ஒருநாள் சந்திச்சுக்கறீங்க. இதுக்கு பேரு காதலா? நான் நம்பமாட்டேன்!''

அவளுக்கே அந்த சந்தேகமிருந்தாலும் சந்துருவை விட்டுத்தர மனம் வரவில்லை.

''தினசரி பார்த்து பேசிக்கிட்டாதான் காதல் வளரும்னு யார் சொன்னது. என் மனசு அவர்கிட்டேயும், அவர் மனசு எங்கிட்டேயும் இருக்கிறப்ப ஏன் சந்திச்சுக்கணும்?''

''முட்டாள்தனமா டயலாக் அடிக்காதே! இப்படி பேச்கு மாதிரி இருந்தேன்னு வச்சுக்க... உன் சந்துரு இன்னொருத்திகிட்டேயும் தன் மனசை கொடுத்து பத்திரமா வச்சுக்கன்னு சொல்லுவார்!''



''சந்துரு அப்படிப்பட்டவரில்லே, அவர் மனசிலே நான் மட்டும்தான் இருக்கிறேன்.'' என்றாள் சற்றே கோபமாக.

''இருந்தா நல்லது?''

''என்ன கிண்டலா?''

''இல்லே அனு! ஆனா கொஞ்சம் கேர்ஃபுல்லா இரு. ரொம்ப சைலண்ட்டா இருக்கிற ஆசாமிகளைத்தான் நம்பக்கூடாது!''

''ஓஹோ... அப்ப... வீட்டுக்குத் தெரியாம வெளியூருக்கு கூட்டிட்டு போய் ஸ்டே பண்ண வைக்கிற கிஷோரை மட்டும் எப்படி நம்பலாம்?''

நீலா வாய் விட்டு சிரித்தாள்.

''யூ... ஆர் கரெக்ட் அனு! லவ்வரோட கல்யாணமாகறதுக்கு முன்னாடி ஸ்டே பண்றது தப்புதான்!''

''தப்புன்னு தெரிஞ்சுமா... தப்பு பண்றே?''

''நான் பண்ணினது தப்பில்லேன்னுதான் நினைக்கிறேன்.''

''வாட்?''

''ஆமாம் அனு! ஹஸ்பன்டோட வெளியூருக்கு போய் ஸ்டே பண்றது தப்பா?''

''என்ன சொல்றே?'' வியப்பாய் கேட்டாள்.

''யெஸ் அனு! சீக்ரெட்டா இருக்கணும்னு நினைச்சிதான் இத்தனை நாள் சொல்லாம மறைச்சேன். நானும் கிஷோரும் ஒரு மாசத்துக்கு முன்னாடியே யாருக்கும் தெரியாம ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கிட்டோம்!''

''நிஜமாவா?''

''ஆமாம்! ஏன் வீட்டுக்குத் தெரியாம பண்ணிக்கிட்டோம்னு கேட்கலாம். என் சைடிலேயும் சரி, அவர் சைடிலேயும் சரி எங்க

காதலுக்கு எதிர்ப்பு அதிகம். காதலிக்கிறது எதுக்காக? நேசிச்சிட்டு பிரியறதுக்கா? இல்லே அனு! ஆளையே விழுங்கற அலை வந்து மோதினாலும் பாறை மாதிரி ஸ்டெடியா நின்னு ஜெயிக்கறதுதான் காதல். எங்க அம்மாவுக்காகவோ, அவரோட அப்பாவுக்காகவோ எங்க காதலை விட்டுக் கொடுக்க தயாராயில்லே. எந்த ரூபத்திலேயும் முட்டுக்கட்டை வரலாம். அதனால்தான் நாங்க மேரேஜ் பண்ணிக்கிட்டோம். வீட்லே பிரச்னை ஆரம்பிக்கறப்ப... எங்க கல்யாண விஷயத்தை போட்டு உடைச்சிடுவோம். அதுவரைக்கும்... இப்படித்தான் த்ரில்லிங்கா மீட் பண்ணிக் கிட்டிருப்போம். இப்ப சொல்லு! நான் செஞ்சது தப்பா?'' என்று கேட்டாள்.

''தெரியலே... சொல்லத் தெரியலே... பட், எனக்கும் சொல்லாம பண்ணிக்கிட்டே... எனிவே கங்க்ராஜுலேஷன்ஸ்.''

''தாங்க்ஸ் அனு! நீயும் சீக்கிரம் கல்யாண சாப்பாடு போடணும்!''

''ம்...!'' என்று புன்னகைத்தபடி தலையாட்டினாள் அனு.

**அ**னுவிற்கு ஆச்சரியம் தாங்கவில்லை.

அவன்தானா?

ஆமாம்... சந்துருவேதான். தன்னோட சாக்லேட் நிற மாருதி மீது சாய்ந்தபடி இவள் ஆபீஸ் வாசலில் காத்திருப்பது... சந்திரகாந்த்தே தான்!

இதயம் பட்டாம்பூச்சியாய் படபடக்க... துள்ளியோட முயன்ற கால்களை கஷ்டப்பட்டு அடக்கி, உலர்ந்த உதடுகளை ஈரப்படுத்திக் கொண்டு, தன் சந்தோஷத்தை சிறகடித்து பறக்க நினைத்த உணர்வுகளை எங்கே அவன் உணர்ந்து கொள்ளப் போகிறானோ என்கிற அச்சம் கவ்வ... இயல்பாய் அவனை நோக்கி செல்ல வெகு சிரமப்பட்டாள்.

''ஹாய் அனு!''



'எத்தனை நாளாயிற்று. இவளைப் பார்த்து?' ஏக்கப் பெருமூச்சுடன் அவளை இதயத்தில் நிரப்பிக் கொண்டான்.

''ஹாய்... இந்த பக்கம்? ஒரு போன் கூட பண்ணாம?''

''ஏய்... அனு... நீ பேசறது உன் லவ்வர்கிட்டே! ஃப்ரண்ட்கிட்டே பேசறமாதிரி எங்கே இந்த பக்கம்னா கேப்பாங்க?''

''இந்தப்பக்கம் ஒரு வேலையா வந்தேன்... அப்படியே உன்னை பார்க்கலாம்னு...''

'மடையா... பதினஞ்சிநாளா பார்க்காம பித்து பிடிச்சி போயிருந்தேன். உன்னை பார்க்கறதுக்காகவே டெல்லி பார்ட்டியை கழற்றி விட்டுட்டு வந்தேன்னு உண்மைய சொல்றதை விட்டுட்டு...'

''வாயேன்... ஒரு காபி சாப்பிட்டுக்கிட்டே பேசவோம்!''

''வர்றேன்... நானும் ஒரு முக்கியமான விஷயம் பத்தி உங்ககிட்டே பேசணும்!''

''என்ன அனு?''

''இங்கே வேண்டாமே!''

''ஓக்கே... கெட் இன்!'' கார்க்கதவை திறந்துவிட முன்பக்கம் ஏறிக் கொண்டாள் அனு.

அவன் பார்க்காதபோது அவளும், அவள் பார்க்காத போது அவனும் திருட்டுத்தனமாய் ரசித்து... இதயம் முழுக்க நிரப்பிக் கொள்கின்றனர். ஏதேதோ பேச வேண்டும் என்று தோன்றினாலும், ஒருவரையொருவர் நேரில் பார்த்துக் கொண்ட திகைப்பில், திருப்தியில் பேச நா எழவில்லை. ரெஸ்டாரெண்ட் வரும் வரை இருவரும் எதுவும் பேசிக் கொள்ளவில்லை.

ஒரு காலியான டேபிளை தேர்ந்தெடுத்து அமர்ந்தனர்.

''என்ன சாப்பிடறே அனு?''

''உங்களுக்கு எது பிடிக்கறதோ... அதையே ஆர்டர் பண்ணுங்கள்!'' எப்படியோ தைரியம் வந்து அவன் இதயம் சிலிர்க்கச் செய்கிற ஒரு வார்த்தையை சொல்லிவிட்டாள்.

சில்லென்ற ஐஸ்வாட்டரை கைநிறைய அள்ளி முகத்தில் வீசிய இன்ப சுகத்தை உணர்ந்தான் சந்துரு.

பேரர் வந்தபோது... வேண்டியதை ஆர்டர் செய்தான்.

சற்று நேரம் அமைதி!

சந்துரு கலைத்தான்.

''இந்த ஆஷ்கலர் பெங்காலி காட்டன் சேலை உனக்கு ரொம்ப அழகாக இருக்கிறது அனு!''

''தாங்க்ஸ்... உங்களுக்கும் இந்த டிரஸ் அழகாக இருக்கிறது. ஆனால், டி ஷர்ட்டை டக்கின் பண்ணாமல் விட்டிருந்தால்... இன்னும் நன்றாயிருக்கும் என்று தோன்றுகிறது!''

அவள் சொல்லி முடிந்திருக்கவில்லை. ஜீன்ல பேன்ட்டிற்குள் இன் பண்ணியிருந்த ஆலீவ் க்ரீன் டி ஷர்ட்டை எடுத்து வெளியில் விட்டான்.

''இப்ப?'' என்றான்.

''ரொம்ப நல்லாயிருக்கு!''

''நானா? டிரஸ்ஸா?''

அந்த கேள்விக்கு பதில் கூற உலகமகா வெட்கம் வந்து தடுத்தது.

பேரர் ஆர்டர் செய்தவைகளை வெள்ளை விரிப்பின் மீது பரப்பி வைத்தான்.

சாப்பிட ஆரம்பித்தனர்.

பொதுவாய் அலுவலகம், நண்பர்கள் என்று பேசத் தொடங்கினர்.



''மறந்திட்டேன் பாரேன்! என்னிடம் ஏதோ முக்கியமான விஷயம் பேச வேண்டும் என்றாயே! என்ன அனு?''

''அது...வந்து!'' எப்படி ஆரம்பிப்பது என்றே தெரியாமல் விழித்தாள்.

தன் திருமண விஷயம் பற்றி பேசுகிற அளவுக்கு தங்களுக்குள் அந்தளவு உரிமையோ, நெருக்கமோ இருக்கிறதா என்கிற குழப்பம்! இவனும் தன்னிடம் ஒரு நண்பனைப் போல் பழகுகிறான். திருமண விஷயம் பேசப் போக... ''வாட்? உனக்கும் எனக்குமா?'' என்று குதர்க்கமாய் கேட்டு விட்டால்?'

''சீக்கிரம் சொல் அனு! நீ சொல்லி முடித்தாயானால் நானும் ஒரு முக்கியமான விஷயம் ஒன்றை சொல்ல வசதியாய் இருக்கும்!''

''என்ன விஷயம்?''

''ம்ஹூம்... லேடீஸ் ஃபர்ஸ்ட்!'' என்றான் மெல்ல சிரித்து.

அந்த வசீகர சிரிப்பில் ஒரு கணம் தான் பேச வந்ததையே மறந்து போனாள் அனு.

இதில் ஒற்றுமையான விஷயம் என்னவென்றால்... சந்திரகாந்தும் தங்கள் திருமண விஷயம் பற்றி பேசவே நினைத்திருந்ததுதான்.

''என்ன அனு... ஏதோ சொல்ல ஆரம்பிச்சே! நான் ஏதாவது ஹெல்ப் பண்ணனுமா? எதுவாயிருந்தாலும் தயங்காமல் கேள்... ஐ வில் ஹெல்ப் யூ!''

'ஹெல்ப்பா?' அனுவிற்கு சப்பென்றாகிவிட்டது.

''சொல்லு அனு!''

''வந்து... எங்க வீட்லே...'' என்று அனு ஆரம்பிக்கிற சமயம் பார்த்து சந்திரகாந்தின் செல்ஃபோன் அலறியது.

''ஒன் செகண்ட் அனு!'' என்றவன் செல்லை எடுத்து காதில் வைத்தான்.

''ஹலோ...''

''.......''

''ஹேய்... மாலு... நீயா? வாட் த சர்ப்ரைஸ்? நீ எப்ப இன்டியாவுக்கு வந்தே?'' ஆயிரம் வாட்ஸ் பல்பு சந்திரகாந்தின் முகத்தில் எரிந்ததை அனு கவனிக்க தவறவில்லை.

''.......''

''முன்னாடியே இன்ஃபார்ம் பண்ணியிருந்தா ஏர்போர்ட் வந்திருப்பேனே!''

''.......''

''நோ... நோ... நீ எந்த டாக்ஸிலேயும், ஆட்டோவுலேயும் ஏறக்கூடாது. எங்க ஊரு ஆம்பளைங்க ரொம்ப மோசம். உன்னை மாதிரி தேவதைகளை பார்த்துட்டா இன்னும் மோசமாய்டு வானுங்க. நீ அங்கேயே வெய்ட் பண்ணு. அரைமணி நேரத்திலே... நான் அங்கே இருப்பேன். ஒக்கே?'' என்று போனை வைத்தான்.

அனு அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''ஸாரி அனு! நான் ரொம்ப அவசரமா ஏர்போர்ட் போயாகணும். என் அத்தை பொண்ணு... தன்னந்தனியா லாஸ் ஏஞ்சல்ஸிலிருந்து வந்திருக்கா. அவளை பிக்கப் பண்ணனும். நீ இங்கோர்ந்து ஒரு ஆட்டோவை பிடிச்சிட்டு வீட்டுக்கு போய்டு. வரட்டுமா? பை அனு! ஸீ யூ லேட்டர்!'' என்று கையசைத்து விட்டு ஓட்டமும் நடையுமாய் காரை நோக்கிச் சென்றான்.

ஏனோ... அனுவின் கண்கள் கலங்கின.



**இரவு நேரம் வந்து விட்டால் கனவு காண்கிறேன்! என்னை**
**இரண்டு கைகள் தழுவும் காட்சி தினமும் காண்கிறேன்.**
**உறவு மழையில் இரவு முழுதும் நனையப் பார்க்கிறேன்! - ஆடை**
**உடுத்திடாத ஆசை நெஞ்சில் உன்னையே சேர்க்கிறேன்!**

## 11

**'வெ**ங்கட்டை திருமணம் செய்ய மாட்டேன்' என்று அனு திட்டவட்டமாய் கூறியதிலிருந்து அப்பாவைத் தவிர வேறு யாருமே சரிவர பேசுவதில்லை. அதனால் அனு வருத்தப்பட வில்லை. ஆனால் அம்மாவும் ஒரேயடியாய் பேச்சை முறித்துக் கொண்டது தான் வருத்தமாக இருந்தது.

ஆனாலும் வலிய சென்று பேசவே செய்தாள்.

''அம்மா...''

''ம்...''

''என்னை நிமிர்ந்து பார்த்து பதில் சொல்லக் கூட உனக்கு பிடிக்கலையா?''

''என்ன வேணும்?'' என்றாள் நிமிராமலே.

''என்னோட கொஞ்சம் வெளியில் வரணும்!''

''எதுக்கு?''

''என் காலேஜ்மேட் ஷர்மிளாவுக்கு மேரேஜ். கிஃப்ட் வாங்கணும். நீயும் கூட வந்தா ஷாப்பிங் பண்ண நல்லாயிருக்கும்!''

''ஏன்... இந்த சாதாரண விஷயத்துக்கு மட்டும் எங்க துணை தேவைப்படுது? பெரிய பெரிய விஷயமெல்லாம் யாரையும் கலந்தாலோசிக்காம முடிவெடுப்பீங்க... வேணாம்மா... எல்லாத்தையும் நீயே பார்த்துக்க... என்னை இழுக்காதே!''

''அம்மா...அண்ணி என்னை கோவிச்சுக்கறதிலே ஒரு அர்த்தமிருக்கு. உன்னோட கோபத்தைதான்ம்மா என்னால ஜீரணிச்சுக்க முடியலே! என் மனசுக்கு பிடிச்ச வாழ்க்கைய அமைச்சுக்க எனக்கு உரிமையில்லையாம்மா? இப்ப சொல்றேன்... கேட்டுக்குங்க! உங்களோட மனப்பூர்வ ஆசீர்வாதத்தோடதான் என் கல்யாணம் நடக்கும். இல்லேன்னா... கடைசிவரைக்கும் உனக்கு மகளாகவே வாழ்ந்து முடிச்சிடறேன். உனக்கு பிடிக்காத வாழ்க்கை எனக்கு வேண்டாம்மா!'' கன்னத்தில் வழிந்த கண்ணீரை துடைத்துக் கொண்டு வெளியேறினாள் அனு.

மல்லிகாவின் மனசு கனத்துப் போயிற்று.

'சிங்கப்பூர் ஷாப்பிங் பிளாஸா!' நியான் எழுத்துக்களால் பளபளத்தது.

மிகப்பெரிய ஷாப்பிங் காம்ளக்ஸ் அது! அனு... கிப்ட் ஐட்டம் செக்ஷனில் தேர்வு செய்த பொருளுக்கு பில் வாங்கிக் கொண்டிருந்தபோதுதான்... அவர்களைப் பார்த்தாள்.

கடைகோடியில்... முகம் நிறைய சிரிப்போடு சந்திரகாந்த்!

அது யார்? அவன் தோளில் இரண்டு கைகளையும்போட்டு ஊஞ்சலாடுவது போல் கொஞ்சிக் கொண்டிருக்கும் அல்ட்ரா மாடர்ன் கேர்ள்?

ஒருவேளை அவன் அத்தை மகள் லாஸ் ஏஞ்சல்ஸிலிருந்து வந்திருக்கிறாள் என்றானே... அவளா?

அவனிடம் இவ்வளவு நெருக்கமாய் ஒட்டிக் கொண்டிருக்கி றாளே... இவர்கள் உறவு எப்படிப்பட்டதாய் இருக்கும்? அவனும் தடுக்காமல் அவள் தொடுவதை சந்தோஷமாய் அங்கீகரித்து கொண்டு தானே நின்றிருக்கிறான்?

அனுவிற்கு கோபத்தில் மூக்கு விடைத்தது.

சந்திரகாந்த் பர்ஸை திறந்து கிரெடிட் கார்டை எடுக்க முற்படும்போது... பர்ஸிலிருந்த ஒரு போட்டோவை மாலினி பார்த்துவிட்டாள்.



அவ்வளவுதான்...

அந்த பர்ஸை பிடுங்க முயற்சிக்க... சந்திரகாந்த் பர்ஸை பாக்கெட்டில் போட்டுக் கொண்டான்.

''சந்திரா... ப்ளீஸ்டா... அதைக் காட்டு!''

''நோ... நோ...!''

''என்கிட்டே என்ன ஒளிவு மறைவு? காட்டு...''

''வீட்லே காட்றேன்... உன்கிட்டே காட்டாம வேற யார்கிட்டே காட்டப் போகிறேன்?''

''நோ... அதுவரைக்கும் தாங்காது. இப்பவே... இந்த நிமிஷமே... நான் பார்த்தாகணும்!''

''ப்பா... என் உயிரை வாங்கறதுக்காகவே இன்டியா வந்தியா என்னருமை குட்டிச்சாத்தானே!'' அவள் தலையில் செல்லமாய் குட்டிவிட்டு பர்ஸை எடுத்து அவனிடம் காட்ட... மாலினியின் அழகான விழிகள் விரிய... லிப்ஸ்டிக் உதடுகள் ஆச்சர்யத்தில் வாய் பிளக்க... சந்திரகாந்த் எதிர்பார்க்காத அந்த தருணத்தில்... பச்சக்கென்று அவன் முகத்தை இழுத்து கன்னத்தில் முத்தமிட்டு தன் சந்தோஷத்தை வெளிப்படுத்த... கடை மொத்தமும் அவர்களை வேடிக்கை பார்த்தது.

அனுவிற்குள் எரிமலை வெடித்தது. அடுத்த கணம் அங்கிருந்து அகன்றாள்.

''இதுதான் உன்னோட பியான்ஸி கம் பிரின்ஸி அனு அலையஸ் அனுராகினியா?'' பர்ஸிலிருந்த அனுவின் போட்டோவைப் பார்த்து கேட்டாள் மாலினி.

''ம்...!'' என்று தலையாட்டினான் கன்னத்தை துடைத்தபடி.

''குட் செலக்ஷன்! அவளை நான் பார்க்கணுமே! என் அத்தை பையனை கவர்ந்துக்கிட்டு போன வள்ளியேன்னு... மிரட்டணுமே!''

''வள்ளியே... இல்லே.. கள்ளியே!'' என்று திருத்தினான்.

''ஏதோ ஒண்ணு... எப்ப பார்க்கறது?''

''ம்... ஏற்பாடு பண்றேன். கிளம்பலாமா?'' என்றான் சந்திரகாந்த்!

**உ**றக்கம் பிடிக்காமல் புரண்டு படுத்தாள் அனு! கண்களில் மறுபடி மறுபடி அந்த காட்சியே வந்தது.

ஒரு பெண் அவ்வளவு பேர் இருக்க... ஒரு ஆணுக்கு முத்தமிடுகிறாள் என்றால்... நிச்சயம் அவர்களுக்குள் காதலன்றி வேறென்ன?

அனுவின் இதயம் குமுறிக் கொண்டிருந்தது.

'சந்துரு... இவ்வளவுதானா நீ? அவளை மனதில் வைத்திருப்பதால்தான்... என்னிடம் இப்படி பட்டும் படாமல் பழகுகிறாயா? அதற்கெதற்கு ஐ லவ் யூ என்று சொல்லி என் இதயத்தை கிள்ளி விட்டு சென்றாய்? எனக்குள் எல்லாமே நீயாகிப் போனபின்பு என்னை உதறித் தள்ளுவது எந்தவகையில் நியாயம்? என் வீட்டினர் சொன்னதுபோல்... உன் பணக்கார புத்தியை காட்டிவிட்டாயா? இனி எப்படி இவர்கள் முகத்தில் விழிக்கப் போகிறேன்?''

காதலுக்கு நீ தரும் மரியாதை இவ்வளவுதானா சந்துரு? உனக்குத் தெரியுமா? தினமும் உன் குரலையாவது கேட்டாக வேண்டும் என்கிற தவிப்பில் உனக்கு போன் பண்ணி... உன் குரல் கேட்ட திருப்தியோடு போனை கட் பண்ணிவிடுவேன். அந்தளவு உன் மீது பைத்தியமாய் இருக்கிறேன் சந்துரு. நீ என்னை ஏமாற்றினால் அதை என்னால் தாங்கிக் கொள்ள முடியாது.

யார் வீட்டிலிருந்தோ ரேடியோவிலிருந்து சுசீலாவின் இனிமையான குரல் வழிந்து இவள் காதை எட்டியது.

''வசந்த கால தேரில் வந்து

வாழ்த்து கூறும் தென்றலே...



ராதையின் நெஞ்சமே

கண்ணனுக்கு சொந்தமே...''

இந்தப் பாடலைக் கேட்டு இன்னும் நெக்குருகிப் போனாள் அனு.

'நோ... சந்துரு... எனக்குத்தான்... எனக்கு மட்டும்தான். அவரை யாருக்காகவும் நான் விட்டுத் தரமாட்டேன்! அதனால் என்ன ஆனாலும் சரி!' தீர்மானித்தாள்.

**அ**டையாறில் ஒதுக்குப்புறமாய் இருந்தது அந்த பங்களா! ஆட்டோவிலிருந்து இறங்கினாள் அனு! அவள் இதுவரை அந்த பங்களாவிற்கு வந்ததில்லை. இதுதான் முதல்முறை. அவளை இங்கு இழுத்து வந்ததே... அவள் சந்திரகாந்த் மீது கொண்டிருந்த காதல்தான்.

வாட்ச்மேன் வழிமறித்தான்.

''யாரும்மா நீ?''

''நான்... மாலினியோட ஃப்ரண்ட்!''

''அம்மாவோட ஃப்ரண்டுங்களா... போங்கம்மா... உள்ளே போங்க!'' என்று பவ்யமாய் உள்ளே அனுப்பி வைத்தான்.

உள்ளே சென்ற அனு காலிங் பெல் சுவிட்சை அழுத்தினாள்.

கதவு திறந்தவள் மாலினிதான்.

அவளைப் பார்த்ததும் மனசு எரிந்தது அனுவிற்கு.

'என்ன உடை இது? சீ... ஒரு ஆண் இருக்குமிடம் என்று தெரிந்தும்.. இப்படி திறந்து போட்டுக்கிட்டு...'

மாலினி தொடையை கவ்விய ஷார்ட்ஸும், தொள தொள பனியனுமாய் படு கவர்ச்சியாய் இருந்தாள். மெல்லிய பனியன் உள்ளாடைகளை வஞ்சகமின்றி காட்டியது.

மாலினிக்கு அவளைப் பார்த்ததும் புரிந்து போனது. அனுராகினி என்று அவள்தான் போட்டோவில் பார்த்திருக்கிறாளே...!

''ஹலோ... உங்களுக்கு யார் வேணும்?'' என்றாள் வேண்டுமென்றே!''

''நீங்கதான்!''

''வாட்? நானா? என்னை எப்படி உங்களுக்குத் தெரியும்?''

''எப்படியோ தெரியும்!''

''இந்த சென்னையிலே எனக்கு சந்திராவைத் தவிர வேற யாரையும் தெரியாது. ஸோ... சந்திராதான் என்னைப் பற்றி உங்களிடம் சொல்லியிருக்கணும். அம் ஐ கரெக்ட்?''

''ம்...!''

''சந்திரா உங்களோட ஃப்ரண்டா?''

''ஆமாம்!''

''அவர் இப்ப வீட்லே இல்லே. ஆபீஸ்க்கு போயிருக்கிறார்!''

''ஐ நோ! நான் அவரைப் பார்க்க வரலே... உங்களைதான் பார்க்க வந்தேன்!''

''உள்ளே வாங்க!''

''நேரமில்லே... உங்ககிட்டே பேசவும் எனக்கு பிடிக்கலே! ஆனா வேற வழியில்லே பேசித்தான் ஆகணும்''

மாலினி புருவம் உயர்த்தினாள்.

''லிஸன்... மீ! நான் அனு! சந்துருவும் நானும் மனப்பூர்வமா நேசிக்கிறோம். நீங்க அவருக்கு அத்தை மகளாயிருக்கலாம். அதுக்காக... யாருமில்லாத வீட்லே அவரோட தனியா தங்கலாமா? நீங்க ஃபாரின்லே வளர்ந்திருக்கலாம். ஆனா, அந்த கல்ச்சர் வேற...



இந்த கல்ச்சர் வேற! சந்துரு இல்லாம என்னால வாழ முடியாது. உங்க மனசுல அப்படியொரு அபிப்ராயம் இருந்தா... தயவு செய்து மறந்துடுங்க. இன்னொரு பெண்ணோட வாழ்க்கையிலே குறுக்கிடாதீங்க. நான் இங்கே வந்த விஷயம் சந்துருவுக்கு தெரிய வேண்டாம். போய்டுங்க... தயவு செஞ்சு இங்கிருந்து போய்டுங்க!'' கண்ணீர் மல்க கையெடுத்து கும்பிட்ட அனுவை அதிர்ச்சியோடும், ஆச்சர்யத்தோடும் பார்த்துக் கொண்டிருந்தாள் மாலினி!

## 12

**உன்னைக் கேட்டது என் இளமை! பார்...**
**உன்னைக் கேட்டது என் நிலைமை.**
**பெண்மை கேட்டதும் கிடைக்கட்டுமே! இந்தப்**
**பெண்ணே எனக்குள் கிடக்கட்டுமே!**

''நீ ரொம்ப அதிர்ஷ்டசாலி சந்துரு!'' என்றாள் மாலினி.

''என்ன சொல்றே?''

''அனு உன்மேல உயிரையே வச்சிருக்கிறா என்கிற வார்த்தைக்கும் அதிகமா சொல்கிற அளவுக்கு அவ உன்னை நேசிக்கறா!''

''எனக்கும் ஆச்சர்யமாகத்தான் இருக்கு மாலு! அனு தன்னோட அன்பை இதுவரைக்கும் என்னிடம் வெளிப்படுத்திகிட்டதேயில்லே! முதல்முதலா... நான்தான் அவளிடம் என் காதலை வெளிப்படுத்தினேன்! அவ ஒரு புன்னகையோட என் காதலை ஏத்துக்கிட்டாலும்... இதுவரைக்கும் ஒரு நல்ல தோழியாதான் என்னிடம் பழகறா!''

''அனுவை முதல்முதல்ல எங்கே பார்த்தே?''

''அவனோட ஆபீஸ்லதான். அவனோட எம்.டி. என்னோட ஃப்ரண்ட்! அவனைப் பார்க்கப் போனப்பதான்... அனுவைப் பார்த்தேன்!''

''எனக்கும் உன்மேல ஒரு சந்தேகம் வருது!''

''என் மேலயா?''

''ம்... நீ நிஜமாகவே அனுவை லவ்பண்றியா? இல்லே டைம்பாஸிங்காக...?''

''ஷட் அப்... மாலு! அனு என் உயிர்... அவளை எந்தளவு நேசிக்கிறேன்னு எனக்கு மட்டும்தான் தெரியும்!''

''ஓஹோ...ஆனா...உங்க ரெண்டு பேருக்குள்ளே ஒரு ஸ்க்ரீன் இருக்கே சந்துரு! லவர்ஸ்க்குள்ளே... ஏனிந்த கேப்? ஏனிந்த ஈகோ? லவ்... ஒரு அற்புதமான விஷயம். ஒரு செகண்டை கூட மிஸ் பண்ணாம என்ஜாய் பண்ற விஷயம். என்ஜாய் மீன்ஸ் நாட் செக்ஸ்! சின்ன சின்ன உரசல்கள், ஊடல், கூடல்... எல்லாமே இருக்கணும். அதுதான் காதலோட வெளிப்பாடு!''

''புரியுது மாலு! எனக்குள்ளே காதல் கடல் அலைய மாதிரி பொங்குது. நான்தான் அடக்கிடறேன். ஏன் தெரியுமா? என்னோட அன்பு அவளுக்கு சலிப்பை ஏற்படுத்தி விடுமோன்னு தயங்கறேன். உனக்கொன்னு தெரியுமா மாலு? நான் அனுவுக்கு தினசரி லெட்டர் எழுதுவேன்... கவிதை எழுதுவேன்!''

''நீயா... நிஜமாகவா?''

''நம்பலே இல்லே... ஒரு நிமிஷம் இரு... வந்துட்டேன்...'' என்றவன் உள்ளே சென்று இரண்டு ஃபைல்கள், ஒரு நீலநிற டைரி சகிதம் வந்தான்.

''என்ன இது?''

''அத்தனையும் அனுவுக்கு நான் எழுதிய லெட்டர்ஸ்... படிச்சுப் பாரு!''



நிஜம்தான். தன் உள்ளக்கிடக்கைகளை கொட்டி, உருகி எழுதியிருந்தான்... அந்தந்த நாள் தேதி போட்டு.

''ஏன்... இதையெல்லாம் நீயே வச்சிருக்கே? அனுவுக்கு அனுப்பலையா?''

''ம்ஹூம்... அதான் சொன்னேனே... என் அன்பை கண்டு சலிச்சுப் போய்டக்கூடாது. திகட்டிடக்கூடாது.''

''இடியட் மாதிரி பேசாதே... அப்புறம் எதுக்காக மெனக்கெட்டு எழுதினே?''

''காட்டுவேன்... இப்பயில்லே... எங்க கல்யாணத்தன்னைக்கு... ஃபர்ஸ்ட் நைட்ல... அனு இதையெல்லாம் படிச்சிட்டு நெக்குருகி... என்னை நெஞ்சார தழுவிக் கொள்ளும் அந்த சுகத்துக்காக காத்திருக்கிறேன்!'' சந்திரகாந்தின் கண்கள் ஏக்கப் பார்வையோடு எங்கோ வெறித்து மீண்டது.

''எவ்வளவு பெரிய புத்திசாலியா இருந்தாலும், எவ்வளவு படிச்சிருந்தாலும்... காதல்ல விழுந்துட்டா... கொஞ்சம் சைல்டிஷ்ஷா... பைத்தியக்காரத்தனமாகவெல்லாம் நடந்துக்கறோம் இல்லையா?'' என்றாள் மாலினி.

''யெஸ்... யூ ஆர் கரெக்ட்!'' என்றான் சிரித்துக் கொண்டே!

''ஆமாம்... இதென்ன டைரி? இதிலே என்ன கிறுக்கி இருக்கிறே?''

''படிச்சுப்பார்!''

பிரித்துப் படித்தாள். புருவம் மேலேறியது.

''வாவ்... ஃபண்டாஸ்டிக்!'' காதல் ரசம் கொட்டும் கவிதைகள்.

''சந்துரு... உனக்கு கவிதை கூட எழுத வருமா என்ன?''

''என்னை கவிஞனா மாத்தின பெருமை என் அனுவுக்கே போய்ச் சேரும்! அவளை நினைச்சி எழுதினதுதான் இது அத்தனையும்!''

''இப்ப... முதல்முதலா எனக்கு அனுமீது பொறாமையா வருது சந்துரு!''

''உனக்கா?''

''ஆமாம்! உன்னை மாதிரி ஒரு லவ்வர் கிடைக்க அனு கொடுத்து வச்சிருக்கனும். பட், நவ் நோ சான்ஸ்! நானும் அங்கே... லாஞ் ஏஞ்சல்ஸிலேயே ஒரு ராஸ்கலை லவ் பண்ண ஆரம்பிச்சிட்டேன்!''

சந்துரு பெரிதாய் சிரித்தான்.

''அப்புறம் சந்துரு... நான் வந்த வேலை முடிஞ்சாச்சு இன்னும் ரெண்டு நாள்ல கிளம்பிடுவேன். அனுகிட்டே சொல்லு ரொம்ப சந்தோஷப்படுவா! அப்புறம் ஒரு சின்ன அட்வைஸ்! நீ எவ்வளவு காரணம் சொன்னாலும்... என்னால ஏத்துக்க முடியலே! அனு ஏங்கிப் போயிருக்கா. அவளை அடிக்கடி மீட் பண்ணு! சந்தர்ப்பம் கிடைச்சா... கிஸ் பண்ணு...''

''ஏய்...'' அடிக்க கையை ஓங்கினான். செல்லமாகத்தான்.

''அட... ரொம்பதான் நடிக்காதே! உன்னை மாதிரி சாமியார் வேஷம் போடற பசங்கதான்... சான்ஸ் கிடைச்சா பூந்து விளையாடுவாங்க...என்னோட ராஸ்கலும் உன்னை மாதிரிதான்... சாமியார் மாதிரி இருப்பான்... ஒருநாள் என்னாச்சுன்னா...!''

''ம்...'' கதை கேட்கும் சுவாரஸ்யத்துடன் ஆர்வமாய் கேட்டான்.

''ஐயே... கதையா சொல்றேன்? என்ன நடந்திருக்கும்னு உன் அனுகிட்டே போய் டெஸ்ட் பண்ணிப்பாரு...'' என்றாள் புத்தகத்தை அவன்மேல் எறிந்து.

லாவகமாய் அதை கேட்ச் பிடித்தவனுக்கு... அனுவை உடனே சந்திக்க வேண்டும் போலிருந்தது.

காற்றில்லாத இடத்தில்தான் விளக்கு கைகூப்பிய நிலையில் எரியும். ஆனால் அனுவின் மனசோ, புயல் காற்றிற்கு ஆடும் மரம் போல பேயாட்டம் ஆடிக் கொண்டிருந்தது.



கொழுந்து விட்டெரியும் நெருப்பாய் சந்தேகத்தீ அவள் இதயத்தில் எறிந்து கொண்டிருந்தது.

'வீம்பாய் வீட்டில் உள்ளவர்களிடம் மணந்தால் சந்துருவை மணப்பேன். இல்லாவிட்டால் எனக்கு வாழ்க்கையே இல்லை என்று பேசியாயிற்று. ஆனால், இங்கே முதலுக்கே மோசம். இது காதல்தானா? சந்துருவின் மனதில் நான் காதலியா, சிநேகிதியா? ஒன்றுமே புரியவில்லை. எல்லோரும் சொல்வது போல்... சந்தர்ப்பம் அமையும்போது தன் மோகத்தை தீர்த்துக் கொண்டு... வெட்டியெறியும் வாழை மரத்தைப்போல் வேண்டாத என் தொடர்பையும் வெட்டியெறிந்து விடுவானோ?'

பணக்கார அத்தை மகளுடன் கும்மாளம் போட்டுக் கொண்டிருக்கிறான். என் மீது நிஜமான காதல் இருந்திருந்தால்... அவளுடன் தனியே ஒரே வீட்டில் இருந்திருப்பானா?

நீலா சொல்வதையெல்லாம் அலட்சியப்படுத்தினோமே! இப்போதுதானே புரிகிறது? விளையாட்டு புத்தியோடு இருந்தாலும் கிஷோர்தான் நல்ல ஆண்மகன். நல்ல காதலன். காதலித்தவளை கல்யாணம் பண்ணிக் கொண்ட சிறந்த இளைஞன். நாளுக்கு நாள் சந்திரகாந்தை பற்றிய வேண்டாத கற்பனைகள் வளர்ந்து கொண்டே சென்றன.

இன்று திடீரென சந்துருவிடமிருந்து போன் வந்தது... அதிசயமாய்.

''ஆஃப் டே லீவு போட்டுவிடு அனு! வெளியில் போகிறோம் ஒக்கே...!'' உற்சாகமாய் பேசியதை கேட்டு ஆச்சர்யம் அனுவிற்கு.

சொன்னால் போல் சரியான நேரத்திற்கு வந்து அவளை காரில் அழைத்துச் சென்றான்.

அனு வழக்கம்போல் அமைதியாக வந்தாள். இம்முறை சந்துரு அவளை ஓரக்கண்ணால் பார்க்காமல் நேரடியாக பார்த்து ரசித்தான்.

'இவள் என்னவள். எனக்கே எனக்கானவள். ரேஷ்மா போலில்லை இவள். என்னை நிஜமாய் நேசிப்பவள். ஒவ்வொரு நொடியும் எனக்காக வாழ துடிப்பவள். மாலினி சொன்னதுப்போல் காதல் என்னும் அழகான உணர்வை என்னுடைய முட்டாள்தனத்தால் பெற்று உணராமல் எழுதி படித்திருக்கிறேன். அனு... இன்று முதல் நான் புதுமனிதன். நான் உன்மீது எவ்வளவு நேசம் வைத்திருக்கிறேன் என்பதை உணர்த்தி அதனால் உன் முகம் ஆச்சர்யத்தில் விரிய... அந்த அழகான முகத்தை கைகளில் ஏந்தி... முதன்முறையாய் முத்தமிடப் போகிறேன்!' நினைக்கவே ஆகாயத்தில் பறப்பது போலிருந்தது.

''அனு... எனக்கு பசிக்கிறது. உனக்கும் பசிக்கும். ஹோட்டலுக்குப் போகலாமா?''

''எனக்கு பசிக்கவில்லை!'' என்றாள் ஒற்றை வரியில்.

''எனக்காக சாப்பிடு... ப்ளீஸ்!'' அவள் பதிலை எதிர்பார்க்காமல் உயர்தர ஹோட்டலின் வாசலில் காரை நிறுத்தினான்.

மௌனமாய் இறங்கி அவன் பின்னே சென்றாள். பெயருக்கு சாப்பிட்டு வைத்துவிட்டாள்.

அவள் கோபம் உணர்ந்தவன் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

''அனு...!''

''ம்...''

''நான் ஒன்றை சொல்லட்டுமா?''

''ம்...''

''ஐ.. லவ் யூ!''

''.......!?''

சடாரென நிமிர்ந்தாள்.



'என்னாயிற்று இவனுக்கு? எனினும் அந்த வார்த்தை அவள் உயிர் வரை ஊடுருவியது.

''மாலினி ஊருக்கு கிளம்பி விட்டாள்!''

''அதனாலென்ன?''

''கிளம்பறதுக்கு முன்... என்னை ரொம்ப புகழ்ந்து விட்டுப் போனாள்...''

''.......''

''என்னன்னு கேக்க மாட்டியா? சரி... நானே சொல்றேன். சந்துரு.. நீ ரொம்ப லக்கிஃபெல்லோ... அனு மாதிரி ஒரு ஏஞ்சலை கல்யாணம் பண்ணிக்க... புண்ணியம் பண்ணியிருக்கணும். நீ பண்ணியிருக்கன்னு...உன் புராணம் தான்! என்னை மட்டுமில்லே... மாலினியையும் நீ கவுத்திட்டேன்னு புரிஞ்சுக்கிட்டேன்'' சிரிப்பை வாய்க்குள் மென்றபடி குறும்பு மின்ன பார்த்தான்.

அந்த பார்வையை சந்திக்கும் தைரியமற்று நாணத்தில் முகம் சிவக்க தலைகவிழ்ந்தாள்.

''என்ன அனு... பேசாம இருக்கிறே?''

''மா... மாலினி... வேற ஒண்ணும் சொல்லலையே...!''

''உன்கிட்டே பொய் சொல்ல மனசு வரலே அனு! மாலு என்னிடம் எல்லாமே சொன்னா...!''

''ஸாரி...'' என்றாள் தாங்க முடியாத உறுத்தலுடன்.

''எதுக்கு ஸாரி? நானில்லே தாங்க்ஸ் சொல்லணும்.. உன்னோட அன்பை முழுசா புரிஞ்சுக்க வெச்சதுக்கு... தாங்க்ஸ் அனு!''

''......''

மனம் இலேசானது போல் உணர்ந்தாள் அனு! தன்னை சுற்றிலும் சூழ்ந்திருந்த இருள் விலகியதில்... முகம் மலர்ந்தது.

''நீ உன் அன்பை புரிய வச்ச மாதிரி... நான் உன்மேல வச்சிருக்கிற அன்பை புரிய வைக்க வேணாமா? அதற்கான ஆதாரங்களை காட்டணும். ஸோ... உன்னை நான் இப்ப... நம்ம வீட்டுக்கு கூட்டிகிட்டு போகப் போகிறேன்!'' 'நம்ம' என்பதை அழுத்தி சொன்னான்.

என்னவாக இருக்கும் என்கிற எதிர்பார்ப்பு அனுவிடம்.

**ப**ங்களா பளிச்சென்று... கண்களை உறுத்தாத ஒரு சில ஓவியங்களுடன் சுத்தமாக இருந்தது.

அனுவை தன்னறையில் அமர வைத்த சந்திரகாந்த் அவளுக்கு பக்கத்தில் அமர்ந்து... அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''வீடு தேடி வந்து மாலுவிடம் சண்டை போடும் அளவிற்கு என் மீது காதலா அனு?'' தாபமாய் கேட்டான்.

வெட்கமாய் இருந்தது. இதற்கு என்ன பதிலை சொல்ல முடியும்? அவள் வேறு எல்லாவற்றையும் உளறி கொட்டிவிட்டு போயிருக்கிறாள்?

''சொல்லு... என்னை பார்த்து சொல்லு!'' இயல்பாய் அவள் தொடையில் கைவைத்தான்.

சிலிர்த்தாள் அனு! அவன் தொட்ட இடம் அண்டார்டிகா கண்டத்தின் பனிக்காற்றால் ஒத்தடம் கொடுத்தது போல் இருந்தது. தடுக்க முயன்ற கையை இறுக பற்றினான்.

அவளிடமிருந்து வீசிய மெல்லிய நறுமணம் அவனை அவளருகே இழுத்தது.

சந்துரு அவள் கழுத்தில் முகம் புதைத்தான். அனு கிறங்கிப் போனாள்.

அவன் கைகள் முழு சுதந்திரம் பெற்று அவளை தன்னிரு கைகளுக்குள் அடக்கிக் கொள்ள முயன்றன.



எதிர்பாராத மோக தாக்குதலின் தளர்ந்து போன அனுவினால் எதிர்க்க முடியவில்லை. முகத்தோடு முகம் பொத்திய சந்திரன் அவளை முழுதாய் எடுத்துக் கொள்ள முயன்றான்.

அவளை எதற்காக அழைத்து வந்தோம் என்பதையே மறந்துப் போனான்.

அனு... திடீரென விழித்துக் கொண்டாள். சந்துருவே எதிர்பார்த்திருக்க மாட்டான். அவனை ஒரே தள்ளாய் தள்ளி... எழுந்து கொண்டாள்.

''அ..னு!'' அதிர்ச்சியுடன் பார்த்தான்.

''இவ்வளவுதானா? நீங்க இவ்வளவுதானா சந்துரு? ரொம்ப நல்லவர் போல் நடித்து, தந்திரமாய் இங்கே அழைச்சிட்டு வந்து... இதுநாள் வரைக்கும் எதற்காக என்னிடம் பழகினீர்களோ... அதை நிறைவேற்றிக் கொள்ளத்தானா... காதல் என்கிற போர்வை தேவைப்பட்டது? என்னை ஏமாற்றி கைகழுவி விடதானே திட்டம் போட்டீர்கள்? ச்சீ... என்ன மனுஷன் நீங்க? உங்களை நம்பினதுக்கு நீங்கள் தரும் பரிசா இது? எல்லோரும் சொன்னபோது நம்பவில்லை. ஆனா, இப்ப நம்பறேன்! நீங்க ஒரு அயோக்கியன்... ஃப்ராடு... ச்சே!'' கோபத்தில் முகம் சிவக்க... வழிந்த கண்ணீரை துடைத்தெறிந்து விட்டு போய் விட்டாள் அனு.

அவளை தடுக்க முடியாத அதிர்ச்சியில் [illegible] போன சந்திரகாந்த் 'அட ராமா!' என்று தலையில் கைவைத்துக் கொண்டான் தன் அவசர புத்தியை நொந்து!

32967
5009089

## 13

விழிகளின் கவிதை [illegible] புரியும்
விரல்களின் மொழியை [illegible] அறியும்
உறவுக்கு விடுகதை இரவுகள் போடும்!
இளமைக்கு விடுமுறை இல்லை எப்போதும்!

அனுவால் நம்பவே முடியவில்லை! ஆனால் அம்மாவும் அப்பாவும் சொல்லும்போது நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. பொங்கி...பொங்கி புண்ணாகிப் போயிருந்த மனசுக்கு அவர்கள் சொன்ன செய்தி அருமருந்தாய் இருந்தது.

மல்லிகாவின் முகத்தில் இப்போதுதான் மலர்ச்சியைப் பார்க்கிறாள். விரோதம் மறைந்து பழைய அன்பு பேச்சில் வெளிப்பட்டது. அப்பா அவள் தலையை கோதி, ''நீ எப்பவும் அதிர்ஷ்டசாலிதான் அனு! உன் மனசுப்படியே எல்லாமே நடக்கும்'' என்றார் நெகிழ்ச்சியுடன்.

நடந்தது இதுதான்!

அனு அலுவலகத்திலிருந்து திரும்பி வருவதற்குள் சந்திரகாந்த் அவள் வீட்டிற்கு வந்து அவள் பெற்றோரை சந்தித்து பேசி திருமணத்திற்கு நாள் குறித்து விட்டுச் சென்றிருக்கிறான்.

அவனுடைய பெற்றோர் உயிருடன் இல்லை. முக்கிய உறவினர்களும் வெளிநாட்டில் இருப்பதால் நண்பன் விவேக்குடன் வந்திருந்தான்.

அவனுடைய அப்ரோச் அனுவின் பெற்றோருக்குப் பிடித்து விட்டது. சந்திரகாந்த் உடனடியாக திருமண நாளை குறிக்கும்படி கேட்டுக் கொண்டு புறப்பட்டு விட்டான்.

பணக்காரன் என்கிற மமதை இன்றி வீடு தேடிவந்து பெண் கேட்ட அவன் மல்லிகாவின் மனதில் உயர்ந்த இடத்தில் அமர்ந்துவிட்டான்.

ரேவதிக்குதான் பற்றிக்கொண்டு வந்தது. அண்ணனை ஏமாற்றி விட்டார்கள். மகாராணி போல் வாழப் போகிறாள். பாவம்... அண்ணன் மனசு எவ்வளவு வேதனைப்படும்?

எப்படியோ... தங்கைக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைந்தால் சரிதான் என்று விஷ்ணுவும் சகஜ நிலைக்கு வந்துவிட்டான்.



தேவிகாவிற்கு போன் பண்ணி விஷயத்தை சொன்னாள் மல்லிகா!

''அப்படியா?'' என்றாள் சுவாரஸ்யமின்றி. தன் புருஷனைவிட உயர்ந்த அந்தஸ்தோடு அந்த வீட்டிற்கு இளைய மருமகன் வந்தால்...தன் புருஷனின் மரியாதை குறைந்து விடுமே என்கிற துர்எண்ணம்.

ஆனால் அனுவோ... எதைப் பற்றியும் யோசிக்கவில்லை. அவள் சிந்தையெல்லாம் நிறைந்திருந்தவன் சந்திரகாந்த் மட்டுமே! அவனை நினைத்தால் வியப்பாய் இருந்தது.

அவனைப் பற்றிய என் அபிப்ராயமெல்லாம் முற்றிலும் தவறானவை என்பதை எவ்வளவு அழகாக எனக்கு உணர்த்திவிட்டான்?

காதலில் தேனும் இருக்கிறது; கடுக்காயும் இருக்கிறது. நான் ஏன் கசப்பை மட்டுமே சுவைத்துப் பார்த்து குறை கூறுகிறேன்?

வயதும் காதலும் ஒன்று. இரண்டையும் மறைக்கவும் முடியாது. மறுக்கவும் முடியாது.

மனச்சிறையை விட்டு வெளிவராத காதல் சிகரமேறாது.

சந்திரகாந்த் இவற்றை தெளிவுபட உணர்ந்திருந்ததால்தான் தன் கம்பீரம், அந்தஸ்து, ஈகோ எதையும் பொருட்படுத்தாது... அனு என்கிற காதல் சிலைக்காக... அத்தடைகளை உடைத்தெறிந்து வந்துவிட்டான்.

'ஆனால் சந்தேகம் என்கிற கூரிய ஆயுதத்தை மட்டுமே வைத்துக் கொண்டு காதல் களத்தில் இறங்கிய நான் எங்கே? அன்பை ஆயுதமாக வைத்து களத்தில் இறங்கிய என் சந்துரு எங்கே? சந்துரு... ஐ லவ் யூ சந்துரு. நீ எனக்கு மட்டுமே சொந்தமான உயிர். உன் மேலுள்ள அதிகப்படியான காதல்தான்... உன்னை சந்தேகிக்க வைக்கிறது. உன்னை பார்க்க வேண்டும்... உடனே பார்க்க வேண்டும் போல் இருக்கிறது சந்துரு!' அனுராகினியின்

இதயம்... ஆவலில் துடித்தது. அவன் நினைவு உயிர் வரை இனித்தது.

புதிதாய் ஆரம்பிக்கப்பட்ட பிக்னிக் ஸ்பாட்! கூட்டம் அதிகமின்றி... இங்கொன்றும், அங்கொன்றுமாய் ஜோடி ஜோடியாய், இடுப்பிலும், கழுத்திலும் கைபோட்டு அணைத்தபடி அலைந்த காதலர்களை மட்டுமே காண முடிந்தது.

ஏகாந்தமான இயற்கை சூழல்! தென்னை, சவுக்கு, நடுநடுவே ஆலமரம் கூட இருந்தது. சலசலத்து ஓடும் அருவி! காட்டேஜ் வசதி கூட இருந்தது.

முகத்தில் சாரல் விழும் சிறிய இடைவெளிவிட்டு அருவியின் அழகை ரசித்தபடி அமர்ந்திருந்தனர் சந்திரகாந்தும், அனுவும்!

''ரெண்டு கால்கள் தடுமாறலாம் அனு! ஆனா, ஒரு நாக்கு மட்டும் என்னைக்கும் தடுமாறவே கூடாது. என்னைக்கு உன்னைப் பார்த்தேனோ... அன்னைக்கே முடிவு பண்ணிட்டேன்... நீதான் என் வொய்ஃப் என்று! நான் உன்னை ஏமாற்றுவேனா?''

''அப்புறம் ஏன்... என்னிடம் சரியாப் பேசாம, பார்க்காம... எப்படியிருக்க முடிஞ்சது உங்களால்? என்னால் முடியலே சந்துரு! அதனால்தான் சந்தேகப்பட்டுட்டேன் ஸாரி!''

''அதுக்கும் காரணமிருக்கு அனு! உன்னை ஒரு செகண்ட் கூட மிஸ் பண்ணாம உன்னோடவே இருக்கத் தோணும். ஆனா, பார்க்க முடியாதபடி என் தயக்கம் தடுத்துவிடும். உன்னை நினைச்சி எழுதின கவிதைகள், கடிதங்கள்.. அத்தனையும் இதிலே இருக்கு படிச்சுப்பாரு! அப்ப தெரியும்... நான் உன்மேல வச்சிருந்த அன்பும் ஆசையும்! இதையெல்லாம் காட்டத்தான் அன்னைக்கு உன்னை வீட்டுக்கு அழைச்சிட்டு வந்தேன். தனிமை, என்னை கொஞ்சம் தடுமாற வைத்துவிட்டது. நீயும், என்னை தப்பா புரிஞ்சுக்கிட்டு... போய்ட்டே..!''



சந்துரு கொடுத்த கடிதங்களை வியப்புடன் வாங்கி படிக்க ஆரம்பித்தாள் அனு! படிக்க... படிக்க... வெயிலில் வைத்த வெண்ணையாய் உருகிப் போனாள்!

''இவ்வளவு... இவ்வளவு அன்பையும் இதயத்துல புதைச்சு வச்சுக்கிட்டா... என்கிட்டே சர்வ சாதாரணமா நடந்துக்கிட்டீங்க? எப்படி முடிஞ்சது சந்துரு?'' ஆச்சர்யமாய் கேட்டாள்.

''பயம்...!''

''பயமா? என்ன பயம்? யாரிடம் பயம்?''

''உன்னிடம்தான்!''

''புரியலே சந்துரு... என்னிடம் என்ன பயம்?''

''நீயும் ரேஷ்மா மாதிரி என்னை மட்டமா எடை போட்டுருவியோன்னு பயம்!''

''ரேஷ்மாவா? யார் அது?'' அனுவின் முகம் மாறியது.

சந்துரு சில கணங்கள் தயங்கினான்.

''சொல்லுங்க... யார் அது?''

''அனு... உன்கிட்டே நான் ஒரு விஷயத்தை மறைச்சதுக்காக முதல்ல மன்னிப்பு கேட்டுக்கறேன். ரேஷ்மா வேற யாருமல்ல.. ஒரு காலத்தில் என் காதலி...!''

''எ...என்ன?'' சுக்கு நூறாய் உடைந்தது மனசு.

''ஆமாம் அனு! எனக்கு அம்மா இல்லே. சின்ன வயசிலேயே என்னை விட்டுப் போய்ட்டாங்க. வழக்கம் போல எல்லா பணக்கார அப்பாக்களைப் போலவே... எங்கப்பாவும் பிஸினஸ், பணம்னு நேரத்தை செலவழிக்க தெரிஞ்சதே தவிர, என்னோட ஏக்கத்தை உணராம... நடந்துக்கிட்டார். கேட்டதெல்லாம் கிடைச்சது... அன்பைத் தவிர.

அப்பாவும் இறந்துப் போனார். படிப்பை முடிச்ச கையோட பிஸினஸ் என் வசம் வந்தது. அந்த சமயத்திலேதான் என் நண்பனோட தங்கை ரேஷ்மாவை சந்தித்தேன். காதலித்தேன். காதலித்தோம். ரேஷ்மா அல்ட்ரா மாடர்ன் கேர்ள். மும்பையிலே படிச்சவ. அவளுக்கு நிறைய பாய்ஃப்ரண்ட்ஸ் இருந்தாலும்... நான் அதை பொருட்படுத்தலே. அந்தளவு நம்பிக்கையும், காதலும் வச்சிருந்தேன். பிஸினஸை மறந்தேன். ஒருநாளில் இரண்டு பொழுதை அவளுடன் கழித்தேன். அன்புக்காக அவள் பின்னாடி அலைந்தேன். ரேஷ்மாவுக்கு என் அன்பு திகட்டலையும், ஏளனத்தையும் உருவாக்கிடுச்சு.

திடீர்னு ஒருநாள், ''நாம பிரிஞ்சிடலாம் காந்த்!'' என்றாள்.

அதிர்ந்தேன். காரணம் கேட்டேன். அதற்கு அவள் சொன்ன காரணம் என்ன தெரியுமா?

''ஆம்பளைன்னா... தாமரை இலை தண்ணீர் மாதிரி இருக்கணும். இனிப்புல மொய்க்கிற எறும்பா இருக்கக்கூடாது. உனக்கு காதலிக்க தெரியலே! எந்நேரமும் நூல் பிடிச்ச மாதிரி என் பின்னாடியே அலையறே! உனக்கு போரடிக்கலே! எனக்கு போரடிச்சு போச்சு. உன் முகத்தையே பார்த்து பார்த்து அலுத்துப் போச்சு. ஆம்பளைக்குன்னு ஒரு கம்பீரம் இருக்கு. இவன் நம்மை பார்க்க மாட்டானான்னு பெண்ணை ஏங்க வைக்கணும். இன்னைக்காவது நம்மளை சந்திக்க வரமாட்டானான்னு தவிக்க வைக்கணும். போன் பெல் அடிக்கறப்பவெல்லாம் இது அவனா இருக்கக்கூடாதான்னு பிரார்த்திக்க வைக்கணும். ஆனா... நீ? என் முகத்தை விட்டு கண்களை இப்படி அப்படி நகர விடறதில்லே. பிஸினஸை மறந்து எனக்கு முன்னாடியே வந்து காத்திருக்கிறே! போதாதுக்கு உன் போன் வந்தாலே... இதென்னடா ரம்பம்னு நினைக்கற அளவுக்கு மணிக்கணக்கா பேசி அறுக்கறே! அப்படி என்னதான் இருக்கு நம்ம காதல்ல? வெறுத்துப் போச்சு! லவ் இஸ் நத்திங்னு உணர வச்சிட்டே! இதுக்கு மேல லவ்ல வேற ஒண்ணும் இல்லேன்னு புரிய வச்சதுக்கு தாங்க்ஸ்! வேணாம்... விட்ரு!'' என்று



என்னை, என் அன்பை, காதலை தரக்குறைவா விமர்சனம் பண்ணினா. என்னால தாங்கிக்க முடியலே அனு! நத்தை மாதிரி கருண்டுப் போய்ட்டேன் அனு! எனக்குள்ளே ஒரு இன்ஃப்ரியாட்டி காம்ப்ளக்ஸை விதைச்சிட்டுப் போய்ட்டா! ஆனா உன்னை... எப்படின்னு சொல்லத் தெரியலே அனு... அந்தளவு நேசிக்கிறேன். நீயும் என்னை விட்டுட்டு போய்டுவியோங்கற பயத்துலதான்...நான் என்னையே கட்டிப் போட்டுக்கிட்டேன்... ஸாரி... அனு!''

அனுவிற்குள் எரிமலை வெடித்துக் கொண்டிருந்தது.

''என்ன அனு பேசாமிருக்கே?'' அவள் கையைத் தொட்டான்.

''தொடாதீங்க!'' அவன் கையை உதறினாள்.

''அ..னு!''

''எவ்வளவு பெரிய உண்மைய மறைச்சிட்டீங்க? ரேஷ்மாவை காதலிச்ச விஷயம் எனக்கு முன்பே தெரிஞ்சிருந்தா...?''

''தெரிஞ்சிருந்தா?''

''உங்களை நான் ஏறிட்டும் பார்த்திருக்க மாட்டேன்! என்னைப் பத்தி உங்களுக்கு தெரியாது. எல்லாத்திலேயும் முதல் இடத்தை பிடிக்க ஆசைப்படறவ நான்! படிப்புலேயும் சரி... பண்புலேயும் சரி! நான் எப்படி என் மனசை கற்பிழக்காம வச்சிருந்தேனோ... அதே மாதிரி உங்க மனசும் இருக்கணும்னு ஆசைப்பட்டேன்!''

''இப்ப நான் ரேஷ்மாவை மறந்திட்டேன் அனு!''

''ஆனா... முதல்முதல்ல உங்க இதயத்துல அவளைத்தானே அனுமதிச்சிருக்கீங்க? எப்படியிருந்தாலும் அவளுக்குப் பின்னாடிதானே நான்?''

''ஐ.. லவ்.. யூ.. அனு!'' என்றான் தவிப்பாய்.

''டோன்ட் சேன்ஞ் த டாபிக்! அவளுக்குப் பின்னாடிதானே நான்?'' என்றாள் ஆத்திரத்துடன் கண்ணீர் மல்க.

''ப்ளீஸ்... ப்ளீஸ்... அண்டர்ஸ்டான்ட் மீ! ஐயம் ஃபார் யூ... எவர் ஃபார் யூ!''

''வாழ்க்கையிலே முதல்முதலா நிகழற எதுவுமே யாராலும் மறக்க முடியாது மிஸ்டர் சந்துரு! முதல்முதலா ஸ்கூலுக்குப் போனது, டீச்சரிடம் அடிவாங்கியது, காதலிச்சது எதுவுமே மறக்க முடியாது. உங்க முதல் காதலி ரேஷ்மாவை நிச்சயமா உங்களால மறக்க முடியாது. அந்த இடத்திலே நான் எப்படி? என்னை ஏமாத்திட்டீங்க சந்துரு... நல்லா ஏமாத்திட்டீங்க. ஐ ஹேட் யூ... ஹேட் யூ!''

வெறிபிடித்தவளாய் கத்தினாள்.

பயந்து போனான் சந்திரகாந்த்!

''ப்ளீஸ்... ரிலாக்ஸ் அனு!''

''விடுங்க...'' என்று கையை தட்டிவிட்டு எழுந்து போனாள். மறுபடி கையைப் பிடித்திழுத்தான்.

''விடுங்க... நீங்க ஒரு நல்ல ஆம்பளையாய் இருந்தால்... கையை விடுங்க! உங்களை காதலிச்சதுக்கு நான் செத்து தொலைஞ்சிருக்கலாம்.''

சுரீர் என அடிவாங்கிய வலியுடன் கையை விட்டான். தலையை கவிழ்ந்துக் கொண்டான். அவன் இதயம் வேதனையில் வெம்பித் தவித்தது.

அனு ஆத்திரம் தாங்காமல் நடந்தாள். அழுகை பொங்கி வந்தது. அவனை விட்டு விலகிச் செல்லவும் மனமின்றி, ஒட்டிச் செல்லவும் மனமின்றி... ஒரு ஆலமரத்தின் பின்னே அமர்ந்து கொண்டு சத்தமின்றி அழ ஆரம்பித்தாள்.

'ஏமாற்றி விட்டானே! அவன் இதயத்தில் ஏற்கனவே ஒருத்தி! ச்சே!' எரிச்சலுடன் காலடியில் இருந்த பெரிய கல்லை தூக்கி அருவியில் எறிந்தாள்.



'தொப்'பென்ற சப்தம்... நிசப்தமான அந்த இடத்தில் இடியோசையாய் கேட்டது.

சந்திரகாந்த் திடுக்கிட்டு திரும்பினான்.

'அனு எங்கே?'

''அனு... அனு..!'' கத்தினான்.

அனு அந்த இடத்தை விட்டு அசையவில்லை.

'கத்தட்டும்... நான் மூச்சு விடப் போவதில்லை!'

கண்ணுக்கெட்டும் தூரம் வரை அனு இல்லாமல் போகவே... பயம் பற்றிக் கொண்டது சந்திரகாந்தை.

'பாவி... அவசரப்பட்டு தண்ணீரில் விழுந்து விட்டாளோ?' தவறான முடிவிற்கு வந்தவனின் உயிரும் உடலும் பதறியது.

நீச்சல் தெரியாத சந்திரகாந்த்... ''அ...னு...'' என்றலறியபடி அருவியில் பாய்ந்தான்... இல்லாத அனுவை காப்பாற்ற!

அவன் குரல் அனுவைத் தூக்கி வாரிப் போட வைத்தது. எழுந்தோடி வந்தாள்.

அருவியில்... அவள் கண்ணெதிரே... அவளுக்கு சொந்தமான.. சந்துரு... கைகளையும், கால்களையும் உதைத்தபடி...

''ச..ந்..து..ரு!'' அனுவின் அலறல் அருவியையே அதிர வைத்தது.

**அலைகடலைத் தழுவும் அடிவானம் அல்லவா? என்**

**அருகில் வந்து அணைத்துப் பார்க்கும் ஆசை அல்லவா?**

**கலைந்து விட்டால் கூந்தல் கூட மஞ்சம் அல்லவா? நாம்**

**கலந்து விட்டால் வார்த்தை அங்கே பஞ்சம் அல்லவா?**

## 14

மாலை நேர சூரியனாய்... தன் உணர்வுகளை தொலைத்த வளாய்... வெறித்த பார்வையுடன் பிரமை பிடித்தவளாய்... அமர்ந்திருந்தாள் அனு!

பெற்றவர்கள் அவளைப் பார்த்து கண்ணீர் வடித்தனர்.

''அனு... சாப்பிட வாம்மா!'' என்றழைத்தால்...

''சந்துரு... சந்துரு எங்கேம்மா? என் சந்துரு எங்கேம்மா?'' என்று பதிலுக்கு கேட்பாள்.

சாப்பிட அழைத்தால்... சந்துரு! குளிக்க அழைத்தால் சந்துரு! அவள் ஊண், உறக்கம், இயக்கம், எல்லாமே சந்துருதான்!

'அனூ... அனூ...' கையையும், காலையும் உதறியபடி, மரண பயத்தோடு பயந்த விழிகளோடு, சந்துரு அலறிய அலறல்... அவள் நாடித் துடிப்புடன் கலந்து விட்டது.

''ஐயோ...சந்துரு... வந்துடுங்களேன்... வந்துடுங்களேன்'' இப்படியும் அப்படியுமாய் அனு ஓடிய ஓட்டம் கொஞ்ச நஞ்சமல்ல.

ஆனால், அரைமணி நேரத்திற்கு பின் சந்திரகாந்த் சடலமாய்தான் அவளிடம் வந்து சேர்ந்தான்.

''ஐ.. லவ் யூ அனு! ஐயம் ஃபார் யூ... எவர் ஃபார் யூ!'' என்று சொன்ன உதடுகள்... ஈ மொய்ப்பது கூட உறைக்காமல் லேசாய் பிளந்தபடி... சலனமற்று இருந்தது... அனுவால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

சந்துருவின் மேல் வைத்திருந்த காதல்... கைக்கெட்டியும் வாய்க்கெட்டாமல போன அவலம், தன் கண்ணெதிரே தன் மனம் கவர்ந்தவன் மாண்ட அதிர்ச்சி யாரால்தான் தாங்கிக் கொள்ள முடியும்?



உயிருக்குயிராய் காதலித்தவனை, பிற பெண்ணின் கணவனாகப் பார்க்கலாம், அயோக்கியனாகப் பார்க்கலாம், ஆனால் உயிரில்லாமல் பார்க்க முடியுமா? தாங்கிக் கொள்ளத்தான் முடியுமா?

அனுவினால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. நடந்தவை கனவென்றே நம்பினாள்.

அவளின் வெறித்த பார்வையும் அவ்வப்போது திடுக்கிட்டு அலறுவதும், அச்சம் தருவதாய் இருந்தது. விஷ்ணுவின் குழந்தைகள் அனுவைப் பார்த்து அலறின.

வீட்டில் பிரச்னைகள் தலைதூக்கின. ரேவதி கணவனிடம் சண்டை போட்டாள். விஷ்ணு பெற்றோரிடம் சண்டை போட்டான்.

''சின்னக் குழந்தைங்க இருக்கிற வீட்டில்... பைத்தியம் இருக்கக்கூடாது. நாளைக்கு அவளால அசம்பாவிதமா... ஏதாவது ஆயிடுச்சின்னா...?''

''விஷ்ணு... அனுவையா பைத்தியம்னு சொல்றே.''

''இல்லேன்னு எதை வைச்சு மறுப்பேம்மா? நேத்து தண்ணித் தொட்டியிலே ஜக்கை போட்டுட்டு... சந்துரு... சந்துருன்னு அலறினாளே... இது புத்திசாலி பண்ற காரியமா?''

''அதில்லே... வந்து...''

''அம்மா... ப்ளீஸ்... வீண் பிரச்னை வேண்டாம். ரேவதியும் ஓரளவு வசதியான குடும்பத்திலேர்ந்து வந்தவதான். அவளால இதையெல்லாம் சகிச்சுக்க முடியாது. அனுவோட நன்மைக்காகவும் சேர்த்து சொல்றேன்... அனுவை மென்ட்டல் ஹாஸ்பிடல்ல சேர்த்துடலாம். அப்பத்தான் குணமாகும்.''

''வி..ஷ்...ணு!'' நடுங்கினாள் மல்லிகா.

''இல்லேன்னா... நாங்க தனியா போய்டறோம். என்ன சொல்றே?''

அவளால் என்ன சொல்ல முடியும்? சௌந்தரபாண்டியனும் வாயை மூடிக் கொண்டிருக்க வேண்டியதாயிற்று. காரணம் அனுவின் அட்டகாசம்! குணமாகி வரட்டும் என்று மனதை இரும்பாக்கிக் கொண்டு அனுராகினியை பைத்தியக்கார ஹாஸ்பிடலில் சேர்த்துவிட்டனர்.

அனு பிரமையின் பிடியில் சிக்கியிருந்தாளே... தவிர... பைத்தியமில்லை. ஒரு நல்ல சைக்ரியாட்ரிஸ்டிடம் அழைத்துச் சென்றிருந்தால்... அனு பழைய அனுவாக மீண்டு வந்திருப்பாள். ஆனால் மனநிலையை அதிகமாய் பாதிக்கச் செய்யும் சூழ்நிலையில் அவளை கொண்டு விட்டதுதான்... மீண்டு வரமுடியாமல் பத்தோடு பதினொன்றாய் கலந்து விட்டாள் அனுராகினி. பொய்யை பத்து முறை திரும்ப திரும்ப சொன்னால் உண்மையாகி விடுகிறதல்லவா? அதே போல் பைத்தியமல்லாத அனு மற்ற பைத்தியங்களின் நடவடிக்கையில் ஈர்க்கப்பட்டு பைத்தியமாகிப் போனாள். அவள் நினைவலைகளின் மேல்... மேலும் ஒரு திரைவிழ... அவள் பாதிப்புகள் அடிமனதில் தங்கிவிட... சந்துரு... காதல்... மரணம் அத்தனையும் காணாமல் போன கறுப்பு பெட்டியாய் அடிமனதில் தங்கி விட்டது. இப்போது அனு பத்து வயது குழந்தையாகிப் போனாள்.

அவளை முழு பைத்தியமாய் வீட்டிற்கு மறுபடி அழைத்து வந்தபோது... விஷ்ணுவும் ரேவதியும் தனிக்குடித்தனம் போய்விட்டனர்.

அனு அமைதியாகத்தான் இருப்பாள். எங்காவது 'சந்துரு' என்ற பெயர் காதில் விழுந்தாலே... அழ ஆரம்பித்து விடுவாள். ஏன் அழுகிறோம், எதற்கு அழுகிறோம், என்பது அவளுக்கே தெரியாது.

**ம**ல்லிகா பழையவைகளையெல்லாம் நினைத்து பெருமூச்சு எறிகிறாள்.

மங்கை தீட்டானால் கங்கையில் குளிக்கலாம். கங்கையே தீட்டானால்? அந்த குறையை எங்கே போய் சொல்வது? விதியை



தவிர வேறு யார் மீது பழிபோட முடியும்? மல்லிகா விதியே என்று நாட்களை நகர்த்தி வந்தாள்.

சமீப காலமாய் அவள் உடம்பு அவள் பேச்சை கேட்பதில்லை. வயதாகி விட்டதல்லவா? 'அந்த உண்மை நினைவில் நிழலாடும் போதெல்லாம் சொரேர்' என அடி விழுந்தது போல் உடம்பு தூக்கி வாரிப் போடும். நானிருக்கும் வரை அனுவிற்கு நிழல் தரமுடியும்! என் காலம் முடிந்த பிறகு? அவள் கதி? ஐயோ...!!' பெற்றவளாயிற்றே? அனுவை சுமந்த வயிறு பற்றி எரிந்தது.

'அனு... ஒரு குடும்பத்தையே தாங்கற அளவுக்கு சம்பாதித்தாயே... உன் சொந்தக் காலில் நின்றாயே! நாளை உன்னை யார் தாங்கப் போகிறார்கள்?'

பொழுது விடிந்து, பொழுது மறைகிறவரை அவளுக்கு இதே எண்ணம்தான் தோன்றி வதைத்தது. அதனால் உடம்பு மேலும் மோசமாகியது. சமைக்கவும் முடியவில்லை. ஒருமுறை இரண்டு நாட்களாய் படுக்கையை விட்டு எழவே முடியாதபடி காய்ச்சல். சமைக்கவும் முடியவில்லை. அனு பசிதாளாமல் நச்சரித்து எடுத்து விட்டாள்.

''அடிப்பாவிப் பெண்ணே... என்னால அசையக்கூட முடியலேடி! ஏன் என் உயிரை வாங்கிட்டிருக்கே? ரெண்டு வேளை சாப்பிடலேன்னாக்கூட பொறுத்துக்க முடியாதா? முடியலேன்னாலும் நேத்தெல்லாம் சமைச்சி போட்டேனே! போ... ரெண்டு டம்ளர் தண்ணிய குடிச்சிட்டு... மூலையிலே போய் உக்காரு... என்ன பாவம் பண்ணிட்டு வந்தேனோ... உன்னை என் தலையிலே கட்டி அனுப்பிட்டான் ஆண்டவன்!

''கிழவி... மூஞ்சியப் பாரு... வவ்வவ்வே... பசிக்குதுன்னு சொல்றேன்ல... தூங்கு மூஞ்சி!'' அனு பழிப்புக் காட்டினாள்.

''சனியனே... போடி அப்பாலே...!''

''ம்...'' அம்மாவை ஒரு மாதிரி முறைத்துவிட்டு கிச்சனிற்குள் நுழைந்தாள்.

பசி வயிற்றை கபகபவென எரிய வைத்தது. அனு ஆவேசமாய் அடுக்களையில் ஆராய்ச்சி செய்தாள். ஒரு தட்டில் நேற்று செய்த இட்லி மூன்று இருந்தது. தொட்டுக் கொள்ள ஏதாவது இருக்கிறதா என்று பார்த்தாள். இரண்டு நாள் முந்தைய காரக்குழம்பு இருந்தது. சூடுபடுத்தாததால்... ஊசிப் போன வாசம் வந்ததையும் பொருட்படுத்தாமல் இட்லியில் கலந்து பிசைந்து சாப்பிட்டு விட்டாள்.

ஆனால் பதப்படுத்தப்படாத உணவுப் பண்டங்கள் புளித்துப் போய் நெஞ்சை விட்டு இறங்க மறுத்ததால்... அடுத்த அரை மணி நேரத்தில் ஐந்து முறை வாந்தி எடுத்து விட்டாள் அனு.

பதறிப் போனாள் மல்லிகா!

''என்னடி... ஏன் வாந்தி எடுக்கறே?''

உண்மையை சொன்னால் அடிப்பாளோ என்கிற பயம் எழ, சாப்பிட்டதை மறைத்தாள்.

''தெரியலே... வாந்தி... வாந்தியா வருது!''

''எ..எப்பலேர்ந்து?''

'பொய் சொன்னால்... அம்மா எதையாவது சாப்பிடக் கொடுப்பாள்' என்கிற நப்பாசை எழுந்தது.

''கா... காலைலேர்ந்து!''

''ஐயோ...!'' நெஞ்சில் கைவைத்து பதறினாள் அம்மா.

''தலைய சுத்தறா மாதிரியிருக்கா?''

''ஆமா...!''

மல்லிகா யோசித்தாள். இப்போதெல்லாம் எதையும் நினைவில் பத்திரப்படுத்தி வைக்க முடியவில்லை அவளால் மூப்பும், கவலையும் அந்த தாயை கலங்கடித்து விட்டிருந்தது.



''அனு... இந்த மாசம் குளிச்சியா?''

''நேத்துக் கூட குளிச்சேனே!''

''பாவி மகளே... அதை கேக்கலே!'' மறுபடி யோசித்துப் பார்க்க... நெகடிவான பதில் தான் தோன்றியது.

'அவர் இறந்த மறுநாள் குளிச்சதாய் ஞாபகம்! அதுக்குப் பிறகு... அதுக்குப் பிறகு... ஐயய்யோ... என் குடியே பாழாக்கிட்டியே... கடவுளே!' மல்லிகா முகத்தில் அறைந்து கொண்டு அழ ஆரம்பித்தாள்.

''அம்மா... ஏம்மா... அழறே?'' அனுவின் உதடும் அழுகைக்கு தயாராயின.

''அனு... அனு... மறைக்காம சொல்லு... தேவிகா புருஷன் உன்னை... உன்னை... அன்னைக்கு என்ன பண்ணினார்?''

''சுதாகர் மாமாவா? மாமா ரொம்ப நல்லவர்ம்மா... நான் தனியா இருந்தா பயப்படுவேன்னு தெரிஞ்சி... என்னை நல்லா இறுக்கி கட்டிப்பிடிச்சி...''

''போதும்... போதும்... நிறுத்துடி சண்டாளி... நிறுத்து!'' மல்லிகா துயரம் தாங்காமல் விக்கி விக்கி அழ ஆரம்பித்தாள். தாலி கட்டிய கணவன் இறந்த போதுகூட இந்தளவு அழுதிருக்க மாட்டாள். இப்போது அழுதாள்.

அனுவிற்கு மறுபடி அடிவயிற்றை குமட்டிக் கொண்டு வர பாத்ரூம் நோக்கி ஓடினாள்.

'இவள் ஒருத்தியையே என்னால் கட்டி மேய்க்க முடியவில்லை. போதாதற்கு இவள் வயிற்றில் சிசு வேறயா? நாளைக்கு ஊர் உலகத்திற்கு தெரிந்தால் என்னாகும்? காறித்துப்ப மாட்டார்களா? காதும் காதும் வச்சமாதிரி வயிற்றை சுத்தம் பண்ணிவிடலாம். ஆனால், மறுபடி இதேபோல் ஒரு தப்பு நடக்காது என்பது என்ன நிச்சயம்? கட்டின புருஷனும் உயிருடன் இல்லை. மற்ற

பிள்ளைகளிடமும் உதவி கேட்க முடியாது. வேலி இல்லாத பயிர், அதுவும் பைத்தியம் என்று... எளிதாக வேலி தாண்டி விடுவார்களே!'

'பேசாம மனசாட்சியை கட்டிப் போட்டுட்டு இவளைக் கொன்னுடும்மா! குடும்ப மானமாவது மிஞ்சும். நாளைக்கு வயிற்றைத் தள்ளிக்கிட்டு நின்னா அதைவிட அசிங்கம் வேறெதுவும் இல்லேம்மா!' தேவிகா அன்று சொல்லிவிட்டு சென்றது நினைவிற்கு வந்தது.

'உடம்பில் எட்டு முழத்துணியை எதற்கு கட்டுகிறோம்? மானம் காக்கத்தானே? அதைவிட உயிர் முக்கியமா என்ன?' மல்லிகாவின் முகம் ஒரு நல்ல முடிவிற்கு வந்த திருப்தியில் தெளிந்தது.

எழுந்து வெளியே போனாள்.

''எங்கேம்மா போறே?'' களைத்த முகத்துடன் வந்த அனு கேட்டாள்.

''உனக்கு சாப்பிட எதையாவது வாங்கிவர...!''

''ஐய்... சீக்கிரம் போம்மா... போ...போ...!''

''போகலாம்... சீக்கிரமே போகலாம்!''

மல்லிகா போய் விட்டாள்.

**அ**னு அம்மாவின் வருகைக்காக காத்திருந்தாள். வெளியில் பூட்டிவிட்டுப் போயிருந்ததால் ஜன்னல் வழியே வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தாள்!

அப்போதுதான்... அது நிகழ்ந்தது.

எதிர்வீட்டு அம்சாவின் நான்கு வயது குழந்தை வினு பந்தை தூக்கிப் போட்டு விளையாடிக் கொண்டிருந்தது.

அவன் விளையாடுவதை ஆர்வம் பொங்க, குதூகலிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள் அனு.



பந்து... எதிர்பாராத விதமாக... எதிர் வீட்டு கொல்லைப் புறத்தில் இருந்த கிணற்றில் விழுந்துவிட... விபரீதம் உணராத குழந்தை... கல்லில் கால் வைத்து ஏறி கிணற்றின் மீதேறி நின்றான்.

அனு உடம்பெங்கும் பதற்றம்.

''டேய்... டேய்... இறங்கு!'' கத்தினாள்.

இவளை திரும்பிப் பார்த்த வினு, அடுத்த கணம் கிணற்றில் தொப்பென விழுந்தான்.

அனுவின் கண்கள் நிலைக்குத்தி நின்றது. உச்சி முதல் கால்வரை மின்சாரம் பாய... ''ச...ந்...து...ரு...'' என்று கத்திக் கொண்டே மயங்கி விழுந்தாள்.

## 15

நிலவென உன்னைச் சொன்னால்
நீ வரும் வானம் நானே!
மலரென உன்னைச் சொன்னால்
மயங்கிடும் வண்டு நானே!

**வா**ழ்வே எல்லையில்லாத புதிர்தான்! மனிதனின் சரித்திரம் விபத்துக்கள் நிறைந்ததுதான்! வாழ்க்கையில் தன்னுடைய சுயபுத்தியில் நம்பிக்கை இல்லை என்றால் எந்த மனிதனுக்கும் எதிர்காலம் இருக்க முடியாது.

சில மனிதர்களுக்கு அதிர்ஷ்டம் காலம் கடந்துதான் வருகிறது. அந்த கால அவகாசம் என்பது சிலருக்கு சில மணித்துளிகளில் அமைந்து விடுவதுதான் துர்பாக்கியம்.

அனுவிற்கு காலம் கண் திறந்தாலும் அதிர்ஷ்டம் கண் மூட காத்திருக்கிறதே!

அனு மயக்கம் தெளிந்து எழுந்தபோது புதிய உணர்வோடு, புதிய உலகத்தில்... அல்ல...அல்ல... ஐந்து வருடத்திற்கு முந்திய தன்னுடைய பழைய உலகத்தில் கால்பதித்து நின்றாள். இருள் விலகி... வெளிச்சம் கண்களை கூசச் செய்த உணர்வு! மூளையை சுற்றியிருந்த மசமசப்பு காணாமல் போக... அனுராகினி மறுபடியும் பிறந்து வந்தாள்.

சுவற்றில் அருள் பாலித்து காட்சி தரும் முருகன் காலண்டரில் தேதி பளிச்சென்று உரைத்தது.

'என்னது இது? 10-9-2000 போட்டிருக்கிறது? இது 95-ஆம் வருடம்தானே?

அனு குழப்பமாய் மூளையை கசக்கினாள். கண்ணாடி முன்போய் நின்றாள்.

மகா அதிர்ச்சி!

'நானா... நானா இது? மைகாட்! என்னாயிற்று எனக்கு? எப்படி இவ்வளவு அழுக்காய், கறுப்பாய், தலைவிரிக் கோலமாய்... பைத்தியக்காரி போல்... என்ன கோலமிது?'

நெகடிவ் பிம்பங்களாய் நேற்றைய அனு பற்றிய நினைவுகள் தெளிவின்றி மனதில் ஓடியது.

'இன்று என்ன தேதி செப்டம்பர் பத்தா? இன்றுதானே... இன்றுதானே என் சந்துரு... அருவியில் விழுந்து என்னை விட்டு போன நாள்? சந்துரு... மை டியர்! நீ என்னை விட்டுப் போய் ஐந்து வருடமா ஆகிவிட்டது? அப்படியானால் இந்த ஐந்து வருடம் நான் எங்கிருந்தேன்? எனக்கு ஏதாவது நேர்ந்துவிட்டதா?' புத்திசாலி அனு யோசித்தாள்.

சந்துருவின் நினைவு அவள் இதயத்தை பிளேடால் கீறி ரத்தம் வர வைத்தது.

வீடென்ன... இப்படி நிசப்தமாய் இருக்கிறது? அம்மா, அப்பா, புனிதா, அண்ணா, அண்ணியெல்லாம் எங்கே? வீடு முழுக்க



ஒவ்வொரு அடியாய் எடுத்து வைத்தவள் சுவற்றில் மாலை போட்டு மாட்டப்பட்டிருந்த அப்பா போட்டோவைப் பார்த்து திகைத்துப் போனாள்.

''அ...அ..ப்..பா! அப்பா... என்னாச்சப்பா? உங்களுக்கு என்னாச்சு?'' துடித்துப் போனாள், கதறி அழுதாள்.

''எனக்குத் தெரியாமல் இன்னும் என்னென்ன நடந்திருக்கிறது இந்த வீட்டில்? கதவு வெளிப்பக்கம் பூட்டி இருக்கிறது. நான் உள்ளிருக்க எப்படி பூட்டுவார்கள்? அப்படியானால் நான் இயல்பான மனநிலையில் இல்லை. ஸோ... நான் பைத்தியக்காரி! நானா அப்படியிருந்தேன்?' உணர்ந்த போது... உண்மை அடிமனதுவரை கசந்தது.

இப்போது ஒவ்வொன்றாய்... தெளிவாய் நினைவிற்கு வந்தது.

அனு தன்னறைக்குச் சென்றாள். தன் பெட்டியைத் திறந்தாள்.

அதில் சந்துரு தந்த கடிதக் கற்றைகளும், டைரியும் பத்திரமாய் இருந்தன. பிறந்த குழந்தையை வருடுவது போல் அதை தடவினாள் அனு. துக்கம் பீறிட்டு எழுந்தது.

'ஐயம் ஃபார் யூ! எவர் ஃபார் யூ!' சந்துருவின் உதடு அவள் காதோரம் உரசியபடி கிசுகிசுப்பது போலிருந்தது.

'ஆமாம்... நீ எனக்கு மட்டும்... எப்போதும் எனக்கு மட்டுமே உரியவன்தான். ஆனால் இப்போது நீ எங்கே? என்னுயிரில் கலந்தவன் என்றால்... நான் மட்டும் ஏன் தனிமையில் வாடிக் கொண்டிருக்கிறேன்? என் அவசர புத்தியால், சந்தேகப் புத்தியால்... உன்னை பலிகொடுத்து விட்டேன் சந்துரு... பலிகொடுத்து விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள்!'

மனம் கனக்க... அந்த டைரியை திறந்து பார்த்தாள். முத்து முத்தான கையெழுத்தில்... சந்துருவின் விலை மதிக்க முடியாத உயிர் துடிப்பான கவிதைகள்.

ஒவ்வொன்றாய் வாசித்துக் கொண்டு வந்தாள்.

நிலவென உன்னைச் சொன்னால்

நீ வரும் வானம் நானே!

மலரென உன்னைச் சொன்னால்

மயங்கிடும் வண்டு நானே!

சிலம்பென உன்னைச் சொன்னால்

சேர்ந்த சீர்ப் பரல்கள் நானே!

இலவென உன்னைச் சொன்னால்

ஏங்கிடும் கிளிதான் நானே!

அதற்கு மேல் படிக்க முடியாமல் மூடி வைத்தாள். கண்களில் தாரை தாரையாக கண்ணீர் வழிந்தது.

'என்மேல் உனக்குதான் எவ்வளவு ஆசை? எவ்வளவு அன்பு? அத்தனையும் கைதவறவிட்டு விட்டேனே சந்துரு! இனி எப்போது நீயும் நானும் ஒன்று சேர்வோம்? உன்னை இனி எப்போது பார்ப்பேன்? பிரிந்து விடவா நாம் காதலித்தோம்?

எனக்காக உயிரை விட்ட உனக்காக... காலம் முழுக்க... உன்னைத்தவிர வேறு யாருக்குமே என் நெஞ்சில் இடமில்லை சந்துரு! உயிரோடு இருக்கும் வரை உன் நினைவுகளை சுவாசித்து வாழ்ந்து முடிப்பேன். இனி பழைய அனுராகினியாக வளைய வருவேன். பாவம் அம்மா! அப்பாவை இழந்துவிட்டு எப்படியெல்லாம் தவித்தார்களோ? போதாதற்கு நான் வேறு அவர்களை ரொம்ப கஷ்டப்படுத்தியிருப்பேன். இனி அம்மாவுக்கு நான்தான் எல்லாமே! வயதான அம்மாவை ஒரு குழந்தையாய் கவனித்துக் கொள்வது பிள்ளையின் கடமை! அம்மாவை கண்ணுக்குள் வைத்து பாதுகாப்பேன்!'



அனுவிற்கு உடனே அம்மாவை பார்க்க வேண்டும் போல் உள்ளமும், உடலும் பரபரத்தது. இனி இந்த உலகில் அவளுக்கு எல்லாமே அம்மாதானே?

ஜன்னல் வழியே அமர்ந்து கொண்டாள். சற்று நேரம் கடந்திருக்கும். தெருமுனையில் அம்மா வருவது தெரிந்தது.

அம்மாவா அது? பாவம்... எப்படியாகி விட்டாள்? பாழ் நெற்றியும், வெள்ளை புடவையும், வயது கூடி, நடை தளர்ந்து...

''அ...ம்...மா!'' வாய் நிறைய அழைத்து சந்தோஷப்பட்டாள்.

அப்போதுதான் நினைவிற்கு வந்தது. நாளை அம்மாவின் பிறந்தநாள் அல்லவா? அம்மாவிற்கு ஏதாவது பரிசு தரவேண்டுமே! இப்போதைய நிலைமையில் பழைய அனுதான் அம்மாவுக்கு நான் தரக்கூடிய சரியான பரிசு. அதனால்... நாளை விடியும் வரை இந்த பைத்தியக்கார அனு இருக்கட்டும்!

நாளை விடிந்ததும் அம்மா முன் பழைய அனுவாக நிற்பேன்! அப்போது அம்மாவின் மனசு எவ்வளவு சந்தோஷப்படும்? நினைத்தபோதே குதூகலமாய் இருந்தது.

அனு மூலையில் அமர்ந்து கொண்டாள்.

கதவு திறந்த மல்லிகா உள்ளே வந்தாள்.

ஓடிப்போய் அம்மாவை கட்டிக் கொண்டு முத்தமிட வேண்டும் என்ற ஆசையை வெகு பிரயத்தனப்பட்டு அடக்கி கொண்டாள்.

மல்லிகா மகளைப் பார்த்து பெருமூச்சு விட்டாள்.

''அனு...''

''ம்..''

''இப்படி வா!''

''ஏன்?''

''கேள்வி கேட்டு உயிரை வாங்காதே! பசிக்குதுன்னு சொன்னியே! ஹோட்டலுக்கு போய் உனக்கு பிடிச்சதெல்லாம் வாங்கி வந்திருக்கிறேன் வந்து சாப்பிடு!''

'அம்மா... நாளைலேர்ந்து நான் உன்னை உக்கார வச்சி பரிமாறுவேனாமா!'

''சீக்கிரம் சாப்பிட்டுத்தொலை... என் மூஞ்சியையே பார்த்திட்டிருக்காதே!'' எங்கே... மனசு மாறிவிடுமோ என்கிற பயத்தில் கடுமையாய் பேசினாள் மல்லிகா.

கோபம் வாயைத் திறக்க வைக்கும். ஆனால் கண்களை மூடி விடும். அவள் தன் மகளை கூர்ந்து கவனித்திருந்தால்... ஒருவேளை பழைய அனுராகினியை கண்டுபிடித்திருக்கலாம்.

''நீ சாப்பிடலையாம்மா?''

''நீ மொதல்ல சாப்பிடு. நீ சாப்பிட்ட பிறகு நான் சாப்பிட்டாதான் எல்லாம் சரியா வரும்!'' என்றாள்.

அனு சாப்பிட்டு முடித்தபின் மல்லிகா சாப்பிட்டாள்.

''அம்மா...''

''என்ன?''

''அண்ணா, அண்ணி எல்லாம் எப்ப வருவாங்க?''

''என்னடி புதுசா கேக்கறே?'' என்றாள் வியப்பாய்.

''உங்கண்ணா, அண்ணி மட்டுமில்லே... நம்ம உறவுக்காரங்க அத்தனை பேரும் நாளைக்கு நம்ம வீட்டுக்கு வருவாங்க.''

''ஏம்மா?''

பதில் சொல்லாமல் சிரித்தாள் மல்லிகா!

சாப்பிட்டு முடித்தபின் சமையல் கட்டிற்கு சென்று வாங்கி வந்த பாலை காய்ச்சினாள் பாட்டிலில் இருந்த நாற்பது தூக்க மாத்திரைகளை கலந்தாள். இரண்டு டம்ளர்களில் ஊற்றினாள்.



ஒன்றை அனுவிடம் நீட்டினாள்.

''வேணாம்மா... குமட்டலாயிருக்கு!''

''அதுக்குத்தான்... அந்த கருமத்துக்காகத்தான் இதை குடிக்க சொல்றேன்... குடி!''

அனு திகட்டினாலும், குடித்தாள். அவள் குடிப்பதையே கண்ணீர் மல்க பார்த்துக் கொண்டிருந்தாள் மல்லிகா.

அடுத்த கணம் அவளும் பாலை குடித்து முடித்தாள்.

மல்லிகா வாய்விட்டு அழுதாள்.

அனு பதறிப் போனாள்.

''ஏம்மா அழறே?''

''உன்னை பெத்ததுக்கு அழாம என்னடி பண்றது? உன்னால நான்பட்ட அவஸ்தை கொஞ்சமா நஞ்சமா?''

'பேசு... நல்லாதிட்டு... கேட்க எவ்வளவு சந்தோஷமாய் இருக்கு தெரியுமா? இதுதான் கடைசி! நாளைலேர்ந்து நீ வாயே திறக்க மாட்டே! நம்ம வீடே மாறிப் போய்டும். அதுவரைக்கும் நானும் வாய் திறக்க மாட்டேன்!' அனு கஷ்டப்பட்டு சிரிப்பை அடக்கிக் கொண்டாள்.

''அனு...!'' மகளின் முகத்தை கையில் ஏந்திக் கொண்டாள்.

மகளை ஆசை தீரப் பார்த்தாள்.

'உன்னை உயிரோட வச்சு காப்பாத்த என்னால முடியலே அனு... அதனால... உயிர்ப்பால் கொடுத்த என் கையாலேயே உயிரை பறிக்கிற பாலை கொடுத்திட்டேன். நிம்மதியா தூங்குடி என் செல்லமே! அடுத்த ஜென்மத்துலேயாவது உன் தலையெழுத்து நல்லா அமையட்டும்' மல்லிகா மனதிற்குள் சொல்லிக் கொண்டாள்.

வாழ்வில் எதுவுமே நிச்சயமில்லை. சாவைத்தவிர, நிலையற்றது என்பதன் மறுபெயர்தான் வாழ்க்கை. ஒரு பறவையின் இரு இறக்கைகள் போல வாழ்வும் இறப்பும் சேர்ந்தே இயங்குகிறது.

''அனு... இப்படி வா... அம்மா கூடயே படுத்துக்கோ!'' தன்னருகே படுக்க வைத்து அவள் மேல் கையைப் போட்டு அணைத்துக் கொண்டாள் மல்லிகா!

அனு அம்மாவையே பார்த்துக் கொண்டிருந்தாள். இன்று முழுக்க உறங்காமல் அம்மாவையே இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் போல் இருந்தது.

மல்லிகாவை... உறக்கம் கொஞ்சம் கொஞ்சமாய் இழுத்துக் கொண்டு போனது. சற்று நேரத்தில் நிரந்தரமாய் உறங்கினாள்.

அனு விடிவதற்காக காத்திருந்தாள்.

'அம்மா... நாளைக்கு நம்ம சொந்தக் காரங்க அத்தனை பேரும்... ஆச்சர்யப்படப் போறாங்க பார்!' அனு அம்மாவின் கன்னத்தில் ஆசையாய் முத்தமிட்டாள். இடுப்பில் கையை போட்டாள்.

மறுபடி அம்மாவையே விழியகலாது பார்த்தாள். ஆனால், அனுவின் கண்கள் கட்டுப்பாட்டை இழந்து... கொஞ்சம்... கொஞ்சமாய்... விடிவதற்கு காத்திராமல் மூடிக் கொண்டன.

மருந்து பலனளிக்காமல் போகலாம். ஆனால் விஷம் ஒரு நாளும் பலனளிக்காமல் போகாது!

வாழ்க்கை ஒரு புரியாத புதிர்!

அதனால்தான்... இந்த தாய்க்கும் மகளுக்கும் விடியாமலேயே போய் விட்டது!





# கண்களுக்குச் சொந்தமில்லை

1

சூரியன் தன் ட்யூட்டியை முடித்துக் கொண்டு புறப்படும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. பிய்த்து பிய்த்து உலரப் போட்டிருந்த மேகப்பொதிகள் காற்றால் திசைக் கொன்றாய் நகர்ந்து கொண்டிருந்தன.

மதில்சுவற்றின் மேல் ஒரு கணம் இவளை உற்றுப் பார்த்துவிட்டு தாவி குதித்து ஓடி மறைந்தது அணில்.

சிவசங்கரி அதை அலட்சியம் செய்தவளாய் வாசல்புற கேட்டை அடிக்கடி கவலையாய் நோட்டம் விட்டபடி பூப்பறித்துக் கொண்டிருந்தாள். ஜாதியும், முல்லையுமாய் அவள் பறித்த பூக்கள் பிளாஸ்டிக் கூடையில் பாதி இருந்தன. தென்றலுக்கு தலையாட்டும் போதெல்லாம் செடிகளோடு பூக்கள் வீசிய வாசம் அந்த இடத்தையே ரம்மியமாக்கியது.

''இவளுக்கு கொஞ்சமாவது பொறுப்பிருக்கா? பத்து மணிக்கு வீட்டை விட்டு கிளம்பியவள் அஞ்சு மணியாகியும் வீடு திரும்பவில்லை. மதியம் சாப்பிட்டாளோ, இல்லையோ அட, என்ன

ஏதுன்னு ஒரு போனாவது பண்ணியிருக்கலாமே! அம்மா காத்துக்கிட்டருப்பாளே, பயந்துக்கிட்டிருப்பாளேங்கற அக்கறையாவது இருக்கா? எல்லாம் அவர் குடுக்கற இடம்! வரட்டும் பேசிக்கிறேன். பாவிப் பொண்ணு வண்டியை மெதுவாக்கூட ஓட்டமாட்டாளே...!"

சிவசங்கரியின் வயிறு பயத்தால் கலக்கியது.

**அ**டக்கமான, அழகான வீடு அது! மூதாதையர்கள் வழிவழியாக வந்த வீடென்பதால் பழமை குடிகொண்டிருந்தது. ஆனால் அதை கொஞ்சம் இந்த காலத்திற்கேற்ப நவநாகரீமாய் ஆல்டர் பண்ணி பழமையும், புதுமையும் கைகுலுக்கிக் கொண்டிருந்தது. கேட்டைத் தாண்டி போனால் நாற்பதடிக்கு விசாலமான தோட்டம் தலையசைத்து வரவேற்கும். வீட்டின் பக்கவாட்டில் ஒரு கிணறும் உண்டு. தேக்கு மரத்தினாலான வேலைப்பாடுகள் மிகுந்த கதவு, ஜன்னல்கள், எல்லா தெய்வங்களையும் கலை நுணுக்கத்தோடு கதவில் செதுக்கியிருந்தார்கள்.

உள்ளே நுழைந்ததும் விசாலமான ஹால்! சிவப்பு சாந்தில் குழைத்து வழவழப்பாய் பூசியிருக்கும் சிமெண்ட் தரை! நடுநடுவே தூண்கள். விட்டத்தில் கலர் கலராய் பெயிண்ட்டில் வரையப்பட்ட கோலங்கள்.

யாராவது வந்தால் அமர வைத்து பேசுவதற்கு வசதியாக சோபாவும் குஷன் வைத்த சேர்களும் போடப்பட்டிருந்தது. சுவற்றில் மாடர்ன் ஆர்ட் சித்திரங்கள். வெளியாட்கள் யார் வந்தாலும் அந்த ஹாலில் அமர்ந்து சிவசங்கரி தரும் பில்டர் காபியை சுவைத்துக் கொண்டே... சுற்றிலும் பார்வையை ஓட விடுவார்கள். வியப்போடு, ரம்மியமான அந்த வீட்டை பார்க்கும்போது... யாருக்குமே ஒருவித அலாதியான மனஉணர்வு ஏற்படுவது நிச்சயம்.



ஹாலை ஒட்டிய அறையே பூஜையறையாக இருந்ததால்... அங்கிருந்து கசிந்து வரும் ஊதுபத்தி வாசமும், சாம்பிராணி வாசமும்... மனதை இளகச் செய்யும்.

ஹால், பூஜையறை, மூன்று படுக்கையறை, பாத்ரூம், அவ்வளவுதான் அந்த வீட்டின் கொள்ளளவு! ஆனால் ஆடம்பரமான பங்களாவில் இல்லாத அழகும், விலாசமும், அமைதியும், தெய்வீகமும் இந்த சிறிய வீட்டில் இருந்தது.

வாசுதேவன் பைக்கை நிறுத்தி ஸ்டாண்ட் போட்டுவிட்டு கேட்டை திறக்க இறங்கினார். கேட்டில் மாட்டப்பட்டிருந்த போர்டில் ஜி.வாசுதேவன் எம்.ஏ.பி.எல். என்று எழுதப்பட்டிருந்தது.

கேட் திறக்கப்படும் சப்தம் கேட்டதும் சிவசங்கரி அதிவேகமாய் நடந்து அருகில் வந்தாள். அதற்குள் பைக்கை உள்ளே தள்ளிக் கொண்டு வந்துவிட்டார்.

பைக்கை ஸ்டாண்ட் போட்டு கவர் எடுத்து மூடிவிட்டு மனைவியைப் பார்த்தார்.

"சிவா... இப்படி வா!"

"என்னங்க?" என்றபடி அருகில் வந்தாள்.

மனைவியின் தோளில் ஒரு கையைப் போட்டு வலது கையால் அவள் நெற்றியில் வியர்வைப் பட்டு ஈஷிக் கொண்டிருந்த குங்குமத்தை லாவகமாக தன் கர்ச்சீப்பால் ஒற்றி எடுத்தார்.

"ஓக்கே... இப்ப சரியாப் போச்சு!"

சிவசங்கரி சற்றே வெட்கம் கலந்த சிரிப்பொன்றை வீசிவிட்டு "வாங்க... காபி ரெடியா இருக்கு" என்றாள்.

சட்டை பட்டனை கழற்றியபடி ஹாலில் அமர்ந்து ஃபேன் காற்றை உடம்பில் வாங்கிக் கொண்டவர் சுற்றிலும் ஒரு பார்வை பார்த்தார்.

''வீடு அமைதியாயிருக்கு... பெரியவ இல்லையா?''

''உங்க செல்லப் பொண்ணு காலையிலே டி.வி.ஸ்டேஷன் போய்ட்டு வர்றேன்னு போனவ இன்னும் வரலே... ஒரு போன் கூட பண்ணலே! நீங்க அவளை கொஞ்சம் கண்டிச்சு வைக்கறது நல்லதுங்க!''

''அவ என்ன தப்பு பண்ணினா கண்டிக்கறதுக்கு? நெகடிவ், பாஸிட்டிவ் எல்லாம் அவளுக்குத் தெரியும். அவ இன்னும் என்ன சின்னக் குழந்தையா?''

''அவளைப் பத்தி ஒரு வார்த்தை சொல்ல விட்ருவீங்களா? ஓவரா செல்லம் தர்றீங்களோன்னு தோணுது. ரொம்ப ஸ்பீடா வண்டி ஓட்டறதா. பார்க்கறவங்க எல்லோரும் சொல்றாங்க. இதையெல்லாம் காதால கேட்கறப்ப பகீர்னு இருக்குங்க...!''

''இந்த காலத்துல பொண்ணுங்கன்னா அப்படித்தான் இருக்கணும் சிவா! ஐ'ம் ப்ரவுட் ஆஃப் மை சைல்ட்!''

''உங்ககிட்டே அவளைப் பத்தி சொல்றேன் பாருங்க... என்னை சொல்லணும்!'' என்று செல்லமாய் கோபித்துக் கொண்டு, காபி எடுத்துவர கிச்சனிற்குள் சென்றாள்.

அவள் கொடுத்த காபியை பருகிக் கொண்டே... ''உத்ராவை எங்கே காணோம்?'' என்றார்.

''ஸ்கூல் விட்டு வந்ததும் ரெக்கார்ட் நோட்டு வாங்கிட்டு வந்திடறேம்மான்னு அவ ஃப்ரண்ட் விக்டோரியா வீட்டுக்கு போனா இன்னும் வரலே!'' கவலையாய் சொன்னாள்.

''உனக்கு கவலைப்படறதே வேலையாப் போச்சு!''

''ரெண்டும் பொட்டைப் புள்ளைங்களாச்சே! நாம பயப்படலேன்னா... அதுங்க பாதை மாறி போய்டறதுக்கு நிறைய வாய்ப்பிருக்கு!''



''அதேசமயம் அதிகப்படியான கண்டிப்பும் கட்டறுத்துக்கிட்டு ஓடச் செய்யும். அதையும் மனசுல வச்சுக்க...'' என்றதும் சிவசங்கரி இன்னும் பயந்து போனாள்.

''நீ பயந்தாலும் அழகா தெரியறே சிவா!''

''சே... என்னங்க பேச்சு இது?'' முகம் குங்குமமாய் சிவந்தது.

''என் பொண்டாட்டிய அழகா இருக்கேன்னு சொல்றது கூட தப்பா?''

''நமக்கு ரெண்டு வயசுக்கு வந்த பொண்ணுங்க இருக்கு... ஞாபகம் வச்சுக்குங்க!''

''இப்ப என்ன... ஒரு ஆண்பிள்ளை வேணுங்கறியா? ஓக்கே எனக்கொன்னும் ஆட்சேபணை இல்லே...'' குறும்பாய் சொன்னார் வாசுதேவன்.

''வக்கீல்கிட்டே பேசி ஜெயிக்க முடியுமா? விளக்கு வச்ச நேரத்துல என்ன பேச்சு இது?'' செல்லமாய் சிணுங்கினாள்.

''சரி... விளக்கை அணைச்சிட்டப் பிறகு பேசுவோமா?''

''கடவுளே...'' என்றபடி தம்ளரை எடுத்துக் கொண்டு அகன்றவளைப் பிடித்து இழுத்தார்.

''உன்னைப் பார்த்தா நாப்பத்தி மூணு வயசுக்காரின்னு சொல்லவே முடியாது.'' அவள் கன்னத்தை பிடித்து கிள்ளினார்.

''விடுங்க...'' எழ முற்பட்டாள்.

அவர் விடுவதாயில்லை.

வெளியில் வண்டி வரும் சப்தம் கேட்டது.

சட்டென அவளை விடுவித்தார்.

''உங்க பொண்ணு வந்தாச்சு!'' என்றாள் சிரித்துக் கொண்டே!

''ஹாய்... டாடி....'' சந்தோஷமாய் உள்ளே ஓடிவந்தாள் ஸ்வாதி.

''எப்ப வந்தீங்க டாடி?''

''ஜஸ்ட் நவ் ஸ்வா... ஆமா நீ எங்கே போய்ட்டு வர்றே? காலையிலே போனவ இன்னும் வீடு வந்து சேரலியேன்னு உங்கம்மா அழாத குறையா சொல்லிட்டிருந்தா. இவ்வளவு நேரமும் அவளைதான் சமாதானப் படுத்திக்கிட்டிருந்தேன்'' என்ற வாசுதேவன் ஓரக் கண்ணால் மனைவியைப் பார்த்து சிரித்தார்.

''அம்மாவுக்கு பயப்படறதைத் தவிர வேறென்ன தெரியும்? என்னை யாராவது கடத்திக்கிட்டுப் போய்டுவாங்களோன்னு பயப்படறியா? அந்த கவலையே வேண்டாம். நானாவது ரெண்டு மூணு பேரை கடத்துவேனே தவிர. என்னை யாராலேயும் கடத்த முடியாது. அப்படியே கடத்தினாலும் கடத்தறவன் நமக்கு எந்தளவு கெபாஸிட்டி இருக்குன்னு பார்க்கமாட்டானா? நம்மால் பணமெல்லாம் தரமுடியாதுன்னு தெரிஞ்ச பிறகு என்னைக் கடத்தறவன் முட்டாளாதான் இருப்பான்!''

''ஏன்... உன்கிட்ட அழகு இருக்கே... அதுபோதாதா?''

''அம்மா... நீயே சொல்லிக் கொடுப்பே போலிருக்கே...''

''ச்சீ... வாயை மூடு!''

''சரி... சரி... எப்பப் பார்த்தாலும் ரெண்டு பேரும் சண்டை போட்டுக்கிட்டே இருக்கணுமா? சொல்லு ஸ்வாதி... எங்கே போய்ட்டு வந்தே? மதியம் சாப்பிட்டியா?''

''அதெல்லாம் ஆச்சப்பா! நான் தூர்தர்ஷனுக்கு நியூஸ் ரீடர் வேகன்ட்டுக்கு அப்ளை பண்ணியிருந்தேனில்லையா? இன்டர்வியூ கார்டு வந்தது. அதுக்காகத்தான் போயிருந்தேன்!''

''எதுக்குமா உனக்கு இந்த வேலையெல்லாம்? பி.காம். நல்ல மார்க்குல பாஸ் பண்ணியிருக்கே. சி.ஏ.பண்ணு! இல்லே... உனக்கு பிடிச்ச வேற எந்த கோர்ஸாவது எடுத்துப்படி! அதை விட்டுட்டு... டி.வி.சினிமாங்கறதெல்லாம் டாடிக்கே பிடிக்கலே ஸ்வாதி!''



''என்ன டாடி? நீங்களும் உங்க வொய்ஃப் மாதிரியே பேச ஆரம்பிச்சிட்டீங்க? எல்லோரும் படிக்கிறதை பண்றதை, நாமளும் பண்ணக்கூடாது. டிஃபரண்டா செய்யணும். அதுலதான் நம்ம திறமைய காட்டக்கூடிய சந்தர்ப்பம் நிறைய அமையும். யூ... நோ... டாடி....நான் ஸ்கூல் லைஃப்லேர்ந்தே. பேச்சுப்போட்டி, அது இதுன்னு கலந்துகிட்டு நிறைய பிரைஸ் வாங்கியிருக்கேன். என்னோட வாய்ஸ் நல்லாருக்குன்னு நிறையப் பேர் சொல்லியிருக்காங்க! இந்த திறமைய வச்சு... டி.வி.யிலே நுழைஞ்சு நல்ல பேர் வாங்கணும்னு ஆசைப் படறேன்... அது தப்பாப்பா?''

''இல்லேடா... தப்பில்லே... ஆனா எனக்குத்தான் இதுல கொஞ்சம் விருப்பமில்லே...''

''கொஞ்சம்தானே? அதெல்லாம் என் முகத்தை டி.வி.யில பார்க்கறப்ப சரியாப் போய்டும். இன்டர்வியூக்கு எவ்வளவு பேர் வந்திருந்தாங்க தெரியுமா? அப்பதான் புரிஞ்சுக்கிட்டேன், நம்மை மாதிரி ரசனையுள்ளவங்க நிறைய பேர் இருக்காங்கன்னு...!''

''டி.வி.ன்னா சாதாரண விஷயமா? உன்னையெல்லாம் செலக்ட்க் பண்ணமாட்டாங்க'' சிவசங்கரி சொன்னாள்.

''பரவாயில்லே... தூர்தர்ஷன்லே கிடைக்கலேன்னா என்ன? நம்பர் ஒன் சானல் மூன் டி.வி.யில எனக்கு கிடைக்கும்னு நம்பறேன்!''

''என்ன ஸ்வாதி சொல்றே?''

''ஆமாம் டாடி! மூன் டி.வி.யில காம்ப்பியரிங் பண்ண அழகான யங் லேடி தேவைன்னு அனவுன்ஸ் பண்ணியிருந்தாங்க! அதுக்கும் அப்ளை பண்ணியிருக்கேன். நிச்சயமா இன்டர்வியூ கார்டு அனுப்புவாங்க. அதுல நான் செலக்ட் ஆவேன்!'' கண்கள் விரிய ஆர்வமும், ஆசையும் பளிச்சிட ஸ்வாதி கைகளை விரித்துச் சொல்லவும், வாசுதேவன் அவள் தலையை கோதி. ''எனிவே, பெஸ்ட் ஆஃப் லக்!'' என்று வாழ்த்தினார்.

''தாங்க்யூ... டாடி!'' என்றாள்.

''அப்பாவும், பொண்ணும் என்ன வேணும்னாலும் திட்டம் போடுங்க. ஆனா, நாளைக்கே உன் ஜாதகத்தை ஜோஸியர்கிட்டே காட்டப் போறேன். மகேஷ் ரொம்ப சீக்கிரம் இந்தியாவுக்கு வரப்போறதா போன் பண்ணினான்!''

''என்ன... எனக்கும் உங்க அண்ணன் பிள்ளைக்கும் கல்யாணம் பண்ற ப்ளானா? நீ சொன்னா... நான் கேட்ருவேனா? டாடி உங்க பொண்டாட்டிகிட்டே சொல்லி வைங்க. நான் மீசையில்லாத அந்த ஆளை பார்க்கவே சகிக்கலே. அந்த தயிர் வடையை என் பொண்ணு கல்யாணம் பண்ணிக்கமாட்டாள்னு!'' என்று கூறிவிட்டு தன்னறையை நோக்கி நடையை கட்டினாள்.

''என்னங்க இப்படி சொல்லிட்டுப் போறா?''

''ப்ச்... ஏன் அவசரப்படறே? முதல்ல மகேஷ் வரட்டும். மீதிய அப்புறம் பார்த்துக்கலாம்...நான் குளிச்சிட்டு வர்றேன்'' என்று எழுந்து கொண்டார்.

## 2

**சூ**ரியக் கதிர்கள் பட்டு பிரம்மாண்டமான அந்த பங்களா கிரானைட்டில் பளபளத்தது.

உறவினர்களும், நண்பர்களும் வந்து கொண்டிருக்க... கலகலப்பான சூழ்நிலை தென்பட்டது.

வேலையாட்கள் முகத்தில் சந்தோஷ ரேகையோடு சுறுசுறுப்பாய் இயங்கி... வந்தவர்களுக்கு தேவையானதை கொடுத்து உபசரித்துக் கொண்டிருந்தனர்.

வீல் சேரில் அமர்ந்திருந்த கோடீஸ்வரர் சுந்தரேசனின் கையைப் பற்றி வாழ்த்து சொல்லிக் கொண்டிருந்தனர். சுந்தரேசனின் முகம் பெருமையில் விகசித்தது. அவர் பக்கத்திலேயே நின்றிருந்த அபிராமியம்மாளின் முகமோ அவரைவிட ஒருபடி மேலே போய் கண்கள் துளிர்த்துக் கொண்டிருந்தது.



சாதாரண விஷயமா என்ன? தங்கள் ஒரே மகன்... யுவன்ராஜ் இந்த இருபத்தியெட்டு வயதிற்குள் அகிலமே வியக்கும் வண்ணம் சாதனையாளர் விருது பெற்றிருக்கிறான் என்றால் சும்மாவா? சிறந்த இளம் தொழில் அதிபர் விருது என்பது எத்தனை பேருக்கு கிடைத்துவிடும்?

எத்தனையோ பிஸினஸ் மேக்னட்டுகள், பழம் தின்னு கொட்டை போட்டவர்கள் இருக்கிறார்கள். அத்தனை பேருக்குமா கிடைத்து விடுகிறது? இந்த ஆண்டில் உலகிலேயே சிறந்த பிஸினஸ் மேக்னட் யுவன்ராஜ்! நினைத்தே பார்த்திராத இலக்கை அவனின் அயராத உழைப்பு பெற்றுத் தந்திருக்கிறது.

பத்து பிள்ளை பெத்திருந்தால் கூட அவ்வளவு சந்தோஷம் கிடைத்திருக்காது. ஒரே ஒரு பிள்ளைதானா? என்று ஆண்டவனிடம் மனக்குறைப்பட்டதுண்டு. ஆனால் இந்த ஒரு பிள்ளையே... பெற்றவர்களுக்கு இவ்வளவு பெருமையைத் தேடி தந்துவிட்டானே!

அழகு, குணம், திறமை, ஒருவரிடமே இத்தனையும் அமைவது சிரமம். இது அத்தனையும் யுவன்ராஜிடம் அமைந்திருந்தது.

ஐந்து வருடம்! சுந்தரேசன் தன் நிர்வாகப் பொறுப்புகள் அத்தனையையும் மகனிடம் ஒப்படைத்தபோது யுவன் வயது இருபத்தி மூன்றுதான்! அதுவும் அப்போதுதான் அவன் பெரிய கண்டத்திலிருந்து மீண்டு... இந்த உலகின் காற்றை சுவாசிக்க ஆரம்பித்திருந்த அந்த வேளையில்தான் சுந்தரேசன் பக்கவாதத்தில் படுத்துவிட்டார். வேறு வழியேயின்றி குருவி தலையில் பனங்காய் போல் பெரிய பொறுப்பு யுவன் தலையில்!

ஆனால் அந்த பாரத்தை சுண்டைக்காய் போல் ஆக்கிவிட்டான். சிட்டியில் சுந்தரேசனுக்கு நல்ல பெயர் இருந்தது. அரசாங்க விழாக்கள் உட்பட எந்த ஒரு முக்கிய விழா நடந்தாலும் தொழிலதிபர் சுந்தரேசன் கலந்து கொண்டார் என்று தினசரிகளில் அடிக்கடி பெயர் வரும்.

சுந்தரேசனையே தூக்கி சாப்பிடும் அளவிற்கு யுவன் நிர்வாகத்தில் கொடிகட்டிப் பறந்தான். ஐந்து வருடத்தில் தந்தை உருவாக்கி இருந்த தொழில்களுக்கு நிறைய கிளைகள் உருவாக்கினதோடு பல புதிய தொழில்களிலும் காலடி எடுத்து வைத்து சக்கை போடு போட்டுக் கொண்டிருக்கிறான்.

ரைஸ் மில், கெமிக்கல் அண்ட் டிஸ்டில்லரீஸ், ரியல் எஸ்டேட், ஃப்ரீஸிங் ப்ராடக்ட்ஸ், இன்வெஸ்ட்மெண்ட் அண்ட் கன்ஸல்டன்ஸி, சுகர் மில், காட்டன் மில், டெக்ஸ்டைல்ஸ் என்று பத்து விரல்களில் அடக்க முடியாதளவு யுவனின் சாம்ராஜ்யம் நீண்டுக் கொண்டே போகும். அவன் கம்பெனி கிளைகள் இந்தியாவில் மட்டுமின்றி அந்நிய நாடுகளிலும் வேர் விட்டிருந்தது.

அவன் சாதனைக்காக இன்று இந்தியாவே பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறது.

விருதோடு இன்று யுவன் இந்தியா திரும்புகிற நாள்!

அவன் வருகையை எதிர்பார்த்து நண்பர்களும், உறவினர்களும், அலுவலகப் பணியாளர்களும் மாலைகள் பூச்செண்டுகளுடன் காத்திருந்தனர். வீட்டில் மட்டுமல்ல விமான நிலையத்திலும் பாதிபேர் காத்திருந்தனர்.

அபிராமியம்மாள் மனம் நிறைய சந்தோஷத்துடனும், கைநிறைய போட்டோக்களுடனும் காத்திருந்தாள்.

போட்டோ?

இதுநாள் வரை திருமணப் பேச்செடுத்தாலே 'என்னம்மா அவசரம்?' என்பான். அல்லது 'நான் கல்யாணமே பண்ணிக்க மாட்டேன்னு சொல்லலே... ஆனா எனக்கு பிடிக்கற மாதிரி எந்த பொண்ணும் இல்லேம்மா!' என்ற கழுவற மீனில் நழுவற மீனாக இருந்தான்.

ஆனால், இனியும் பொறுப்பதற்கில்லை.



இன்று அவனின் ஸ்டேட்டஸ் உலக அளவில் உயர்ந்து விட்டதால், மாநில, மத்திய மந்திரிகளில் சிலர் சுந்தரேசனின் சம்மந்தியாக விருப்பம் தெரிவித்து போனிலும், நேரிலுமாக தொந்திரவு தர ஆரம்பித்து விட்டனர்.

இந்த சம்மந்தத்தில் யுவனை பெற்றவர்களுக்கே உடன்பாடில்லை. தங்கள் மகன் அதிகார வர்க்கத்தினர் வீட்டின் மருமகனாக போவதில் உடன்பாடில்லை. வசதி குறைச்சலாய் இருந்தாலும் பரவாயில்லை. நல்ல பெண்ணாய், குடும்பத்திற்கேற்ற குத்துவிளக்காய், அழகாய், அன்பாய், அடக்கமாய் மருமகள் வரவேண்டும் என்பது இவர்கள் கனவு!

அதற்காகவே அபிராமியம்மாள் வரிந்துக் கட்டிக் கொண்டு களத்தில் இறங்கி பெண்தேட ஆரம்பித்து விட்டாள்.

விளைவு... கையில் இருபது போட்டோக்கள். ஒருத்தரைக் கூட குறைசொல்லி தவிர்க்க முடியாத அழகு, படிப்பு, குடும்பப் பின்னணி இருந்தது.

இதில் ஒருத்திதான் கண்டிப்பாய் இந்த வீட்டு மருமகள் என்று அபிராமியம்மாள் நம்பிக்கையாய் இருந்தாள்.

பங்களாவின் முன் பரந்து விரிந்த இடத்தில் ஷாமியானா பந்தல் போடப்பட்டு வினைல் நாற்காலிகளில் வருபவர்களை உபசரித்து அமர வைத்திருந்தனர்.

எதிரே தென்பட்ட உதவியாளர் ஆரோக்கியசாமியை அழைத்தாள் அபிராமியம்மாள்.

''என்னங்கம்மா?'' என்றார் சற்றே முதுகு வளைத்து கைகளை மார்புக்கு கட்டிக் கொண்டு, அபிராமியம்மாளைவிட வயதில் நாலைந்து வயது மூத்தவர். அந்த மாளிகையின் கணக்கு வழக்கு உட்பட அத்தனையும் பொறுப்பில் கவனித்துக் கொள்பவர்.

''வந்திருப்பவங்களுக்கு சாப்பிட டிபன் கொடுத்தாச்சா?''

''ஆச்சுங்கம்மா!''

''மறக்காம ஐஸ்கிரீம் கொடுங்க... பாருங்க... எத்தனை கேட்டாலும் இல்லேன்னு சொல்லாம கொடுக்கனும். வயிறார திருப்தியா சாப்பிட்டு, மனசும், வயிறும் குளிர்ந்து என் பிள்ளைய மனசார வாழ்த்தணும்!''

''சின்ன ஐயா... ராஜாங்க! அவருக்கு ஒரு குறையும் வராது. கடவுளோட ஆசி அவருக்கு எப்பவும் உண்டுங்க...''

அந்த பதிலில் மனம் குளிர்ந்தாள் அபிராமியம்மாள்.

''ஆமா... உங்க வீட்லேர்ந்து யாரும் வரலியா?''

''வந்திருக்காங்கம்மா! என் மனைவியும், மகனும்... அதோ... அங்கேதான் சாப்பிட்டுக்கிட்டிருக்காங்கம்மா! அம்மா ஒரு சின்ன விண்ணப்பம்!'' என்றார் தயவாய்.

''என்ன சொல்லுங்க?''

''என்னோட மகன் ஜோஸப் படிச்சிட்டு...''

''புரியுது... புரியுது'' என்று சிரித்தவள், ''நம்ம கம்பெனியில் ஏதாவதொரு வேலை போட்டு கொடுங்கன்னுதானே கேட்க வர்றீங்க. தாராளமாக போட்டுத் தரச் சொல்றேன். இதுக்காக யுவன்கிட்டே கேட்டுக்கிட்டிருக்க வேணாம். அவன் டயர்டா வருவான். தொந்திரவு பண்ண வேண்டாம். கோபிநாத்கிட்டே கேளுங்க. அவனும் என் பிள்ளை மாதிரிதான்! ஆமா, கோபிநாத் எங்கே? நானும் காலைலேர்ந்து அவனைப் பார்க்கலியே...''

''ரொம்ப நன்றிங்கம்மா...'' என்று கைகூப்பியவர், ''கோபி ஐயா, இன்னும் வரேலம்மா...'' என்றார்.

'ஏர்போர்ட்டுக்கு போயிருப்பான்' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டு உள்ளே சென்றுவிட்டாள்.

''இன்னும் கோபி வரலியா அபிராமி?'' என்றார் சுந்தரேசன்.



''இன்னும் வரலேங்க... ஏர்போர்ட்டுக்குப் போயிருப்பான்...''

''அம்மா!'' என்ற குரல் கேட்டு திரும்பினாள் அபிராமியம்மாள்.

''கோபிநாத் நின்றிருந்தான்.

''உனக்கு நூறு வயசு கோபி. இப்பதான் உன்னைப் பத்தி பேசிட்டிருந்தோம்!''

''என்னப்பா... உன் ஃப்ரண்ட் வர்ற ஜோருல எங்களை மறந்துட்டியா?'' கேலியாய் சொன்னார் சுந்தரேசன்.

''ஐய்யோ... அப்படியெல்லாம் இல்லீங்கய்யா...'' என்றான் பதறி.

அவன் பதற்றத்தை ரசித்தனர் பெரியவர் இருவரும்.

''ஏர்போர்ட்டுக்குப் போயிருந்தேன். நம்ம யுவன் வர்ற ஃப்ளைட் ரெண்டு மணி நேரம் லேட்டாகும்னாங்க! வீணா அங்கே ரெண்டு மணி நேரத்தை போக்காம. இங்கே வந்து வேலைய கவனிச்சுக்கலாமேன்னு ஓடி வந்துட்டேன்!''

''ஏம்பா... அலையறே? இங்கே நாங்க கவனிச்சுக்க மாட்டோமா?''

''உங்களை நான் கவனிச்சுக்க வேண்டாமா?'' என்றான் பாசமாய்.

சுந்தரேசன் அவனை அருகே இழுத்து முதுகைத் தட்டிக் கொடுத்தார்.

அபிராமியம்மாள் அவன் தலையைக் கோதி, ''சாப்பிட்டியா கோபி?'' என்றாள்.

''இல்லேம்மா... யுவன் வந்த பிறகு சாப்பிட்டுக்கறேன்.''

''அவன் லன்ச்சுக்குத்தான் வருவான். அபிராமி... கோபிக்கு முதல்ல டிபன் குடு!''

"வாப்பா... வெளியே வேணாம்... உள்ளே போய் சாப்பிடலாம்... வா!" என்று அவன் கையைப் பற்றி உள்ளே அழைத்துச் சென்றாள்.

அந்த அன்பில் திணறிக் கொண்டிருந்தான் கோபிநாத்.

ஒரு வழியாய் யுவன் ராஜ் வந்த விமானம் தரையிறங்கியது.

அவன் கம்பீரமாய் இறங்கி நடந்து வந்தான். அவன் தலைதெரிந்ததுதான் தாமதம். லவுன்ச்சில் கூடியிருந்த கூட்டம் உற்சாக கூக்குரல் எழுப்பினர்.

கையை அசைத்து சந்தோஷத்தைப் பகிர்ந்துக் கொண்டவனை பத்திரிகையாளர்கள் கூட்டம் மடக்கியது. காமிராவின் ஃப்ளாஷ்க்கள் மின்னின. தமிழக முதலமைச்சர் சார்பாக பொக்கே ஒன்றை யுவனிடம் வழங்கி வாழ்த்து சொன்னார் அமைச்சர் ஒருவர்.

தூர்தர்ஷன், இதர தனியார் சானல்களிலிருந்தும் காமிரா, மைக் சகிதம் அவனைத் துளைத்தெடுத்தனர். அந்த அன்புத் தொல்லையிலிருந்து விடுபட யுவனிற்கு அரைமணி நேரமாயிற்று. கேட்ட கேள்விகளுக்கு நிதானமாய் புன்முறுவலோடு பதிலளித்து விட்டு வெளியே வந்தான்.

வந்ததுதான் தாமதம்... அவனுக்கு மாலைகள் விழ ஆரம்பித்தன.

திணறிப் போனான்.

யுவன்ராஜின் கண்கள் அந்தக் கூட்டத்தில் யாரையோ தேடியது.

கூட்டத்தை விட்டு சற்று ஒதுங்கியிருந்து பெருமையும் சந்தோஷமும் வழிய கைகட்டியபடி இவனையேப் பார்த்துக் கொண்டிருந்தான் கோபிநாத்!

கண்கள் அவனை கண்டுவிட பரவசத்தோடு கூட்டத்தை விலக்கி அவனருகே சென்றான் யுவன்.



"ஏன்... இங்கேயே நின்னுட்டே கோபி?"

"சந்தோஷத்தை எட்டியிருந்தே அனுபவிச்சிட்டிருக்கேன் யுவன்! 'மாபெரும் சபைதனில் நீ நடந்தால் உனக்கு மாலைகள் விழ வேண்டும்' அந்த வார்த்தையை மெய்யாக்கிட்டியே யுவன்! ஐ ம் ப்ரவுட் ஆஃப் யூ யுவன்... ப்ரவுட் ஆஃப் யூ!" உணர்ச்சி வேகத்தில் கண்கள் கலங்க நண்பனை இறுக்கி அணைத்துக் கொண்டான் கோபிநாத்!

யுவனும் நண்பனை இறுக்கி கன்னத்தில் முத்தமிட்டான். அவன் உதடு உப்புக்கரித்து.

## 3

மஞ்சள் நிற விளக்கொளி... அந்த அறையின் அழகை அதிகப்படுத்தி... மனதிற்கு அமைதியைத் தந்தது. சுவாமி படங்களுக்கு புத்தம் புது பூச்சரத்தை அணிவித்து கண்மூடி, கைகுவித்து அமர்ந்திருந்தாள் சிவசங்கரி.

எதிரே இருபுறமும் குத்துவிளக்கு ஏற்றப்பட்டிருந்தது.

பூஜையறை மாடத்தில் மெலிந்த நோட்டுப் புத்தகம் வைக்கப் பட்டிருந்தது. அது... ஸ்வாதியின் ஜாதகக் குறிப்புகள் அடங்கிய நோட்டு! சந்தன ஊதுபத்தியின் வாசம் அறையை நிரப்பியிருந்தது.

சிவசங்கரிக்கு அடர்த்தியான நீண்ட முடி! குளித்து விட்டு ஈரம் உலராத கூந்தலை நுனியில் கொண்டை போட்டிருந்ததால்... முதுகுப்பக்கம் முழுக்க அணிந்திருந்த ஜாக்கெட்டும், புடவையும் நனைந்திருந்தது.

தீவிரமாய் கடவுளிடம் முறையிட்டுக் கொண்டிருந்த சிவசங்கரியின் பின்னால் ஸ்வாதி வந்து நின்றாள்.

"அம்மா..."

திடுக்கிட்டு திரும்பியவள் "என்னடி?" என்றாள்.

''சாமி கும்பிட்டது போதும்... எந்திரிச்சி வா.''

''உளராதே... இதென்ன சாமி கும்பிடறப்ப கூட தொந்திரவு பண்ணிக்கிட்டு... அறிவில்லே உனக்கு?''

''இருக்கு... எந்திரி சொல்றேன்!'' என்று அம்மாவின் கையைப் பிடித்து எழுப்பிவிட்டு, ''ஸாரி... ஃபார் த டிஸ்பர்டன்ஸ்'' என்று சாமிக்கு ஒரு சலாம் போட்டாள்.

''ஐயோ....'' என்று பதறியவளாய் பட்பட்டென்று கன்னத்தில் போட்டுக் கொண்டாள் சிவசங்கரி.

வாய்விட்டு சிரித்தாள் ஸ்வாதி!

''பக்தி மனசோட இருந்தாப் போதும்மா! ஒரேயடியா இவ்வளவு நேரம் பூஜையறையிலே வேஸ்ட் பண்ணக் கூடாதும்மா! இழக்கிற ஒவ்வொரு நிமிஷத்தையும் உன்னால திரும்பப் பெறமுடியுமா சொல்லு? அந்த நேரத்திலே உழைக்கணும். கிடைக்கிற பலனுக்காக ஒரு செகண்ட் கடவுளுக்கு தேங்க்ஸ் சொல்லு. மேட்டர் முடிஞ்சது. உன் சாமிக்கு என்னைப் பத்தி நல்லாவே தெரியும். அதுனால கோவிச்சுக்காது. எனக்கு நேரமாகுது... டிபன் எடுத்து வை. அந்த பிங்க் கலர் காட்டன் சுரிதாரை அயர்ன் பண்ணிக் கொடுத்துடு... கம்... கம்!''

''இந்த வேலைய உன்னால செஞ்சுக்க முடியாதா?''

''முடியும்தான். ஆனா, இப்ப முடியாது... எல்லா சர்ட்டிபிகேட்ஸும் எடுத்து வச்சிட்டேனான்னு ஃபைலை செக் பண்ணனும்!''

''எங்கே போறே?''

''இன்டர்வியூக்கு!''

''எங்கே?''

''நேத்தே சொன்னேனே... மறந்துட்டியா? 'மூன்' டி.வி.க்கு!''



''முடிவு பண்ணிட்டியா?''

''என்னன்னு?''

''டிவியில மூஞ்சிய காட்டறதுன்னு...!''

''முகத்தை தானே காட்டப் போறேன்... உடம்பை இல்லேயே... டாடி ... டாடி...'' என்றழைக்க எதிரே வந்தார் வாசுதேவன்.

''என்ன ஸ்வா?''

''எப்படி டாடி கட்டிக்கிட்டீங்க இந்த சிவசங்கரியை. சுத்த பட்டிக்காடு. நான் என்ன செஞ்சாலும் அதுக்கொரு குத்தம் கண்டுபிடிக்கறதே வேலையாப் போச்சு உங்க வொய்ஃப்புக்கு! பேசாம டைவர்ஸ் பண்ணிட்டு வேற ஒரு நல்ல பொண்ணாப் பார்த்து கட்டிக்குங்க...''

வாசுதேவன் வாய்விட்டு சிரித்தார்.

''சிரிக்கறீங்களா? அவதான் பேசத் தெரியாம பேசறாள்னா... வாயிலே ரெண்டு போடாம என்ன சிரிப்பு வேண்டிக்கிடக்கு?''

''நீயே சொல்லிட்டேயில்லே... அவ பேசத் தெரியாம பேசறான்னு... போ... அவளுக்கு நேரமாகுது... ஆகவேண்டியதை கவனி!'' என்றார் சமாதானப்படுத்தும் விதமாக.

ஸ்வாதி அம்மாவை பழிப்புக்காட்டிவிட்டு தன் அறைக்குச் சென்றாள்.

''இவ இன்னும் குழந்தையாவே இருக்காளே! நாளைக்கு இன்னொரு வீட்டுக்கு போக வேண்டியவ... பெரியவங்க கிட்டே எப்படி பேசணும்னு கூட தெரியமாட்டேங்குதே!''

''எல்லாம் அவளுக்குத் தெரியும். உம்மேல உள்ள அதிகப்படியான பாசத்தினாலதான்... ஓவரா விளையாடறா... அதை முதல்ல புரிஞ்சுக்க!''

தலையசைத்துக் கொண்டவள், ''நீங்க கோர்ட்டுக்கு கிளம்பறப்ப... என்னையும் கூட்டிக்கிட்டுப் போங்க...''

''நீ எதுக்கு கோர்ட்டுக்கு...''

''அவசரப்படாதீங்க! போற வழியிலே ஜோஸியர் வீட்லே என்னை இறக்கி விட்ருங்க... ஸ்வாதியோட ஜாதகத்தை காட்டலாம்னு இருக்கேன்!''

''சரி...'' என்றபடி குளியலறை நோக்கிச் சென்றார்.

**வே**லைப்பாடுகள் மிகுந்த பிங்க் நிற காட்டன் சுரிதாரில் ஸ்வாதி தேவதையாய் தெரிந்தாள். அவளின் சந்தன நிறத்திற்கு அந்த நிறம் மிகவும் எடுப்பாக இருந்தது.

மேல்புறம் இழுத்து வாரி பாதி கூந்தலை க்ளிப்பில் அடக்கி மீதியை அப்படியே படரவிட்டிருந்தே கவிதைத்தனமாய் இருந்தது. மிக லேசான மேக்கப். சின்னதாய் கறுப்பு நிற ஸ்டிக்கர் பொட்டு.

சிவசங்கரி அவளுக்கு தட்டில் இரண்டு பூரிகளை வைத்து குருமா ஊற்றினாள்.

அதை நாசூக்காய் விண்டு வாயில் போட்ட ஸ்வாதி... ''வேற டிபன் செய்யக்கூடாது? இதை சாப்பிட்டாலே வாயெல்லாம் வலிக்கும். அதுவும் இப்ப போற இன்டர்வியூக்கு சரியா பேசலேன்னா எல்லாமே அம்பேல்!''

உத்ரா நமுட்டாக சிரித்தாள்.

''ஏய்... ஏன்டி சிரிக்கிறே?''

''இல்லே... இப்பவே இவ்வளவு அலட்டறியே... இன்டர்வியூவிலே, ''வேணாம்மா, போய்ட்டு வா...ன்னு அனுப்பினா...உன் முகம் போற போக்கை கற்பனை செய்து பார்த்தேன்... சிரிப்பு வந்துச்சு...''

''இவ பண்ற குசும்புக்கு அதுதான் நடக்கப் போகுது!'' என்றாள் அம்மா.



முகம் இறுகிப் போன ஸ்வாதி எதுவும் பேசாமல் தட்டிலேயே கையைக் கழுவினாள்.

''அட....என்னம்மா... சாப்பிடவே இல்லே...'' பதறினார் வாசுதேவன்.

''நான் கிளம்பறேன் டாடி...''

அவள் பிடிவாதம் புரிந்தவளாய், ''விஷ்... யூ... ஆல் சக்ஸஸ் ஸ்வா! நீ ஜெயிப்பே... அந்த செய்தியை உடனே சேம்பருக்கு போன் பண்ணி எனக்கு சொல்றே... ஓக்கே?''

''ஓக்கே... டாடி!'' என்று அவர் கன்னத்தில் ஒரு முத்தமிட்டு விட்டு கிளம்பினாள்.

''அறிவில்லே உங்களுக்கு? எந்த நேரத்திலே என்ன பேசணும்னு தெரியுதா? எல்லாருக்கும் தனிப்பட்ட வகையில விருப்பங்கள் இருக்கு. நியாயமா இருக்கும்பட்சம் மத்தவங்க விருப்பத்துக்கு ஒத்துப் போகலாம். ஆனா, வீம்புக்காக அடிபணிய வைக்கணும்னு நினைச்சா... தன்மானமுள்ள யாரும் பணிஞ்சு போகமாட்டாங்க. ஸ்வாதிக்குன்னு ஒரு ஆம்பிஷன் இருக்கு! அதை நிறைவேத்த பாடுபடறா! பாராட்டலேன்னாலும் துவேஷம் பேசாமலேயாவது இருக்கலாமில்லையா? ஏன் இப்படி அவளை ஹர்ட் பண்றீங்க? இன்டர்வியூவுக்கு போறவளை தோத்துப் போகணும்னு வாழ்த்தி அனுப்பறது அரக்கத்தனம். குழந்தை ஒண்ணுமே சாப்பிடாம கிளம்பிட்டா.. இப்ப சந்தோஷமா உங்களுக்கு?'' வாசுதேவன் முறைப்பாய் கூறிவிட்டு தானும் தட்டில் கையை கழுவினார்.

''என்னங்க...''

''போதும் சிவா... என் பொண்ணு சாப்பிடாம போறப்ப... என்னால மட்டும் எப்படி சாப்பிட முடியும்?'' பெருமூச்சு விட்டபடி எழுந்து சென்றார்.

உத்ரா செய்த தவறுக்காக தலை கவிழ்ந்து விட்டாள்.

சிவசங்கரியின் நெஞ்சில் கனமாய் எதுவோ வந்து அடைத்துக் கொண்டது.

ஆட்டோவை விட்டிறங்கியவள் அட்ரஸை ஒருமுறை செக் பண்ணிக் கொண்டாள் ஸ்வாதி.

'இந்த பில்டிங்தான்!' ஆட்டோக்காரனிடம் பணத்தை கொடுத்தனுப்பிவிட்டு மீண்டுமொருமுறை அந்த பில்டிங்கை அண்ணாந்து பார்த்தாள்.

நான்கு மாடி கட்டிடம். நிறைய ஜன்னல் முதுகில் ஏசி மெஷின் துருத்திக் கொண்டிருக்க... கீழே ஐ.ஜி.அலுவலகத்தில் நுழைந்து விட்டோமா என்பது போல் அசாதாரண இறுக்கம் நிலவியது. அதற்கேற்றாற்போல் ஏழெட்டு செக்யூரிட்டியை தாண்டித்தான் உள்ளே நுழைய வேண்டியதாயிற்று.

கால்பட்டு அமிழ்ந்து போகும் கார்ப்பெட், எக்கச்சக்கமாய் பணத்தை தின்றிருந்தது எனப் புரிந்தது.

ஜில்லென்று ஏசிக்காற்று உள்ளே நுழைந்ததும் வாரி அணைத்துக் கொள்ள... அப்படியும் டென்ஷனில் வியர்த்தது ஸ்வாதிக்கு.

அவளுக்கு முன்பாக ஏராளமான பெண்கள் குஷனில் அமிழ்ந்து காத்திருந்தனர். முகம் நிறைய மேக்அப்பை அப்பிக் கொண்டு, தாராளமாய் காற்று வாங்கும் நவீன ஆடையில் கொஞ்சமாய் உடலை மறைத்து... ப்யூட்டி கான்டெஸ்ட்டுக்கு வந்திருப்பதைப் போல.....

மருந்துக்கு கூட ஒருத்தரும் தமிழில் பேசிக் கொண்டிருக்க வில்லை.

ஸ்வாதிக்கு எரிச்சலாக இருந்தது. அதேசமயம்.... தன்னைப் பற்றியும் ஒரு நம்பிக்கையின்மை எழுந்தது.



இவர்களுக்கு மத்தியில் நான் எடுபடுவேனா? கடைசியில் வீட்டில் அம்மாவும், தங்கையும் வாழ்த்தி அனுப்பியதைப் போல்தான்... ஆகிவிடுமா?

இதயம் வேகமாய் தடதடக்க தொடங்கியது.

இன்டர்வியூ ஆரம்பமானது.

ஒவ்வொருவராக போய்... முகத்தை தொங்கப் போட்டுக் கொண்டு வந்தது. வயிற்றில் புளியை கரைத்தது.

இவள் முறை வந்தது.

சுரிதார் மடிப்பை சரிபண்ணிக் கொண்டு உள்ளே நுழைந்து ''வணக்கம்'' என்று கைகூப்பினாள்.

மூன்று பேர் அமர்ந்திருந்தனர்.

ஐம்பத்தைந்து வயது மதிக்கத்தக்க மனிதர் ஒருவரும் முப்பதுகளை கடந்த இளைஞர்கள் இருவரும்.

அவர்கள் இவளை நோக்கி வீசிய கேள்விகளுக்கு பதறாமல் அழகாக தமிழில் பதில் கூறிய விதம் அவர்களுக்கு திருப்தியைத் தர...

அதற்கு பின் ஃபார்மாலிட்டி டெஸ்ட் எல்லாம் முடிந்தது.

''மிஸ் ஸ்வாதி! யு ஆர் செலக்டட்!'' என்றான் ஒரு இளைஞன்.

''ஸார்...'' என்றாள் நம்பாமல்.

''யெஸ் ஸ்வாதி! நாங்கள் ஏன் உங்களை செலக்ட் பண்ணினோம் தெரியுமா? நீங்கள் பேசிய தமிழ், உச்சரித்த விதம். தேவையானால் மட்டுமே ஆங்கிலத்தை பயன்படுத்திக் கொண்ட யதார்த்தம்... எங்களுக்கு ரொம்ப பிடிச்சிருந்தது. இது தமிழ் சேனல்! தமிழை கடித்துக் குதறும்... அதுவும் தமிழ் நன்றாக பேசத் தெரிந்தாலும் மூன்று வயது குழந்தையைப் போல் பேசும் தொகுப்பாளர் எங்களுக்கு தேவையில்லை. அடக்கமான அழகு,

போதுமான அறிவு, இனிமையான உச்சரிப்பு...இதுபோதும் மிஸ் ஸ்வாதி!''

ஸ்வாதி நிஜமாகவே ஆகாயத்தில் பறப்பதைப் போல் உணர்ந்தாள்.

## 4

எல்லோரிடமும் இன்முகத்தோடு பேசுவதைவிட இனிமையான இசை வேறு ஏது?

யுவன்ராஜ் ஏர்போர்ட்டிலிருந்து வீடு திரும்பியபோது, அவனுக்காக காத்திருந்த அத்தனை பேரும் எழுப்பிய கரவொலி விண்ணை அதிரச் செய்தது.

அடிமட்ட பணியாளர் முதல் உயர் அதிகாரிகள் வரை அவன் கையை குலுக்கி வாழ்த்துக்களை தெரிவித்தபோது, சலிப்படையாமல், சங்கடப்படாமல் இன்முகத்தோடு வாழ்த்துக்களை பெற்றுக் கொண்டவன்... அத்தனை பேரையும் கடந்து தன் பெற்றோரிடம் வந்தான்.

''யுவா...'' என்று அவனை ஒரு கை விரித்து அள்ளி அணைத்துக் கொண்ட அபிராமியம்மாளுக்கு பேச்சே வரவில்லை. அவள் கன்னத்தில் வழிந்த ஆனந்தக் கண்ணீரை துடைத்த யுவனுக்கு கண்கள் துளிர்க்கத் தொடங்கியது.

'கடவுளே... என் பெற்றோர் எப்போதும் சந்தோஷமாக இருக்க வேண்டும். இதைவிட பெரிய சந்தோஷத்தையும் நான் அவர்களுக்கு தரும்படி வாய்ப்பைக் கொடு!'' என்று மானசீகமாய் கடவுளிடம் வேண்டிக் கொண்டான்.

சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்த தந்தையின் காலைத் தொட்டு வணங்கியவன், ''நல்லாருக்கீங்களாப்பா?'' என்றான்.

''உன்னைப் போல் ஒரு பிள்ளையைப் பெற்ற பிறகு எப்படியிருப்பேன் ராஜா? முதலில் உள்ளே வா...'' என்று அழைத்தார்.



''வா... கோபி!'' சற்றுத் தள்ளி நின்றிருந்தவனை இழுத்து தோள் மேல் கைபோட்டபடி உள்ளே சென்றான் யுவன்ராஜ்.

மிக நீண்ட டைனிங் டேபிள்! சுற்றிலும் இருபது பேர் அமர்ந்து சாப்பிடலாம். வெள்ளை விரிப்பின் மீது... பலவித உணவுப் பொருட்கள் கண்களுக்கு ஆவலையும், வாசனை பசியையும் தூண்டியது.

சுந்தரேசனை அமர வைத்துவிட்டு எதிரே அமர்ந்து கொண்டான் யுவன்ராஜ். அவன் பக்கத்தில் கோபிநாத்.

''உங்க ரெண்டு பேரையும் சேர்த்துப் பார்க்கறப்ப ராமன் லட்சுமணன் ஞாபகம் தான் யுவன்!''

''இல்லேப்பா... எங்கள் ப்ரெண்ட்ஷிப் அதைவிட மேலானது!''

''யுவனுக்காக நான் உயிரையும் தரத்தயாராயிருக்கிறேன் ஐயா...'' என்றான் உணர்ச்சிபூர்வமாய் கோபிநாத்.

அவன் சுந்தரேசனை எப்போதும் 'ஐயா' என்றே மரியாதை யோடு கூறுவான்.

''இப்ப மட்டுமென்ன... யுவனோட பாதி உயிர் உன்னோடது தானே கோபி?'' வாஞ்சையாய் கூறியபடி உணவுகளைப் பரிமாறினாள் அபிராமியம்மாள்.

சில கணங்கள் பழைய நினைவுகள் வந்து ஆக்கிரமிக்க, தலையை உதறிக் கொண்டான் யுவன்.

அவன் உணர்வுகளைப் புரிந்து கொண்டவராய் பேச்சை மாற்றினார் சுந்தரேசன்.

''அப்படியே... நாலஞ்சு கன்ட்ரிக்கு போய்ட்டு வந்தியே... அதிலேர்ந்து என்ன கத்துக்கிட்டே யுவா?''

''நிறைய கெட்டதுமிருக்கு, நல்லதுமிருக்கு. நான் கெட்டதை ஒதுக்கி நல்லதை மட்டும் எடுத்துக்கிட்டேன்ப்பா! ஒரு வரியில் சொல்வதானால் அங்குள்ள விண்ணை முட்டும் கட்டிடங்கள்

தன்னம்பிக்கையை ஏற்படுத்தியது. அதிகமாக நடமாடும் மக்களைப் பார்க்கும்போது சுறுசுறுப்பு உண்டானது. இன்னும் சில புதிய ஐடியாக்கள் உருவானது. ரொம்ப சீக்கிரம்... புதிய தொழிலுக்கு அஸ்திவாரம் போட்டு விடுவேன்!''

''வெரிகுட் மைடியர் சன்! பட் ஒன் திங். வேகமா உயர்வது பெரிதல்ல. எப்போதுமே நாம் உயர்ந்த இடத்திலே இருப்பதுதான் பெரிது. புது ப்ராஜக்ட்டை கொஞ்சம் ஒத்திப் போடு. இப்போதைக்கு இருப்பதை இன்க்ரீஸ் பண்ணு! உனக்கு இன்னொரு முக்கியமான வேலையிருக்கிறது. இப்போதைக்கு அதில் கவனம் செலுத்த நேரத்தை ஒதுக்கு!''

''அதென்ன முக்கியமான வேலை?''

''உங்கம்மாவைக் கேள்...''

''என்னம்மா அது?''

''முதலில் சாப்பிட்டு ரெஸ்ட் எடு. சாயந்திரம் அதைப் பத்தி சொல்றேன்'' என்றாள் குறுஞ்சிரிப்புடன்.

''உனக்குத் தெரியுமா கோபி?''

''ம்ஹூம்...'' என்று தோளைக் குலுக்கினான்.

அட்லீஸ்ட் இரண்டு நாட்களுக்காவது அலுவலகம் செல்லாமல் ரெஸ்ட் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று பெற்றோர்கள் வலியுத்தியிருந்ததால்... கட்டுப்பட்டு வீட்டிலேயே இருந்தான் யுவன்.

தேனீ மாதிரி இங்குமங்கும் அலைந்து திரிந்து உழைத்தே பழக்கப்பட்டவனுக்கு இந்த வீட்டுச் சிறை அவனுக்கு மூச்சு முட்டியது.

கோபி அருகிலிருந்தாலாவது பரவாயில்லை. அவன் அலுவலகம் போயிருந்தான். போரடித்தது. மாடி பால்கனியில் கைப்பிடியில் அமர்ந்தான். தோட்டத்தில் நாலைந்து நாய்களை உலாவவிட்டு அதன் பின்னேயே சென்று கொண்டிருந்தான் முத்து.



கட்டுப்பாடுகளை மீறி வளர்ந்த குரோட்டன்ஸ் செடிகளை பெரிய கத்திரிக்கோல் வெட்டி சமப்படுத்திக் கொண்டிருந்தான் சின்னய்யா.

மாளிகையின் சுவற்றை உரசியபடி வளர்ந்திருந்த தென்னை மரத்தின் இலைகள் காற்றுக்கு தலையாட்டும்போதெல்லாம் பளிச்சென்று தெரிந்து மறைந்த அந்தி நேரம் சூரியனின் ஆரஞ்சு நிறம் மனதிற்கு இதத்தைத் தந்தது.

யாரோ வரும் காலடியோசைக் கேட்டு திரும்பினான்.

அம்மா வந்து கொண்டிருந்தாள்.

கையில் ட்ரே இருந்தது. வீட்டில் பத்து பதினைந்து வேலைக்காரர்கள் இருந்தாலும் மகனுக்கும் கணவனுக்கும் தன் கையாலேயே பணிவிடை செய்ய வேண்டும் அவளுக்கு.

''இந்தாப்பா... பால்!''

எடுத்துக் கொண்டான்.

யுவன்ராஜிவிற்கு எந்தக் கெட்டப் பழக்கமும் இல்லை. காபி, டீ குடிக்கமாட்டான். ஹாட் ட்ரிங்க்ஸ் தொடமாட்டான்.

இவ்வளவு பெரிய பணக்காரனுக்கு எந்தவித கெட்டப்பழக்கமும் இல்லை என்பதே... தொழில் ரீதியான நண்பர்கள் பலரும் அதிசயமாய் பார்த்தனர். தன்னிச்சையாய், மரியாதையோடு ஓரடி விலகியே நின்றனர்.

''அம்மா... நிக்கறியே... உக்காரு!'' கையைப் பிடித்து அமர வைத்த மகனை பெருமையாயப் பார்த்தாள்.

''என் மகன்தான் எவ்வளவு அழகாக இருக்கிறான்?''

பூரித்துப் போனாள்.

யுவன்ராஜ் நல்ல உயரம். இளம் சிவப்பு நிறம். வட்டமுகத்திற்கு கரிய அடர்ந்த தலைமுடி வசீகரமாய் இருந்தது. சிவந்த உதடுகள்.

மீசையில்லாத வழுவழு முகம், யுவனிற்கு மீசை வைப்பது பிடிக்காது. சட்டென்று அவன் காரிலிருந்து இறங்கினால் யாரோ இந்தி நடிகர் வந்திருக்கிறார் என்றுதான் நினைப்பார்கள். யுவன்ராஜிற்கு மற்ற எல்லாவற்றையும் விட கவர்ந்திழுக்கும் சிறப்பம்சம் அவன் கண்கள்தான்.

யாரையுமே எளிதாக சரணடைய வைத்துவிடும். ஆளுமையும் இவன் உதவி செய்வான் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தும் கருணையும் அந்த கண்களில் இருந்தது.

''ஓராயிரம் பார்வையிலே... உன் பார்வையை நானறிவேன்...'' என் கவிஞனின் வரிகளைப் போல். அந்த கண்களை வைத்தே... பல்லாயிரக்கணக்கானோர் மத்தியிலிருந்து யுவனை பிரித்து விடலாம். அப்படியொரு வசீகரம் அதில் கொட்டிக் கிடந்தது.

''என்னம்மா... என்னையேப் பார்த்திட்டிருக்கே?''

''ஒ... ஒன்னுமில்லே யுவா!''

''சரி... என்னவோ விஷயம் பேசனும்னு சொன்னியே... என்ன விஷயம்?''

''ஊருக்கே ராஜான்னாலும் நீ எனக்கு பிள்ளை.''

''யாரு இல்லேன்னாங்க?'

''உனக்கு வயசாகிட்டேப் போகுதுப்பா...''

''ஆண்டொன்று போனால், வயதொன்று போகும்...''

''இந்த குறும்புப் பேச்சை மூட்டை கட்டி வைத்துவிட்டு நான் சொல்வதை சீரியஸாய் கேள் யுவா!''

''சரி...!'' என்று இரண்டு கைகளை தொடையில் ஊன்றிக் கொண்டு அதில் முகத்தை தாங்கி அம்மாவையே பார்த்தான்.

''இந்தப் போட்டோக்களையெல்லாம் பார்!''



அம்மா நீட்டிய கவரை பிரித்து போட்டோக்களை வெளியில் எடுத்தான்.

நிதானமாய்ப் பார்த்தான்.

''இவர்களெல்லாம் யார்?'' என்றான் சிறிதும் சலனமின்றி.

''தெரியாததைப் போல் கேட்காதே! நான் முடிவு செய்துவிட்டேன். இதில் ஒருத்திதான் இந்த வீட்டு மருமகள்!''

''ஏம்மா பிடிவாதம் பிடிக்கிறே?''

''நானா? நீயா? ராஜா இங்கே பாருப்பா... அத்தனை பொண்ணுங்களும் லட்டு மாதிரி அழகா இருக்குதுங்க... வேண்டாம்னு சொல்ல முடியாதபடி அத்தனை தகுதிகளும் இருக்கு இதிலே யாரையாவது ஒருத்தரை செலக்ட் பண்ணு!''

''அம்மா...'' என்றான் சற்றே எரிச்சலாக.

''இது கல்யாண விஷயம்மா! என்னமோ கடைக்குப் போய் டிரஸ்ஸை செலக்ட் பண்ணச் சொல்ற மாதிரி சொல்றியே...''

''யுவன்... உன்னை நினைச்சா எனக்கு [illegible]! இதுல ஒரு பொண்ணைக் கூடவா உனக்கு [illegible]''

''இல்லேம்மா...''

''யுவன்.... ஒருவேளை நீ யாரையாவது...''

''சேச்சே...''

''அப்படி ஏதும் இருந்தாலும் அம்மா[illegible] தைரியமாக சொல்லு... உனக்கு பிடிச்சிருக்குங்கற ஒரு தகுதி போதும்... வேற ஒன்னும் வேணாம்... சொல்லுப்பா!''

''ஐயோ.... அம்மா அப்படியெல்லாம் ஒன்னுமில்லேம்மா! நான் உன்கிட்டே எப்படி விளக்கி சொல்றதுன்னே எனக்குப் புரியலே. நானும் கல்யாணம் பண்ணிப்பேன். அதை நீ

32967
5009089

பார்க்கத்தான் போறே! வீடு நிறைய பேரப் பிள்ளைகளோட கொஞ்சத்தான் போறே...!''

''அதான் எப்ப?''

''எனக்கு மனசுக்கு பிடிச்சவ அமையறப்ப...''

''ம்ஹூம்... இது சரிப்படாது'' என்று செல்லமாய் கோபித்துக் கொண்டு எழுந்து போனாள்.

**தீ.**நகரில் புதிதாக திறக்கப்பட்ட ஐந்து நட்சத்திர ஒட்டல்! புதுப் பெண்ணாய் பளபளத்து பார்ப்பவர்களை வசீகரித்திருந்தது.

யுவனும், கோபியும் எதிரும் புதிருமாக அமர்ந்திருந்தனர்.

இருவரும் 'கோக்'கை உறிஞ்சிக் கொண்டிருந்தனர்.

கோபிநாத் நண்பனையே பார்த்துக் கொண்டிருந்தான்.

'என்ன?' என்பது போல் சைகையில் கேட்டான் யுவன்.

''வீ ஆர் ஃப்ரண்ட்ஸ்... அப்படித்தானே?''

''நோ... வீ ஆர் க்ளோஸ் ஃப்ரண்ட்ஸ்'' என்றான் யுவன்.

''பொதுவா ஃப்ரண்ட்ஸுக்குள்ள எந்த சீக்ரட்டும் இருக்காது... இல்லையா?''

''அப்கோர்ஸ்...''

''ஆனா, நீ என்கிட்டே எதையோ மறைக்கிறியோன்னு தோணுது?''

''இடியட்... மறைக்கிற அளவுக்கு என்கிட்டே எந்த சீக்ரட் இருக்கு?''

''நோ... இருக்கு! இல்லேன்னா... அம்மாவை அழவைப்பியா? என்கிட்டே சொல்லி எப்படி அழுதாங்க தெரியுமா?''

''ஓ... என் கல்யாண விஷயமா?'' என்று சிரித்தான்.



''என்ன சிரிக்கிறே?''

''சிரிக்காம? ஆமா... அதுக்கும், நீ இப்ப கேட்டியே எதையோ மறைக்கிறேன்னு இதுக்கும் என்ன சம்மந்தம்?''

''சொல்லவா?''

''சொல்லேன்!''

''நீ யாரையோ லவ் பண்றே!''

''லவ்? நானா?''

''யெஸ்....''

''மைகாட்... யார் சொன்னது?''

''நான்தான் சொல்றேன்!''

''எதை வச்சு சொல்றே?''

''நீ யாரு? யுவன்ராஜ்! பல சாம்ராஜ்ஜியங்களின் தலைவன். கோடி கோடியாய் பணம், கொள்ளை அழகு, வியக்க வைக்கும் அறிவு... இப்படிப்பட்ட புத்திசாலி கல்யாணமே வேண்டாம்னு சொன்னா என்ன அர்த்தம்?''

''ராங்... ராங்... யூ ஆர் ராங் மைடியர் கோபி! ஒரு வார்த்தைய திருத்திக்கோ. கல்யாணமே வேண்டாம்னு சொல்லலே! எந்த பொண்ணும் பிடிக்கலேன்னுதான் சொல்றேன்!''

''அப்படி வா வழிக்கு! எந்த பெண்ணையுமே பிடிக்கலேன்னா என்ன அர்த்தம்? மனசுக்குள்ள வேற ஒருத்தி இருக்கான்னுதானே அர்த்தம்?''

''நீ சொன்னதுல பாதி நிஜம் கோபி! என் மனசுக்குள்ளே ஒருத்தி இருக்கா! எனக்கு நானே வரைஞ்சு இதயத்துல பதிய வச்சிருக்கிற ஒரு உருவம்! அந்த அழகோட, குணத்தோட இன்னும் எந்தப் பெண்ணும் என் கண்ணுல அகப்படலை கோபி! நான் வரைஞ்ச

ஓவியத்தை ரசிக்கிறேன். நேசிக்கிறேன். ஆனா அவள் யார், என்ன பேர், எங்கே இருக்கிறாள்? எதுவுமே தெரியாது. அந்த மாதிரி ஒரு பொண்ணை பார்த்தேன்னு வச்சுக்க... அப்பவே என் கல்யாணம் தான்... போதுமா?'' என்றான் ஜன்னல் வழியே தெரிந்த ஒற்றை நட்சத்திரத்தை பார்த்தபடி.

## 5

**அ**ணிந்திருந்த மயில் தோகை நிற சுரிதாருக்கேற்ப தலைக்கு பேண்டும், கைக்கு வளையலும் அணிந்து, ஒரு கையில் ப்ரேஸ்லட் அணிந்து கொண்டாள் ஸ்வாதி!

மேக்கப்பில் முகம் கூடுதலாய் பளபளத்து. உறுத்தாத நிறத்தில் லிப்ஸ்டிக் போட்டுக் கொண்டாள்.

ஆளுயர கண்ணாடியின் முன் இப்படியும் அப்படியும் தன்னை சரிபார்த்து திரும்பினாள்.

உத்ரா வந்தாள்.

''வாவ்...!'' என்று கண்களை அகல விரித்தாள்.

''நல்லாயிருக்கேனா?''

''ஹூம்... ஐஸ்வர்யா ராயையே ஓரங்கட்டிட்டே... நிஜமாகவே ரொம்ப அழகாயிருக்கே!''

''தாங்க்ஸ் உத்ரா!'' என்றாள் தங்கையின் கன்னத்தில் செல்லமாய் தட்டி.

''இந்த ரவுண்டு ஸ்டிக்கர் நல்லாயில்லே! அதை எடுத்துட்டு இதை வச்சுக்க...'' என்று ஒரு ஸ்டிக்கர் பொட்டை பிய்த்து எடுத்துக் கொடுத்தாள்.

மாற்றி வைத்துக் கொண்டாள்.

''அக்கா...''



''என்ன?''

''அடுத்த வாரம் ஃப்ரண்ட் சுகந்தி வீட்லே ஃபங்க்ஷன். அவங்க அக்கா குழந்தையோட, பர்த்டே! அந்த ஃபங்க்ஷனுக்கு நீ கண்டிப்பா வரணும்னு அவங்க எல்லோரும் ஆசைப்படறாங்க! நீ வரணும்க்கா!''

''முடியாது உத்ரா! அடுத்த வாரம் எனக்கு ஃபுல்லா என்கேஜ்மெண்ட் இருக்கு...''

''அக்கா ப்ளீஸ்... அவங்க எல்லாரும் உன்னோட ஃபேன்! டி.வி.யில உன் ப்ரோக்ராம் வந்தா... வாயில ஈ போறதுக்கூட தெரியாம பார்ப்பாங்க... நீ அந்த ஃபங்க்ஷனுக்கு வந்தா அவங்களுக்கு சந்தோஷமாகவும், பெருமையாகவும் இருக்கும். எனக்காக ப்ளீஸ்...'' கெஞ்சினாள் உத்ரா.

ஸ்வாதி சற்று நேரம் யோசித்தவள். பிறகு ''சரி'' என்றாள்.

''ஓ... தேங்க்யூ... தேங்க்யூ ஸோ மச்! உன் ஃபேன்தான்க்கா! அவங்க உன்னைப் பார்க்கணும்னு ரொம்ப ஆசைப்பட்டாங்க. பர்த்டே ஃபங்க்ஷனுக்கு அத்தனை பேரையும் வரவச்சு. இவதான் என் அக்கான்னு இன்டரடியூஸ் பண்ணப் போறேன்.''

''உத்ரா உனக்கு ஸ்கூலுக்கு நேரமாகலே... கிளம்பு!'' என்றபடி உள்ளே வந்தார் வாசுதேவன்.

''குட்மார்னிங் டாடி!'' சிரித்தபடி அப்பாவின் அருகில் வந்தாள் ஸ்வாதி.

''என்னம்மா ரெடியாய்ட்டியா? உத்ரா என்னமோ அக்கா அக்கான்னு உருகிட்டிருந்தா என்ன விஷயம்?''

''அவ ஃப்ரண்ட் வீட்டு ஃபங்க்ஷனுக்கு நான் வரணும்னா... சரின்னுட்டேன்!''

''இப்ப மட்டும் இந்த அக்காவோட புகழ்ல தான் பெருமைப்பட்டுக்கலாம். அப்ப... அம்மாவோட சேர்ந்து உன்னை என்ன பாடுபத்தினா!''

''அவ சின்னப் பொண்ணு! அக்கா தங்கச்சி சண்டை எல்லா வீட்லேயும் சகஜம். அதையெல்லாம் நானே மறந்தாச்சு!''

''ஸ்வா... உன்னோட வளர்ச்சியை நினைச்சி நானே பிரம்மிச்சுப் போய்டறேன்! நிஜமாகவே டி.வி.மீடியா... ரொம்ப பவர்ஃபுல் மீடியாதான்! மூணே மாசத்துல உன் முகம் பட்டி தொட்டியெல்லாம் பிரபலமாயிடுச்சு. பார்க்கறவங்களெல்லாம். அதோ அவர்தான் ஸ்வாதியோட அப்பான்னு சுட்டிக்காட்டறப்ப எனக்கு எவ்வளவு பெருமையா இருக்குது தெரியுமா? உன்னோட குறிக்கோள்ல நீ வெற்றியடைஞ்சிட்டே ஸ்வா.''

''எல்லாம் உங்க ஆசீர்வாதம் டாடி!''

''இந்த அடக்கமும், பணிவும் எப்பவும் உன்கிட்டே இருக்கணும். நிலையான வெற்றிக்கு இதுதாம்மா வழி!''

''நிச்சயம் டாடி! இந்த மூணு மாசத்துல திடீர்னு உண்டான புகழ், எனக்கு சில பொறுப்புகளையும், நிதானத்தையும் கத்துக்குடுத்திருக்கு. நான் கிளம்பட்டுமா... நேரமாச்சு...''

''கிளம்பும்மா... உன் டூ வீலர்லயா போகப் போறே?''

''ஏன் புதுசா கேக்கறீங்க? எப்பவும் அதிலேதானேப்பா போறேன்!''

''எல்லாம் சரிதாம்மா! உன்னால ட்ராஃபிக் ஜாமாயிடுதுன்னு புகார் வருது. தவிர, உனக்கு தினசரி வர்ற கடிதங்கள். அதுல பாதிக்குப் பாதி வெறித்தனமா எழுதப்படற கடிதங்கள், அவங்கள்ல ஒருத்தனால உனக்கு பிரச்சனை ஏற்பட்டா? எல்லாத்தையும் மீறி நான் உங்கப்பாவா இருந்து யோசிச்சு பார்த்து சொல்றேன்... நீ கார்ல போறதுதான் சரி!''

''என்ன டாடி சொல்றீங்க? கார்லேயா? காருக்கு எங்கே போறது?'' ஆச்சர்யமாய் கேட்டாள் ஸ்வாதி.

''வாங்கிட்டாப் போச்சு!''



''என்ன சொல்றீங்க?''

''ஆமாம் ஸ்வா! அம்பத்தூர்ல ஒரு நிலம் வாங்கிப் போட்டிருந்தேனே... அதை வித்துடலாம்னு இருக்கேன். இன்னைய தேதிக்கு நிச்சயமா இரண்டு லட்சத்துக்கு குறையாம போகும். அந்தப் பணத்துல ஒரு காரை வாங்கிடலாம்.''

''நான் ரொம்ப அதிர்ஷ்டம் பண்ணியிருக்கேன் டாடி! இல்லேன்னா... உங்களுக்கு மகளா பொறந்திருப்பேனா?''

''பெத்தவங்களுக்கு பெருமை சேர்த்துட்டியேம்மா? நாங்க... புண்ணியம் செய்திருக்கிறதாலதானே நீ மகளா வந்து பொறந்தே!''

''பாவ புண்ணியத்தை பத்தி அப்புறம் பேசிக்கலாம். முதல்ல சாப்பிட வாங்க. டிபன் எடுத்து வச்சுட்டேன்'' என்றபடி வந்தாள் சிவசங்கரி.

''டாடி வர்றேன். மம்மி வரட்டுமா?''

''என்னடி சாப்பிடலே?''

''ஐ ஹாவ் நோ டைம் நவ்! நான் வெளியில சாப்பிட்டுக்கறேன். பை!'' என்று கையசைத்து விடைபெற்று ஓடினாள் ஸ்வாதி.

''ஹூம்...'' என்று பெருமூச்சு விட்டாள் சிவசங்கரி.

''யார் சந்தோஷப்பட்டாலும் அவளோட புகழ் உன்னை சந்தோஷப்படுத்தலே...''

''நிஜம்தாங்க! எனக்கு பயத்தைதான் தருது!''

''ஏன்?''

''சொல்றேங்க... நிதானமா ஒருநாள் சொல்றேன்... இப்ப வேணாம் ஆமா... அம்பத்தூர் நிலத்தை வித்து கார் வாங்கப் போறீங்களா?''

''ஆமா... உனக்கு அதுக்குள்ள விஷயம் பரவிடுச்சா?''

''காதிலே விழுந்தது. இப்ப கார் அவசியமா?''

''ஸ்வாதிக்கு அவசியம்?''

''அவளுக்கு காரைவிட இப்ப கல்யாணம்தாங்க அவசியம்.''

''என்ன சொல்றே?'' கண்களை இடுக்கிக் கொண்டு கேட்டார் வாசுதேவன்.

''அவளுக்கு உடனடியா அதுவும் சொந்தத்திலேயே கல்யாணம் பண்ணியாகணும்னு அவள் ஜாதகம் சொல்லுது.''

''அதென்ன சொந்தத்திலே...? ஸ்வாதி தனக்கு பிடிச்ச ஒருத்தனை காட்டி இவனைத்தான் கட்டிப்பேன்னு சொன்னா?''

''அதாங்க... அப்படியொரு கல்யாணம் அவள் வாழ்க்கையிலே நடந்திடக் கூடாது. அது அவளுக்கு நல்லதில்லே...''

''நிறுத்து... பைத்தியக்காரத்தனமா உளறிட்டிருக்காம... டிபன் எடுத்து வை....'' என்று அவளைத்தாண்டி வெளியேறினார்.

சிவசங்கரி என்ன செய்வதென்றே புரியாமல் அவர் பின் சென்றாள்.

ஏதோ ஒரு பயம் அவள் மனதை வாட்டியது.

சிக்னல் விழுவதற்காக காத்திருந்தாள் ஸ்வாதி. வரிசையாய் வாகனங்கள் சீறிப்பாய தயாராய் இருந்தன.

''டேய்... அது ஸ்வாதிதானே?''

''ஆமா... அவளேதான்... ஹலோ ஸ்வாதி!''

பின்னால் பைக்கில் அமர்ந்திருந்த இளைஞர்கள் இவளை அடையாளம் கண்டு அழைக்க... திரும்பிப் பார்த்து சிரித்தாள்.

''ஹய்யோ... அவளேதாண்டா! டி.வி.யில பார்க்கறதை விட நேர்ல இன்னும் அழகா இருக்கா!'' என்றபடி நெருங்கி வந்தனர்.



அதற்குள் அக்கம் பக்கத்தில் உள்ள வண்டிகளில் உள்ளவர்களும் இவளை அடையாளம் கண்டு ''ஸ்வாதி... ஸ்வாதி'' என்றழைக்க ஆரம்பித்தனர்.

''நீங்க ரொம்ப அழகாயிருக்கீங்க?''

''தேங்க்யூ!''

''உங்க வாய்ஸ் ரொம்ப ஸ்வீட்டாயிருக்கு!''

''தேங்க்ஸ்...''

''சினிமாவுல நடிக்க கூப்பிட்டா போவீங்களா?''

''இல்லே... போகமாட்டேன்!''

''உங்க கல்யாணம் எப்ப?''

''இன்னும் யோசிக்கலே!''

''யாரையாவது காதலிக்கறீங்களா?''

''ஐயய்யோ...'' என்று சிரித்தாள்.

''அப்ப... நான் அப்ளிகேஷன் போடலாமா?''

நல்லவேளை, சிக்னல் விழ, தப்பித்தால் போதும் என்று தன் ஸ்கூட்டியை ஸ்பீடாய் ஓட்டினாள்.

ஆரம்பத்தில் ஸ்வாதிக்கு இந்த தொல்லைகள் பயத்தை தந்தது நிஜம். போகப் போக இவற்றை அன்பு தொல்லையாக நினைத்து சகஜமாக்கிக் கொண்டாள்.

அவள் நினைத்தே பார்க்கவில்லை.

குறுகிய காலத்தில் தாம் இப்படி புகழ்பெறுவோம் என்று! மூன் டி.வி.யில் முதலில் ஒரே ஒரு நிகழ்ச்சியை மட்டுமே தொகுத்தளிக்கும் வாய்ப்பினை தந்தனர். அவளின் உச்சரிப்பும், பிழையில்லாத் தமிழும், இனிய புன்முறுவலும்... அந்த நிகழ்ச்சிக்கு

மட்டுமின்றி மூன் டி.வி.க்கே நிறைய புதிய நேயர்கள் உருவாக காரணமாக அமைந்தது.

ஸ்வாதியின் அழகு எல்லோரையும் கவர்ந்தது. போனிலும், கடிதங்களிலும் அவள் முகவரி கேட்டு தொல்லை தரும் ரசிகர்கள் அதிகரித்தனர். சிலர் டி.வி. நிலையத்துக்கே வந்து விடுவார்கள். எப்படியோ முகவரி தெரிந்து வீட்டிற்கும் கடிதம் போட்டனர்.

அதுதான் சிவசங்கரியை சங்கடப்படுத்தியது. அவளுக்கு ஸ்வாதி டி.வி.யில் பணிபுரிவது சுத்தமாய் பிடிக்கவில்லை. ஏற்கனவே நெஞ்செரிந்து கொண்டிருக்க, ஸ்வாதிக்கு வரும் கடிதம் எண்ணெய் ஊற்றி கொழுந்து விட்டெரிய செய்தது.

ஏனென்றால்... கடிதத்தில் எழுதப்பட்டிருக்கும் வாசகங்கள் அப்படி!

பச்சையாய்... மனதில் உள்ள வக்கிரகங்களை கொட்டி... ஸ்வாதியை தலைமுதல் கால் வரை அணுஅணுவாய் வர்ணித்து எழுதியிருப்பான்.

சிவசங்கரி அதைப்படித்துவிட்டு எத்தனையோ நாட்கள் அழுதிருக்கிறாள். வாசுதேவன் இந்த ஃபீல்டில் இருந்தால் இதையெல்லாம் ஃபேஸ் பண்ணித்தான் ஆகணும், என்று ஆறுதல் சொல்வார்.

ஸ்வாதி... படித்துவிட்டு அமைதியாய் கிழித்தெறிந்து விடுவாள்.

'இப்படி ரோடில் வழிமறித்து பேசுவதை அம்மா பார்த்தால்... இன்னும் பயந்துவிடுவாள்.'

நினைத்தபோதே சிரிப்பு வந்தது.

இப்போது ஸ்வாதி பல நிகழ்ச்சிகளை தொகுத்தளிக்கிறாள். மூன் டி.வி. சார்பாக பல நிகழ்ச்சிகளை தயாரித்துக் கொண்டும், இயக்கிக் கொண்டும் இருக்கிறாள்.



இந்த முன்னேற்றம் ஸ்வாதியே எதிர்பாராத ஒன்று!

இப்போதும் கூட பள்ளிக் குழந்தைகளை வைத்து ஒரு நிகழ்ச்சியை தயாரித்து தரவே சென்று கொண்டிருக்கிறாள்.

ஸ்வாதி ரியர் வியூ கண்ணாடியில் தெரிந்த காட்சி உறுத்தியது.

சிக்னலில் பார்த்த இரு இளைஞர்கள் பைக்கில் வெகுநேரமாய் பின் தொடர்ந்து வருகிறார்கள் என்ற சந்தேகம் உற்பத்தியாக... லேசாக எரிச்சல் மண்டியது அவளுள்!

வண்டியின் வேகத்தை விரைவு படுத்தினாள். அடிக்கடி கண்ணாடியில் அவர்களை கவனிக்கத் தவறவில்லை.

அதனால் சாலையில் கவனம் தவறியது.

எதிரே வந்த சாக்லட் நிற ஓபல் காரை கடைசி நேரத்தில் கவனித்து சடர்ன் பிரேக் போட்டும் காரை முத்தமிட்டே நின்றது.

''ச்சலீர்!'' என்ற சப்தத்தோடு காரின் வலதுபுற ஹெட்லைட் உடைந்து சிதறியது.

மோதிய வேகத்தில் வண்டியிலிருந்து கீழே விழுந்து விட்டாள் ஸ்வாதி.

காரை விட்டிறங்கிய கோபிநாத் பதறிவிட்டான்.

பின்னால் வந்த பைக் நொடியில் காணாமல் போனது.

''அடிபட்ருச்சா?'' என்று கேட்டான் கோபி.

''ஸாரிங்க...நான்தான் தெரியாம... மோதிட்டேன்'' பணிவாய் பயமாய் சொன்னாள் ஸ்வாதி.

''உங்களுக்கொன்னுமில்லையே!''

ஸ்வாதி அவனை ஆச்சரியமாய் பார்த்தாள். காரின் லைட்டை மோதி உடைத்திருக்கிறேன். அதைப் பற்றி அக்கறை கொள்ளாமல் கோபப்படால் எனக்கு அடிபட்டிருக்கிறதா என்று பதறிப் போய் விசாரித்திறானே.

ஸ்வாதி அவனைப் பார்த்து சிரித்தாள்.

''எனக்கொன்னும் ஆகலே... ஐம் ஆல்ரைட்'' என்றபடி வண்டியை நிமிர்த்தி.... புறப்பட்டுச் சென்றாள்.

காரில் ஏறி அமர்ந்த கோபி... தன்னையறியாமல் வண்டியில் போகும் ஸ்வாதியை திரும்பிப் பார்த்தான்.

## 6

குளித்துவிட்டு பாத்ரூமிலிருந்து வெளிப்பட்டான் கோபிநாத்!

காபியோடு வந்தாள் அவன் அம்மா சிவகாமி.

''தேங்க்ஸ்ம்மா...'' என்றபடி அதை வாங்கிக் கொண்டு சேரில் அமர்ந்தான்.

''நைட்டுக்கு என்னப்பா சமைக்கட்டும்?''

''சப்பாத்தி போதும்மா!''

''கோபி... வந்து... உங்கிட்ட ஒரு விஷயம் பேசணும்!'' தயங்கியபடி கேட்டாள்.

''என்னம்மா?''

''ஒண்ணுமில்லே... வந்து... கீதா கல்யாணமாகி புருஷன் வீட்டுக்குப் போய்ட்டா... இவ்வளவு பெரிய வீட்லே தனியா இருக்க போரடிக்குது..''

''அதனால...கீதாவை இங்கே வந்து இருக்க சொல்லப் போறியா?''

''அவ மாமியார் வீட்டுக்குப் போய்ட்ட பிறகு... நான் ஏன் கூப்பிடப் போறேன்? நான் அதைச் சொல்லலே... எனக்கு மருமகள் வேணும்...''



அம்மா அப்படிக் கேட்டதும் சிரித்து விட்டான் கோபிநாத்.

''ஏன் கோபி சிரிக்கிறே?''

''பின்னே என்னம்மா? மருமகள் வேணும்னு கேட்ட உடனே பாக்கெட்லேர்ந்தா எடுத்துக் கொடுக்க முடியும்?''

''நீ ஒண்ணும் எடுத்துத் தரவேண்டாம். நீ 'உம்'னு ஒரு வார்த்தை சொல்லு... எப்பேர்ப்பட்ட மருமகளை இந்த வீட்டுக்கு கொண்டு வர்றேன் பார்!''

''அவசரப்படாதேம்மா! ஏற்கனவே சொல்லி இருக்கேன். முதல்ல யுவனுக்கு கல்யாணம் ஆகணும். அதுக்குப் பிறகுதான் எனக்கு!''

''அவன்தான் எந்தப் பொண்ணையும் பிடிக்கலேங்கறானே! அவனுக்கு எப்ப நடந்து உனக்கு எப்ப ஆகறது?''

''யுவன் எதிர்பார்க்கிற மாதிரி எந்தப் பொண்ணும் அமையலே! சீக்கிரம் அவன் ஆசைப்பட்ட மாதிரி ஒரு பொண்ணு கண்லே படாமலயா போகப் போறா?''

''''என்ன எதிர்பார்ப்போ? வயசாகிட்டேப் போகுதே!'' அங்கலாய்த்தாள்.

''ஏம்மா... எதிர்பார்க்கக் கூடாதா? அவன்கிட்டே வேலை செய்யற எனக்கே கனவுகள் இருக்கறப்ப.. யுவனுக்கு இருக்கக் கூடாதா?''

''என்னது உனக்குமா? போச்சுடா! நீ ஆசைப்படற மாதிரி அந்தப் பொண்ணுக்கு என்னென்ன தகுதியாருக்கணும்னு சொல்லிடு... நானும் இப்ப இருந்தே தேட ஆரம்பிச்சிடறேன்!'' என்றாள் கிண்டலாய்.

'அவ என் கண்லே பட்டுட்டாம்மா! ஆனா...' என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டான்.

உயிர் நண்பர்கள் என்று சிலர் தங்களை வார்த்தைப் பிரயோகத்திற்காக பேசுவதுண்டு. ஆனால் அந்த வார்த்தைக்கு பொருத்தமான நண்பர்கள் என்றால்... அது யுவன்ராஜ் - கோபிநாத் தான். அப்படிப்பட்ட உயிர் நட்பு அவர்களுடையது.

இவர்கள் சிறுவயது முதலே நட்பினர்தான். கோபிநாத் தந்தை பரசுராமன் சுந்தரேசன் வீட்டில் கார் டிரைவர்.

பங்களாவை ஒட்டியிருந்த அவுட் ஹவுஸில்தான் பரசுராமன் மனைவி குழந்தைகளுடன் குடியிருந்தார். பரசுராமனின் நல்ல குணம், பணிவு, உண்மை, நேர்மை எல்லாமே சுந்தரேசனை வெகுவாய் கவர்ந்தது. பொதுவாகவே சுந்தரேசன் மனித நேயம் மிக்கவர். ஊழியம் செய்பவன் அடிமையுமல்ல. ஊதியம் கொடுப்பவன் ஆண்டவனுமல்ல என்ற தத்துவத்தை இதயத்தில் பசை போட்டு ஒட்டியிருந்ததாலோ என்னவோ, அவர் ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடு இல்லாமல் எல்லோரிடமும் அன்பாகப் பழகுவார்.

மற்ற எல்லாவற்றையும் விட அவருக்கு பரசுராமன் மீது பாசம் அதிகம்தான். தினமும் பரசுராமனையும் முந்திக் கொண்டு, ''குட்மார்னிங் பரசு!'' என்பார்.

''ஐயா... நானும் பல வருஷமா முயற்சி பண்றேன். நான் உங்களுக்கு முதலில் குட்மார்னிங் சொல்லணும்னு. ஆனா, நீங்க முந்திக்கறீங்க. ஆனா, ஒரு நாள் நிச்சயமா நான் உங்களை முந்திப்பேன்!'' என்பார் பெருமை பொங்க பரசுராமன்.

''பார்ப்போம்...'' என்பார் மிடுக்காக.

வெகுநாட்களாக பரசுராமன் தோற்றுக் கொண்டேதான் வந்தார்.

ஆனால் ஒருநாள் அவர் சொன்னபடி ஜெயித்தார். சுந்தரேசனை முந்திக் கொண்டார்... எல்லா விஷயத்திலும்.

இன்று எப்படியாவது ஐயாவுக்கு தான் முதலில் குட்மார்னிங் சொல்லிவிட வேண்டும் என்கிற துடிப்புடன் பங்களாவின் ஓரம்



முதலாளி வெளியே வரும்போது கண்ணில் படாதளவு மறைந்து நின்று கொண்டார்.

எப்போதும் தான் வரும்போது தயாராய் கார்க் கதவை திறந்தபடி காத்திருக்கும் பரசுராமனை தூர இருந்தே கை உயர்த்தி குட்மார்னிங் பரசு'' என்று சொல்பவர்... இன்றும் அதே போல் கையை உயர்த்தி சொல்ல வாயெடுத்தவர் கார் அருகே பரசுராமன் இல்லாதது கண்டு சுற்றுமுற்றும் பார்த்தார்.

''குட்மார்னிங் ஐயா'' என்று அவர் முதுகுப் பின்னேயிருந்து முன்வந்த பரசுராமனின் முகத்தில் என்றுமேயில்லாத பெருமையும், சந்தோஷமும் போட்டி போட்டது.

''ஹோ'' என்ற கையை உதறிக் கொண்டே சுந்தரேசன்... ''இன்னைக்கு என்னை முந்திக்கிட்டியே பரசு!'' என்றார் செல்லமாய்.

''எப்படியோ... நான் ஜெயிச்சுட்டேன் ஐயா!''

''ஆமா, இது கின்னஸ் ரெக்கார்ட் பாரு... ஒரேடியா அலட்டிக்கறே! இனிமேல் பார்... உன்னை ஒருநாள் கூட ஜெயிக்க விடப் போறதில்லே...''

பரசுராமன் திறந்துவிட காரில் ஏறி அமர்ந்த சுந்தரேசன் சவாலாய் சொன்னார்.

சிரித்தபடி இவரும் ஏறி அமர்ந்து காரை ஸ்டார்ட் செய்தார்!

சுந்தரேசன் எதையெதையோ பேசிக் கொண்டே வர பணிவாய் கேட்டபடி ஆமோதித்து கொண்டு வந்த பரசுராமன் என்னவோ கவனமாகத்தான் வண்டியை ஓட்டினார்.

ஆனால், எதிரே அசுர வேகத்தில் வந்து கொண்டிருந்த லாரியை கடைசி நேரத்தில் கண்டு வளைத்து ஒடித்து இடப்பக்கமாய் திருப்பிய வேகத்தில் லாரி.. மோதாமல் விட்டாலும் மரத்தில் மோதி முன்புறம் நசுங்கிப் போனது... கார் மட்டுமல்ல... பரசுராமனும்தான்!

சுந்தரேசனுக்கு சிறு கீறலுமில்லை.

கண்ணெதிரே பரசுராமன் உயிர்விட்ட சம்பவம் அவரை வெகுவாய் வருத்தியது.

அவரை கார் டிரைவராக மட்டுமல்ல. ஒரு நல்ல நண்பராகவும் நினைத்திருந்த அவருக்கு பரசுராமனின் இழப்பு கண்ணீரை வரவழைத்தது.

தலைவனை இழந்து தவிக்கும் அவர் குடும்பத்திற்கு குறைவராமல் எல்லா நிறையும் செய்ய ஆசைப்பட்டார். ஆசைப்பட்டதோடு நிற்கவில்லை. செயலிலும் காட்டினார்.

சிவகாமி பெயருக்கு ஒரு வீடு வாங்கி அதில் பாதி வாடகைக்கு விட்டு நிரந்தர உணவிற்கு வழி செய்து கொடுத்தார். அதுமட்டுமின்றி வங்கியில் சுந்தரேசனுக்கு சேரவேண்டிய நியாயமான தொகையோடு அதிகமாக சேர்த்து போட்டு அதன்மூலமும் வட்டி கிடைக்க ஏற்பாடு செய்து குழந்தை கீதா பெயரிலும் ஒரு பெரிய தொகையை திருமணத்திற்கென டெபாசிட் செய்தார். சிறுவன் கோபிநாத்தை யுவன்ராஜ் படிக்கும் பள்ளியிலேயே சேர்த்து நல்ல கல்வி கிடைக்க ஏற்பாடு செய்ததோடு கல்விச் செலவு முழுக்க சுந்தரேசனே ஏற்றுக் கொண்டார்.

அன்று முதல் யுவன்ராஜனும், கோபிநாத்தும் நெருங்கிய நண்பர்களாகினர். தந்தையை இழந்த பிள்ளையாயிற்றே என்று அபிராமியம்மாளும் கோபியை தன் சொந்த மகன் போல் பாராட்டி அன்பு செலுத்தினாள். யுவனுக்கு புதிய உடை வாங்கும் போதெல்லாம் கோபிக்கும் சேர்த்து வாங்கத் தவறுவதில்லை.

கோபியைப் பற்றி யாரேனும் ஒரு வார்த்தை சொன்னால் யுவனுக்குப் பொறுக்காது. யுவனை யாராவது ஒரு வார்த்தை சொன்னால் அவனுக்கு முன்பற்கள் இல்லாமல் செய்து விடுவான் கோபி! இப்படி ஒரு மூர்க்கமான அன்பு அவர்களிடம் நிலவி வந்தது.

கிட்டத்தட்ட இருவரின் தேவைகள், ரசனைகள் ஒரே மாதிரியாக இருந்தது. இருவரின் ப்ளட் க்ரூப்பும் ஒரே மாதிரிதான்.



இருவரும் கல்லூரியில் ஒரே வகுப்பில் பயின்றனர். கல்லூரி வாழ்க்கை முடிந்து ஒரு மாதம் கூட முடியவில்லை.

ஒருநாள் யுவன்ராஜ் மயங்கி விழுந்து விட்டான். என்னவோ, ஏதோவென்று பதறி நகரத்திலேயே உயர்ந்த ஹாஸ்பிடலில் சேர்த்தனர்.

அப்போதுதான் தெரிந்தது யுவனின் இரண்டு சிறுநீரகங்களும் பழுதாகிப் போயிருப்பது.

அவன் குடும்பத்தினர் நிலைகுலைந்துப் போய்விட்டனர்.

சுந்தரேசனால் பிஸினஸில் எத்தனையோ ஏற்ற இறக்கங்களை, வெற்றி தோல்விகளை தாங்கிக் கொண்டவருக்கு தன் ஒரே மகனுக்கு இப்படியொரு நோய் இருப்பதை தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அவரும் படுக்கையில் விழுந்தார். ஒரு கை, கால் இயங்காமல் பாரிச நோய்க்கு ஆட்பட்டார்.

அடுத்தடுத்து விழுந்த பேரிடிகளை அபிராமி அம்மாவால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அந்த நேரத்தில் கோபிநாத்தும், சிவகாமியும்தான் யுவன்ராஜை கவனித்துக் கொண்டனர்.

தன் நண்பன் உயிர் பிழைப்பதொன்றை தன் குறிக்கோளாக எண்ணி தன்னை பரிசோதனைக்கு ஆட்படுத்திக் கொண்டான். அதிர்ஷ்டவசமாய் அவன் ப்ளட், டிஸ்யூ எல்லாமே யுவனுக்கு மேட்ச்சாக... தன் ஒரு கிட்னியை யுவனுக்குத் தர முன்வந்தான்.

சிவகாமி இதை தடுக்கவில்லை. இன்று பிடிபிடித்து சாப்பிடும் சாப்பாடு முதல், தலைக்கு மேல் பாதுகாக்கும் கூரை வரை எல்லாமே சுந்தரேசன் போட்ட பிச்சை. இது அந்த குடும்பத்துக்கு சொந்தமான உடல். அவர்களுக்கு உதவ ஆண்டவன் இப்படியொரு சந்தர்ப்பம் தந்ததற்காக நன்றி கூறினாள்.

ஆபரேஷனில் பிழைத்தெழுந்தான் யுவன்ராஜ். சுந்தரேசன் சந்தோஷப்பட்டார். ஆனால் அவரால் இனி நடமாட முடியாத சூழ்நிலை.

நிர்வாகப் பொறுப்பு அத்தனையும் யுவன்ராஜ் தோளில்!

சுந்தரேசன் கோபிநாத்தை அவனுக்கு எல்லாவிதத்திலும் உதவியாளராக நிர்மாணித்தார். கிட்டத்தட்ட கோபிநாத் நிழல் எம்.டி!

ஆனாலும் தனக்குத் தரப்பட்ட சலுகைகளை கோபி, கம்பெனிக்காக, அதன் உயர்விற்காக பயன்படுத்தி, பாடுபட்டானே தவிர, தன் சொந்த விருப்பு வெறுப்பிற்காக பயன்படுத்திக் கொண்டதில்லை.

யுவன்ராஜின் இந்த உயர்விற்கு கோபியும் பெரிய காரணம் என்பதை யாராலும் மறுக்க முடியாது.

அவனுக்கென்று யுவன்ராஜ் ஒரு காரும் கொடுத்திருந்தான். அதையும் கம்பெனி வேலைகளுக்கு மட்டுமே பயன்படுத்தி வந்தான் கோபிநாத்.

## 7

**நெ**ய் வாசம் வீடு முழுக்க மணத்தது.

மூச்சை உள்ளிழுத்தபடியே கிச்சனிற்குள் நுழைந்தாள் ஸ்வாதி.

''என்னம்மா... நெய் வாசம் கமகமக்குது? என்ன விசேஷம்?''

''என்னடி தெரியாதமாதிரி கேக்கறே?'' என்றவள் அச்சு முறுக்கை வாணலியிலிருந்து எடுத்து பாத்திரத்தில் போட்டாள் சிவசங்கரி.

இன்னும் நாலஞ்சு இனிப்பு வகை செய்யப்பட்டு பாத்திரத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. அதிலிருந்து ஒரு அதிரசத்தை எடுத்து கடித்தபடி, ''தெரியாததால்தானே கேக்கறேன்'' என்றாள்.



''நேத்து சொன்னேனே.. அதுக்குள்ளே மறந்துட்டியா?''

''என்ன சொன்னே?''

''இன்னைக்கு மகேஷ் அமெரிக்காவுலேர்ந்து வர்றான்னு சொன்னேனே!''

''ஓ... இன்னைக்கா? நான் நாளைக்குன்னு நினைச்சிருந்தேன். அண்ணன் பையனை அசத்த இத்தனை ஸ்வீட்ஸா? ஆகட்டும், ஆகட்டும்... எனக்கு டிபன் கிடைக்குமா? நேரமாச்சு!'

''என்னது நேரமாச்சா? ஸ்வாதி இப்ப நீ ஏர்போர்ட்டுக்குதானே போறே?'' சந்தேகமாய் கேட்டாள்.

''ஏர்போர்ட்டுக்கா? டி.வி. ஸ்டேஷனுக்கு போகணும்!''

''என்னடி இப்படி சொல்றே? அப்ப மகேஷை கூட்டிட்டு வர போகமாட்டியா?''

''நீ இங்கே இருக்கியா.. பரவாயில்லை. ரெடியாய்ட்டியா ஸ்வா?'' என்று ஆச்சர்யமாய் கேட்டுக் கொண்டே வந்தார்.

''பாருங்க இவளை! உங்களோட ஏர்போர்ட்டுக்கு வரமாட்டாளாம்!''

''என்ன ஸ்வா... அம்மா சொல்றது நிஜமா?''

''ஆமா டாடி! எனக்கு இன்னைக்கு எடிட்டிங் இருக்கு. தவிர, ட்ரெயிலருக்கு காஸெட் ரெடி பண்ணி தரணும். நான் எப்படிப்பா ஏர்போர்ட்டுக்கு வரமுடியும்?''

வாசுதேவன் மகளை கனிவாய்ப் பார்த்தார்.

''இதப்பாருடா...!! இந்த வேலைகளை நாளைக்குக் கூட பண்ணிக்கலாம். மகேஷை ரிசீவ் பண்ணப் போறது இப்ப அவசியம். மரியாதையும் கூட! உனக்கு அதிகம் சொல்ல வேண்டாம்.. புரிஞ்சுப்பே! ப்ளீஸ் கிளம்பும்மா...!''

சற்றே யோசித்த ஸ்வாதி ''சரி டாடி! ஏர்போர்ட் போகலாம். ஜஸ்ட் எ மினிட்... நான் ஒரு போன் பண்ணி சொல்விட்டு வந்திடறேன். எடிட்டிங்ல எனக்காக வெய்ட் பண்ணிட்டிருப்பாங்க!''

''ஷ்யூர்... ஷ்யூர்.. போய் சொல்விட்டு வாம்மா!''

**ஸ்**வாதி எதிர்பார்த்தபடி இம்மி பிசகாமல் அப்படியே இருந்தான் மகேஷ்.

அமெரிக்க வாசம் அவன் இயற்கையான வெள்ளை நிறத்தை பாலீஷ் பண்ணி சிவப்பாக்கி இருந்தது. கண்களை கவ்வியிருந்த கூலிங்க்ளாஸ் அவன் நிறத்தை கூடுதலாய் எடுத்துக் காட்டியது. முகம் மழுமழுவென்று பெண்மைத்தனமாய் இருந்தது.

''ஹாய் மகேஷ்!''

''ஹாய் ஸ்வாதி... ஹவ் பி யூ?'' என்றபடி அவள் தோளில் தட்டினான்.

''வெரி ஃபைன்!''

''ஹலோ அங்கிள்... நல்லாருக்கீங்களா?''

''ரொம்பவே... பரவாயில்லே மகேஷ்... இந்த ஏழெட்டு வருஷத்துல தமிழை மறக்காம இருக்கியே.''

''எப்படி அங்கிள் மறக்க முடியும்? ஸ்வாதியை நினைக்கறப்பவெல்லாம் இன்டியா ஞாபகத்துக்கு வந்துடும். இன்டியா ஞாபகத்துக்கு வர்றப்ப தமிழ் ஞாபகத்துக்கு வராதா என்ன? ஆனா ஒரு உண்மைய தெரியுமா? நான் தூங்கும்போது கூட ஸ்வாதிய மறக்கறதில்லே...'' என்று சொல்லிவிட்டு சிரித்தான்.

வாசுதேவனும் அந்த சிரிப்பில் கலந்து கொண்டார்.

ஸ்வாதியின் முகம் மாறியது.

மறைமுகமாய் அவன் பேசிய பேச்சில் அந்தரங்கமான, அருவறுப்பான விஷயம் வெளிப்பட்டதை ஸ்வாதியால் உணர முடிந்தது.



காரில் ஏறிக் கொண்டனர்.

''என்ன ஸ்வாதி... இங்கே நீ ரொம்ப பாப்புலர் ஃபிகராமே! அப்படியா?''

''ஆமாம்! இன்னைக்கு நம்ம ஸ்வாதி ஃபேமஸான டி.வி. ஃபிகர்! இனி அவளால ரோட்ல கூட தனியா நடந்து போக முடியாது. ரசிகர்கள் தொந்திரவு தாங்க முடியாது..''

''ஓஹ்!'' என்று ஆச்சர்யமாய், அதேசமயம் கண்களில் வழியும் காதலோடு அவளைப் பார்த்து கண்சிமிட்டினான்.

ஸ்வாதிக்கு எரிச்சலாய் இருந்தது.

அவனைப் பார்க்காதது போல் பார்வையை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள்.

**''எ**ன்ன ஸ்வாதி! எங்கே கூப்பிட்டாலும் வரமாட்டேங்கிறே! அங்கிள் கோர்ட்டுக்குப் போயிடறார். அப்ப நீதானே எனக்கு சென்னைய சுத்திக்காட்டணும்!''

''லுக் மகேஷ்! என்னால உன்கூட அலையறதுக்கெல்லாம் நேரம் ஒதுக்க முடியாது. எனக்கு ஆயிரத்தெட்டு வேலைகள் இருக்கு. அதை நான் கவனிச்சாகணும். சென்னை உனக்கொன்னும் புதுசில்லையே..''

''என்னடி பேசறே? உன்கூட வெளியே போகணும்னு ஆசைப்படறான். போறதை விட்டுட்டு வேலை வேலைன்னு ஓடறியே! மகேஷ் கைநிறைய சம்பாதிக்கறதே அதிகம். நீ ஒண்ணும் சம்பாதிச்சுதான் ஆகணும்னு அவசியமில்லே!'' என்றாள் சிவசங்கரி.

''ஆமா ஸ்வாதி... நீ ஏன் கஷ்டப்படணும்!''

ஸ்வாதி அம்மாவை முறைத்தாள். மகேஷ் இங்கு வந்து பத்து நாட்கள் ஆகிவிட்டன. பத்து நாட்களும் ஸ்வாதிக்கு இதே தொல்லைதான்.

அம்மா பட்டவர்த்தனமாய் பேசிய விதம் பிடிக்கவில்லை. உடனே பதிலடி கொடுக்க தோன்றியது.

''மகேஷ் நிறைய சம்பாதிக்கலாம். அதுக்காக நான் சம்பாதிக்க கூடாதுன்னு சட்டமா என்ன?''

அந்த வார்த்தையில் அடிபட்டுப் போனான் மகேஷ்.

அதற்கடுத்து வந்த சில நாட்கள் கலகலப்பின்றி நகர்ந்தது.

ஒருநாள் மகேஷ் சிவசங்கரியிடம், ''ஆன்ட்டி, நான் மதுரைக்கு போய்ட்டு வரலாம்னு இருக்கிறேன். பெரியம்மா வரச் சொல்லி தொந்தரவு பண்றாங்க. நாலஞ்சு நாள்ல திரும்பி வந்துடுவேன்... ஒக்கே?''

அதுவும் சரிதான் என்று தோன்றியது சிவசங்கரிக்கு. அவன் இல்லாதபோது கல்யாண விஷயம் குறித்து ஸ்வாதியிடம் பேச சௌகரியமாக இருக்கும்.

''பத்திரமா போய்ட்டு வாப்பா மகேஷ்!'' என்று வழியனுப்பி வைத்தாள்.

தன்னறையில் எதையோ எழுதிக் கொண்டிருந்த ஸ்வாதி... யாரோ வரும் காலடி சப்தம் கேட்டு நிமிர்ந்தாள்.

மகேஷ்தான்!

''வா... மகேஷ்...!''

''நீ இந்தளவு பெரிய ஆளா வருவேன்னு நான் நினைச்சுக்கூட பார்க்கலே ஸ்வாதி! ஸ்வாதி வீட்லே தங்கியிருக்கேன்றதே... ப்ளஸ் பாய்ண்ட்டா நினைச்சி வெளியில எனக்கு நல்ல மரியாதை தர்றாங்க.. ஐ'ம் ஸோ ஹாப்பி ஸ்வாதி!''

''தாங்க்யூ..''

''நீ இன்னும் இந்த ஃபீல்டுல உயரணும். அதுக்கு நிறைய உழைப்பும் மனசுல நிம்மதியும் சந்தோஷமும் வேணும். எல்லாத்தையும் விட உன்னோட திருமண வாழ்க்கை உன்னை ரிலாக்ஸ் பண்ணணும். அதுக்கு முதல்ல உனக்கு படிச்ச லைஃப் பார்ட்னர் அமையணும். ஸ்வாதி... இங்கே நான் வந்து பத்து நாள்தான் இருக்கும். ஆனா, உன்னை உன் மனசை புரிஞ்சுக்க எனக்கு பத்து நிமிஷம் போதுமானதாயிருந்துச்சு.



நான் ரொம்ப ஆசையோட, எதிர்பார்ப்போட இன்டியா வந்தேன். ஆனா, அதுக்காக கட்டாயப்படுத்தி எதையும் என்னுடையதாக்கிடணும்ங்கற வெறி எனக்கில்லே. பிரம்மன் நம்ம ரெண்டு பேருக்கும் முடிச்சி போடாதப்ப.. யாரை குறை சொல்ல முடியும்? நான் உன் மாமா பிள்ளைங்கறது இரண்டாம் பட்சம்தான். முதலில் நான் உன்னோட நல்ல நண்பன். என் சிநேகிதியோட மனசை புண்படுத்த நான் காரணமாயிருக்க மாட்டேன். நான் இப்ப மதுரைக்குப் போறதுகூட உனக்காகத்தான். அத்தை கண்டிப்பா நம்ம கல்யாணம் விஷயம் பத்தி உன்கிட்டே பேசுவாங்க. நான் இங்கிருந்தா உன்னோட தீர்க்கமான முடிவை சொல்ல சங்கடப்படுவே. அதுக்காகத்தான். நீ தைரியமா உன் முடிவை சொல்லிடு ஸ்வாதி. எனக்கு இதிலே வருத்தமில்லே. எனக்கு அதிர்ஷ்டமில்லேன்னு நினைச்சுக்கிட்டு சமாதானமாயிடுவேன். ஒக்கே?''

ஸ்வாதி எதிர்பார்க்கவில்லை. மகேஷ் இப்படியெல்லாம் பேசுவான் என்று! 'என் மனதை என்ன அழகாய் புரிந்து வைத்திருக்கிறான். பாவம். இவனை எப்படியெல்லாம் அலட்சியப்படுத்தினேன்?'

''ஸாரி... மகேஷ்... நான் உங்களை ரொம்ப கஷ்டப் படுத்திட்டேன்.''

''நோ... நோ... அப்படியெல்லாமில்லே.. எல்லா மனசுக்குள் ளேயும், ஆசைகள், எதிர்பார்ப்புகள் இருக்கறது சகஜம். என்னோட ஆசை நிறைவேறணும்னு எதிர்பார்க்கிற மாதிரிதானே... நீயும் எதிர்பார்ப்பே! எனிவே, விஷ் யூ ஆல் த வெரி பெஸ்ட்! வரட்டுமா?'' என்று விடைபெற்றுப் போய்விட்டான் மகேஷ்.

அவன் போன திசையை வெகுநேரம் பிரமிப்போடு பார்த்துக் கொண்டிருந்தாள் ஸ்வாதி!

மகேஷ் சொன்னது போலவே அன்றிரவே திருமணப் பேச்சை ஆரம்பித்து விட்டனர்.

''ஏம்மா... நீ நம்ம மகேஷைப் பத்தி என்ன நினைக்கிறே?'' என்று நேரடியாக விஷயத்துக்கு வந்தார் வாசுதேவன்.

''மகேஷைப் பத்தி நினைக்கறதுக்கு என்னப்பா இருக்கு?'' என்றாள் அடுத்த கேள்வியை கேட்காதளவு!

''இவளை இப்படிக் கேட்டா... குதர்க்கமாகத்தான் பதில் சொல்வா! இங்கே பாருடி.... நாங்க உன்னை மகேஷிற்கு கல்யாணம் பண்ணலாம்னு முடிவு பண்ணிட்டோம்!'' என்றாள் சிவசங்கரி.

''அம்மா... நான் இருக்கிறது வில்லேஜுமில்லே... நான் விவரம் தெரியாத கிராமத்துப் பொண்ணுமில்லே. நான் மேஜர். டிகிரி ஹோல்டர்! உங்க இஷ்டத்துக்கு முடிவெடுக்க முடியாது. எனக்கு இதிலே விருப்பமில்லே!''

''எப்படி பேசறா பாருங்க! மகேஷுக்கு என்ன குறைச்சல்? நீ டி.வி.யில பெரிய ஆளா இருக்கலாம். ஆனா, நீ ஒரு பொண்ணு... அதை ஞாபகம் வச்சுக்க.''

''ஏன், பொண்ணாயிருந்தா... அவளுக்குன்னு சொந்தமா ஆசாபாசங்கள் இருக்கக் கூடாதா? மகேஷுக்கு எல்லா தகுதியும் இருக்கலாம். பட், எனக்கு பிடிக்கலே.. அவ்வளவுதான்!''

''எவ்வளவு திமிரா...'' என்று கோபப்பட்ட சிவசங்கரியை கைநீட்டித் தடுத்தார் வாசுதேவன்.

''ஏன் பதர்றே? அவளுக்கு பிடிக்கலேன்னா... விட்டுடணும். கம்ப்பல் பண்றதால... எல்லாம் நல்லபடி நடந்துடாது. ஸ்வாதியோட விருப்பத்துக்கு மரியாதை தர்றதும் நம்ம கடமைதான் சிவா! நீ



கொஞ்சம் அமைதியாயிரு! ஸ்வாதி... டாடியப் பத்தி உனக்குத் தெரியும். உனக்கு நிறைய சுதந்திரம் கொடுத்திருக்கிறேன். அதனால இதுவரைக்கும் உன்மேல எந்த ப்ளாக்மார்க்கும் விழாம கேர்ஃபுல்லா உன் சுதந்திரத்தை பயன்படுத்தி வந்திருக்கே! இனியும் கவனமாயிருப்பேங்கிற நம்பிக்கை எனக்கு நிறையவே இருக்கு. உன் மனசுல என்ன இருக்கோ, அதை வெளிப்படையா சொல்லும்மா... மகேஷை உனக்கு பிடிக்காத காரணம்?''

''முடியலேப்பா... என்னால சொல்ல முடியலே! ஹி இஸ் ஜெம்! அதை நான் மறுக்கலே. பட், என் புருஷனா அவரை கற்பனை பண்ணிப் பார்க்க முடியலே டாடி!''

''அப்ப... நீ யாரையாவது விரும்பறியா ஸ்வாதி?''

''ஐயோ... அப்படியெல்லாம் இல்லேப்பா... அப்படி ஏதுமிருந்தா... கண்டிப்பா உங்ககிட்டே சொல்லிடுவேன்.. மறைக்கமாட்டேன்!''

''சரி... அப்படி ஏதுமில்லேங்கறே! உனக்கு கணவனா வரப்போறவர் எப்படி இருக்கணும்னு எதிர்பார்க்கிறே? சொன்னா அந்த மாதிரி மாப்பிள்ளை பார்க்க ஆரம்பிச்சிடுவேன் இல்லையா?'' என்றார் சிரித்தபடி வாசுதேவன்.

''போங்கப்பா...'' என்று வெட்கப்பட்டாள் ஸ்வாதி.

''இப்படியொரு அப்பா இருந்தா... பொட்டைப் புள்ளைங்க... பெத்தவங்க பேச்சை கேக்காம இப்படிதான் ஆட்டம் போடும்.'' சிவசங்கரி கோபமாய் அங்கிருந்து எழுந்து போய்விட்டாள்.

வாசுதேவனும் போய்விட்டார்.

'வரப்போறவர் எப்படி இருக்கணும்னு எதிர்பார்க்கிறே?'

அப்பா கேட்ட அந்த வார்த்தை மனதில் ரீங்காரமிட்ட போதெல்லாம்... பளிச்சென்று அவன் முகம் நினைவிற்கு வந்தது.

''அடிபட்ருச்சா?'' என்று அக்கறையாய் பதறி விசாரித்தானே அவன்!

தவறு என்மீதிருந்தும்... அவன் கார் ஹெட்லைட்டை நான் உடைத்திருந்தும் அதைப் பற்றி கவலைப்படாமல் என்னை விசாரித்த மனிதநேயம்.

அவன் யார்? பெயர் என்ன?

## 8

அந்திசாயும் நேரம்!

தலைவலி என்று சற்று முன்னதாகவே வீட்டிற்கு வந்துவிட்ட கோபிநாத் ரெஸ்ட் எடுக்க பிடிக்காமல் கையோடு எடுத்து வந்திருந்த ஃபைலை பார்த்தான்.

''ஏம்ப்பா... தலைவலின்னு சொன்னே... இங்கே வந்ததும் ஃபைலை பார்க்கணுமா?'' அம்மா கேட்டாள்.

''நிறைய வேலையிருக்குமா? புது ப்ராஜக்ட் ஒண்ணு எஸ்டிமேட் போட்டுக்கிட்டிருக்கோம். நாளை மீட்டிங் வேற இருக்கு. இந்த வேலைய முடிச்சுக் கொடுத்தாதான் நாளைக்கு யுவன் மீட்டிங்ல டென்ஷன் இல்லாம பேச முடியும்.''

''என்னமோ போ! சொன்னா கேக்கவா போறே? யுவனைப் பார்த்து எவ்வளவு நாளாயிடுச்சு. பார்க்கணும் போலிருக்கு!''

''அவனும் உன்னைப் பார்க்க வரணும்னுதான் சொல்லிக் கிட்டிருந்தான். ரெண்டு மூணு நாள்ல வருவான். அம்மா... எனக்கு ஒரு காபி வேணும்!''

''இதோ எடுத்துக்கிட்டு வர்றேன்!''

சற்று நேரத்தில் காபி வந்தது.

இரவு பார்த்துக் கொள்ளலாம் என்று ஃபைலை மூடி வைத்தவன் காபியை பருகியபடியே ரிமோட் எடுத்து டி.வி.யை ஆன் பண்ணினான்.



சோபாவில் வசதியாய் சாய்ந்து கொண்டு பார்த்தவன்... திடீரென உடம்பு விறைப்பாக சோபாவின் நுனிக்கு வந்தான்.

மூன் டி.வி.யில் 'பெண்களின் இன்றைய சுதந்திரம்' என்ற தலைப்பில் கலந்துரையாடல் நிகழ்ச்சி ஓடிக் கொண்டிருக்க... ஸ்வாதி ஒவ்வொருவரிடமும் கேள்விகள் கேட்டுக் கொண்டிருந்தாள்.

திகைப்பும், ஆச்சர்யமுமாக விழிகள் அகல டி.வி. ஸ்கீரினையே பார்த்துக் கொண்டிருந்தான்.

'ஹே... அவளா? என்ன ஆச்சர்யம்?'

பிரமிப்பிலிருந்து விடுபடாமல், திறந்த வாய் மூடாமல், ''அடுத்த முறை சந்திக்கும் வரை உங்களிடமிருந்து விடைபெறுவது உங்கள் ஸ்வாதி'' என்று அவள் விடைபெறும் வரை பார்த்துக் கொண்டிருந்தான்.

அடுத்த கணம் போனை தன்னருகில் இழுத்தான். மூன் டி.வி.யின் போன் நம்பரை டெலிபோன் டைரக்டரியில் பார்த்து டயல் செய்தான்.

ஸ்வாதியின் பெயரை சொன்னதும் ஆபரேட்டர் லைனை கொடுத்தாள்.

''ஹலோ...'' என்றாள் ஸ்வாதி.

தேனில் ஊறிய பலாச்சுளையின் இனிமை.

''ஹலோ... கேன் ஐ ஸ்பீக்கு மிஸ் ஸ்வாதி..'' என்றான் வேண்டுமென்றே!

''யெஸ்... நான்தான் பேசறேன். நீங்க யாரு?''

''உங்கள் ரசிகன்! இப்பத்தான் முதல் முதலா உங்க ப்ரோக்ராமை பார்த்தேன். நல்ல பெர்ஃபார்மன்ஸ்.''

''தாங்யூ.. தாங்யூ.. உங்க பேர் என்னன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?''

''ஷ்யூர்... ஐ'ம் கோபிநாத்! யுவன்ராஜ் குருப் ஆஃப் கம்பெனீஸ் மேனேஜர்.''

''... வெரிகுட்!''

''மேடம்... நாம ஏற்கனவே ஒருமுறை மீட் பண்ணி இருக்கிறோம்.''

''நாம் மீட் பண்ணியிருக்கோமா? புரியலியே..''

''நல்லா நினைவுபடுத்திப் பாருங்க.. ஒரு பத்து நாள் முன்னாடி...''

''இல்லையே.. நான் யாரையும் மீட் பண்ணலியே...!''

''பொய் சொல்றீங்க பார்த்தீங்களா? என் கார் மேல உங்க வண்டிய விட்டு மோதவிட்டீங்களே...''

''ஓ...'' என்றலறிய ஸ்வாதியின் இதயம் படபடவென வேகமாய் துடித்துக் கொண்டது.

'எதிர்புறத்தில் பேசுவது அவனா? வாட் எ சர்ப்ரைஸ்? மறுபடி அவனை சந்திக்க மாட்டோமா என்று ஏங்கிக் கொண்டிருக்கையில் அவனாக தொடர்பு கொள்கிறான். இதென்ன சித்து விளையாட்டு?''

''என்ன மேடம் அமைதியாய்ட்டீங்க?''

''நான் எதிர்பார்க்கலே! அகெய்ன் ஸாரி... உங்க கார் ஹெட் லைட்டை உடைச்சதுக்கு. அவசரத்துல... நான் சரியா எதைப் பத்தியும் விசாரிக்காமப் போய்ட்டேன்... ஸாரி!''

''இப்ப என்ன.. மறுபடி சந்திச்சு நேர்லேயே விசாரிச் சிடுங்களேன்... கோபிநாத் இயல்பாய், குறும்பாய் சொல்லவும், வாய்விட்டு சிரித்தாள் ஸ்வாதி.

''உங்களுக்கு என்னைப் பார்க்கணும். அவ்வளவுதானே?''

''ஆமாம்னு சொல்ல வெக்கமாயிருக்குங்க...''



''ஓக்கே.. நாளைக்கு சந்திப்போம்'' என்று ஒரு ரெஸ்டாரண்டின் பெயரை சொன்னான்.

**ஸ்**வாதி வருவதற்கு அரைமணி நேரத்திற்கு முன்பாகவே வந்து காத்திருந்தான் கோபிநாத். பீச் ஓரம் அமைந்திருந்தது அந்த ரெஸ்டாரெண்ட்.

சரியான நேரத்திற்கு டாணென்று வந்து விட்டாள் ஸ்வாதி.

''வாங்க ஸ்வாதி...'' என்று கைகூப்பி வணங்கினான்.

அந்த கண்ணியம் அவளை வெகுவாய் கவர்ந்தது.

''வணக்கம்!'' என்று அவளும் கைகூப்பினாள்.

தனியான ஒரு டேபிளை தேர்ந்தெடுத்து அமர்ந்தனர்.

''நீங்க டி.வி.யில பயங்கர பாப்புலராமே!''

''யார் சொன்னது?'' என்றாள் வெட்கச் சிரிப்புடன்.

''எங்கம்மாவே சொல்றாங்க! உங்க நிகழ்ச்சின்னா மிஸ் பண்ணாம டி.வி. முன்னாடி உக்காந்துடுவாங்களாம். நிஜத்தை சொன்னா... நான் டி.வி. பார்க்கற ஆள் கிடையாது. அதுக்கு நேரமும் இல்லே... ஆர்வமும் இல்லே. நேத்துதான் ஏதேச்சையா பார்த்தேன். அதுவும் உங்க நிகழ்ச்சியை! ரொம்ப ஷாக்காயிடுச்சு. உடனே போன் பண்ணி பேசினேன். அம்மாகிட்டேயும் உங்களைப் பத்தி சொன்னேன். நம்பமாட்டேங்கிறாங்க. நம்ம வீட்டுக்கு வரச் சொல். நேர்ல பார்த்தாதான் நம்புவேங்கிறாங்க!''

''நிஜமாவா?''

''நிஜமாதாங்க! எப்ப எங்க வீட்டுக்கு வர்றீங்க?'' என்று சாமர்த்தியமாய் கேட்ட கோபியை இயல்பாய் பார்ப்பது போல் அணுஅணுவாய் ரசித்தாள்.

'எவ்வளவு வசீகரமாய் இருக்கிறான்? மைதா மாவு போல் அதிக நிறமாய் இல்லாமல் மாநிறத்திற்கும் கூடுதான நிறம்.

ஐந்தரைக்கு மேற்பட்ட உயரம். எக்ஸர்சைஸ் பாடி. கச்சிதமான, கம்பீரமான மீசை! கண்ணியத்தை கசியவிடும் கண்கள். அவன் சிரிக்கும்போது வெகு அழகாக இருந்தான். முன் பற்களில் ஒன்று மிக லேசாய் உடைந்திருக்க... சிரிக்கும்போது...அது கூடுதல் கவர்ச்சியை தந்தது.

''என்னங்க பதிலே காணோம்?''

''வர்றேங்க... கூடிய சீக்கிரம் உங்க வீட்டுக்கு வர்றேன்..''

''தேங்க்யூ... தேங்க்யூ ஸ்வாதி!''

அதன்பின் அவனைப் பற்றி, அவளைப் பற்றி, டி.வி. மீடியாவைப் பற்றி, யுவனைப் பற்றி, மகேஷைப் பற்றி என்று பேசி முடித்திருக்கையில் இருவருக்கும் ஒன்று புரிந்தது.

இருவர் இதயமும் இடம்மாறிப் போயிருப்பது.

நள்ளிரவு 12.01

கோபிநாத்தின் செல்ஃபோன் சிணுங்கியது.

உறக்கம் கலைந்த எரிச்சலோடு எடுத்து ''ஹலோ'' என்றான்.

''இனிய நண்பர் கோபிநாத்திற்கு... என் இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துக்களை கூறிக் கொள்வது... உங்கள் தோழி ஸ்வாதி...!''

செல்கள் விறைத்துக் கொண்டது கோபிக்கு.

''ஸ்...வா...தி!''

''யா...''

''என் பிறந்தநாள் உங்களுக்கெப்படி?''

''இது பெரிய விஷயமில்லை. மனசுக்கு ஒருத்தரை பிடிச்சிட்டா... அவரைப் பத்திய பயோடேட்டா முழுக்க தன்னாலேயே தெரிஞ்சு போய்டாதா என்ன?''



''ஸ்வாதி...'' என்று அவன் அடுத்த வார்த்தை பேச ஆரம்பிக்கும்முன் போனை வைத்துவிட்டாள்.

அதற்குப் பிறகும் கோபிக்கு உறக்கம் வருமா என்ன?

என் பிறந்தநாளை தெரிந்து வைத்துக் கொண்டு நள்ளிரவில் போன் செய்து வாழ்த்து சொல்கிறாள். என்ன சொன்னாள்? மனசுக்கு பிடித்தவன் என்றா? அப்படியானால்... என்னை அவளுக்குப் பிடித்திருக்கிறதா? கடவுளே... இது நிஜமாய் இருக்க வேண்டும். என் உயிருக்கு நெருக்கமாய் இருப்பவள் என் உயிரோடு கலக்க வேண்டும். அவள் எனக்கே சொந்தமாக வேண்டும். இனியும் தாமதிக்காமல் என் மனசில் உள்ளவைகளை அவளிடம் வெளிப்படுத்த வேண்டும்.

விடிவதற்காக காத்திருந்தான்.

நேரே டி.வி. நிலையத்திற்கே சென்றான்.

காலையிலேயே எதிர்பார்க்காத ஸ்வாதி... அவனை நேர் கொண்டு பார்க்க முடியாமல் தடுமாறினாள்.

''வாங்க... கோபி!''

''ஸ்வாதி... எனக்கொரு உண்மை தெரியணும்!''

''என்ன கோபி?''

''என் மனசுல உங்களுக்கு நிரந்தரமா ஒரு இடம் கொடுத்திருக்கிற மாதிரி... உங்க மனசுல எனக்கு இடம் இருக்கிறதா?''

''கோ...பி!''

''ப்ளீஸ்...தயக்கம் வேண்டாம். சரியோ, தப்போ... இந்த கண்ணாமூச்சி விளையாட்டை தொடர வேண்டாம். அவஸ்தையாக இருக்கு. கதவைத் தட்டாத எத்தனையோ பேர் தங்கள் வாய்ப்புக்களை இழந்திருக்கிறார்கள். அந்த வரிசையில் நானும் சேர விரும்பலை ஸ்வாதி! சொல்லுங்க... டூ யூ லவ் மீ?''

ராணுவ வீரனைப் போல் படபடவென்று பேசிய கோபியை ஆச்சர்யமாய் பார்த்தாள்.

''சொல்லுங்க... எனக்காக தூங்காம விழிச்சிருந்து மிட் நைட்ல போன் பண்றதுக்கு என்ன காரணம்?''

''ஏன்னா... ஏன்னா... ஐ... லவ்... யூ!'' என்றாள் கண்கள் மின்ன.

எங்கோ வானில் மின்னல் மின்ன... தாழம்பூ மலர்ந்து குப்பென்று மணம் வீசியது.

## 9

யுவன் தந்தையிடம் பிஸினஸ் சம்பந்தமாக ஆலோசித்துக் கொண்டிருந்தான். சுந்தரேசன் தெளிவாய் மகனுக்கு விளக்கிக் கொண்டிருந்தார்.

''தாங்க்ஸ் டாடி! நான் இப்ப தெளிவாயிருக்கேன். மீட்டிங்ல இதை பத்தி டிடெய்லா பேசிடறேன். நான் கிளம்பட்டுமா டாடி?'' என்று எழுந்து கொண்டான்.

''மீட்டிங் எப்ப முடியும் யுவன்?''

''ஈவ்னிங் நாலு மணியாகும். ஏன் டாடி?''

''இன்னைக்கு உங்கம்மாவோட பர்த்டே யுவன்! ஈவ்னிங்.. கொஞ்சம் சீக்கிரம் வரமுடியுமா? அவளை கோவிலுக்கு கூட்டிக்கிட்டு போகணும். உன்னால நேரம் ஒதுக்க முடியுமா?''

''என்ன டாடி இப்படி கேட்டுட்டீங்க? அம்மாவுக்கு இல்லாத நேரமா? கண்டிப்பா வந்து அழைச்சிட்டுப் போறேன். நல்லவேளை ஞாபகப்படுத்துனீங்க. ஒரு நல்ல ப்ரசன்டேஷன் வாங்கணும்!'' என்று கிளம்பிவிட்டான்.

மரியாதைக்கு கதவை தட்டினான் கோபி.

''கம்... இன்!''



உள்ளே நுழைந்தவனைப் பார்த்து முறைத்தான்.

''ஏன்டா... நீ உள்ளே வர்றதுக்குக் கூட கதவைத் தட்டிட்டுதான் வரணுமா என்ன?''

''எஸ்... பாஸ்!'' என்றான் கண்ணடித்து.

''பிச்சிடுவேன் ராஸ்கல்! கால் மீ யுவன்.''

''ஓக்கே... ஓக்கே... இந்த சண்டைய அப்புறம் வச்சுக்கலாம். மீட்டிங்கிற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் பண்ணிட்டேன். நீ வந்தா ஸ்டார்ட் பண்ணிடலாம்!''

''சரி... ஸ்டார்ட் பண்ணிடலாம்! அதுக்கு முன்னால கொஞ்சம் கிட்டே வா!''

''ஏன் யுவன்?'' புரியாமல் வந்தான்.

''உன் முகத்துல ஏதோ ஒரு மாற்றம் தெரியுதே!''

''மா...மாற்றமா? எ... என்ன அது?''

''நானும் அதைத்தான் கேக்கறேன் மாப்பிள்ளை... என்ன விஷயம்?''

''ஒன்னுமில்லேடா!''

''நீ இப்படி நெளிஞ்சுக்கிட்டு சொல்லும்போதே... ஏதோ இருக்குன்னு புரியுது... சொல்லு... என்ன விஷயம்?''

''ஒன்னுமில்லே யுவன்!''

''என்னைப் பார்த்து சொல்லு.. மாப்பிள்ளையாகப் போறியா?''

''சேச்சே...''

''என்ன சேச்சே... அதுக்கேன் இவ்வளவு வெட்கப்படறே?''

''இல்லே யுவன்.. நீ கிண்டல் பண்ணக் கூடாது''

''பண்ணலே சொல்லு.''

''நான்... நான் ஒரு பொண்ணை...''

''ஓஹோ... புரிஞ்சு போச்சு! மாட்டிக்கிட்டியா? யார்டா அவ?''

''ம்ஹூம்... சஸ்பென்ஸ்! இப்ப சொல்ல மாட்டேன்!''

''பின்ன எப்ப சொல்லுவியாம்?''

''உனக்கு கல்யாணம் ஆகிவிட்டப் பிறகு...''

''அதென்ன கணக்கு?''

''அப்பத்தான்... எனக்காகவாவது நீ சீக்கிரம் கல்யாணம் பண்ணிப்பே!''

''ப்ளீஸ்டா... அதுவரைக்கும் என்னால சஸ்பென்ஸ் தாங்க முடியாது கோபி!''

''ம்ஹூம்... சொல்லமாட்டேன். உன் கல்யாணம் ஆன பிறகுதான் என் கல்யாணம்ங்கறது முடிவான விஷயம்!''

''சரி... ஆனா, பெண்ணை என் கண்ணிலே காட்டலாமே!''

''ப்ச்... மாட்டேனே!''

''அட்லீஸ்ட் பேரையாவது சொல்லேன்!''

''மீட்டிங்கிற்கு நேரமாச்சு... கிளம்பலாமா?''

''படவா ராஸ்கல்... இவ்வளவு பிடிவாதமா உனக்கு?'' என்றபடி கைமுஷ்டியை ஓங்கி கோபியின் வயிற்றில் குத்துவது போல் பாவ்லா செய்தான் யுவன்.

சிரித்தபடி வயிற்றை பிடித்துக் கொண்டான் கோபி!

''உன்னைப் பார்க்கவே சந்தோஷமாக இருக்கு கோபி!''

''நிஜம்தான்! காதல்ங்கற வார்த்தைக்கு நிறைய வலிமை இருக்கு யுவன்! நான் எதிர்பார்த்த மாதிரியே எனக்கொரு பெண் காதலியாக வாய்த்துவிட்டாள். நீயும்... இந்த சந்தோஷத்தை அனுபவிக்கணும் யுவன்!''



''எனக்கு மட்டும் ஆசையில்லையா மாப்பிள்ளே? என் மனசுக்கு பிடிச்சவ கண்லேயே அகப்படமாட்டேங்கிறாளே...!''

''ரொம்ப சீக்கிரம் அகப்படுவா. டோன்ட் ஒர்ரி!''

''ஒக்கே... லெட்ஸ் கோ... நேரமாயாச்சு!'' என்றபடி அவனோடு இணைந்து நடந்தான் யுவன்.

கோபியின் வாய் முகூர்த்தம் அன்று மாலையே பலிக்கப் போவதை அறியாமல் மீட்டிங்கில் மூழ்கிப் போனான் யுவன் ராஜ்!''

மீட்டிங் முடிந்தது.

''கோபி...''

''எஸ்...''

''வீட்டுக்கு புறப்பட்டாச்சா?''

''ஆமா... ஏன் கேட்கறே?''

''முடிஞ்சா என்னோட இப்ப ஷாப்பிங் வர முடியுமா?''

''ஸாரி யுவன்! அம்மாவுக்கு காய்ச்சல். நான் இப்ப ஹாஸ்பிடலுக்கு அழைச்சிட்டுப் போகணும்'' கெஞ்சலாய் சொன்னான்.

''ஓ... அது முக்கியம்... முதல்ல கிளம்பு. அம்மாவை ஹாஸ்பிடலுக்கு அழைச்சிட்டுப் போ!''

''நீ கூப்பிட்டும் நான் வராதது மனசுக்கு என்னவோ போலிருக்கு. ஷாப்பிங் அரைமணி நேரத்துல முடிஞ்சிடுமா? நான் வர்றேன்!''

''அதை நான் பார்த்துக்கறேன்... நீ கிளம்பு!''

''சரி... நான் வரட்டுமா?''

''பை!'' என்று கையாட்டி விடை கொடுத்துவிட்டு தன் காரை நோக்கிப் போனான் யுவன்ராஜ்!''

சிட்டியில் உள்ள மிகப் பெரிய ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் அது. அங்கு கிடைக்காத பொருளே இல்லை என்று சொல்லலாம்.

யுவன் எதுவாங்குவதாய் இருந்தாலும் அங்குதான் வருவது வழக்கம்!

அம்மாவுக்கு உயர்ந்த விலையில் அழகான பட்டுப் புடவை வாங்கி பரிசளிப்பது என்ற முடிவுடன் கார் சாவியை பாக்கெட்டில் போட்டுக் கொண்டு ஏதோ ஒரு ஆங்கிலப் பாடலை ஹம் செய்தபடி வேகமாய் படியேறினான்.

அதேநேரம் கைநிறைய பார்சல்களுடன் வேகமாய் இறங்கிக் கொண்டிருந்தாள் ஸ்வாதி!

சற்று நேரத்தில் இருவரும் கவனிக்காமல் நேருக்கு நேர் மோதிக் கொள்ள... ஸ்வாதியின் கையிலிருந்த பார்சல்கள் கீழே விழுந்தன.

''ஸாரி.. ஸாரி மேடம்... ஸாரி...'' என்று தயவாய் கூறியபடி அவைகளை பொறுக்கி அவளிடம் தந்தபோதுதான் அவளைப் பார்த்தான்.

''இட்ஸ் ஓக்கே... நானும் கவனிக்கவில்லை'' என்றபடி மெல்லிய புன்னகையொன்றை கசிய விட்டு அவனைத் தாண்டி இறங்கிப் போனாள்.

யுவன்ராஜ் அசந்து போய்விட்டான்.

'இவள்தான்! நான் தேடிக் கொண்டிருந்த என்னவள்... இதோ இவள்தான்!' இன்ப அதிர்ச்சியில் அவனால் செயல்பட முடியாமல் அங்கேயே நின்றுவிட... ஸ்வாதி தன் வண்டியில் ஏறி கிளம்பிவிட்டாள்.



## 10

ஹோட்டல் ஸ்ரீலேகா!

ரம்மியமான நறுமணம் சூழ... மேற்கத்திய இசை வழிய... யுவன்ராஜ் லேசாய் தலையையும் காலையும் ஆட்டியபடி ரசித்துக் கொண்டிருந்தான்.

கோபி அவனையே புரியாமல் பார்த்தான்.

'என்னாயிற்று இவனுக்கு? இன்னைக்கு உனக்கு பெரிய பார்ட்டி தரப்போகிறேன்' என்று கையோடு அழைத்து வந்து உட்கார வைத்து விட்டு... இவன் பாட்டுக்கு தலையாட்டி உட்கார்ந் திருக்கிறான்.'

''யுவன்...''

''ம்...''

''எதுக்காக இங்கே கூட்டிட்டு வந்தேன்னு பத்து முறை கேட்டாச்சு. இதுவரைக்கும் உன்னிடமிருந்து பதிலேயில்லை.''

''அதான் பார்ட்டி தரப் போறேன்னு சொன்னேனே'' கண்ணடித்து சிரித்தான்.

அதற்கு டைகட்டிய பேரர் ஆர்டர் பண்ணியதை யெல்லாம் டேபிள் மீது ஒழுங்காக பரப்பி வைத்துவிட்டு நகர்ந்தான்.

''சாப்பிடு கோபி...'' தன் கையாலேயே நண்பன் தட்டில் பரிமாறினான்.

''யுவன்... என்னை என்ன முட்டாள்னு நினைச்சிட்டியா? நான் சாப்பிட மாட்டேன். பார்ட்டி தர்றே சரி! ஆனா அதுக்கு என்ன காரணம்னு கேட்டா சொல்லமாட்டேங்கிறே!''

கோபியின் கோபத்தை ரசித்தான்.

''யெஸ் காரணமிருக்கு! ஆனா, அதை நீதான் கண்டு பிடிக்கணும்!''

''இதுவேறயா?'' என்று பொய்யாய் சலித்துக் கொண்டவன், ''கனடா ப்ராஜக்ட் நமக்கு கிடைச்சிருக்கு. ஆம் ஐ கரெக்ட்?''

''ம்ஹூம்...!''

''அப்ப... புதுசா... இன்னொரு கம்பெனி தொடங்கப் போறே?''

''அதெல்லாம் டெய்லி காபி சாப்பிடற மாதிரி சாதாரண நிகழ்ச்சி! இது பெரிய விஷயம்!''

''ம்...'' என்று பலமாய் யோசித்தும் எந்த நுனியும் பிடிபடவில்லை.

''ப்ச்... தெரியலே யுவன்! நீயே சொல்லிடேன்!''

''சாப்பிடு சொல்றேன்!''

''நீ முதல்ல சொல்லு!''

ஸ்வீட்டை எடுத்து அவனிடம் தந்தான்.

''இதை முதல்ல சாப்பிடு சொல்றேன்..''

''ஓ... அப்ப ரொம்ப பெரிய ஸ்வீட் நியூஸ்னு சொல்லு!''

''ஆமாம்!''

''ம்... ஸ்வீட் சாப்பிட்டாச்சு.. இப்ப சொல்லு!''

''உனக்கு சீக்கிரம் கல்யாணம் ஆகப்போகுது!''

''ப்ச்... இதானே வேணாங்கிறது. லொள்ளு பண்ணாம விஷயத்தை சொல்லு!''

''முட்டாள்... புரிஞ்சுப்பேன்னு நினைச்சேன். நீ என்ன சொன்னே... எனக்கு முதல்ல கல்யாணம் ஆனபிறகுதான் நீ பண்ணிக்குவேன்னு சொன்னே... இல்லையா?''

''ஆமாம்...!''

''என்ன ஆமாம்... இன்னும் புரியலையா?''



கோபிக்கு லேசாய் புரிபடத்துவங்க உற்சாக நீரூற்று பொங்கிய உணர்வோடு ''யு...வ...ன்!'' என்றான்.

''நிஜமாவா?''

''ம்...''

''கல்யாணம் பண்ண ஒத்துக்கிட்டியா? ''அப்பாடா! அம்மாவும் அப்பாவும் இப்பதான் நிம்மதியா மூச்சு விடுவாங்க!''

''இது விஷயம் அவங்களுக்கே தெரியாது இன்னும்?''

''என்ன சொல்றே? அவங்கதானே பொண்ணு பார்த்தாங்க?''

''நான் மட்டும்தான் பார்த்தேன்! நான் எதிர்பார்த்த என் கற்பனைக் காதலியை நேத்துதான் முதல் முறையா பார்த்தேன் கோபி!''

''ஓ... வாவ்! எங்கே பார்த்தே? எப்படிப் பார்த்தே?''

''உனக்கே இவ்வளவு சந்தோஷமாயிருக்கே... அப்ப எனக்கு எப்படி இருந்திருக்கும்?'' என்றவன் நேற்று நடந்த நிகழ்ச்சியை விவரித்தான்.

''பட், அவள் யாரு, என்ன பேரு எதுவும் தெரியாது!''

''யுவன்... அவளைப்பத்தி எதுவுமே தெரியாத நிலையிலே நீ இவ்வளவு சந்தோஷப்படறதைப் பார்த்தா பயமாயிருக்கு. சப்போஸ் அவ கல்யாணமானவளாயிருந்தா?''

''இல்லே... கழுத்துலே மெல்லிய செயினை தவிர வேற ஒண்ணுமில்லே...''

''யூ...ஆர்... ராங் யுவன்! இப்பல்லாம் கழுத்துலே தாலியில்லாம திரியறதே ஒரு ஃபேஷன்தான் தெரியுமா? ஒருவேளை அவ கிறிஸ்டியனா இருந்தா... கிறிஸ்டியன்ஸ் மேரேஜ் ரிங்தானே மாத்திப்பாங்க!''

''இல்லை கோபி... ஐ'ம் ஷ்யூர்! அவளுக்கு இன்னும் கல்யாணமாகலே.. செடியிலே பூத்த ரோஜா மாதிரி அவ ஃப்ரெஷ்ஷா இருக்கா... கடவுள் நிச்சயம் என்னை ஏமாத்தமாட்டார். அந்த நம்பிக்கை எனக்கு நிறையவே இருக்கு.''

ஓக்கே... அதுவேதான் என்னுடைய வேண்டுதலும், உன்னோட கனவுக்கன்னிய கடவுள் இப்பவாவது கண்லே காட்டினானே. அதுவே பெரிய சந்தோஷம்! ஆமா, அவளோட ஸ்கூட்டி நம்பரையாவது நோட் பண்ணியா?''

''ச்சே.. இல்லேடா! அவளைப் பார்த்த ஷாக்லே எதுவும் தோணலே... பட், நிச்சயம் மறுபடி அவளை சந்திப்பேன்னு... என் உள்மனசு சொல்லிக்கிட்டே இருக்கு கோபி!''

கோபி நண்பனை ஆச்சர்யமாய் பார்த்துக் கொண்டிருந்தான்.

'கடவுளே... என் நண்பனின் ஆசையை விரைவில் நிறைவேற்று.'

இருட்டத் துவங்கியது.

கதிரவன் தன் கணக்கு வழக்குகளை சந்திரனிடம் ஒப்படைத்துவிட்டு மேற்கில் விரைந்து மறைந்துப் போனது.

கோபியின் கார் சிக்னலில் நின்றது.

பக்கத்தில் அமர்ந்திருந்த ஸ்வாதி, ''ரெஸ்டாரெண்ட் வேண்டாம் கோபி. பீச்சுக்குப் போய்டலாம். இன்னைக்கு பௌர்ணமி! பீச் மணல்ல உட்கார்ந்து முழு நிலாவை பார்க்கறதுக்கு ஈடா எதுவும் வராது. அதுவும் ரைஸ் ஆகும்போது ஆரஞ்சு கலர்ல வரும் பாருங்க... வாவ் ஃபன்டாஸ்டிக்!''

''சரி பீச்சுக்கே போவோம்.. பட், எனக்கென்னமோ அந்த நிலா இன்னைக்கு அவ்வளவு அழகா இருக்காதுன்னு நினைக்கிறேன்!''

''ஏன் அப்படி சொல்றீங்க?''



''என் பக்கத்துல உக்காரப் போற இந்த நிலாவை அழகுல எந்த நிலாவும் மிஞ்ச முடியாதே!''

''பரவாயில்லையே கவிதைத்தனமா பேசக் கூடத் தெரியுமா?'' சிரித்தபடி கேட்டாள்.

''பாடவே செய்வேன்! என்னா, ஒரு கவிதையை தானே காதலிக்கிறேன்!''

''ஸ்...ஆஆ... குளிருதே!'' நடுங்குவதைப் போல் நடித்தாள்.

''கார்ல உள்ள ஏஸியை அணைக்கட்டுமா? இல்லே... நான்...?'' குறும்பாய் கேட்டான்.

''ம்ம்...'' என்று செல்லமாய் முறைத்தாள்.

''ஓக்கே...ஓக்கே! சரி, நல்லா முடிவுப் பண்ணிட்டியா? பீச்சுக்குத்தான் போறோமா? போய்தான் ஆகணுமா?''

''ஸோ வாட்?''

''நீ ஃபேமஸ் ஃபிகர்! அவனவன் டிவியிலே பார்த்தே சொக்கிப் போயிடறானுங்க! பீச்சுல கூட்டம் அதிகமாக இருக்கும். நீதான் ஸ்வாதின்னு தெரிஞ்சுட்டா... அவங்க அன்புத் தொல்லைய தாங்க முடியாது. பேசாம அமாவாசை அன்னைக்கு வருவோம்.. அப்பதான் இருட்டா இருக்கும். யாரும் பார்க்க மாட்டாங்க!''

''ஹைய்யோ... தலை நிறைய இவ்வளவு மூளைய வச்சுக்கிட்டு எப்படிப்பா தூங்கறீங்க? நாம இப்ப பீச்சுக்குத்தான் போறோம். யாரும் நம்மள 'டிஸ்டர்ப் பண்ண மாட்டாங்க... இப்ப பார்த்தீங்களா?''

ஸ்வாதி தலையில் ஒரு ஸ்கார்ப் கட்டிக் கொண்டு, கூலிங்க்ளாஸ் போட்டுக் கொண்டாள்.

''எப்படியிருக்கு?''

''நிலாவுக்கு குல்லா போட்டு கூலிங்க்ளாஸ் மாட்டின மாதிரியிருக்கு!''

ஸ்வாதி அவனை செல்லமாய் கன்னத்தைப் பிடித்துக் கிள்ளினாள்.

''இந்தப் பக்கம்'' என்று மறு கன்னத்தைக் காட்டினான்.

காரை விட்டிறங்கி பூட்டிவிட்டு சந்தடி குறைந்த இடத்தில் அமர்ந்தார்கள்.

ஸ்வாதி சொன்னது போல் அவனை யாரும் அடையாளம் கண்டுகொள்ளவில்லை.

தங்கமாய் ஜொலித்த முழு சந்திரனை ரசித்தாள் ஸ்வாதி.

மணலில் இரு கைகளை ஊன்றி, கால்களை நீட்டி தலையை உயர்த்தி ஹாவென்று மூச்சைவிட்டான்.

''என்ன பெருமூச்செல்லாம் பலமாயிருக்கு!''

''பெருமூச்சல்ல ஸ்வாதி! சந்தோஷம்... மனசுக்கு நிறைவான சந்தோஷம்! எப்படி... எப்படி ஸ்வாதி.. நீ எனக்கு கிடைச்சே? நான் உன்னை காதலிச்சது சாதாரண விஷயம். ஏன்னா, உன்னோட கடைக்கண் பார்வையாவது தன் மேலே விழாதான்னு ஏங்கறவங்க பலபேர் உண்டு. பட், நீ என்னை காதலிச்சதுதான்... இன்னமும் பிரமிப்பாயிருக்கு!''

ஸ்வாதி அவனைப் பார்த்து சிரித்தாள்.

''முதல் முதலா என்னைப் பார்த்தப்ப நீங்க எப்படி ஃபீல் பண்ணீங்க?''

''அதை எப்படி சொல்றதுன்னு எனக்கு தெரியலே. பட் அது ஒரு மாதிரியான உணர்வு! என்னையறியாமலே உன்னையே திரும்பித் திரும்பிப் பார்த்தேன். ஒரு சிலர் சம்பந்தமே இல்லாம முன்னபின்ன பார்த்தேயில்லாத நபர் கனவுலே வருவாங்க. அதே நபரை



எதிர்பாராதவிதமா என்னைக்காவது நேர்லே பார்க்கற ஆச்சர்யமும் நேரலாம். அதுமாதிரிதான் உன்னை நான் சந்திச்சதும். உன்னை இதுக்கு முன்னால கனவுல கூட பார்த்ததில்லே. ஆனா ரொம்ப பக்கத்துல பார்த்து பழகி, பேசின மாதிரி ஃபீலிங். காரணம் என்னன்னா... எனக்கு மனைவியா வரப்போறவ இப்படித்தான் இருக்கணும்னு ஒரு அவுட்லைன் போட்டு வச்சிருந்தேன் அல்லவா? அந்த ஃபிரேமுக்குள்ளே சரியான பொருந்தின ஒரே பெண் நீதான் ஸ்வாதி!''

''அதே ஃபீலிங்தான் எனக்கு..! என் எதிர்பார்ப்புகளுக்கேற்ற ஆண் இதுவரைக்கும் கண்லே பட்டதில்லே. இத்தனைக்கும் நான் இருக்கிற மீடியாவுல.. ஜெண்ட்ஸ் எக்கச்சக்கம். இருந்தும் என்னை யாரும் அட்ராக்ட் பண்ணலே! உங்களை பார்க்கற வரைக்கும்...! நாம சந்திச்சது எதேச்சையானதல்ல கோபி! நம்மையும் மீறி உயர்ந்த சக்தி இருக்குங்கறதை நிரூபிக்கிற மாதிரி நம்ம சந்திப்பு நடந்திருக்கு. ஒரு செகண்ட் நான் கவனமாயிருந்திருந்தா... உங்க கார் மேல என் வண்டி மோதியே இருக்காது!''

''எது எப்படியோ... இந்த அழகான தேவதை... எனக்கு கிடைச்சிருக்கு. இதுக்காக கடவுளுக்கு தேங்க்ஸ் சொல்லணும்!''

''சரி...கோபி... நீங்க எங்க வீட்டுக்கு எப்ப வரப்போறீங்க? அப்பாகிட்டே நான் நம்ம விஷயத்தை சொல்லிடலாம்னு இருக்கிறேன். அதுக்குப் பிறகு நீங்க வந்து பேசணும்!''

''என் சைடுல எந்த பிரச்சனையும் இல்லே ஸ்வாதி! உங்க வீட்லே சம்மதிப்பாங்களா?''

''அம்மா முரண்டு பண்ணுவாங்க. ஏன்னா அவங்க அண்ணன் பிள்ளைய கல்யாணம் பண்ணிக்க மறுத்திட்டேங்கற கோபம். அப்பா... என் உணர்வுகளுக்கு மதிப்பு தர்றவர். அதுவும் உங்களை ஏத்துக்க மறுக்கற அளவுக்கு நியாயமான எந்த காரணமும் இல்லையே! ஸோ... பிரச்சனையில்லை.. சொல்லுங்க எப்ப வர்றீங்க?''

''எனக்காக கொஞ்சம் வெய்ட் பண்ணுவியா ஸ்வாதி!''

''ஏன்?''

''நான் சொன்னேன் இல்லையா.. என் ஃப்ரண்ட் யுவன்!!''

''ம்.. நகமும் சதையும் போல, காற்றும், ஆக்ஸிஜனும் போல, இணைபிரியாத நண்பர்கள்! நீ கூட அவனுக்கு அடுத்தபடிதான். கடவுள் என் முன்னாலே வந்து ஸ்வாதி வேணுமா, யுவன் வேணுமான்னு கேட்டா, யோசிக்காம யுவன்தான் வேணும்னு சொல்வேன் அப்படின்னு சொல்லி என் வயிற்றெரிச்சலை கொட்டிக்கிட்டாரே... அவர்தானே?''

''நீ கூட சாதாரண பொண்ணுங்களை மாதிரியே எமோஷனலாயிட்டே!'' ஆச்சர்யமாய் சொன்னான்.

''உணர்ச்சிங்கறது பொதுவான விஷயம்! தான் நேசிக்கப்படற இதயத்துல தன்னைத் தவிர வேற யாரும் இருந்துடக் கூடாதுங்கறது எல்லோருக்கும் வர்ற பொதுவான காம்ப்ளக்ஸ்தான்!''

''அப்ப... யுவன் மேல உனக்கு கோபம்னு சொல்லு!''

''பொறாமையும் இருக்கு?''

''யுவன் ரொம்ப நல்லவன் ஸ்வாதி! அவனிடம் உள்ள பல நல்ல குணங்கள் எல்லோர்கிட்டேயும் பார்த்துட முடியாது. அவனுக்கு கல்யாணமான பிறகுதான் நான் கல்யாணம் பண்ணிக்குவேன்னு ப்ராமிஸ் பண்ணியிருக்கேன்!''

''அட ராமா!''

''பயப்படாதே! அவனுக்கும் சீக்கிரம் ஆகிடும். அப்புறம், நமக்குதான்!''

''ஒக்கே... நான் உங்க மித்ருவை பார்க்கணுமே!''

''மித்ரு?''



''மித்ருன்னா பழந்தமிழ்ல நண்பர்னு அர்த்தம்...''

''ஓ... யுவனை சொல்றியா?''

''ம்...''

''ஏன்? உனக்குத்தான் அவனைப் பிடிக்காதே!''

''தொழில்னு வந்துட்டா அதெல்லாம் பார்க்க முடியுமா? சமீபத்துல உலகளவில சிறந்த இளம் தொழில் அதிபர் விருது வாங்கியிருக்காரில்லையா? சந்திப்போமா நிகழ்ச்சிக்காக இந்த வார வி.ஐ.பி. வரிசையில உங்க நண்பரை தான் செலக்ட் பண்ணியிருக்காங்க! இன்டர்வியூ பண்ணனும்.. மீட் பண்ண ஏற்பாடு பண்றீங்களா?''

''ஓ...ஷ்யூர்! பட் ஒன் கண்டிஷன் ஸ்வாதி?''

''என்ன?''

''நான் ஒரு பொண்ணை காதலிக்கிற விஷயம் யுவனுக்குத் தெரியும். ஆனா, அது யார்னு அவனுக்குத் தெரியாது. சஸ்பென்ஸா வச்சிருக்கேன். அவன் கல்யாணத்தன்னைக்குத்தான் உன்னை என் லவ்வரா இன்ட்ரடியூஸ் பண்ணப் போறேன். ஸோ, அவன் எதிரே என்னை தெரிஞ்ச மாதிரி காட்டிக்காதே... ப்ளீஸ்.''

''ஒக்கே... ஒக்கே!''

''நான் நாளைக்கே அவன்கிட்டே பேசி ஒரு டைம் ஃபிக்ஸ் பண்ணி உனக்கு சொல்லிடறேன்.''

''சரி!''

''ஏன் ஒரு மாதிரி டல்லாயிருக்கிறே ஸ்வாதி!''

''நிஜத்தை சொல்லட்டுமா?''

''சொல்லு!''

''வருத்தப்பட மாட்டீங்களே!''

''இல்லே சொல்லு!''

''உங்களோட சந்தோஷமா பேசணும்னுதான் இங்கே வந்தேன். ஆனா பேசினதுல நைன்ட்டி பர்ஸன்ட் உங்க யுவனைப் பத்திதான்! உங்களுக்கு என்னைவிட அவர் நினைப்புதான் அதிகமாயிருக்கு!'' என்றாள் வருத்தமாய்.

''இதென்ன சின்ன குழந்தை மாதிரி?'' என்று அவள் தோளில் தட்டிக் கொடுத்தான் அன்பாக.

## 11

''**எ**துக்கு கோபி டி.வி. அது இதுன்னு... நம்மளைப் பத்தி நாமளே தம்பட்டம் அடிச்சுக்கற மாதிரி...''

''நாமளே போய் இன்டர்வியூ பண்ணுங்கன்னு சொன்னோமா என்ன? உன் திறமை, புகழை எல்லாம் கேள்விப்பட்டு அவங்களே தேடி வர்றாங்க. அவ்வளவுதானே?''

''இருந்தாலும் டி.வி.க்கு பேட்டி தர்றது இதுதான் ஃபர்ஸ்ட் டைம்! நெர்வஸாயிடுவேன்.''

''போகப் போக சரியாய்டும். ரிலாக்ஸ்!''

''ஓக்கே... அவ... அவபேரு என்ன சொன்னே?''

''ஸ்வாதி...''

''ஓ... ஸ்வாதி! எத்தனை மணிக்கு வர்றேன்னு சொன்னா? நான் லெவன் தர்ட்டி வேறொரு வேலையா வெளியே போகணும்!''

''ஷார்ப்பா லெவன் ஓ க்ளாக் வந்துடறேன்னு சொல்லியிருந்தாங்க!''

''சரி... இப்பவாவது சொல்லிடேன் கோபி!''

''என்ன சொல்லணும்?'' புருவம் மேலேறியது.



''உன் லவ்வர் பேரை! அவ யாரென்பதை!''

''ம்ஹூம்... நீ என்ன முயன்றாலும் என்கிட்டேர்ந்து உண்மைய கறக்க முடியாது... நண்பா! கரெக்டா உன் கல்யாணத் தன்னைக்குதான் அவளை உன்முன் கொண்டு வந்து நிறுத்துவேன்!''

''ரொம்ப வீம்புடா உனக்கு!''

''இருந்துட்டுப் போகட்டும். முதல்ல உன் ஆளைத் தேடி கண்டுபிடிக்கிற வழியைப் பார்!''

''ரொம்ப சீக்கிரம் நான் அவளை சந்திப்பேன்னு என் உள்மனசு சொல்லிக்கிட்டே இருக்கு கோபி!''

அதே நேரம் யுவன்ராஜின் செயலாளர் அவனிடம் இன்டர்காமில் தொடர்பு கொண்டார்.

''அனுப்பு!'' என்று ஒற்றை வரியில் பதில் சொல்லிவிட்டு, ''ஸ்வாதி வந்திருக்காங்களாம்!'' என்றான்.

''ஓக்கே யுவன்! நான் என் ரூமுக்குப் போறேன். நீ அவங்ககிட்டே பேசு!''

''நீயும் இங்கே இரு கோபி!''

''நோ... நோ... அது சரியில்லே... நீயே பேசி அனுப்பிடு!'' என்று சிரிப்பை வாய்க்குள் மென்றபடி வெளியேறினான்.

அந்த அறையை நோக்கி வந்து கொண்டிருந்த ஸ்வாதி கோபியை பார்த்ததும் முறுவலித்தாள்.

''ம்... என்னை தெரிஞ்சமாதிரி காட்டிக்காதே!'' என்றான் அடிக்குரலில்.

''படவா ராஸ்கல்! ரொம்பதான் அலட்டிக்கிறியே!'' என்றபடி யுவன்ராஜின் கதவை மெல்ல தட்டினாள்.

''யெஸ்... கம்மின்!''

உள்ளே நுழைந்தாள் ஸ்வாதி.

ஸ்ப்ரிங் டோர் தானே மூடிக் கொண்டது.

கைகூப்பி நளினமாய் வணக்கம் சொன்னவளை பார்த்து மயக்கம் போடாத குறைதான் யுவனுக்கு!

'மைகாட்! வாட் எ சர்ப்ரைஸ்! இவளா... இவள் பெயர்தான் ஸ்வாதியா? ஊரெங்கும் தேடியவள் இன்று என்னைத் தேடி வந்திருப்பது நிஜம்தானா? இல்லை கனவா?'

''சார் வணக்கம். ஐ'ம் ஸ்வாதி!''

மறுபடியும் வணக்கம் சொன்ன பிறகுதான் இயல்புக்குத் திரும்பினான்.

''வாங்க மிஸ்... ஸ்வாதி... மிஸ்தானே?''

''யெஸ்...''

''ப்ளீஸ் பீ சீட்டட்''

முகமெல்லாம் வியர்த்து.. நெஞ்சுக்கூடு படபடவென அடித்துக் கொண்டு... யுவனுக்கு தான் அமர்ந்திருக்கும் ரோலிங் சேரிலிருந்து சில அடி உயரம் அந்தரத்தில்இருப்பது போலிருந்தது.

''சார்... நீங்க இன்னைக்கு சிட்டியில் நம்பர் ஒன் இன்டஸ்ட்ரியலிஸ்ட் உலகத்திலேயே சிறந்த இளம் தொழில் அதிபர் விருது முதன் முறையா இந்தியாவுக்கு எதுவும் உங்க மூலமா கிடைச்சதுல இந்தியாவுக்கே பெருமை வாங்கித் தந்துட்டீங்க! எங்க மூன் டி.வி. சார்பா உங்களை ஒரு பேட்டி எடுக்கணும். அதுக்கு உங்க மேலனா ஒத்துழைப்பு எங்களுக்குத் தரணும்!''

''ஓக்கே!'' அவள் முகத்தையே பார்த்துக் கொண்டு இருந்தான்.

''மூணு வாரம் கழிச்சு, அதாவது நெக்ஸ்ட் மந்த் ஃபர்ஸ்ட் வீக் உங்க பேட்டி டெலிகாஸ்ட் பண்ணுவோம்! அடுத்த வாரம் ஷூட்டிங் இருக்கும்!''



''ஓக்கே!'' கண்களை விலக்காமலே...

''நான் ரெண்டு நாள் முன்னதாக உங்களுக்கு இன்ஃபார்ம் பண்ணிடறேன். பை த பை இது நான் மத்த வி.ஐ.பி.க்களை பேட்டி எடுத்த கேஸட்! இதை பார்த்தீங்கன்னா.. ஒரு ஐடியா கிடைக்கும்!''

''ஓக்கே...!''

''இது என்னோட விசிட்டிங் கார்டு!'' நான் வரட்டுமா சார்!''

''ஓக்கே..!''

அவள் எழுந்தபோதுதான்... அவள் புறப்படுகிறாள் என்ற உண்மையே உரைத்தது.

அவள் என்ன பேசினாள் ஏது பேசினாள் என்பதை உரைக்கவில்லை. கனவு கலைந்து எழுந்தது போல் தெளிவில்லாமல் இருந்தது.

'சே... அவள் இன்னும் கொஞ்ச நேரம் இங்கு இருந்திருக்க லாமே!' ஏக்கமாய் இருந்தது.

'கோபியிடம் சொல்லலாமா? என் பைங்கிளி என்னைத் தேடி வந்துவிட்டுப் போனதை!'

'இல்லை வேண்டாம்! அவன் மட்டும் எனக்கு தண்ணிக் காட்டுகிறானே. அவன் காதலி பெயரைக்கூட சொல்ல மாட்டேங்கிறான்! நான் மட்டும் ஏன் சொல்ல வேண்டும்? நான் அவன் கண்களில் விரலை விட்டே ஆட்டி கதிகலங்க வைக்கப் போகிறேன் பார்!' குறும்புத்தனமாய் நினைத்துக் கொண்டான்... பாதகம் என்று உணராமலேயே!

டெக்கில் கேஸட்டை நுழைத்து பிளே பண்ணிவிட்டு கட்டிலில் முதுகிற்கு இரண்டு தலையணைகளை கொடுத்து வசதியாய் சாய்ந்து அமர்ந்து கொண்டான்.

பெரிய டி.வி. திரையில் பெரிய பிம்பமாய் ஸ்வாதி தோன்றி 'வணக்கம்' சொல்லி நிகழ்ச்சியை ஆரம்பித்து முடிக்கும் வரை

அவன் கவனத்தில் பதிந்ததெல்லாம்... நிகழ்ச்சியோ, கேட்கப்பட்ட கேள்வியோ, பெறப்பட்ட பதிலோ, வி.ஐ.பி.யோ அல்ல! ஸ்வாதி... ஸ்வாதி... ஸ்வாதி மட்டுமே!

அந்த முகம்! மலர்ந்த தாமரை போன்று எந்நேரமும் புன்னகை மாறாமல், அழகான உதடுகளில் சிரிப்பை மீறி விளிம்புகளில் குறும்பு மின்னும் அழகு. சிரிக்கும்போது லேசாய் களித்து விட்டதுபோல் கன்னங்களில் விழுந்த குழிகள். ஸ்பெஷலாய், காண்டாக்ட் லென்ஸ் உதவியின்றியே அமைந்த ப்ரவுன் நிற கண்கள், வரிசை தப்பாத பல்வரிசை, கூர்மையான மூக்கு, ஒற்றைக்கல் மூக்குத்தி, முகத்திற்கு ஏற்ப, தலை அலங்காரத்திற்கேற்ப அணியப்பட்ட காதணிகள், அவள் இப்படி அப்படி என்று திரும்பும் போதெல்லாம் அவை நடனமாடிய லாவகம், அடர்ந்த, நீண்ட தலைமுடி, காதோரம் சுருண்டிருந்த முடிகள் கன்னத்தில் விழும்போதெல்லாம் அழகாய், நீளமாய் வளர்த்து க்யூடெக்ஸில் பளபளத்த விரல் நகங்கள் பளீரிட நளினமாய் ஒதுக்கும் அழகு... பேசும்போதெல்லாம் கழுத்து நரம்புகள் அசைவதுகூட அழகாய், மிக அழகாய் இருந்தது.

பார்த்து பார்த்து அவளை வடிவமைத்த பிரம்மன் எவ்வளவு ரசனை மிக்கவன்?

என்னவள்! என் உயிர்! என் இணை! ஸ்வாதி... மைடியர் ஸ்வாதி... ஏதேதோ உணர்வுகள் அவன் உடலில் ஊடுருவி குறுகுறுக்க வைத்தன.

'பேசிவிட வேண்டும். விரைவில் மிக விரைவில் பேசி... திருமணத்திற்கு ஏற்பாடு செய்துவிட வேண்டும்.'

பணக்காரர்களுக்கே உரிய ஆளுமை குணம் யுவனிடம் வெளிப்பட்டது. அவளுக்கு அதில் உடன்பாடா, இல்லையா என்று அறிந்து கொள்ளும் அவசியம் உணராமல் தன் முடிவிற்கு அவள் சம்மதித்தாக வேண்டும் என்கிற திமிர் குணம்தானே



வெளிப்பட்டது. இது அவன் குறையல்ல! ஸ்வாதியின் மீதிருந்த அடக்க முடியாத காதல் செய்த தவறு!

உடனே அவளுக்கு போன் செய்ய வேண்டும்போல் இருந்தது.

வீட்டு நம்பருக்கு போன் செய்தான்.

ஸ்வாதியே எடுத்தாள்.

''ஹலோ... ஐ'ம் யுவன் ராஜ்! மிஸ் ஸ்வாதியிடம் பேசணும்.''

''ஹல்லோ... சார்! ஸ்வாதிதான் பேசறேன். ஆச்சர்யம். இப்பதான் உங்களைப் பத்தி நினைச்சிட்டிருந்தேன். நீங்களே போன் பண்றீங்க!'' குரலில் உற்சாகமும், ஆச்சர்யமும் போட்டி போட்டது.

''என்னை... என்னையா நினைச்சிட்[illegible] கட்டியில் சறுக்கி விழுவது போன்று இரு[illegible]

''ஆமா சார்.. நிஜமாதான்!''

''என்ன நினைச்சீங்க?''

''ம்... கடைசியில் சொல்றேனே. [illegible] பண்ணினதுக்கான காரணத்தை சொல்[illegible] சிரிப்பு மாறாமல்.

32967
5009089

''நீங்க கொடுத்த கேசட் பார்த்தேன் ஸ்வாதி!''

''ஓ... உடனேயா?''

''ஆமாங்க... ரொம்ப நல்லா பேசியிருக்கீங்க! அழகா, அருமையா, கேள்வி கேக்கறீங்க!''

''ஓ...தாங்க்ஸ்ங்க...''

''நீங்க அடிக்கடி... ஓ... அப்படீங்கற வார்த்தைய யூஸ் பண்றீங்க.. இது உங்க மேனரிஸமா?''

''சேச்சே... அப்படியில்லே... அப்படியே பேசி பழகிப் போச்சு!''

"அதுவும் அழகாயிருக்கு...! அப்புறம் இன்னொரு முக்கியமான விஷயம் உங்க வாய்ஸ்.. ரொம்ப ரொம்ப ஸ்வீட்டா இருக்கு உங்களைப் போலவே?"

"பரவாயில்லேயே! டென்ஷனான ஃபீல்டுல இருந்துக்கிட்டு ரசனையும் வளர்த்துக்கறது பெரிய விஷயம்!"

"தாங்க்ஸ் ஸ்வாதி! ஆமா என்னைப்பத்தி என்னவோ நினைச்சிட்டிருந்தேன்னு சொன்னீங்களே... என்னன்னு சொல்லுங்களேன்!"

"இல்லே வேண்டாம்... நீங்க தப்பா எடுத்துக்க சான்ஸ் இருக்கு!"

"இல்லே... அதுவும் உங்களை? நெவர் ஸ்வாதி... சொல்லுங்க!"

"நீங்க... ரொம்ப அழகாயிருந்தீங்க..."

ஐஸ் வாட்டரை எடுத்து முகத்தில் தெளித்தது போல் சிலிர்த்தான்.

"பட், மீசையிருந்தா இன்னும் அழகாயிருப்பீங்கன்னு நினைச்சேன்!"

யுவன் ஆகாயத்தில் மிதந்தான்.

## 12

சிவசங்கரி இன்விடேஷனையே விழியகலாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

மகேஷின் திருமணப் பத்திரிகை அது!

"ஹூம்! மணமகள்ங்கற இடத்துல ஸ்வாதிங்கற பேருக்கு பதிலா சுதான்ற பேர் இருக்கு."

"என்ன சிவா இது? முடிஞ்சு போனதையே பேசிட்டிருந்தா எப்படி? இன்னார்க்கு இன்னார்தான்னு ஆண்டவன் போட்ட முடிச்சை அவிழ்க்க நாம யார்? விடுவியா?" என்றார் வாசுதேவன்.



"மனசு ஆறலையே! ரொம்ப எதிர்பார்த்தேன். இந்த வீட்ல மேளச்சத்தம் கேக்கும்னு ஆசையா இருந்தேன்!"

"ஊர்ல மகேஷ் மட்டும்தான் ஆம்பிளையா? ஸ்வாதிக்கு மாப்பிள்ளைங்க க்யூவுல நிப்பாங்க!"

"ஏம்மா... என்னை கல்யாணம் பண்ணிக்க முடியலேயேன்னு மகேஷ் கூட கவலைப்பட்டிருக்க மாட்டார். நீதான் கவலைப்படறே! இப்ப என்ன? நம்ம வீட்ல மேளச்சத்தம் கேக்கணும் அவ்வளவுதானே? கேக்கும்!"

"ஆனா மகேஷ் மாதிரி ஒரு மாப்பிள்ளை உனக்கும் கிடைக்கமாட்டான்டி!"

"அவரை விட பெட்டரானவே கிடைச்சாச்சு!"

"என்ன சொல்றே நீ?" அதிர்ந்து போய் பார்த்தாள்.

"ஆமாம்மா... நான் ஒருத்தரை காதலிக்கிறேன். அவரையே கல்யாணம் பண்ணிக்கப் போறேன். நான் இந்த விஷயம் பத்தி ஏற்கனவே டாடிகிட்டே பேசி பர்மிஷன் வாங்கியாச்சு.. எனக்கு பேச நேரமில்லேம்மா... புறப்படறேன். விளக்கமாக டாடிகிட்டே கேட்டு தெரிஞ்சுக்க...!"

புறப்பட்டு விட்டாள் ஸ்வாதி.

"என்னங்க... அவபாட்டுக்கு என்னென்னமோ சொல்லிட்டுப் போறா... அதெல்லாம் நிஜமா?"

"ஆமாம் சிவா!"

"ஐய்யோ... அதுக்கு நீங்க சரின்னு சொல்லிட்டீங்களா?"

"நல்ல செலக்ஷன்னு தெரிஞ்ச பிறகும் மறுக்கறது முட்டாள்தனம் சிவா! அவளோட மனசுக்கு பிடிச்ச வாழ்க்கை! அதையும் பார்க்கணுமில்லையா? நானும் பையனைப் பத்தி விசாரிச்சேன். வெரி ஜென்டில்மேன்னு தெரிஞ்சது. ஓக்கே சொல்லிட்டேன்!"

"தப்பு பண்ணிட்டீங்களே! ஸ்வாதியோட ஜாதகப்படி அவளா தேர்ந்தெடுக்கிற வாழ்க்கை நல்லா அமையாது. பெத்தவங்களா தேர்ந்தெடுக்கிற மாப்பிள்ளைய கட்டிக்கிட்டாதான் சிறப்பான வாழ்க்கை அமையுமாம். அதுக்காகத்தானே மகேஷை கட்டிக்கன்னு தலை, தலையா அடிச்சுக்கிட்டேன்!" அழுதாள் சிவசங்கரி.

"பைத்தியம்!" இப்ப என்ன... நம்ம பர்மிஷனோட கல்யாணத்தை நடத்தினா... அது நாம தேர்ந்தெடுத்து தந்த வாழ்க்கையா மாறிடப் போகுது! அதைவிட்டு ஜோஸியம், ஜாதகம்னு மனசை குழப்பிக்காதே!"

"இல்லேங்க... நான் என்ன சொல்றேன்னா..."

"எதுவும் சொல்ல வேணாம்! எனக்கும் நேரமாகுது. என் ப்ரீப்கேஸை எடுத்துக்கிட்டு வந்து கொடுத்தாலே போதும்!"

"கடவுளே!" என்று மனம் முழுக்க பாரத்தை சுமந்தபடி எழுந்து போனாள்.

தொலைபேசி கிணுகிணுக்க... கோபி எடுக்கப் போனான். அதற்குள் யுவன்ராஜே எடுத்துவிட்டான்.

ஸ்வாதிதான் பேசினாள்.

அவள் குரலை கேட்டதும் முகம் பூவாய் மலர்ந்தது.

"சார்... உங்க இன்டர்வியூ ரொம்ப நல்லா வந்திருக்கு. எடிட்டிங் முடிஞ்சதும் உங்களுக்கொரு கேசட் கொடுத்துடறேன்!"

"ஓக்கே...!"

"ஓக்கே சார்! கேசட் ரெடியானதும் நானே போன் பண்றேன். வச்சிடட்டுமா? பை!"

"பை... தாங்க்யூ! ரிசீவரை வைத்துவிட்டு இரண்டு கைகளையும் தூக்கி சோம்பல் முறித்தான்.

"யுவா..."



"ம்..."

"நானும் இந்த பத்து நாளா பார்க்கிறேன்... உன் முகத்துல பயங்கர சந்தோஷம் தெரியுதே... என்ன காரணம்?"

"ம் ஹூம்... சொல்ல மாட்டேன்!"

"சொல்லலேன்னா என்ன? பெரிய ராணுவ ரகசியமா? எனக்குத் தெரியும்!"

"என்ன தெரியும்?"

"உன் மானசீகக் காதலியை மீட் பண்ணி பேசியிருக்கே!"

"ஹய்யோ... உனக்கெப்படி தெரியும்?"

"நானும் காதல் நோயால் அவதிப்படறவன்தானே!"

"பாம்பின் கால் பாம்பறியும். நான் எத்தனை முறை சொல்லியிருப்பேன். உன் முகத்துக்கு மீசை வச்சா நல்லாயிருக்கும்னு! ஆனா இப்ப என்ன திடீர்னு மீசையெல்லாம் வளர்க்க ஆரம்பிக்கறே? உன் டார்லிங் போட்ட உத்தரவா?"

"என்னடா நேர்லே நின்னு பார்த்தமாதிரி கரெக்டா சொல்றே? ஆமா கோபி! உங்க முகத்துக்கு மீசை வச்சா நல்லாயிருக்கும்னா... அதான்!"

"ஹூம்... லேடீஸ்க்கு முத்தம் கொடுக்கறப்ப மீசை குத்துனாதான் அவங்களுக்கு சந்தோஷம் போல."

"ச்சீ..!"

"ஐயய்யே... நீ ஏன் வெக்கப்படறே.. அதெல்லாம் லேடீஸோட வேலை. சரி சொல்லு உன் ஆளோட பேர் என்ன?"

"சொல்லிடுவேனா? அவ்வளவு சீக்கிரம் சொல்லிடுவேனா? சஸ்பென்ஸ்! இன்னொரு விஷயம் தெரியுமா? ஜஸ்ட் நவ் ஒரு போன் வந்ததே... அது என் ஆள்கிட்டேர்ந்து வந்த போன்!"

''ஜமாய்டா மச்சான்! சீக்கிரமா கல்யாண சாப்பாடு போடு. இந்த விஷயம் அம்மா, அப்பாவுக்குத் தெரியுமா?''

''இன்னும் அவளுக்கேத் தெரியாது!''

''என்ன சொல்றே யுவா?''

''ஆமா கோபி! நான் இன்னமும் என் மனசை வெளிப்படுத்தல.. பட், அவ மனசுல நான் இருக்கேன் அது நிஜம். இல்லேன்னா உங்க முகத்துக்கு மீசை வச்சா அழகாயிருக்கும்னு சொல்வாளா?''

''யோசிக்க வேண்டிய விஷயம். எனிவே, நீ சீக்கிரம் இதைப்பத்தி பேசிடு!'' என்றான் தீவிரமாய் கோபி.

''ரெண்டு நாள் நான் ஊர்லே இருக்க மாட்டேன் ஸ்வாதி!''

''ஏன்?''

''அஃபிஷியலா ஹோசூர் போக வேண்டியிருக்கு!''

''சரி, போய்ட்டு வந்ததும் எங்க வீட்டுக்கு வந்து என் பேரெண்ட்ஸை சந்திக்க வரணும்.''

''என்ன சொல்றே ஸ்வாதி?''

''எங்க வீட்லே நம்மைப் பத்திய விஷயத்தை போட்டு உடைச்சிட்டேன்!''

''என்ன சொன்னாங்க?''

''என்ன சொல்வாங்க? அப்பா உங்களை வரச் சொன்னார்!''

''வந்ததும் பேசறேன். பட், விஷயம் வேற யாருக்கும் தெரிய வேணாம். முக்கியமா யுவனுக்கு!''

''என்ன சஸ்பென்ஸோ? பயப்படாதீங்க, சத்தியமா நாம லவ் பண்ற விஷயத்தை உங்க யுவனிடம் சொல்ல மாட்டேன் போதுமா?''



''போதும். உனக்கொரு விஷயம் தெரியுமா? யுவனும் ஒரு பெண்ணை லவ் பண்றான்!''

''ஆணாப் பிறந்தா ஒரு பெண்ணைதான் லவ் பண்ணுவாங்க.. இது ஒரு பெரிய விஷயமா?''

''அவனைப் பத்தி பேசினாதான் உனக்கு பிடிக்காதே! சரி வேற பேசுவோம்!'' என்று பேச்சை மாத்தினான் கோபி.

இடம்.. கடற்கரைச் சாலை!

காரின் பானெட் மீது சாய்ந்தபடி காத்திருந்தான் யுவன்ராஜ்.

அவனை அதிகநேரம் காக்க விடாமல் தன் ஸ்கூட்டியில் வந்து சேர்ந்தாள் ஸ்வாதி.

''ஸாரி.. ரொம்ப டிலே பண்ணிட்டேனா?''

''நோ... நோ...நானும் இப்பதான் வந்தேன்!''

''இந்தாங்க... கேசட் ரெடியாய்டுச்சு. போட்டு பார்த்துட்டு சொல்லுங்க! நான் இதை உங்க ஆபீஸ்க்கே கொண்டு வந்து கொடுத்திருப்பேனே! எதுக்காக இங்கே வரச் சொன்னீங்க சார்?''

''ஏன்... உங்களை டிஸ்டர்ப் பண்ணிட்டேனா?''

''சேச்சே அப்படியெல்லாம் ஒண்ணுமில்லே! நீங்க ஒரு பிஸியான பிஸினஸ்மேன்! ஒவ்வொரு நிமிஷத்தையும் பார்த்து பார்த்து செலவு பண்ற ரகம். இப்படி பொதுவான இடத்துக்கு வரச்சொல்லி...''

''ஒரு முக்கியமான விஷயம் பேசத்தான் உங்களை வரச் சொன்னேன் ஸ்வாதி!''

''என்ன விஷயம்?'' துணுக்குற்றாள்.

''அதை இங்கே பேச வேண்டாமே! இஃப்யூ டோன்ட் மைன்ட்... எனக்கு பெசன்ட் நகர்ல ஒரு பங்களா இருக்கு. அங்கே போய் பேசுவோமா?''

சற்றே தயங்கி பின் ''சரி'' என்றாள்.

''அட... இங்கே பாரேன்... ஸ்வாதிடா...''

மூன்று கல்லூரி மாணவர்கள் அவர்களைத் தாண்டி செல்ல... அதில் ஒருவன் அவளை அடையாளம் காண... மூவரும் அருகில் வந்து சூழ்ந்து கொண்டனர்.

''நல்லா பேசறீங்க மிஸ்! உங்க வாய்ஸ் ரொம்ப ஸ்வீட்டா இருக்கு!''

''ப்ளீஸ்... அவங்களை டிஸ்டர்ப் பண்ணாதீங்க!'' யுவன் தடுத்தான்.

''மிஸ்... நீங்க ரொம்ப அழகாயிருக்கீங்க? அழகிப் போட்டியில கலந்துக்கலாமே!''

''உங்களை சந்திச்சதுல எங்களுக்கு ரொம்ப சந்தோஷம். க்ளாட் டு மீட் யூ!'' என்று ஒருத்தன் அவள் கையை வலுக்கட்டாயமாகப் பற்றி குலுக்க... யுவனுக்கு ஆத்திரம் தலைக்கேறியது.

அவனைப் பிடித்து பளாரென அறைந்தான்.

''யுவன்... ப்ளீஸ்... வேண்டாம் விட்ருங்க!'' வெகு முயற்சிக்குப் பின் பிடியை தளர்த்தினான்.

அந்த மாணவர்கள் மூவரும் சடுதியில் காணாமல் போனார்கள்.

''என்ன சார் இதெல்லாம்?''

''அந்த பொறுக்கிப்பசங்க... உங்ககிட்டே நடந்துக்கிட்ட விதம் சரியில்லே ஸ்வாதி!''

''பப்ளிக் லைஃப்புக்கென்று வந்துட்டா இந்த மாதிரி சங்கடங்களை சந்திச்சுதான் ஆகணும்! அதுக்காக நீங்க அவங்ககிட்டே ரொம்ப ஹார்ஷா நடந்துக்கிட்டீங்க!'' உள்ளுக்குள் அவன்மீது கோபம் பொங்கி எழுந்ததை வெகுவாய் அடக்கிக் கொண்டாள்.



'என் எதிர்லேயே அவனுங்க உன்னைத் தொட்டா நான் சும்மாயிருப்பேனா?'

''ஸாரி ஸ்வாதி!'' என்றான்.

''இட்ஸ் ஓக்கே... நாம கிளம்பலாமா?''

''ஸ்வாதி உங்க டூ வீலர் இங்கேயே இருக்கட்டும். கார்லே போகலாம். நானே இங்கே வந்து ட்ராப் பண்ணிடறேன்!''

அவனை விநோதமாய் பார்த்தவள் தோளை குலுக்கி சரியென்றாள்.

அடுத்த இருபதாவது நிமிடம் அந்த அழகான பங்களாவில் இருந்தார்கள்.

ஒவ்வொரு செங்கல்லையும் பார்த்து பார்த்து ரசனையோடு கட்டி வடிவமைத்திருந்த விதம் ஸ்வாதியையே பிரம்மிக்க வைத்துவிட்டது.

பங்களா புத்தம் புதியதாய்... இருந்தது.

''இந்த பங்களா உங்களுக்கு பிடிச்சிருக்கா ஸ்வாதி?''

''ரொம்ப... ரொம்பவே...!''

''என்னுடைய காதலிக்காக வாங்கினேன். எங்க கல்யாணத்தன்னைக்கு அவளுக்கு பரிசாத் தரப்போறேன்!''

''ஓ... வாவ்! உங்க லவ்வர் வெரி லக்கி!''

''ஸ்வாதி.. என்னைப்பத்தி நீங்க என்ன நினைக்கறீங்க!''

சட்டென்று அவன் கேட்ட கேள்வியில் பதில் தர முடியாமல் திகைத்து விட்டாள்.

''ஜென்டில்மேன்!''

''அவ்வளவுதானா?''

''அந்த வார்த்தைக்குள் எல்லாமே அடக்கம் சார்!''

''ஸ்வாதி... உங்களுக்குத் தெரியாது... என்னை கல்யாணம் பண்ணிக்க எத்தனையோ பொண்ணுங்க க்யூவுல நிக்கறாங்க. ஆனா, நான் மறுத்துட்டேன். ஏன் தெரியுமா? எனக்கு மனைவியா வரப்போறவ இப்படித்தான் இருக்கணும்னு என் மனசுக்குள்ளே ஒரு உருவம் வரைஞ்சு வச்சிருந்தேன். கல்யாணம்னு ஒண்ணு என் வாழ்க்கையிலே நடந்தா அது அவங்களோடதான்னு பிடிவாதமாயிருந்தேன்!''

''ஓ...!''

''வருஷக்கணக்குல அவளை தேடினேன், கிடைக்கவில்லை. ஆனா என் ஆசை, கனவு எதுவும் வீண் போகலை ஸ்வாதி! கடைசியா அவளைப் பார்த்துட்டேன்!''

''வெரி இன்ட்ரஸ்ட்டிங்!'' கதை கேட்கும் ஆர்வம் தொற்றிக் கொண்டது.

''அப்புறம்... அவகிட்டே பேசினீங்களா?''

''பேசினேன். ஆனா இன்னும் என் மனசை வெளிப்படுத்தலை. ஏதோ ஒரு பயம் வந்து தடுக்குது.''

''என்ன சார் பயம்? பட்டுனு சொல்லிவிட வேண்டியதுதானே? வேணாம்னா சொல்லப் போறா! அழகு, அறிவு, பணம் எல்லாமே உங்கக்கிட்டே குவிஞ்சு கிடக்கறப்ப என்ன காரணம் சொல்ல முடியும் மறுக்கறதுக்கு?''

''அப்ப கேட்டுடலாம்கறீங்களா?''

''நிச்சயமா?''

''சப்போஸ் மறுத்துட்டாள்னே வச்சுப்போம். அப்ப என்ன பண்றது ஸ்வாதி? என்னால அவள் இல்லாம நிச்சயமா வாழ முடியாது!'' என்றான் நெக்குருகி.



''மறுபடி ட்ரை பண்ணலாம். கன்வின்ஸ் பண்ணலாம். உங்க பர்சனல் விஷயங்களை எல்லாம் எவ்வளவு நம்பிக்கையோட என்கிட்டே பகிர்ந்துக்கறீங்க? உங்களுக்காக நானே அந்தப் பொண்ணுக்கிட்டே பேசிப் பார்க்கிறேன் சரியா?''

''இப்பதாங்க எனக்கு உயிரே வந்த மாதிரி இருக்கு. உங்க பேச்சு ஒரு நம்பிக்கையையும் தைரியத்தையும் தந்திருக்கு. இனிபேச தயக்கமில்லை!''

''வெரிகுட்!''

''அப்ப... உங்களுக்கு என்னை கல்யாணம் பண்ணிக்க சம்மதமா ஸ்வாதி?''

அதுவரை உதட்டில் உறைந்திருந்த சிரிப்பு மறைந்து போய், கண்கள் அகன்றது. புருவங்கள் நெளிந்தன.

''எ... என்ன சொல்றீங்க சார்?''

''அந்தப் பொண்ணு... ஐ மீன் என் மானசீக காதலி நீதான்னு சொல்றேன். என்ன ரொம்ப ஷாக்காயிடுச்சா ஸ்வாதி? எதிர்பார்க்கலே இல்லே?'' மந்தகாசமாய் சிரித்தான்.

''ச... சார் ஆர் யூ ஜோக்?''

''ஜோக்கடிக்கறதுக்கா டைமை வேஸ்ட் பண்ணி இங்கே கூட்டிட்டு வருவேன்? சீரியஸ் ஸ்வாதி! டேக் இட் சீரியஸ்!''

''மை காட்!'' என்று பதறினாள்.

''என்ன ஸ்வாதி?''

''ஐ'ம் ஸாரி... வெரி ஸாரி?''

''எதுக்கு? என்ன தப்பு பண்ணினே?''

''தப்பு நான் பண்ணலே! விதி... விதி பண்ணியிருக்கு.''

''ஸ்வாதி எனக்கு புரியலே..''

''நான்... நான்... ஆல் ரெடி ஒருத்தரை லவ் பண்றேன்!''

''ஸ்...வா...தி!'' இதயத்தை கத்தியால் யாரோ பிளப்பது போல் வலித்தது.

''நோ... நோ... ஸ்வாதி... கூடாது... நீ வேற யாரையும் காதலிக்கக் கூடாது...''

ஸ்வாதி மிரண்டாள். யுவனின் தீவிரமான முகம் அவளுக்கு பயத்தை உற்பத்தி செய்தது.

''ஸீ மிஸ்டர் யுவன்! நீங்க சாதாரண ஆளில்லே! நீங்க இப்படி பேசறது சைல்டிஷ்ஷா இருக்கு. குழந்தை தனக்கு பிடிச்ச பொம்மைதான் வேணும்னு அடம்பிடிக்கறா மாதிரியிருக்கு. உங்க மனசை மாத்திக்குங்க... அதுதான் நல்லது!''

''நீதானே சொன்னே... என்னை வேணாம்னு சொல்ல ஒரு காரணமும் இல்லேன்னு. இப்ப பேச்சை மாத்தறியே!''

''ஆனா, எனக்கு காரணமிருக்கே! உங்களை மாதிரியே நானும் கனவு கண்டு, என் மனசுக்கு பிடிச்சவரை நேர்லே பார்த்து பேசி... ரொம்ப சீக்கிரம் கல்யாணமும் ஆகப்போகுது.''

''ப்ளீஸ் ஸ்வாதி! மறந்துடு... உன் மனசல உள்ளவனை மறந்துடு.. ட்ரை டு சேன்ஜ் யுவர்மைன்ட் ப்ளீஸ் ஸ்வாதி! நீ எனக்காகவே கடவுளால் படைக்கப்பட்ட அற்புதமான மலர்... நீ எனக்குத்தான்!'' அழுத்தம் திருத்தமாய் சொன்னபோது... அவனின் அழகான கண்கள் அவளை விழுங்குவது போல் வெறித்தது.

நடுங்கிப் போனாள் ஸ்வாதி.

''மிஸ்டர் யுவன்! நான் ஒன்றும் உலோகப் பொருள் அல்ல... மெஷின்ல கொடுத்து நாம நினைக்கற மாதிரி உருவம் கொடுக்கறதுக்கு. எல்லா மனிதர்களின் இதயமும் ஒரே மாதிரியா இருக்கலாம். ஆனா அதுக்குள்ளே உண்டாகிற எண்ணங்கள், ஆசைகள் விருப்பங்கள் வேற வேற மாதிரிதான்! ப்ளீஸ்... ட்ரை டு



அன்டர்ஸ்டான்ட்! இதுக்கு மேலேயும் நான் இங்கே இருக்க விரும்பலே.. வர்றேன்!'' என்று புறப்பட்டாள்.

''நில்லு ஸ்வாதி! உன்னோட விளக்கங்கள் எதுவும் எனக்கு தேவையில்லே. எனக்குத் தேவை உன்கிட்டேர்ந்து சாதகமான பதில்! அந்த பதில் கிடைக்கறதுக்காக நான் என்ன வேணும்னாலும் பண்ணுவேன்'' என்ற யுவன் அவளைத் தொட முயற்சித்தான்.

''மிஸ்டர் யுவன்... என்ன இதெல்லாம்? கண்ட்ரோல் யுவர் செல்ஃப்! நான் இன்னொருத்தருக்கு உரிமையாகப் போகிறவ... என்கிட்டே நீங்க இப்படியெல்லாம் நடந்துக்கறது சரியில்லே...!'' விலகிப் போனாள்.

''இல்லை... நீ எனக்கு மட்டுமே சொந்தமானவ! உனக்கு தாலி கட்டப்போறது நான்தான். உன் உயிர் எனக்கு சொந்தமானது. உன் அழகு என் கண்களுக்கு மட்டுமே சொந்தமானது... ஸ்வாதி... யெஸ் சொல்லு! என்னை விரும்பறேன்னு சொல்லு! இல்லே... நான் உன்னை விடமாட்டேன்... வாழ விடமாட்டேன்.''

''என்ன மிரட்டறியா? நீ பணக்காரனாயிருக்கலாம். ஆனா, அந்த பணத்தால என்னை வாங்க முடியாது. ஏன்னா... எனக்கு காதல் முக்கியம். உன்னால என்ன பண்ண முடியுமோ... பண்ணிக்க... அதுக்கெல்லாம் பயப்படற ஆள் நானில்லே...!''

ஆவேசமான அவன் பேச்சில் திகைத்துப் போனாள். ஸ்வாதிக்கு அந்த நொடி போதுமானதாயிருக்க சடாரென்று அங்கிருந்து ஓட ஆரம்பித்தாள்.

## 13

'தேடினால் கிடைப்பதில்லை. கிடைத்தாலோ நிலைப்பதில்லை. ச்சே!'

யுவன்ராஜ் உள்ளுக்குள் நொறுங்கிப் போனான்.

ஸ்வாதி தனக்கில்லை என்கிற நிஜம் ரம்பமாய் அறுத்தது.

அவளை மிரட்டத்தான் அப்படியெல்லாம் பேசினானே தவிர, யுவன் அந்தளவு கீழ்த்தரமானவன் இல்லை. இப்போது அதற்காகவும் வருந்தினான்.

'ஸ்வாதி... என்னை எந்தளவு மட்டமாய் நினைத்து விட்டிருப்பாள்? வற்புறுத்தி பெற முடியுமா காதலை? என் புத்தி ஏன் இப்படிப் போனது? அவளிடம் ஸாரி கேட்க வேண்டும்.'

யுவன் தன் வேதனைகளை தனக்குள்ளேயே போட்டு புதைத்துக் கொண்டான்.

ஹோஸூரிலிருந்து திரும்பிய கோபி வந்ததும் வராததுமாய் யுவனை சீண்டினான்.

''யுவா... அவகிட்டே பேசிட்டியா?''

''யார்கிட்டே?''

''உன் மானசீக காதலிகிட்டேதான்!''

மனசு வலித்தது.

''பேசிட்டேன்.''

''என்ன சொன்னா?'' ஆர்வமாய் கேட்டான்.

''உண்மையை சொன்னால் தாங்குவியா கோபி? நீ திருமணம் செய்து கொண்ட பிறகுதான் நான் செய்து கொள்வேன் என்று வீம்பாய் இருக்கிற உன்னிடம் எப்படி சொல்வேன்? என்னால் உன் வாழ்க்கை கெட நான் விரும்பவில்லை கோபி! உண்மையை மறைப்பதைத் தவிர வேறு வழி தெரியவில்லை எனக்கு!' ஆழ்ந்த பெருமூச்சொன்றை வெளியிட்டான்.

''ஒக்கே சொல்லிட்டா கோபி... பட் ஒரு சின்ன ப்ராப்ளம்!''

''என்ன ப்ராப்ளம்?''

''ரெண்டு வருஷத்துக்கு பிறகுதான் கல்யாணம்னு முடிவா சொல்லிட்டா! மேல் படிப்புக்காக அமெரிக்கா போறாளாம். தடுக்காதீங்க... படிச்சு முடிச்சிடறேன். உங்க பிஸினஸிற்கும் ஹெல்ப்பா இருப்பேன்னுட்டா! மறுக்க முடியலே..''

''அடடா...! நீயும் சரின்னுட்டியா?''

''அவ சொல்றதும் சரிதானே கோபி? இத்தனை வருஷம் காத்திருந்த என்னால ரெண்டு வருஷம் காத்திருக்க முடியாதா என்ன? ஆனா, கோபி எனக்காக நீ ஒண்ணு பண்ணணும்!''

''என்ன சொல்லு!''

''அதுவரைக்கும் நீ காத்திருக்கக் கூடாது. உடனே உன் கல்யாணம் நடந்தாகணும்!''

''அது எப்படி யுவன்!''

''எதுவும் பேசக்கூடாது! நீ என் மேல் வச்சிருக்கிற அன்பு, நான் உன்மேல வச்சிருக்கிற அன்பு பரஸ்பரம் நமக்குத் தெரியும். யாராலேயும் நம்மை பிரிச்சிட முடியாது. நீ எனக்காக காத்திருக்கலாம். பட், உன்னை காதலிக்கற அந்தப் பெண்ணும் எனக்காக காத்திருக்கணுமா? அது சரியில்லே கோபி! இந்த காரணத்தாலேயே அவளுக்கு என் மேல கோபம் வர வாய்ப்பிருக்கு. ஸோ... சீக்கிரமா உன் கல்யாணம் நடத்த ஏற்பாடு பண்ணு!''

யுவன் கூறுவதிலும் ஒரு நியாயம் இருப்பதை உணர்ந்த கோபி யோசிக்க ஆரம்பித்தான்.

''ஓக்கே யுவா! நீ சொல்றபடியே செய்யறேன்!''

''தாங்க்ஸ் கோபி! அதான் இப்போதைக்கு என் கல்யாணம் நடக்காதுன்னு ஆகிப் போச்சே! இனிமேலும் சஸ்பென்ஸ் எதுக்கு? உன் ஆள் யாருன்னு இப்பவாவது சொல்லு!'' யுவன் தயவாய் கேட்கவும், கோபியின் பிடிவாதம் தளர ஆரம்பித்தது.

''சரி... சொல்றேன்! அவளை உனக்கு நல்லாவே தெரியும்..''

''எனக்கா?'' ஆச்சர்யமாய் கேட்டான்.

"ஆமாம்! அவள் நம்ம ஆபீஸிற்கும் வந்திருக்கா. உன்கிட்டே பேசியிருக்கா!"

"சஸ்பென்ஸ் தாங்கலைப்பா... யாருன்னு சொல்லிடு!"

"ஸ்வாதி!"

யுவனின் தலையில் பெரிய இடியே விழுந்தது.

**எ**டிட்டிங் அறையின் மானிட்டரில் ஸ்வாதி தயாரித்த ஒரு நிகழ்ச்சி ஓடிக் கொண்டிருந்தது. உடன் எடிட்டர் விக்னேஷ்வர் அமர்ந்து விவாதித்தபடி காட்சியை நிறுத்தி எடிட் செய்து கொண்டிருந்தார்கள்.

ஸ்வாதியின் நினைவு அடிக்கடி யுவன்ராஜையே வட்டமிட்டது.

'ராஸ்கல்! என்னவெல்லாம் பேசிவிட்டான்? கோபி வரட்டும்... உன் நண்பனின் சாயம் வெளுத்து போச்சு! அவன் நிஜ உருவத்தைப் பார் என்று காட்டுகிறேன்! உடனே திருமணத்தை நடத்த சொல்ல வேண்டும். அவன் என்ன காரணம் சொல்லி மறுத்தாலும் சரி! கோபியை விடப் போவதில்லை. இன்றுதானே ஊரிலிருந்து வருவதாக சொன்னான். வரட்டும்!

போன் அடித்தது.

ரிசீவரை எடுத்த விக்னேஷ்வர், "ஸ்வாதி உனக்குதான்!" என்று கொடுத்துவிட்டு சிகரெட் பிடிப்பதற்காக வெளியேறிச் சென்றான்.

"ஹலோ..."

"ஸ்வாதி... நான் யுவன்ராஜ் பேசறேன்."

"நீயா... உன்னிடம் பேச எனக்கு எதுவும் இல்லை!"

"அவசரப்பட்டு வச்சிடாதே ஸ்வாதி! ஸாரி... ஸ்வாதி! நடந்த அத்தனைக்கும் மன்னிப்பு கேக்கறதுக்குதான் போன் பண்ணினேன். எல்லாத்தையும் மறந்துடு. எனக்கு இன்னைக்குத்தான் கோபி உன்னைப்பத்தி சொன்னான். கோபி என்னோட கண்கள் மாதிரி! என்



கையைக் கொண்டே என் கண்களை குத்திக்க இருந்தேனே! என்னை மன்னிச்சிடு ஸ்வாதி! நடந்த விஷயம் எதுவும் கோபிக்கு தெரிய வேண்டாம்... ப்ளீஸ்...!" கெஞ்சலாய் கேட்டான் யுவன்.

நரி இடமாய் போனால் என்ன, வலமாய் போனால் என்ன? மேலே விழுந்து பிடுங்காமல் இருந்தால் சரி! சனியன் விட்டது என்று நிம்மதியாய் மூச்சு விட்டாள்.

**கோ**பிநாத் - ஸ்வாதி திருமணம் விமரிசையாய் நடைபெற்றது.

அபிராமியம்மாளும், சுந்தரேசனும் முன்னின்று நடத்தி வாழ்த்தினர். யுவன் தன் பங்கிற்கு பணத்தை வாரியிறைத்து தடபுடலாய் நடத்தினான்.

ஸ்வாதியை மணக்கோலத்தில் கோபியின் பக்கத்தில் காண... யுவனின் மனம் சஞ்சலப்பட்டதென்னவோ நிஜம்தான். அவனும் சராசரி மனிதன்தானே? மனிதன் விருப்பங்களில் தலையாய விருப்பமே காதல்தானே? அதுதானே இதயத்தையும், புலன்களை ஒரே நேரத்தில் தரக்கூடிய வலிமைப் பெற்றது? யுவனால் அவ்வளவு எளிதில் ஸ்வாதியை மறக்க முடியவில்லை. முடிகிற காரியமா அது? ஆனால், அதற்காக எப்படியாவது அடைந்தே தீரவேண்டும் என்கிற வெறியெல்லாம் இல்லை. முன்பு மானசீகக் காதலி! இப்போது அப்படியே இருந்துவிட்டுப் போகிறாள். இதனால் யாருக்கும் நஷ்டமில்லை. இது வெளியில் யாருக்கும் தெரியப் போவதுமில்லை. கோபி அதிர்ஷ்டக்காரன். என் நண்பன் எப்போதும் அதிர்ஷ்டசாலிதான்!' எட்டியிருந்தே அவர்களை கண்குளிர ரசித்தான்!

மணமக்களுக்கு வந்திருந்தவர்கள் பரிசளிக்க... யுவன் மேடையேறினான்.

கோபியின் கையைப் பற்றி குலுக்கினான்.

"கோபி... இது உன் சார்பாக நான் ஸ்வாதிக்கு தரும் பரிசு!"

"என்ன இது?" வியப்பாய் கேட்டான் கோபி.

"ப்ச்... பிரிச்சிதான் பாரேன்!"

கோபி அந்த கவரைப் பிரித்து படித்தவன் அதிர்ந்துவிட்டான்.

"யு...வா! என்ன இது? பெசன்ட் நகர் பங்களாவைப் போய் பரிசா தர்றியா?"

திடுக்கிட்டு தலை உயர்த்தி பார்த்தாள் ஸ்வாதி.

"ஏன் கொடுத்தா என்ன? நான் உன் மேல வச்சிருக்கிற நட்பு உயர்வானது. நீ ஸ்வாதி மேல வச்சிருக்கிற காதல் அதைவிட உயர்வானது. இதெல்லாத்தையும் விட இந்த பரிசு உயர்வானதாக நான் நினைக்கலை கோபி. இதை உன் கையால ஸ்வாதிக்கிட்டே கொடு!"

கோபிதயக்கமாய் அந்த டாகுமென்ட்டை ஸ்வாதியிடம் தர... கைநடுங்கப் பெற்றுக் கொண்ட ஸ்வாதி... யுவனை சந்தேகமாய் பார்த்தாள்.

சற்று நேரத்தில் கோபி அங்கிருந்து ஏதோ அவசரத்திற்கென அகல... "மிஸ்டர்" என்று யுவனை அழைத்தாள்.

"என்ன ஸ்வாதி?"

"உன் காதலிக்கு பரிசாக தர நினைத்த பங்களாவை... எனக்கு தந்ததன் மூலம்... இதே மாதிரி எல்லா கனவும் நிறைவேறிடும்னு பகல் கனவு காண வேண்டாம்!"

"ஸ்வாதி ப்ளீஸ்! நீ ஏன் என்னை நம்ப மாட்டேங்கிறே? யூ நாட் ட்ரஸ்ட் மீ! நடந்ததுக்காக நான் வருத்தப்படறேன். ஐ'ம் ஃபீல் ஃபார் இட்! எல்லாத்தையும் கெட்ட கனவா நினைச்சி மறந்துடு ஸ்வாதி! என்னிடம் இயல்பா பேசு..!"

ஸ்வாதி முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

'இவனையே எந்நேரமும் நினைச்சிப் பார்க்கணும்னு தானே அந்த பங்களாவையே எனக்கு பரிசாகத் தந்திருக்கிறான்.



இவனையா நம்பச் சொல்றான்? இந்த ஜென்மத்தில் நடக்காது. இவனுடைய ஒவ்வொரு செய்கையும் வெறுப்பை அதிகப்படுத்துகிறதே தவிர குறையவில்லையே?'

வாசுதேவன் திருமணத்தில் சந்தோஷமாய் வளைய வந்தாலும் சிவசங்கரியின் மனசு மட்டும் சமாதானமாகவில்லை. அவளுக்கு இந்த திருமணத்தில் கொஞ்சமும் விருப்பமில்லை.

## 14

கோபிநாத் - ஸ்வாதியின் கல்யாண வாழ்க்கை எந்தவித தடங்கலுமின்றி... ஊடலும் கூடலுமாய் கலகலப்பாக சென்று கொண்டிருக்கிறது. கோபி எவ்வளவோ வற்புறுத்தியும் ஸ்வாதி பெசன்ட் நகர் பங்களாவில் வசிக்க வர மறுத்துவிட்டாள்.

"அநியாயத்துக்கு நீ யுவனை வெறுக்கறே?" என்று கவலைப்பட்டான்.

ஸ்வாதி வழக்கம் போல மூன் டி.வி.யில் பணிபுரிந்து கொண்டிருந்தாள்.

ஒருநாள்...

எடிட்டிங் காரணமாக வீடு வர தாமதமானது. கோபி அவளுக்கு முன்பே வந்திருந்தான்.

"ரொம்ப டயர்டா தெரியறே... முதல்ல குளிச்சிட்டு வந்து சாப்பிடு. அம்மா உனக்கு பிடிச்ச வத்தக் குழம்பையும், வெண்டைக்காய் பொரியலும், உருளை பொடிமாஸும் பண்ணியிருக்காங்க... சீக்கிரம் வா!" என்று காதல் மனைவியை கனிவோடு உபசரித்தான்.

கணவனின் அன்பை ஏற்று நன்றி கூறும் விதமாக அவன் தலையை கலைத்து விளையாடி பாத்ரூமிற்குள் போய்விட்டாள்.

**சா**ப்பிட்டு முடித்து பெட்ரூமிற்குள் நுழைந்தவள் அயர்ந்து போனாள்.

ஸ்வாதியின் பெற்றோர் அவளுக்கு சீதனமாய் தந்த கட்டில் மெத்தையை காணோம். அதற்கு பதிலாக மிக நவீன கட்டிலும் வாட்டர் பெட்டும் இருந்தன.

''டட்டட்ய்ங்... என்ன அசந்துப் போய்ட்டியா? என்றபடி பின்னே வந்து அவளை அணைத்துக் கொண்டவன் காதை கடித்தான்.

''எதுக்கு கோபி இதெல்லாம்? வீண் செலவு!'' அவன் கன்னத்தோடு கன்னம் வைத்து இழைத்தாள்.

''வீண் செலவுதான்... அது நமக்குப் புரியுது... யுவனுக்கு புரியலியே...!''

''வாட்... யுவனா?'' பட்டென்று அவனிடமிருந்து விலகினாள்.

''ஹேய்... என்ன? நாம சந்தோஷமா இருக்கணும்னு ஆசைப்பட்டு வாங்கிட்டு வந்தான். அதுக்கென்ன இப்ப?''

''முதல்ல.. இதை தூக்கி வெளியே போடுங்க...''

''என்ன ஸ்வாதி... பைத்தியக்காரத்தனமா பேசிக்கிட்டு...!''

''பைத்தியம் பிடிக்கிற மாதிரிதான் இருக்கு. கொஞ்சமாவது உங்க ஃப்ரண்டுக்கு மேனர்ஸ் தெரியுதா? கட்டில் மெத்தைய கூடவா பரிசாக் கொடுப்பாங்க. அந்தப் பணக்காரனுக்கு புரியலேன்னா... நீங்களாவது புரிய வைக்க வேணாமா? பாருங்க... உங்களுக்கு வேணுமின்னா யுவன் உசத்தியா இருக்கலாம். அவர் கொடுத்த பெட்டுல படுக்க உங்களுக்கு உரிமையிருக்கலாம். ஆனா என்னால இதுல படுக்க முடியாது... கோபி... படுக்க முடியாது!'' என்று கண்கலங்கினாள் ஸ்வாதி.

இதை எதிர்பார்க்காத கோபி திகைத்துப் போனான்.



**அ**டுத்து வந்த நாட்களில் ஸ்வாதியின் நிம்மதி முழுக்க தொலைந்து போனது. யுவன்ராஜ் அன்பாய் ஆசையாய் நண்பனுக்கு தரும் பரிசுகளும் உதவிகளும் ஸ்வாதியை கோபமுறச் செய்தது. அதையெல்லாம் வேண்டுமென்றே... தனக்காகவே செய்கிறான் என்ற எண்ணமே ஸ்வாதிக்கு ஏற்பட்டது.

ஒருநாள் பரபரப்பாய் அலுவலகத்திலிருந்து வந்த கோபி, வந்த வேகத்தில் ஸ்வாதியை அப்படியே தூக்கி சுற்றினான்.

''ஐயோ... என்னங்க இது? அத்தை கிச்சன்லதான் இருக்காங்க! என்ன ஐயா பயங்கர மூடுல இருக்கீங்க போல..!''

''ஆமா... செம மூடுல இருக்கேன். இங்கேயே உன்னை கடிச்சு தின்னுடுவேன்.. ஆனா ஹனிமூன்ல கொஞ்சம் மிச்சம் வைக்கணுமேன்னு விடறேன்!''

''ஹனிமூன்? என்ன சொல்றீங்க?''

''நாம ஹனிமூன் போறோம்... எங்கே தெரியுமா?''

''காஷ்மீருக்கா?''

''ம்ஹூம்... ஸ்விட்சர்லாந்துக்கு!''

''ஹேய்... என்று அலறினாள். ''நிஜமாவா கோபி?''

''சத்தியம்!''

''எப்படிப்பா? ஏகமா செலவாகுமே..!''

''செலவைப் பத்தி உனக்கென்னடா கவலைன்னு ப்ளைட் டிக்கெட் வாங்கவும் ஏற்பாடு பண்ணிட்டான்!''

''ஸ்வாதிக்கு பரிந்து போனதும் சப்பென்றாகி விட்டது.

''யாரு... உங்க யுவன் ராஜா?'' என்றாள் கிண்டலாக.

''ஆமா ஸ்வாதி! இந்த காலத்துல இப்படியொரு ஃப்ரண்டை பார்க்கவே முடியாது ஸ்வாதி! அவன் என்மேல உயிரையே

வச்சிருக்கான். நான் இன்னைக்கு இந்தளவு அந்தஸ்தோட இருக்கிறேன்னா... அதுக்கு யுவனும் அவன் குடும்பமும்தான் காரணம்! எனக்கு படிப்புலேர்ந்து, சாப்பாடுலேர்ந்து... எல்லாமே கொடுத்தது அவங்கதான். அவங்களுக்காக என் உயிரையே கொடுத்தால் கூட ஈடாகாது ஸ்வாதி! யுவன் எனக்கு நண்பனா கிடைச்சது... நான் செஞ்ச புண்ணியம். பதிலுக்கு எதையாவது செய்யணும்னு ஆசைப்படறேன். கடவுள் அதுக்கொரு சான்ஸ் எனக்கு தரணும்!'' என்று கண் கலங்கினான்.

ஸ்வாதிக்கு கவலை அதிகரித்தது.

'அவன் மீது இந்தளவு அன்பும், பாசமும் கொண்டிருக்கிற கோபியிடம் யுவனைப் பற்றி சொன்னால் நம்புவானா? அவன் செய்யும் உதவிகள் அத்தனையும் உனக்காக இல்லே... எனக்காக என்றால் நம்புவானா? எப்படி நம்புவான்? சொன்னால்... என் மீது தான் கோபப்படுவான்! கடவுளே... இதென்ன சோதனை? எப்படியாவது இந்த ஹனிமூன் ட்ரிப்பை கேன்சல் பண்ணியாகணுமே என்ன செய்யலாம்?'

ஆனால் ஸ்வாதியின் மாய்மாலம் எதுவும் கோபியிடம் எடுபடவில்லை.

ஸ்விட்சர்லாந்து சென்று வந்தனர்.

மாதங்கள் கரைந்தன.

கோபிநாத் இனிப்பான செய்தியோடு யுவன் முன் நின்றான்.

''யுவா... ஒரு குட் நியூஸ்!''

பார்த்துக் கொண்டிருந்த ஃபைலை மூடி வைத்துவிட்டு நண்பன் முகத்தை ஆராய்ந்தான்.

''என்ன விஷயம் கோபி?''

''முதல்ல ஸ்வீட் எடுத்துக்க!'' அவனே எடுத்து யுவனின் வாயில் போட்டான்.



''ஸ்வாதி... நீ என்னை விட்டுப் போனாலும் இந்த கோபி நீ மனசு மாறி வருவேங்கிற நம்பிக்கையோடு ஒவ்வொரு நிமிஷமும் எதிர்பார்த்து காத்துக்கிட்டிருப்பேன்...''

பொங்கி வந்த அழுகையை உதட்டை அழுத்தி கடித்தபடி வெளியேறினாள், ஸ்வாதி!

அவள் மனசு மாறி வரும் நாளுக்காக காத்திருக்க ஆரம்பித்தான் கோபிநாத்!

காலம் சிறந்த மருந்து. அது காயங்களை ஆற்றும். தழும்புகளையும் மாற்றும். பிடிவாதத்தை கரைக்கும். ஸ்வாதியின் வருகைக்காக கோபியோடு சேர்ந்து நாமும் காத்திருப்போம்.





நல்ல நண்பர்கள் இல்லாத
உலகம்ஒரு பாலைவனம்தான்.
நண்பர்களையும் மனிதப் பண்புகளையும்
வெறுப்பவன் ஒரு காட்டு மிருகம்தான்.
அவனுடைய தனிமையில் இன்பம் இல்லை;
எங்கும் வெறுப்புதான். 'நட்பின் பலன்கள்'
மாதுளங்கனியில் உள்ள இன்ப
ரத்தினங்கள்போல், அருமையான
உண்மைகளைக் கொண்டு மனிதனை
அபாயத்தின் எல்லையை விட்டுத்
தப்பித்து வர வழி
காட்டுகின்றன.
- பேகன்

சென்னை மாவட்ட சிறை நூலகம்
32967
5009089
கொளத்தூர், சென்னை - 99.